# இராமநாதம்



யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

# இராமநாதம்

## அட்டைப்பட விளக்கம்

இவ் ஆண்டுக்குரிய யாழின்
இராமநாதம் கதிரவன் ஒளியுடன்
மலர்கின்றது.
இந்த இராமநாதத்தை
எழுத்து அணிகளால்
அலங்கரிக்கக் காண்கின்றோம்.
தொடர்ந்தும் ஆண்டுதோறும்
மலரவுள்ள இந்த இராமநாதத்தின்
எதிர்காலம் சிறப்புடன் விளங்கவும்
வளமுடன் வாழவும், நிறைவாய் அமைய
பூரண கும்பத்துடன் வரவேற்கின்றோம்.
இராமநாத மலரின் நறுமணம் நுகர்ந்து
மதுரத்தேன் பகிர்ந்து உண்ண
அனைவரையும் வரவேற்கின்றாள்
கல்லூரித்தாய்

# இராமநாதம்



யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்


# இராமநாதம்

# 2014

**உயர்தர மாணவர் மன்றம்,**
**யா/இராமநாதன் கல்லூரி,**
**சுன்னாகம்.**

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | இராமநாதம் |
| வெளியீடு | : | உயர்தர மாணவர் மன்றம்,<br>யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் |
| பதிப்பு | : | 2014 செப்ரெம்பர் |
| இதழாசிரியர் | : | செல்வி.வரதராசா வர்த்திகா |
| நூல் வடிவமைப்பு | : | சுடர்நிலவு கிறபிக்ஸ், இணுவில். |

| | | |
|---|---|---|
| Title | : | Ramanatham |
| Publishers | : | A/L Students' Union,<br>J/Ramanathan College, Chunnakam. |
| Published on | : | 2014 September |
| Editor | : | Miss. Varatharajah Varthika |
| Printers | : | Sudarnilavu Graphics, Inuvil. |



கல்லூரி ஸ்தாபகர் சேர்.பொன்.இராமநாதன் துணைவியார், மகளுடன்

# யா/இராமநாதன் கல்லூரி

**மகுடவாசகம்**

திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்

**Motto**

Providing healthy, contented and successful life

**தூரநோக்கு**

தரமான கல்வி வாழ்விற்கு உரமான ஏணி

**Mission**

Standard Education is a ladder to life

**பணிக்கூற்று**

கல்லூரியின் இறைமைக்குட்பட்டதாக கலாசாரத்தைப் பேணி சவால் களுக்கு முகம் கொடுக்கக்கூடிய துணிவு மிக்க சமூக விழுமியங்களுக்கு மதிப் பளிக்கும் மாணவரை முறைசார்ந்த முறைசாராத தரமான கல்வியினூடாக உருவாக்கி எதிர்கால சமூகத்தை சீராக கட்டி எழுப்புவதாகும்

**Vision**

Providing Standard Education is to build up the future generation through formal and informal Education to appriciate the moral values and culture of the school.

# கல்லூரிக் கீதம்

**இராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பணிபிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவது சீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை.

**இராகம் : பூபாளம்** **தாளம் : ரூபகம்**

அரிபடந்த மதர்க்கண்ணா ரரிய யனுங்காணாத
விமலர்ச்சே வடிகானும் வியப்புடையத்திக் கல்லூரி

**இராகம் : பௌளி**

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்சீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

**இராகம் : கல்யாணி**

திங்கள் சேர் வான்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ் சேர் வாழ்புபயில் மாண்புடைத்திக் கல்லூரி

**இராகம் : ஆனந்த பைரவி**

பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

**இராகம் : பெஹாக்**

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயின்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

**இராகம் : கேதாரகௌளை**

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணையில் வியப்புடைத்திக் கல்லூரி

**இராகம் : சிந்து பைரவி**

நித்திலத்தை யொத்த நகை நாண்மடவார் நிரைநிரையாய்ச்
சித்திரத்தைப் போலியங்கும் சிருடைத்திக் கல்லூரி

**இராகம் : காபி**

வண்ணமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பலபயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி

**இராகம் : தோடி**

பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி

ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம நாதன்றன் கல்லூரி வாழியவே
தாவி லூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலிலும் மிகவே.

**சு.நடேசபிள்ளை B.A.B.L (EX Senator)**

# செயற்குழு - 2014

**காப்பாளர் :-** திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை (அதிபர்)

திருமதி.நந்தினி சிவராஜன் (பிரதி அதிபர்)

**உதவிக் காப்பாளர் :-** திருமதி.சுலோசனா யோகராசா (பகுதித்தலைவர்)

திரு.தியாகராசா விக்னேஸ்வரன் (உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர்)

திரு.தர்மராசா குமாரதாஸ் (ஆசிரியர்)

| | | |
|---|---|---|
| **தலைவர்** | – | செல்வி.பவானந்தன் பிரலக்ஷிகா |
| **உபதலைவர்** | – | செல்வி.சிவஞானம் பிறேமிளா |
| **செயலாளர்** | – | செல்வி.பரிமளராஜ் லுக்ஷிகா |
| **உபசெயலாளர்** | – | செல்வி.புவிநாயகம் மதியுகா |
| **பொருளாளர்** | – | செல்வி.விமலநாதன் டிலானி |
| **இதழாசிரியர்** | – | செல்வி.வரதராசா வர்த்திகா |

## உதவிச் செயற்குழு

செல்வி.சிவகுமார் மிதிலா

செல்வி.சம்பந்தர் டயானி

செல்வி.தெய்வேந்திரம் கோமளா

செல்வி.யதீஸ்வரானந்தன் தரணிகா


செல்வி.யுகிதரன் தியாந்தினி

# கல்லூரி முதல்வர்



**திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை**


S.L.P.S 2-1, B.A (Hons), PGDE



# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சரித்திரப் பெருமை மிக்க இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தை வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். இக் கல்லூரி பல ஆற்றல் மிக்க அறிஞர்களை உருவாக்கிய உன்னத கல்லூரி. சிறந்த பெண் பேச்சாளர்கள் பலரை கல்லூரி உயர்தர மன்றம் உருவாக்கியதை மறக்க முடியாது. திருமதி. மங்கயற்கரசி அமிர்தலிங்கம், திருமதி. மங்கயற்கரசி சிற்றம்பலம், திருமதி. இரட்ணா நவரட்ணம் போன்ற புலமையாளர்கள் இக் கல்லூரி உயர்தர மன்றத்தை அலங்கரித்துள்ளமையை பலரும் அறிவர். இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கலாசாலை உருவாக்கிய, சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் சிறப்பு அகிலம் அறிந்ததே. இக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் "இராமநாதம்" என்னும் பெயரில் மாணவரின் ஆக்கங்களைத் தொகுத்து வெளியிடும் மலர் சிறக்க வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/இராமநாதன் கல்லூரி 1913 இல் தோற்றம் பெற்ற மகளிர் கல்லூரி. உயர்ந்த குறிக்கோளுடன் பெரியார் இராமநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட கல்லூரி, நல்ல பல அதிபர்களால் வழிநடத்தப்பட்ட இக்கல்லூரி தனது வரலாற்றுப் பதிவில் நல்லாசிரியர்கள் பலரைப் பெற்றிருந்த துடன், சிறந்த நல்லொழுக்கம் மிக்க மகளிரையும் உருவாக்கி யுள்ளது. இக் கல்லூரியில் கற்ற மாணவிகளுக்குச் சமூகத்தில் தனியான மதிப்பு இருந்தது. குடும்ப வாழ்விலும் இவர்கள் சிறப்பாக துலங்குகிறார்கள்.

இக்கல்லூரியில் வரலாற்றில் பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கேட்டும், அறிந்தும் பெருமை கொண்டுள்ளோம். இக் கல்லூரியின் பழம்பெருமை மீண்டும் ஏற்படாதா? என்ற ஏக்கம் எம் அனைவரிடமும் இருந்தது. அப்பெருமை நிதர்சனமாவதற்கான அறிகுறிகள் தென்படு கின்றன. விடுபட்ட, மறக்கப்பட்ட நல்ல அம்சங்கள் பல முளை கொள்ளத் தொடங்கி உள்ளன.

இக் கல்லூரியின் "இராமநாதம்" மலர் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் வெளிவருகின்றது. இம் மலர் வெளிவருவதற்கு பலர் உந்து சக்திகளாக இருந்துள்ளனர். உயர் வகுப்பு மாணவிகளின் சிந்தனைக்கு, ஆக்கங்களுக்கு இம் மலர் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. கல்லூரியின் பெருமையும் நிலை நாட்டப்பெற்றுள்ளது.

இம் மலர் வெளிவருவதற்கு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். இக்கல்லூரியில் கற்கும் அனைத்து மாணவிகளும் கல்வியிலும், வாழ்விலும் வெற்றி பல பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன். எதிர்காலத்தில் சிறந்த மகளிராகத் தம்மை நிலை நிறுத்துவார்கள் என நம்புகின்றேன்.

**ஆ.ராஜேந்திரன்**
**மாகாணக்கல்வி பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

யா/இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் மலரான "இராமநாதம்" சஞ்சிகை சிறப்பாக அமைவதற்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்னும் வாசகத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் வெளியிடப்படும் இச்சஞ்சிகையானது, மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தாக அமையக்கூடிய வகையில் ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வர வேண்டும் என்பதுடன், நவீன கல்விப்புலத்திற்கு பயன்படக்கூடியதாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.

ஒரு சமூகத்தில் வாசிப்புத்திறனைக் கொண்டவர்களின் சதவீதமானது, அச்சமூகத்தின் எழுத்தறிவு வீதம், என சாதாரணமாக அளவிடப்படுகின்றது. எனவே வாசிப்பு என்பது சமூகத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு செயற்பாடாகக் காணப்படுவதனால், இவ்வாறான முயற்சிகள் மென்மேலும் பாடசாலைகளிலும் கல்விக்கூடங்களிலும், இடம்பெறுவதனை ஊக்குவிக்க வேண்டும்.

இச்சஞ்சிகை வெளியீட்டில் முன்னின்று உழைக்கும் மாணவர்களுக்கும், அவர்களுக்கு வழிகாட்டிகளாக அமையும் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, இம் முயற்சி இத்துடன் நின்றுவிடாது ஆண்டு தோறும் தொடர வேண்டும் என ஆசியும் கூறுகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா,**
**வலயக்கல்வி பணிப்பாளர்,**
**வலிகாமம்.**



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

கடந்த வருடம் ஒரு நூற்றாண்டைக் கடந்து, புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும் யா/இராமநாதன் கல்லூரி தனது புதிய நூற்றாண்டின் புதிய அகவையில் தொடர்ச்சியாக வெளிவரும் "இராமநாதம்" சஞ்சிகை புது மெருகுடன் வெளிவருவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

இராமநாதன் கல்லூரி என்றாலே முத்தமிழினையும் காத்து, தனக்கென கட்டுப்பாடுகளைப் பேணிவரும் ஒரு புகழ் பூத்த பாடசாலையாகும். அந்தவகையில் இச்சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களும் முத்தமிழ் விரவியதாக வெளி வருகின்றன.

இச்சஞ்சிகையில் விரிவுரையாளர்கள், தகைமை சார் அறிஞர்கள், ஆசிரியர்கள் ஆக்கங்களைத் தாங்கி வருவதோடு மாணவர்களின் சுய ஆக்கங்களையும், அவர்களின் திறன்களையும் வெளிக்கொணர்வதாக அமைகின்றது. அந்த வகையில் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகையானது ஒவ்வொரு வருடமும் தரமான ஆக்கங்களைத் தாங்கி, மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துகின்றேன்.

**தில்லைநாதன் தர்மலிங்கம்**
**கோட்டக்கல்வி பணிப்பாளர்,**
**உடுவில் கல்விக்கோட்டம்,**
**உடுவில்.**



# அதிபரின் ஆசிச்செய்தி

எமது கல்லூரியின் க.பொ.த உயர்தர மாணவர்கள் "இராமநாதம்" என்ற மலரினை இரண்டாவது இதழாக வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மாணவர் களின் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்குடனும், "இலைமறை காயாக" இருக்கும் மாணவர்களை வெளிக்கொணரும் நோக்குடனும் இம் மலரானது வெளியிடப் படுகின்றது. "இராமநாதம்" புகழ் மணம் பரப்பி எட்டுத்திக்கும் ஒளிவீச எல்லாம் வல்ல பார்வதி சமேத நடராஜப் பெருமான் அருள்பாலித்து ஆசீர்வதிப்பாராக.

**திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை**

**அதிபர்,**

**யா/இராமநாதன் கல்லூரி,**

**சுன்னாகம்.**



# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

எமது பாடசாலையின் 2014ம் ஆண்டு உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் "இராமநாதம்" என்ற மலர் சிறப்பாக மலர வேண்டுமென வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்விச் செயற்பாட்டினை விருத்தி செய் வதற்கும், பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனை மேம் படுத்தவும், மன்றங்களின் செயற்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் தலைமைத்துவப் பண்பினை வளர்க்கவும் இம்மலர் வெளியீடுகள் பயன்படுகின்றன. பாடசாலை மிகுந்த பயன் மிக்கதாகவும், வினைத்திறனுடனும் செயற்படுவதற்கு சகல தரப்பினரது பலம் உறுதுணையாகின்றது. அந்த வகையில் இம்மலர் வெளியீடு சிறப்பாக அமைய எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் அருள் வேண்டும் என வாழ்த்து கின்றேன்.

- நன்றி -

**திருமதி. நந்தினி சிவராஜன்**
**பிரதி அதிபர்**
**யா/இராமநாதன் கல்லூரி**

# பிரதி அதிபர்



திருமதி. நந்தினி சிவராஜன்

## காப்பாளர்கள்



திருமதி. சுலோசனா யோகராசா



திரு. தியாகராசா விக்னேஸ்வரன்



திரு. தர்மராசா குமாரதாஸ்



யா/இராமநாதன் கல்லூரி ஆசிரியர் குழாம்

# Message

I am Sending this message to your magazine "Ramanatham" with great pleasure and I consider it as a privilege.

Sir Pon.Ramanathan did a great service. He Sacrifised a big portion of his wealth to build two big college for Hindu children to grow up according to our culture. He considered Tamil Language and Hinduism as two valuable gems.

His foresight has changed our society giving important place to women's education. Now those who were educated in these college are distinguished people holding high positions. The girls' college has progressed well producing good results in all the different fields Science, Mathematics, commerce, medicine and Fine Arts. They read in sports as well.

"Ramanatham" is heard in all parts of our country. Some students have become Director of Education. The teachers and principals were dedicated to their job. They treated the students as their own children. Even today, after so many years, We feel happy to think how our teachers loved us, helped us and guided us.

They deserve the praise from parents and well wishers.

I wish success to every member of your union in all her ventures and activities at all times.

Let everyone serve with love and devotion to build up better society.

**Mrs.Thiruvengadavalli Jeyasinghe**
**Past pupil (1944 - 1950)**
**One of the old teachers (1955 - 1960)(1979-1987)**



# பகுதித்தலைவர் உள்ளத்திலிருந்து...

பாடசாலைக் கலைத்திட்டத்தை கூர்மையடையச் செய்வது இணைப் பாடவிதானக் கலைத்திட்டச் செயற்பாடுகளாகும். இதில் சஞ்சிகை வெளியீடும் பிரதான பங்கினை வகிக்கின்றது. மாணவர்கள் தாம் மேற்கொண்ட தேடல்களை ஆக்க வடிவமாக வெளிப்படுத்துவதற்கு பாடசாலைகளில் வெளிவரும் சஞ்சிகைகள் களம் அமைக்கின்றன. ஒரு நூற்றாண்டைக் கடந்து கல்வித் தீபத்தைப் பரப்பும் இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் கல்வி கையேடாகப் பயன்படும் வகையில் இந்நூல் மலர்ந்துள்ளது. தலைசிறந்த கல்வியாளர்களினதும், ஆசிரியர்களினதும் கட்டுரைகள் இம் மலருக்கு மேலும் சிறப்பளிக்கின்றன. இத்தகைய மலர்கள் மீண்டும் மீண்டும் மலர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி. சுலோசனா யோகராசா**
**பகுதித்தலைவர் (உயர்தரம்),**
**யா/இராமநாதன் கல்லூரி.**



# உயர்தர மாணவர் மன்ற பொறுப்பாசிரியர் எண்ண அலைகள்...

மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு புறம்பாக மாணர்களின் ஆளுமைகளை வெளிக்கொணர்வது இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஆகும். இவ் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றாக விளங்கும் சஞ்சிகையாக்கம் "இராமநாதம்" எனும் பெயரில் வெளி வருவதை இட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இருபத்தோராம் நூற்றாண்டு ஒரு புதிய யுகத்தின் ஆரம்பமாகும். அப் புதிய யுகத்தின் சவால்களுக்கு ஏற்ற வகையில் மாணவர் ஒவ்வொருவரும் முகம் கொடுக்க வேண்டியது கட்டாய கடமையாகும். அச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்கள் தமது ஆக்கங் களை வெளிக்கொணர்ந்துள்ளனர். இச் சஞ்சிகையை வலு வுள்ளதாக்குவுதற்கு ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறை சார்ந்தவர்களின் ஆக்கங்களையும் பெற்று வலுச்சேர்த் துள்ளனர்.

"இராமநாதம்" சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் காலத்தின் தேவையறிந்து வெளிவர வேண்டும். இதனால் மாணவர்கள் நன்மையடைய வேண்டும் என வாழ்த்து கின்றேன்.

- நன்றி -

**திரு. தியாகராசா விக்னேஸ்வரன்,**

**உயர்தர மாணவர் மன்ற பொறுப்பாசிரியர்,**

**யா/இராமநாதன் கல்லூரி.**



# மன்றத் தலைவரின் எண்ணத்தில்....

இந்த நூற்றாண்டின் இரண்டாவது சஞ்சிகையாக "இராமநாதம்" சஞ்சிகை வெளியிடுவதில் மன்றத் தலைவர் என்ற ரீதியில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்"இராமநாதம்" சஞ்சிகையானது பல துறை சார்ந்த கட்டுரைகள் பல்வேறு வகையான ஆளுமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் காணப்படுகின்றது. இச் சஞ்சிகை யானது மாணவர்களுக்கும் ஏனைய துறை சார்ந்தவர்களுக்கும் பயன்மிக்கதாக அமையும் என்பது எனது எண்ணமாகும்.

இதே போன்று ஒவ்வொரு வருடமும் புதுப் பொலி வுடன் "இராமநாதம்" வெளிவர வேண்டும் என்பது எல்லோர தும் அவாவாகும். இந்த வகையில் ஒவ்வொரு வருடமும் இந்த சஞ்சிகை தொடர்ந்து வெளிவர எங்கள் இராமநாதேஸ்வரரின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

மேலும் இம் முயற்சிக்கு ஆதரவளித்த அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்கி யவர்களுக்கும், நிதியுதவி வழங்கியவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கியோருக்கும், அச்சிட்டு உதவியவர்களுக்கும் எம் மன்றத்தின் சார்பில் நன்றியினைக் கூறிக் கொள்கின்றேன்.

**பவானந்தன் பிரலக்க்ஷிகா**
**மாணவ மன்ற தலைவர்,**
**தரம் 13$^{B}$,**
**கலைப் பிரிவு (2015).**



# செயலாளரின் எண்ணத்திலிருந்து...

எமது கல்லூரி ஒரு நூற்றாண்டினைக் கடந்து புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் இத் தருணத்தில் "இராமநாதம்" சஞ்சிகை புதுப் பொலிவுடன் வருவதனை இட்டு அக மகிழ்வடைகின்றேன்.

"இராமநாதம்" என்னும் இச் சஞ்சிகை இறுதியாக 2008ம் ஆண்டு வெளியாகி இருந்தது. பொருளாதார சூழ்நிலை காரணமாக தொடர்ந்து வெளியிடமுடியாத நிலை ஏற்பட்டது. தற்பொழுது பல்துறை சார்ந்த ஆக்கங் களைத் தாங்கிய வண்ணம் உங்கள் கைகளிலே தவழ் கின்றது.

அந்த வகையில் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்துறையில் புலமை மிக்கோர் ஆகியோர் பயன் மிக்க பல ஆக்கங்களைத் தந்து உதவி யுள்ளனர். அந்த வகையில் அவர்களுக்கு எனது நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இச் சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆலோசனை கேட்டபோது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் மற்றும் பிரதி அதிபர், உயர்தர பகுதித் தலைவர், உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பரிமளராஜ் லுக்ஷிகா**
**மாணவ மன்றச் செயலாளர்**
**கலைப்பிரிவு (2015)**



# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

யா/இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் உருப்பெற்ற "இராமநாதம்" எனும் இச் சஞ்சிகை உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு நான் அக மகிழ்கின்றேன்.

ஒவ்வொரு வருடமும் உயர்தர மாணவர்களால் "இராமநாதம்" தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற பலரின் விருப்பத்திற்கு இணங்க பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து ஒவ்வொரு மாணவரினதும் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் ஆக்கங்களைத் தயார் செய்துள்ளோம்.

"இராமநாதம்" என்னும் இந்நூல் ஒரு தகவல் களஞ்சியமாக வெளிவருவது எம் போன்ற மாணவர் களுக்கு கிடைத்த மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இந்நூலினை ஆக்குவதற்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர் அவர்களுக்கும், பிரதி அதிபர் அவர்களுக்கும், மன்றத்தின் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும், எம்மோடு தோளோடு தோள் நின்ற ஏனைய ஆசிரியர்களுக்கும் மன்றத்தின் தலைவர், செயலாளருக்கும் ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும், மலர் வெளியீட்டுக் குழு சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் அக மகிழ்கின்றேன்.

**வரதராசா வர்த்திகா**
**வர்த்தகப் பிரிவு (2015)**

## மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் வர்த்தகம் | 01 |
| 2. | பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் | 07 |
| 3. | பல்லவர் கால இலக்கிய மரபு | 15 |
| 4. | வள்ளுவம் காட்டும் மருத்துவம் | 19 |
| 5. | நெகிழ்ச்சிக்கோட்பாடு | 22 |
| 6. | பெரிய புராணத்தின் பெருமை | 28 |
| 7. | நம் வாழ்வில் வளம் சேர்க்கும் நகைச்சுவை | 31 |
| 8. | "பள்ளு" ஒரு கிராமிய நடனம் | 34 |
| 9. | இருபதாம் நூற்றாண்டின் அரசியல் மற்றும் சமுதாயப் பணியில் பத்மஸ்ரீ அம்புஜம்மாள் | 39 |
| 10. | மாணவரின் எதிர்கால வாழ்வை வளமாக்கும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் | 45 |
| 11. | இலங்கையின் உயிர்ப்பல்வகைமை | 49 |
| 12. | சங்ககால இலக்கியங்கள் உணர்த்தும் இலங்கைத் தமிழர்களின் இருப்புக்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை | 55 |
| 13. | உழைப்பின்றி ஊதியமில்லை | 61 |
| 14. | வாழ்வை உயர்த்தும் நற்குறிக்கோள்கள் | 62 |
| 15. | திரையிசைப் பாடல்களில் இலக்கியக் கூறுகள் | 64 |
| 16. | ஆந்திரக்கலையில் நாகர்சுன கொண்டா | 69 |
| 17. | புவியியல் தகவல் ஒழுங்கு (GIS) | 73 |
| 18. | ஆடி மாதத்தின் சிறப்புக்கள் | 78 |
| 19. | கல்வெட்டுக்களில் நாட்டிய ஆசான் பற்றிய குறிப்புக்கள் | 81 |
| 20. | யப்பானின் "நோ" (NOH) அரங்கு ஓர் அறிமுகம் | 84 |
| 21. | உலக இசையும் தமிழிசையும் | 86 |
| 22. | உரோம நாகரிகம் | 90 |
| 23. | இலத்திரனியல் கழிவுகள் (E-Waste) | 93 |
| 24. | என்றுமுள தென்தமிழ் | 97 |
| 25. | GOOD MANNERS | 99 |
| 26. | Morpheme | 100 |

27. Role of information Technology in the Modern world 102
28. Collaborative work in independent learning 103
29. இசைக்கலை - இசைக்கருவிக்கு உயிரூட்டும் மிருதங்கம் ஓர் அறிமுகம் 106
30. இடதுசாரி இயக்கம் 110
31. இத்தாலியில் மறுமலர்ச்சி உருவாவதற்கான காரணங்கள் 112
32. வாய்மையே வெல்லும் 113
33. மத்திய கால அரங்கு அல்லது கிறிஸ்தவ நாடக மரபு 115
34. பாதீனியத் தாவரம் 117
35. இலங்கையின் கறுவா வாணிபம் 119
36. கருத்துச் சுதந்திரமும் ஊடகமும் 121
37. இன்றைய சூழலில் தமிழ்மொழி 123
38. இந்துக்களால் அழியும் இந்து மதம் சில காரசாரமான குறிப்புக்கள்... 126
39. விஞ்ஞானம் வளர்ந்து மனித உயிரைக் காக்குமா? 130
40. உலகப் போரின் கதாநாயகனும் வில்லனும் 132
41. தெரிந்துகொள்வோம் 136
42. தற்கால மாணவர் சமுதாயமும் இணையப் பாவனையும் 137
43. சமஸ்கிருத மொழி 139
44. பொலநறுவைக்கால கலை வளர்ச்சி 141
45. இலங்கையிலே பரதக்கலை 144
46. மறுமலர்ச்சிக்கால ஓவியர்கள் 148
47. கல்வி வாழ்வை உயர்த்தும் 150
48. பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் பசளைகள் 152
49. உலக வர்த்தக வலயங்கள் 153
50. குறுக்கெழுத்துப் புதிர் 155
51. பொது விடயம் 156
52. பங்குடமை 159
53. நினைவுகள் 160
54. தரணி நிறைந்த தமிழன்னை 162
55. அம்மா 163
56. வேடிக்கை மனிதனுக்கு 164
57. நன்றிகள் 165



## செயற்குழு உறுப்பினர்கள்


இருப்பவர்கள் (இ-வ) : செல்வி வரதராசா வர்த்திகா (இதழாசிரியர்), திருமதி.சுலோசனா யோகராசா (பகுதித்தலைவர்) திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை (அதிபர்), திருமதி.நந்தினி சிவராஜன் (பிரதி அதிபர்), திரு.தியாகராசா விக்னேஸ்வரன் (பொறுப்பாசிரியர்), திரு.தர்மராசா குமாரதாஸ் (ஆசிரியர்), செல்வி.பரிமளராஜ் லுக்ஷிகா (செயலாளர்)

நிற்பவர்கள் (இ-வ) : செல்வி. புவிநாயகம் மதியுகா (உபசெயலாளர்), செல்வி. சம்பந்தர் டயானி, செல்வி. விமலதாசன் டிலானி (பொருளாளர்), செல்வி. சிவகுமார் மிதிலா, செல்வி. தெய்வேந்திரம் கோமளா, செல்வி. யுகிதரன் தியாந்தினி, செல்வி. சிவஞானம் பிரேமிளா (உபதலைவர்), செல்வி. பவானந்தன் பிரலக்ஷிகா (தலைவர்)



விஞ்ஞான, வர்த்தகப் பிரிவு (தரம் 12, 13)

# இலத்திரனியல் வர்த்தகம்



**பேராசிரியர். க.தேவராசா**
**தலைவர்,**
**வர்த்தகத்துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

## 1.0. அறிமுகம்

இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகமானது, 1970 களின் ஆரம்பத்தில் இலத்திரனியல் நிதி மாற்றம் போன்ற புத்தாக்கங்களுடன் ஆரம்பமானது எனலாம். எவ்வாறாயினும், இந்தப் பிரயோகமானது பெரிய கூட்டுத்தாபனங்களுக்கும் ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலத்திரனியல் தரவு பரிமாற்றம் வந்த பின்னர் இலத்திரனியல் வர்த்தகமானது நிதி மாற்றங்களில் இருந்து ஏனைய வகையான பரிமாற்ற முறை வழியாக்கத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள் சேவை வழங்குநர்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றன பங்குபற்றும் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இணையம் ஆனது வர்த்தக மயமாக்கப்பட்டதன் பின்னர் பல மில்லியன் கணக்கான மக்கள் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தமையால் இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்கள் விரைவாக விரிவடைந்து வருகின்றன.

## 2.0. இலத்திரனியல் வர்த்தகத்தினை வரையறுத்தல்

**Defining Electronic Commerce**

இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்னணு வர்த்தகம் என்பது இணையத்தினை உள்ளடக்கிய கணினி வலையமைப்புக்கள் மூலமாக பொருட்கள் சேவைகள் தகவல்கள் என்பவற்றினை வாங்குவதையும் விற்பனை செய்வதையும் விபரிக்கின்ற ஒரு வளர்ந்து வரும் எண்ணக்கருவாகும். எவ்வாறாயினும் இலத்திரனியல் வர்த்தகத்திற்கு பல்வேறு நோக்கில் பல வேறுபட்ட வரைவிலக்கணங்களினைக் கொடுக்க முடியும்.

ஒரு தொடர்பாடல் நோக்கில் இருந்து பார்க்கும்போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொலைபேசி இணைப்புக்கள், கணினி வலையமைப்புக்கள் அல்லது ஏதாவது ஊடகம் மூலமாக தகவல், பொருட்கள் அல்லது சேவைகள், அல்லது கொடுப்பனவுகள் ஆகியவற்றினை வழங்குவதனைக் கருதுகின்றது.

ஒரு தொழில் செய்முறை நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல்

வர்த்தகம் என்பது தொழில் நிறுவன நடவடிக்கைகளினதும் வேலைப் பாய்ச்சல் களினதும் தன்னியக்கவாக்கம் நோக்கிய தொழில் நுட்பத்தின் பிரயோகம் ஆகும்.

ஒரு சேவை நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொழில் பொருள் தரத்தினை முன்னேற்றி சேவை வழங்கலின் வேகத் தினை அதிகரித்து, நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், முகாமைத்துவம் போன்றவற்றின் சேவைச் செலவினை குறைக்கின்ற ஒரு கருவியாகும்.

ஒரு தொடரறா நோக்கிலிருந்து பார்க்கும் போது வர்த்தகம் என்பது இணையம் மற்றும் ஏனைய தொடரறா சேவைகள் மூலமாக பொருட்கள், தகவல்களினை வாங்குவதற்கும் விற்பதற்கு மான செயல் வல்லமையில் வழங்குகின்றது எனலாம்.

மேலே கூறப்பட்ட அனைத்து வரைவிலக்கணங்களும் பெறுமதியானவை. இலத்தரனியல் வர்த்தகமானது வேறுபட்ட வலையமைப்புக்கள் மூலமாக வியாபார நடவடிக்கைகளினை நிறைவேற்றுகின்ற பெரும் முன்னேற்றங்களினை ஏற்படுத்தி வருகின்றது எனலாம். இத்தகைய முன்னேற்றங்களினால் சிறந்ததரம் உயர் வான வாடிக்கையாளர் திருப்தி, சிறந்த நிறுவனத் தீர்மானம் எடுத்தல் போன்ற சிறந்த செயற்றிறனுக்கு இட்டுச் செல்வ துடன் உயர்வான பொருளாதார வினைத் திறன், உயர்வேகம், துரிதத்தன்மை அல்லது நிகழ் நேர பரிமாற்றம் போன்ற மிக விரைவான பரிமாற்றத்திற்கும் வழிகோலு கின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தினை இன்னொரு வழியில் பின்வரும் இரண்டு கூறுகளாக பிரித்து நோக்கலாம்.

- நிறுவனங்களுக்கிடையிலான தகவல் முறைமை.
- இலத்திரனியல் சந்தைகள்

நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் முறைமையானது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் பாய்ச்சலுடன் தொடர்புபட்டதாகும். இதன் பிரதான நோக்கம் இலத்திரனியல் தரவு பரிமாற்றத் தினை பயன்படுத்தி கட்டளைகள், சிட்டைகள், பணக் கொடுப்பனவுகள் போன்ற வினைத்திறனான பரிமாற்று முறைவழியாக்கத்தினை மேற்கொள்வ தாகும். சகல தொடர்புகளும் முன்ன தாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும், இங்கு பேரம் பேசுதல் என்பது இருக்காது. முற்றாக நிறைவேற்றுகை காணப்படும்.

இலத்திரனியல் சந்தைகள் (Electronic markets) என்பது வாங்குபவர் களுக்கும் விற்பனையாளருக்கும் ஒரு கட்டளையில் உடன்பட்டு நிறைவேற்றுகை யானது தொடரறா அல்லது பின் தொடர் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது. நிறுவனங்களுக்கு இடையே முறைமைகள் வியாபாரத்துக்கு வியாபாரமாக (Business to Business B2B) பயன்படுத்தும் போது இலத்திரனியல் சந்தையானது வியாபாரத் துக்கு வியாபாரமாகவும், வாடிக்கை யாளருக்கு வியாபாரமாகவும் (Business to Customer B2C) தொழிற்படும் இரண்டு இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

## 2.1 நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகளின் நோக்கம் (Scopee of interorganizational information system)

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை என்பது, பல தொழில் பங்காளர்கள் சூழ்ந்து கொள்கின்ற ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு முறைமை யாகும். ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் முறைமையானது ஒரு நிறுவனம், மற்றும் அதனுடைய வழங்குநர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரினைக் கொண்டிருக்கும். நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் முறைமை மூலமாக வழங்குநர்களும் விற்பனையாளர்களும் தங்களுடைய நாளாந்த தொழில் நடவடிக்கைகளினை ஒழுங்கு படுத்தப்படுகின்றனர். தகவலானது முன்ன தாகவே ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங் களினைப் பயன்படுத்தி தொடர்பாடல் மூலமாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. ஆகவே தொலைபேசி அழைப்புக்கள், காகித ஆவணங்கள், அல்லது தொழில் தொடர்புகள் என்பன தேவையில்லாது போகின்றது. நிறுவனங்களுக்கு இடையே யான தகவல் முறைமையானது உரிமை யுடைய தொடர்பாடல் இணைப்புக்களினைப் பிரதானமாகப் பயன்படுத்தி வழங்குகின்றது. தற்போது சில நிறுவனங்களுக்கு இடையே யான தகவல் முறைமைகள் இணையத் திற்கு நகர்ந்து கொண்டு இருக்கின்றன.

நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் முறைமைகள்:

- நாளாந்த வியாபார பரிமாற்றங்களினது செலவினைக் குறைக்கின்றன.
- பிழைகளினை குறைத்து தகவல் பாய்ச்சலின் தரத்தை முன்னேற்று கிறது
- காகித நிரற்படுத்தலுடன் தொடர்புபட்ட காகிதம், வினைத்திறனற்ற தன்மை மற்றும் செலவீனம் போன்றவற்றினை நீக்குகின்றது.
- பாவனையாளர்களுக்கான வியாபார செய் முறையினை இலகுவாக்குகின்றது.

## 2.2 நிறுவனங்களுக்கிடையே முறைமைகளின் வகைகள் (Types of interorganizational systems)

நிறுவனங்களுக்கு இடையேயான தகவல் முறைமைகள் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளினை உள்ளடக்கி உள்ளது. அவற்றில சில இலத்திரனியல் வர்த்தகத் துடன் தொடர்பற்ற செயற்பாடுகளில் பயன் படுத்தப்படுகின்றன.

நிறுவனங்களுக்கு இடையே முறைமைகளில் மிகவும் பிரதானமான ஐந்து வகைகள் காணப்படுகின்றன.

- இலத்திரனியல் தரவு பரிமாற்றம்
- இலத்திரனியல் நிதிமாற்றம்
- இலத்திரனியல் வடிவங்கள்
- ஒருங்கிணை செய்தியிடல்
- பகிர்ந்தளிக்கப்பட்ட தரவுத்தளங்கள்

## 2.3 இலத்திரனியல் சந்தைகள் (Electronic Markets)

இலத்திரனியல் சந்தைகள் வியாபாரத்தினை நடாத்துவதற்கான ஒரு வாகனமாக நிறுவனங்களுக்கு இடையே யான முறைமைகளுடன் இணைத்து விரைவாக வளர்ந்து வருகின்றது. ஒரு

சந்தை என்பது தகவல், பொருட்கள், சேவைகள், கொடுப்பனவுகள் போன்ற வற்றினைப் பரிமாற்றியும், ஒருங்கிணைத் தும் உறவு முறை சார்ந்ததுமான ஒரு வலையமைப்பு ஆகும். சந்தைக்கான இடமானது இலத்திரனியல் வடிவில் இருக்கும்போது, விற்பனை நிலையமானது ஒரு பௌதீக கட்டிடத்தினைக் கொண் டிருக்கமாட்டாது. ஆனால் ஒரு வலை யமைப்பு வழியிலான இடமாக இருப்பதுடன் இங்கு வியாபார பரிமாற்றங்கள் நிகழும்.

இலத்திரனியல் சந்தையானது வாங்குநர்களும் விற்பனையாளர்களும் சந்திக்கும் இடமாகும். சந்தையானது வங்கிகளுக்கு இடையேயான பணத்தினை மாற்றீடு செய்வது உட்பட எல்லா அவசியமான பரிமாற்றங்களினையும் கையாள்கின்றது. இலத்திரனியல் சந்தை யில் பரிமாற்றங்களினைக் கையாள் பவர்கள், வாங்குநர்கள், தரகர்கள், விற்பனையாளர்கள் போன்ற முதன்மையான பங்குபற்றுநர்களாக இருப்பதுடன் அவர்கள் வேறுபட்ட இடங்களிலிருந்து ஒருவரை மற்றவர்கள் மிக அரிதாகவே தெரிந்தவர் களாகவே காணப்படுகின்றனர். இடைப் பிணைப்பு வழிகளானது குழுவினர்களுக்கு இடையே வேறுபடுவதுடன் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மற்றும் குழுக்களுக்கிடையே மாறுபாடுடையதாகவும் காணப்படுகின்றன.

## 3.0 நிறுவனங்களுக்கான நன்மைகள் (Benefits to Organizations)

இலத்திரனியல் வர்த்தகமானது தேசிய சந்தைகளில் இருந்து சர்வதேச சந்தைகளுக்கு சந்தர்ப்பத்தினை விரிவு படுத்தி உள்ளது. மிகக் குறைந்தளவான மூலதனச் செலவுகளுடன் ஒரு கம்பனி இலகுவாகவும் விரைவாகவும் கூடுதலான வாடிக்கையாளர், சிறந்த வழங்குநர்கள், மிகவும் பொருத்தமான தொழில் பங்காளர் கள் ஆகியோரை உலகளாவிய ரீதியில் கொண்டிருக்கும்.

- இலத்திரனியல் வர்த்தகமானது காகித அடிப்படையிலான தகவல்களினை உருவாக்குதல், நிரற்படுத்துதல், பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்தல், மீட்டுப்பார்த்தல் போன்றவற்றுக்கான செலவினைக் குறைக்கின்றது. உதாரணமாக, ஒரு இலத்திரனியல் கொள்வனவு நிர்வாகச் செலவினை கணிசமானளவு குறைத்துக் கொள்ள முடியும்.
- இலத்திரனியல் வர்த்தகமானது இழு வகை வழங்கல் சங்கிலி முகாமைத் துவத்தின் வசதியின் மூலமாக (Pull-type supply Chain management) குறைக்கப்பட்ட இருப்புக்களுக்கும், மேந்தலைகளுக்கும் அனுமதி அளிக் கின்றது. ஒரு இழுவகை முறையில் செய்முறை ஆனது வாடிக்கை யாளர்களின் கட்டளையில் இருந்து ஆரம்பித்து உடனடி நேர செய்முறை யினைப் பயன்படுத்துகிறது. இது பொருள் வாடிக்கையாளர்கள் மய மாக்கும் குறைந்தளவான இருப்புச் செலவுகளுக்கும் வழிவகுக்கின்றது.
- இலத்திரனியல் வர்த்தகம் ஆனது மூலதனச்செலவுகளுக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளினைப் பெறு வதற்குமிடையிலான நேரத்தினைக் குறைக்கின்றது.
- இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார செய்முறை மீள்பொறி அமைத்தல் முயற்சிக்கு ஆதரவு அளிக்கின்றது. செய்முறைகள் மாற்றப்படும் போது

விற்பனையாளர் அறிவு சார் தொழிலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் உற்பத்தித் திறனானது நூறுவீதம் அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கப் பட முடியும்.

- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது தொலைத்தொடர்பு செலவினை மிகக் குறைவாக வைத்துள்ளது. இணையமானது பெறுமதிச் சேர்க்கை வலையமைப்புக்களினை விட மிகவும் மலிவானதாகக் காணப்படுகின்றது.

## 3.1 நுகர்வோர்களுக்கான தன்மைகள் (Benifits to Customers)

- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் கூடுதலான தெரிவுகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. அவர்கள் பல விற்பனையாளர்களிடம் இருந்தும் பொருட்களில் இருந்தும் தெரிவு செய்ய முடியும்.
- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் குறைந்த செலவில் பொருட்கள், சேவைகளினை வாடிக்கையாளர்களிற்கு வழங்குகின்றது. அத்துடன், பல இடங்களில் விரைவாக தொடர்பு கொண்டு ஒப்பீடுகளினையும் மேற்கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.
- ❋ சில சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் வர்த்தகமானது பொருட்கள், சேவைகளினை விரைவாக வழங்குகின்றது.
- ❋ இலத்திரனியல் வர்த்தகத்தில் வாடிக்கையாளர்கள் தங்களிடமிருந்து எந்த நேரத்திலும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு கட்டளையிட முடியும்.
- ❋ வாடிக்கையாளர்கள் பொருத்தமானதும் விபரமானதுமான தகவலினைச் சில விநாடிகளில் பெற முடியும், பல நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை.
- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது ஒரு வாடிக்கையாளருடன் இலத்திரனியல் சமூகத்தில் ஒருவரோடு மற்றவர் கருத்துக்களினைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் தமது அனுபவங்களை ஒப்பீடு செய்வதற்கும் வசதி அளிக்கின்றது.

## 3.2 சமூகத்துக்கான நன்மைகள் (Benifits to Society)

- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது பல தனிப்பட்டவர்களினை வீட்டில் இருந்தபடியே வேலை செய்ய வசதி அளிப்பதனால் மிகக் குறைவான பயணங்களுக்கு அனுமதிக்கின்றது. இதனால் வீதிகளில் வாகன நெரிசல் குறைவாகக் காணப்படுவதுடன் காற்று மாசடைவதும் மிகக் குறைவாகக் காணப்படும்.
- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது சில வியாபாரிகளுக்கு தமது பொருட்களினை மிகக் குறைந்த விலையில் செய்வதற்கு அனுமதியளிப்பதனால், குறைவான பணவலுவுடைய மக்கள் கூடுதலாக இப் பொருட்களினை வாங்கித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.
- ❋ இலத்திரனியல் வர்த்தகமானது மூன்றாம் உலக நாடுகளில் கிராமப் பகுதிகளிலும் இருக்கும் மக்கள் பொருட்கள் சேவைகளினை அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்றது. உயர் தகைமை பற்றி கற்பதற்கும், கல்லூரி பட்டங்களினை பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களினை இலத்திரனியல் வர்த்தகம் வழங்குகிறது.

❋ இலத்திரனியல் வர்த்தகமானது பொதுச் சேவைகள் வழங்கலுக்கான வசதியினைக் கொடுக்கின்றது. இது செலவினைக் குறைத்து தரத்தினை அதிகரிக்கும்.

## 4.0 இலத்திரனியல் வர்த்தகத்தின் வகைகள் (Types of Electronic Commerce)

இலத்திரனில் வர்த்தகத்தில் பல சாத்தியமான பிரயோகங்கள் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் இடையேயும், வியாபாரிகளுக்கு இடையேயும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்களின் தனிப்பட்ட பொதுவான வகைகளாக மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கு இடையேயானவை. இதனை நிறுவனத்துக்கு நிறுவனம் எனவும், நிறுவனத்துக்குள்ளேயானவை, நிறுவனத்தில் இருந்து நுகர்வோர்களுக்குரியவை எனவும் வரையறுக்கலாம்.

நிறுவனங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம் (Inter organizational Electronic Commerce)

இந்தப் பார்வையில் இலத்திரனியல் வர்த்தகமானது பின்வரும் வியாபார பிரயோகங்களுக்கு வசதியளிக்கின்றது.

❋ வழங்குநர் முகாமைத்துவம்

இலத்திரனியல் பிரயோகமானது கம்பனிக்கு வழங்குநர்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கொள்வனவு கட்டளைகள், நிரற்படுத்தல் செலவு, சுழற்சி நேரங்கள் போன்றவற்றினைக் குறைப்பதற்கும் வசதியளிக்கின்றது.

❋ இருப்பு முகாமைத்துவம்

இலத்திரனியல் பிரயோகமானது கட்டளை சுழற்சியினைச் சுரக்குகின்றது. ஒரு நிறுவனத்தின் பங்காளர்களில் பலர் இலத்திரனியல் மூலமாக இணைந்திருப்பதால் தொலைநகல் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட தகவலானது உடனடியாக மாற்றீடு செய்யப்படுகின்றது. இது இருப்பு மட்டங்களினை குறைப்பதற்கும், இருப்பு சுழற்சியினை முன்னேற்றுவதற்கும், இருப்பின்மையினை நீக்குவதற்கும் உதவுகின்றது.

## 5.0 முடிவுரை

தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வர்த்தகம் பெற்றுக் கொண்ட நன்மைகள் அளப்பரியனவாகும். இலத்திரனியல் வர்த்தகமானது 21ம் நூற்றாண்டில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரைவாகவும், அதிகமாகவும் வளர்க்க உதவும் என்பதில் சந்தேகமில்லை. நவீன அடிப்படையிலான வர்த்தகம், சர்வதேச வர்த்தகத்தின் மீது, அதிக நாட்டத்தைச் செலுத்துவதாகக் கூற முடியும். இலத்திரனியல் வர்த்தகத்தின் அறிமுகம் சர்வதேச ரீதியாக இடம் பெறும் வர்த்தகத்தில் பெருமளவான சாதகத் தன்மையினை ஏற்படுத்தி இருப்பதன் காரணமாகவே உலகமயமாக்கல் வெற்றி பெற்றுள்ளது எனக் கூறிக் கொள்ள முடியும்.

# பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள்



**கலாநிதி க.அருந்தவராஜா**
**சிரேஷ்ட விரிவுரையாளர் I**
**வரலாற்றுத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## அறிமுகம்

உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையினை உண்டாக்கிய இப்புரட்சி யானது 18ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் பிரான்சில் ஏற்பட்டது. ஏதேச்சதிகார மன்னர் களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளியினை ஏற்படுத்தி மக்களாட்சி முறைக்கு வழி யிட்டுக் கொடுத்த புரட்சி இது. பூர்பன் வம்சம், திருச்சபையின் செல்வாக்கினை ஒழித்த புரட்சி. இதன் மூலமாக நடுத்தர வர்க்க மக்களின் செல்வாக்கு உயர்ந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாட்டினை உலகத்திற்குத் தெரியப்படுத்தியது. நிலமானிய அரசமுறை யிலிருந்து நவீன காலத்திற்கு நாட்டினை இட்டுச்சென்ற பிரான்சியப்புரட்சியானது பிற்பட்ட காலங்களில் ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகளுக்கெல்லாம் வழிகாட்டி யாக அமைந்தது.

மக்கள் தங்களது உரிமைக் கேற்ற வாறு அவர்கள் தங்களது சமுதாயத் தினைத் திருத்தியமைப்பதற்கு மேற் கொண்ட துணிகரமான முயற்சியின் விளைவுதான் இது. பிற ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான புரட்சிகள் ஏற்படாமல் அக் காலப்பகுதியில் பிரான்சில் ஏற்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் முக்கிய காரணம் அங்கு பிற ஐரோப்பிய நாடுகளைவிட கல்வி கற்றவர்களின் தொகை அதிகமாகக் காணப்பட்டமையேயாகும். பிரான்சியப்புரட்சி யானது திடீரெனத் தோன்றியது போன்று காணப்பட்டாலும் அதற்கு நீண்டகாலக் காரணங்கள் பல பின்னணியில் காணப் பட்டன. அரசியல் புரட்சியாக ஆரம்பத்தில் காணப்பட்டாலும் கூட பின்னாளில் இது சமுதாயப்புரட்சியாக மாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பூர்பன் வம்சத்தின் வல்லாட்சியில் காணப்பட்ட அரசியல், சமூக, சமய, பொருளாதார காரணங்கள் பல புரட்சிக்குப் பின்னணியில் காணப் பட்டன.

## புரட்சிக்கான காரணங்கள்

புரட்சிக்கு முற்பட்ட ஏறத்தாள இரண்டு நூற்றாண்டுகளாக பூர்பன் வம்சத்தினது ஆட்சியே பிரான்சில் இடம்பெற்று வந்தது. அவர்கள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட வர்களாகக் காணப்பட்டனர். தெய்வீக வழிவந்த கோட்பாட்டினடிப்படையிலே இவர்களது நிர்வாகம் நடைபெற்று வந்தது. 14ஆம் லூயி "நானே நாடு" என்று கூறினான். 15ஆம் லூயி "எனக்குப்பின் பிரளயம்" என்றான். 16ஆம் லூயி "மனைவி சொல்லே மந்திரம்" எனக் கிடந்தான்.

பாராளுமன்றமான முப்பேராயம் (States Genaral) மிக நீண்ட காலமாக அதாவது 1614இற்குப் பின்னதாகக் கூட்டப்பட வில்லை. ஆட்சியாளர்களிடம் சட்டங்களை இயற்றுதல், அவற்றினைச் செயற்படுத் துதல், இறுதி முடிவு எடுத்தல் போன்ற பல அதிகாரங்கள் குவிந்திருந்தன. அளவிற்கு மிஞ்சிய அதிகாரங்கள், அடக்கு முறைகள் போன்றன மக்களால் நிராகரிக்கப்பட்டன.

சமகாலத்தில் பிரான்சானது ஒழுங்கான முறையில் மாநிலங்களாகப் பிரிக்கப்பட வில்லை. சுயாட்சி நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய எவையும் காணப்பட வில்லை. மாவட்டப்பிரிவுகள் நிர்வாகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தின. பிரான்ஸ் முழுமைக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் இருக்கவில்லை. குறிப்பாக 400இற்கும் அதிகமான சட்ட முறைகள் காணப்பட்டன. பதவி நியமனங்களில் ஊழல்கள் காணப் பட்டன. வரி விதிக்கின்ற முறைகள் கூட ஏலத்தில் விடப்பட்டன.

பிரெஞ்சு ஆட்சியாளர்களால் நிதான மற்றமுறையில் வரிகள் விதிக்கப்பட்டன. வரி விதிப்புமுறையிலும் பாரபட்சமும் குறை பாடுகளும் காணப்பட்டன. இத்தகைய வரி விதிப்பினால் சாதாரண மக்களே அதிகள வில் துன்பப்பட்டனர். பிரபுக்கள், மதகுருமார் கள் போன்றவர்களுக்கு வரி விதிப்புக் களிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. இவர்கள் செலுத்த வேண்டிய வரிகளையும் கூட பல சந்தர்ப்பங்களில் ஏழைக்குடி யானவர்களே செலுத்தினர். குடியானவர் கள் நிலவரி, சொத்துவரி, தலைவரி போன்ற நேர்முக வரிகளையும் உப்புவரி, முத்திரை வரி போன்ற மறைமுக வரிகளையும் செலுத்தினர். வரிகள் வசூலிக்கின்ற உரிமையானது குத்தகைக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குத்தகைக்காரர் கள் நிர்ணயிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க அதிகளவான தொகையினை மக்களிடமிருந்து பெற்ற அதேநேரத்தில் அரசிற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை யினையே செலுத்துவதனால் மக்களின் வரிச்சுமையானது அதிகரித்த அதேநேரத் தில் அரசினது வருவாயும் குறைவடைந்த நிலையில் காணப்பட்டது.

14ஆம் லூயி மன்னன் தன்னுடைய காலத்தில் போர்களுக்காகவும் ஆடம்பரங் களுக்காகவும் பிரான்சின் திறைசேரி யினைக் காலி செய்தான். வேர்செயில்ஸ் மாளிகை ஆட்சியாளர்களின் ஆடம்பர மாளிகையானது. மாளிகையினை ஆக்கிர மித்த அழகிகள் அரசியலிலும் தலை யிட்டனர். தொடர்ந்து வந்த 16ஆம் லூயி மன்னனும் உல்லாச வாழ்வில் தன்னுடைய வாழ்நாளினைக் கழிப்பதில் ஈடுபட்டதனால் நாட்டுக்கு நல்ல பல சீர்திருத்தங்களை அவனால் வழங்க முடியவில்லை.

4ஆம் லூயி மன்னருக்குப் பின்னர் பிரான்சில் பதவியேற்ற மன்னர்களில் பலர் திறமையற்றவர்களாகவே காணப்பட்டனர். 14ஆம் லூயி மன்னரின் காலத்திலேயே ஏற்கனவே பிரான்சில் காணப்பட்ட குடியேற்றங்கள் பல கைநழுவிச் சென்றன. குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியக் குடியேற்றங்களைக் குறிப்பிடலாம். ஏழாண்டுப் போரும் பிரான்சின் நிலையினை மேலும் மோசமாக்கியது. "நாடா? அது நானே" என்றவாறு 14ஆம் லூயி மன்னனது ஆட்சி காணப்பட்டது. வீண் போர்கள், ஆடம்பரங்களில் நிதி நிலை மோச மாகியது. தொடர்ந்து 15ஆம் லூயி மன்னனும் இவ்விடயமாகத் தானும் சளைத்தவனல்ல என்ற அடிப்படையில் ஆட்சி நடவடிக்கைகளில் இறங்கினான். பிரான்சின் கடல் வர்த்தக நடவடிக்கைகள்

பாதிக்கப்பட்டன. 16ஆம் லூயி மன்னரின் காலத்தில் மேலும் நிலைமை மோசமாகியது. பிரான்சிய அரியணையினை மரபு ரீதியாகப் பெற்ற இவருக்கு ஆட்சியினைத் திறமை யாக நடாத்தக்கூடிய தன்மை இருக்க வில்லை. மதிநுட்பமென்பது இல்லை. பாராளுமன்றத்தினைக் கூட்டியதிலிருந்து 1791இல் அவர் தப்பியோடும் வரை அவர் மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் நாட்டினை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றவகையில் காணப்பட்டன.

இராணுவ அமைப்பிலும் குறைபாடுகள் காணப்பட்டன. வீரர்கள் கடுமையான பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர். அவர் களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் குறை வாகவே காணப்பட்டன. அவர்களது நலன் களும் புறக்கணிக்கப்பட்டன. இதன் காரண மாகப் படையினர் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டது. படைத்தலைவர்களில் பலர் திறமை, தகுதியற்றவர்களாகக் காணப் பட்டனர்.

நீதித்துறையில் பலதரப்பட்ட நீதி மன்றங்கள் காணப்பட்டன. அதிகார வரம்பு தொடர்பான போராட்டங்கள் இவற்றிக்கு இடையிலே அடிக்கடி இடம்பெற்று வந்தன. நீதிபதிப் பதவிகள் விற்பனை செய்யப் பட்டன. நீதித்துறையில் ஊழலும் இலஞ்சமும் மிகுந்திருந்தன.

பிற்பட்ட காலங்களில் சமுதாயப்புரட்சி யாக மாறிய பிரான்சியப் புரட்சிக்குச் சமுதாயக் காரணங்களும் பல காணப் பட்டன. காரணம் புரட்சியின் பிரதான நோக்கமே சமுதாயத்தினை மாற்றியமைப் பதே. பிரான்சில் சமுதாயத்தில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. அத்துடன் இவற்றினை அடிப்படையாகக்கொண்டு சுரண்டல்களும் அநீதிகளும் இடம்பெற்றன. இச்சமுதாயமானது சலுகை பெற்ற பிரிவினர் கள், சலுகை பெறாதவர்கள் என்ற இரண்டு முக்கியமான பிரிவினர்கள் காணப்பட்டனர். சலுகை பெற்ற வகுப்பினருள் மதகுருமார் கள், பிரபுக்களும், சலுகை பெறாத வகுப் பினருள் மக்கள், நடுத்தர வகுப்பினர்கள் அடங்கியிருந்தனர். இதில் முதற் பிரிவினர் வரிச்சலுகைகள் உட்பட அனைத்துச் சலுகைகளையும் பெற்றிருந்ததுடன், நாட்டில் சமகாலத்தில் காணப்பட்ட ஐந்தில் மூன்று பங்கு சொத்துக்களை அனுபவிப் பவர்களாகவும் விளங்கினர். மாட மாளிகை கள், ஆடம்பர வாழ்க்கையென இவர்களது காலம் சென்றது.

பிரான்சில் காணப்பட்ட சலுகை பெற்ற பிரிவினர்களில் இவர்களும் அடங்குவர். பிரபுக்கள் குடும்ப அங்கத்தவர்களே பெரும்பாலும் உயர் மதகுருமார்களாக நியமனம் செய்யப்பட்டனர். சமயப் பணி களுக்குச் சிறிதும் தகுதியற்றவர்களாகக் காணப்பட்ட இவர்கள் சுகபோக வாழ்க்கை யினை விரும்பி குருமாராகியவர்கள். ஆடம்பரங்கள் களியாட்டங்களில் இவர் களது மனம் சென்றது. அதே நேரத்தில் கீழ்நிலையிலிருந்த குருமார்களது நிலை யானது சாதாரண மக்களது தரத்தினை யொத்த வகையிலேதான் காணப்பட்டது. திருச்சபையானது அரசிற்குள் அரசாகக் காணப்பட்டது. அது தனியான நிர்வாகத் தினையும் நீதிமன்றங்களையும் கொண டிருந்தன. வருவாய்களை மக்களிடம் வெவ் வேறு வழிகளிலே பெற்றுக்கொண்டது. அரசியல் ரீதியில் பிரபுக்களுடன் இவர்கள் இணைந்து செயற்பட்டனர்.

பிரான்சிய சமுதாய அமைப்பில் வல்லாட்சிக்குத்துணை நின்ற பிரதான பிரிவினர்களாகப் பிரபுக்களைக் குறிப்பிட லாம். சுமார் இரண்டரைக்கோடி மக்களைக் கொண்ட பிரான்ஸ் நாட்டில் புரட்சிக்

காலத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் பிரபுக்கள் வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் சொத்தில் குறிப்பிட்டளவு பங்கினை அனுபவித்து வந்த இவர்கள் வரிவிதிப்பு, கட்டாய இராணுவசேவை, ஏனைய சாதாரண மக்கள் செய்கின்ற பணிகளிலிருந்த விலக்களிக்கப்பட்டனர். இவர்கள் தலைநகரில் மன்னனுடன் வாழ்ந்த போதும் கூட, சிலர் கிராமப்புறங்களில் குறுநில மன்னர்களைப் போன்று செயற்பட்டு வந்தனர். இவர்கள் பண்ணைகளில் குடியானவர்களின் உழைப்பினைச் சுரண்டி வாழ்க்கை நடாத்தி வந்தார்கள். இவர்கள் அரசருக்கும் மக்களுக்குமிடையிலே தொடர்பு களுக்குப் பிரதான தடைக்கற்களாக விளங் கினர். பல சந்தர்ப்பங்களில் தாம் செலுத்த வேண்டிய வரிகளையும் மக்களிடமே வசூலித்தனர்.

பொதுமக்களது நிலை மோசமானதாகக் காணப்பட்டது. வரியின் முழுப்பழுவினையும் சுமந்த பிரிவினர்களாக இவர்கள் காணப் பட்டனர். பல வழிகளிலும் உரிமைகளை இழந்த இவர்கள் கொடுமைப்படுத்தப் பட்டனர். உயர் வகுப்பினர் சண்டை செய்வர், குருமார் மண்டியிடுவர், இவர்கள் தண்டமிடுவர் என்பது அக்காலப்பகுதியில் பொதுவாக வழங்கப்பட்டு வந்த கூற்றாக உள்ளது. அரசிற்குக் கிடைத்த வருவாயில் பெரும்பகுதியினை மக்களே பல்வேறு வழிகளில் செலுத்தி வந்தனர். Taille எனப்பட்ட நிலம் சம்பந்தமான வரியினை மக்களே செலுத்த வேண்டியிருந்தது. வழக்கமான வரிகளுடன் புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. Gabelle எனப்பட்ட உப்புவரி ஏழை மக்களை அதிகளவில் பாதித்தது. திருச்சபைக்கு Tithe என்ற வரி யினையும் செலுத்தினர். இவர்கள் வேட்டையாடவோ மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவோ அனுமதி மறுக்கப் பட்டிருந்தது.

படைமானியச் சேவையினையும் நில மானியச் சேவையினையும் இவர்கள் செய்ய வேண்டியிருந்தது. பிரபுக்களின் நிலங்களில் வாரத்தில் குறிப்பிட்ட தினங் கள் கட்டாயம் வேலை செய்ய வேண்டி யிருந்தது. பொருட்களைக் காணிக்கை யாகவும் செலுத்தினர்.

சாதாரண மக்களிடையிலே உள்ளடங் கியிருந்த மத்தியதர வகுப்பினர் பூஷ்வா எனப்பட்டனர். வர்த்தகர்கள், வழக் கறிஞர்கள், கல்வியாளர்கள், தொழில் வல்லுநர்கள் போன்றவர்கள் அடங்கி யிருந்தனர். இவர்கள் பிரான்சில் சம காலத்தில் காணப்பட்ட நிலையினைக் கண்டு ஆத்திரமடைந்தனர். கல்வியறிவில் சிறந்துவிளங்கிய இவர்கள் மக்களைப் பல்வேறு வழிகளிலும் புரட்சியினை ஏற்படுத்தத் தூண்டினர்.

பிரான்சியப் புரட்சிக்குப் பங்களிப் பினைச் செய்தவர்களில் தத்துவஞானிகள் பிரதான இடத்தினைப் பெறுகின்றனர். அரசியலிலும் சமுதாயத்திலும் காணப்பட்ட ஊழல்களை துணிந்து சுட்டிக்காட்டினர். இவர்களில் வோல்ரயர், ரூசோ, மொண் டெஸ்கியூ போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களது சிந்தனைகளில் மனிதாபிமானக் கோட்பாடுகள், மக்களது உரிமைகள், பகுத்தறிவு போன்ற சிந்தனை கள் வெளிவந்தன. மத்தியதர வர்க்கத்து மக்களிடையிலே இவர்களது படைப்புக்கள் பெருஞ் செல்வாக்கினை ஏற்படுத்தின எனலாம்.

எழுத்தாற்றல் கொண்ட வோல்ரயர், தன்னுடைய எழுத்துக்களால் திருச்

சபைக்கெதிராகவும், மூடநம்பிக்கைகளுக் கெதிராகவும், மக்களுக்கெதிராக இழைக்கப் பட்ட அநீதிகளை எதிர்த்தும் போராடினார். மனிதனது சிந்தனைகள் வளர வேண்டு மாயின் திருச்சபையின் செல்வாக்கு இல்லாமல் போகவேண்டுமென்றார். மக்க ளாட்சியினை விரும்பாத இவர் அறிவாற்றல் மிக்க வல்லாட்சியினை விரும்பினார். மொத்தத்தில் பிரான்சில் காணப்பட்ட பழைய முறைகள் (Ancient regime) எல்லாம் இவரால் கண்டிக்கப்பட்டன. இவரால் எழுதப்பட்ட நூல்களில் 14ஆம் லூயியின் காலம்(Age of LouisXIV), தத்துவ அகராதி (Philoso phical Dictonary), கன்டிட் (Candid) போன்றன குறிப்பிடத்தக்கன. நூறு சுண்டெலிகளினால் ஆளப்படுவதனை விட ஒரு சிங்கத்தினால் ஆளப்படுவதனையே தான் விரும்புவதாக அறிவித்தார். இவரது கோட்பாடுகள் இளைஞர்கள் பலரைச் சிந்திக்க வைத்தது. இவரை "பகுத்தறிவுக் காலத்தின் விடி வெள்ளி"யாகவும் கருதுவர்.

மனித சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய பெரிய நன்மை சுதந்திரமெனவும் ஆங்கிலேய நிறுவனங்களைச் சுட்டிக்காட்டி சுதந்திரத்தினை எவ்வாறு அரசியல் வழிகளைக் கையாண்டு வெற்றி பெறலா மென்பதனை எடுத்துக்காட்டினார். நாடு திருந்த வேண்டுமாயின் பிரான்சில் காணப்படுகின்ற முறைகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டுமென விரும்பினார். இவருடைய கொள்கைகள் எல்லாம் மக்கள் மனதில் இலகுவாகப் பதிந்தன. தன்னுடைய பாரசீகக் கடிதங்கள்( Persain letters) என்ற நூலில் பிரான்சில் காணப்பட்ட ஊழல் களைக் கண்டித்தார். இவருடைய சட்டங் களின் கருப்பொருள் (The Spirit of Laws) என்ற நூல் பிரான்சில் காணப்பட்ட ஏகபோக உரிமையினைக் கண்டித்தது. இந்நூலில் தான் இவருடைய அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. இது இங்கிலாந்தில் சமகாலத்தில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட முடியாட்சியினை ஆதரித்து நின்றது. நாட்டினது சுதந்திரத் தினைப் பாதுகாக்கவும் கொடுங்கோண்மை யினை விலக்கவும் பாடுபட்டார். சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய மூன்று துறைகளும் ஒருவரிடம் ஒப்படைக்கப்படும் போது அது சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்குமெனவும் இதனால் அவை தனித்தனியாகவே செயற்பட வேண்டுமெனக் கூறினார். இத்தகைய மூன்று துறைகளும் தமக்குள் முரண்படாமல் ஒன்றினையொன்று கட்டுப் படுத்தி அதிகாரச்சமநிலையினை நிலை நாட்டி தத்தம் அதிகார வரம்பிற்குள் இயங்கும்போது மக்களது உரிமைகள் பாதுகாக்கப்படுமெனக் கூறினார்.

பிரான்சியப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய சிந்தனையாளர்களில் ரூசோவும் ஒருவர். இவரது சிந்தனைகளைச் சாதாரண மக்களால் விளங்கிக்கொள்ள முடியாது விட்டாலும்கூட அம்மக்களின் சிந்தனை களைத் தூண்டியதில் இவருக்கும் பங்கு உண்டென்பதனை எவரும் மறுக்க முடியாது. சமுதாய ஒப்பந்தம் (Social contract) என்பது ரூசோ எழுதிய நூல்களில் சிறப்பானது. சமுதாய மக்கள் பொதுநலனைக் கருத்தில்கொண்டு தமது உரிமைகளையும் அதிகாரங்களையும் சமுதாயத்திடம் ஒப்படைக்கின்ற உடன் பாடே இது. அரசென்பது ஆளப்படுபவரின் விருப்பத்திற்கு அமைவாகவே இருத்தல் வேண்டும். அவர்களது ஆதரவினை இழந்த அரசு அதிகாரத்தினையும் இழக்கும் போன்ற கருத்துக்கள் தர்க்க ரீதியில் இதில் விளக்கப்பட்டுள்ளன. இவருடைய சிந்தனை

கள் மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெறத் தொடங்கியது. இந்நூலின் தீவிரத் தன்மை காரணமாக அரசினால் இது தடை செய்யப்பட்டதுடன் அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றதன் பின்னணியில் இவர் சுவிற்சலாந்து சென்றார்.

இந்நூலில் மனிதனைப் பற்றியும் மக்களாட்சியினைப் பற்றியும் பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. "மனிதன் சுதந்திரமாகப் பிறந்துள்ளான். ஆனால் அவன் அடிமைச்சங்கிலியினால் கட்டுண்டு கிடக்கின்றான்." என்றார். இறைமை மக்களிடத்திலேதான் காணப்படுவதாக நம்பினார். கொடுங்கோலாட்சியினை மக்களினால்தான் அகற்ற முடியுமென நம்பினார். இவருடைய சமுதாய ஒப்பந்தம் தான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகிய கோட்பாடுகளை உலகிற்கு அளித்ததெனலாம். 1789ஆம் வருட மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் 1791 அரசியல் அமைப்பிலும் இவருடைய கோட்பாடுகளைக் காணலாம்.

பிரான்சில் புரட்சி ஏற்படுவதற்கு முன்ன தாக அங்கு காணப்பட்ட பகுத்தறிவாளர் களினால் கலைக்களஞ்சியம் (Encyclopaedia of Science, Art and Crafts) வெளியிடப் பட்டது. இதில் சமகாலத்தில் பிரான்சில் காணப்பட்ட தீமைகள் பற்றிக் கூறப் பட்டிருந்தது. குறிப்பாகத் திருச்சபை யினதும் அரசினதும் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட்டன. வர்த்தக நடவடிக்கை யில் அரசினது தலையீடு கண்டிக் கப்பட்டது. இதனை உருவாக்கியவர்களில் டிடரோ (Diderot), அலம்பேரட் (Alembert) போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அரசினால் தடைசெய்யப்பட்ட இது கொழுத்தப்பட்டது.

அமெரிக்காவில் குடியேற்றவாசிகள் தங்களது தாய்நாட்டிற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி நடவடிக்கையின் போது இங்கிலாந்திற்கு எதிராகப் பிரான்ஸ் ஆயுத, படை உதவி களை வழங்கி அவர்களது வெற்றிக்காக உழைத்தது. அவர்கள் போரின் முடிவில் அமெரிக்காவில் ஜனநாயக அரசொன்றினை நிறுவிக் கொண்டனர். இப்போரில் பங்குகொண்ட படை வீரர்கள் தமது நாட்டிலும் இப்படியானதொரு அரசு அமைய வேண்டுமென விரும்பினர். மேலும் பிரான்சின் பொருளாதாரமும் இப்போரினால் பாதிக்கப்பட்டது. அத்துடன் சுயாட்சி பெறுகின்ற முயற்சியில் அயர்லாந்து மக்கள் ஆங்கில நாட்டிடமிருந்து பல சலுகைகளையும் பெற்றனர்.

பிரான்ஸ் நாட்டினது நிதிநிலையானது பல வழிகளிலும் நெருக்கடியான நிலையில் காணப்பட்டது. அந்தவகையில் பொருளா தாரக் காரணங்களே புரட்சிக்கான உடனடிக்காரணமாகச் சொல்லப்படுவ துண்டு. பிரான்சினை ஏற்கனவே ஆட்சி செய்திருந்த 14ஆம் லூயி, 15ஆம் லூயி போன்ற மன்னர்கள் மேற்கொண்ட தேவையற்ற போர்கள், ஆடம்பரச் செலவுகளினால் அரசின் நிதிநிலை கவலைக்கிடமானது. அவுஸ்திரிய வாரி சுரிமைப்போர், ஏழாண்டுப்போர் போன்ற போர்கள் தேவையற்ற போர்களாக அமைந்தன.

அரசகுடும்பத்தவர்களின் ஆடம் பரச்செலவுகள், வாழ்க்கை முறைகள் அரச கருவூலத்தினை வற்றச் செய்தன. பதினாறாம் லூயி மன்னரின் மனைவி மேரி அன்ரயனற்றின் ஆடம்பரச் செலவுகள் இவற்றில் குறிப்பிடத்தக்கன. இதனாலேயே இவர் பற்றாக்குறை அம்மையார் என ஏளனஞ் செய்யப்பட்டார்.

பிரான்சின் கடனானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. அதிகளவான வட்டிக்குக் கடன் பெற்றதன் பின்னணியில் பொதுக்கடன் அதிகரித்துக் கொண்டே வந்தது. வரிகளை மதிப்பீடு செய்வதில் தடைகள் பலவும் காணப்பட்டன. குறிப்பாக சலுகைகள், வரி விலக்குகள் இதற்கு முக்கியமான காரணங்களாகக் காணப்பட்டன. பிரான்சில் வரவு செலவுத் திட்டமென்பது ஒழுங்கான முறையில் பின்பற்றப்படாமையினால் நிதியினைத் திட்டமிட்டுச் செலவு செய்ய முடியவில்லை.

**உடனடிக்காரணம்**

ஏற்கனவே கூறியபடி ஸ்பானிய வாரிசுரிமைப்போர், அவுஸ்திரிய வாரிசுரிமைப் போர், ஏழாண்டுப்போர், அமெரிக்கச் சுதந் திரப்போர் ஆகியன காரணமாக நாட்டினது நிதிநிலைமையானது பிரான்சில் மோசமான நிலையில் காணப்பட்டது. இவையெல்லாம் பிரான்சியப்புரட்சிக்கு வித்திட்டதெனலாம். பொதுக்கடன்கள் அதிகரித்தன. பதினாறாம் லூயி அன்ரனாய்ற்றின் சொற்கேட்டு அவரது கைப்பொம்மையானார். மக்களது வரிப்பளு வினைக் குறைப்பதற்கு ரர்கோட்(Turgot), நெக்கர் (Necker), கொலொன் (Calonne), பிரைன் (Brienne) போன்ற நிதி அமைச்சர் கள் குருமார்கள் உட்பட உயர் அதிகாரி களின் மீது வரிகள் விதிப்பதற்கான அவசியத்தினைத் துணிந்து எடுத்துக் காட்டினர். இருப்பினும் அரசரால் இவர்கள் பதவியிலிருந்து அகற்றப்பட்டனர். அதாவது 1774இல் அரசரால் ரர்கோட் என்பவர் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். இவரால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தத்தின் பின்னணியில் பிரபுக்களாலும் மத குருமாராலும் இவர் வெறுக்கப்பட்டார். தொடர்ந்து அரசியாரின் ஆலோசனையின் பெயரில் அவர் மன்னரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். தொடர்ந்து 1776இல் நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட நெக்கர் நாட்டினது நிதி நெருக்கடியினைச் சமாளிப்பதற்குப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தினார். இவர் 1781இல் வரவு செலவு அறிக்கையினைப் பகிரங்கமாக வெளியிட்டார். இதன் மூலமாக உயர் குடியினர் அனுபவித்த ஆடம்பரச்செலவு கள், உதவுதொகைகள் எல்லாம் வெளி வந்தன. சிக்கனத்தினைக் கையாண்டார். இவர் புரட்டஸ்தாந்து மதத்தவராகக் காணப்பட்டமையால் இவர் மீதான வெறுப்பு மேலும் அதிகரித்தது. இவரும் பதவியி லிருந்து நீக்கப்பட்டார்.

இவருக்குப் பின்பாக கொலோன் என்பவர் நிதியமைச்சரானார். 1781இல் இவர் கடன் திரட்டி நிதி நெருக்கடியினைச் சமாளிக்க முற்பட்டார். 1787இல் இவரும் உயர்குடிவகுப்பினருக்கெதிரான தனது நடவடிக்கையின் காரணமாகப் பதவி நீக்கப்பட்டார். எவ்வாறாயினும் இவரது ஆலோசனையின் பிரகாரமே உயர் குடியினருக்கு வரிகளை விதிக்கும் வழி முறை தொடர்பாக ஆராய்வதற்கு 1787இல் பதினாறாம் லூயி குறிப்பிடத்தக்கவர்களின் சபையினைக் (Council of Notables) கூட்டினாரென்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் முடிவுகள் எவையும் அதில் எடுக்கப்படவில்லை. இந்தச்சபையினது ஆலோசனையின் பெயரில் நீண்டகால மாகக் கூட்டப்படாமலிருந்த பிரான்சிய முப் பேராயத்தினைக் 1789இல் கூட்டுவதற்கான கட்டாய தேவை அரசிற்கு ஏற்பட்டது. இது கூட்டப்பட்டதிலிருந்து பிரான்சியப்புரட்சி ஆரம்பித்ததெனலாம்.

இறுதியில் பிரான்சில் ஏற்பட்ட நிதிநெருக்கடியினைச் சமாளிக்கின்ற நோக்குடன் 16ஆம் லூயி புதிய வரிகளை

விதித்தார். உண்மையில் மன்னரது கட்டளைகள் நீதிமன்றங்களினால் பதிவு செய்யப்பட்டாலே சட்டமாக்கப்படும். இது அரசருடைய வரி விதிப்பினை ஏற்கவில்லை. அது நிரந்தரமாகச் சீர்திருத்தம் செய்கின்ற உரிமை முப்பேராயத்திற்கே உண்டென 1797 ஜுலை 27இல் அறிவித்தது. ஆத்திர மடைந்த லூயி நீதிமன்றங்களின் உரிமை களை நசுக்க முற்பட்டார். தொடர்ந்து அடிப்படைச்சட்டங்கள் (Fundmental laws) என்பதனை அது இயற்றி வரிகள் விதிக்கின்ற அதிகாரம் முப்பேராயத்திற்கே உண்டெனவும் நீதிபதிகளைப் பதவி நீக்கஞ் செய்கின்ற அதிகாரம் அரசருக்கில்லை யெனவும் கூறியது. தொடர்ந்து அரசர் நீதிமன்றங்களைக் கலைத்தார். இதனால் கலகங்கள் நாட்டில் ஏற்பட்டன. வேறு வழியின்றி 1789 மே 1இல் முப்பேராயத் தினைக் கூட்டுவதற்கான ஆணை பிறப் பிக்கப்பட்டது. நெக்கர் மீண்டும் அழைக்கப் பட்டு அதனைக் கூட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1789 மே5இல் 175 ஆண்டுகளின் பின்பாக முப்பேராயம் கூட்டப்பட்டது.

## முடிவுரை

அந்தவகையில் பிரான்சில் ஏற்பட்ட இப்புரட்சியானது புரட்சிகளுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கிய புரட்சியாகக் காணப்படுகின்றது. அடிப்படையில் சமுதாய, அரசியல், பொருளாதாரப் பின்னணியில் தோன்றிய பிரான்சியப் புரட்சியானது பல விளைவுகளை உலகத்திற்கு வழங்கியது. உண்மையில் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு காலங்களிலும் புரட்சிகள் ஏற்பட்டிருந்தாலும் கூட இப் புரட்சியினால் மக்களடைந்த நன்மைகளைப் போன்று பிற புரட்சிகளால் அடையவில்லை யென்றே கூறுதல் வேண்டும். அந்தவகையில் இதனைப் பிரான்சியப் புரட்சி என்று கூறுவதனை விட உலகப் புரட்சி என்று கூறுவதே பொருத்தமான தாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. Denis Richards,(1935), *An Illustrated History of Modern Europe 1789 1945*, Longmans Green & Co, London.
2. Denis Richards (1957), *An Illustrated History of Modern Europe 1789 1945,* Longmans Green and Company, London.
3. Edward Monall Burn.s, Robert Lerner, Standish Meacham, (1973), *Western Civilizations,* Norton and Company, NewYork.
4. Fisher, H.A.L,(1936), *A History of Europe*, Edward Arnold and Company, London.
5. George Macauly Trevelyan, (1926), *History of England,* Longmans Green & Co, London.
6. George Lefebvre, (1962), *The French Revolution,* Routledge and Kegan Paul, New York.
7. Jules Michelet, (1970). " The Causes of the French Revolution" *Early Modern Europe 1505 1815*, AHM Publishing Coporation Illionois.
8. Louis Madelin, (1938), *The French Revolution,* William Heinemann Ltd, London.

# பல்லவர் கால பக்தி இலக்கிய மரபு



**கலாநிதி. நிர்மலாதேவி நல்லையா**
**உப பீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்)**
**தேசிய கல்வியியல் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

களப்பிரர் காலம் எனப்படும் சங்க மருவிய காலத்தில் சமணம் பௌத்தம் ஆகிய புறச் சமயங்கள் ஆதிக்கம் செலுத்தலாயின. சங்ககால தமிழகத்தில் அடிக்கடி இடம்பெற்ற போரும் அக்காலத்தில் காணப்பட்ட கள்ளுண்ணல், புலாலுண்ணல், பரத்தமை ஒழுக்கம் போன்ற நிலைகளும் மக்களிடம் அற ஒழுக்கங்களிலான ஈடுபாட்டை ஏற்படுத்தலாயின. இந்நிலையில் சமண, பௌத்த துறவிகளிடம் காணப்பட்ட கல்வியறிவு, ஒழுக்கம், ஆகியன மக்களைக் கவரலாயின. அத்துடன் மடங்களை நிறுவியும் அவற்றைக் கல்விச்சாலைகளாக மாற்றியும் நால்வகைத் தானங்களை அளித்தும் அவர்கள் மக்களது மனங்களைக் கவரலாயினர். மக்கள் மட்டுமன்றி மன்னர்களும் மதம் மாறிய நிலையில் சைவ, வைணவ மதங்கள் தம் நிலையிழக்கத் தொடங்கின. இந்நிலையில் சைவ, வைணவ மதங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்யும் வகையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய தொண்டுகள் சைவ, வைணவ மதங்களின் புத்துயிர்ப்புக்கு மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கிய உயிர்ப்புக்கும் காலாக அமையலாயின.

சைவ, வைணவ மதங்களில் நம்பிக்கையிழந்த நிலையில் சமண, பௌத்த மதங்களைச் சார்ந்த மக்களை மீண்டும் வைதீக மதத்திற்கு மாற்றுவதற்கு நாயன்மார்கள் பக்தி இயக்கத்தை உருவாக்கினார்கள். மக்களிடையே எமது சமயத்தின் பெருமைகளையும் எமது பரம்பொருளின் அதி அற்புதச் செயல்களையும் இறைவன் மீது பக்தி விசுவாசம் கொண்டு பெற்ற பயன்களையும் இறைவனை நிந்தித்தோர் அடைந்த இன்னல்களையும் செய்த குற்றத்திற்காக வருந்தும் வேளையில் அருள் பாலிக்கும் இறைவனின் அருட்திறத்தையும் எடுத்துக் கூறுவதனூடாக மக்களை சைவ சமயத்திற்குத் திருப்பலாம் எனக் கருதிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் தேவாரங்களையும் பிரபந்தங்களையும் இசையோடு பாடலாயினர். இவற்றைப் பாடிப் பல தலங்களுக்கும் யாத்திரை சென்றனர். உலக வாழ்வில் இருந்து கொண்டே இறைவனை அடையலாம் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தலாயினர். அத்தகைய தமது பிரசாரத்திற்கு பக்தி இலக்கியங்களை முழுமையாகப் பயன்படுத்தினர்.

அக்காலத்தில் இறை நம்பிக்கையின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்த வேண்டிய தேவை கட்டாயமாயிற்று. சங்க காலத்தில் அரசர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் பல்லவர் காலத்தில் கடவுளர்களுக்குக் கொடுக்கப்படலாயிற்று. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களில் நின்ற நாயன்மார்கள் இறைவனை தந்தையாக, ஆண்டானாக, தோழனாக, குருவாக கொண்டு பதிகங்களைப்

பாடலாயினர். இவ்வாறே ஆழ்வார்களும் பல்வேறு உறவுமுறைகளின் வழிநின்று பாசுரங்களைப் பாடியுள்ளனர். நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோர் நாயகன், நாயகி பாவத்தைக் கையாண்டுள்ளனர். பெரியாழ் வார், குலசேகராழ்வார் ஆகியோர் தம்மைத் தாயாகக் கொண்டு பாடியுள்ளனர். இவ்வாறு இறைவனோடு அன்புத் தொடர்பு கொண்ட அடியார்கள் இறைவனையே அனைத்துமாகக் கொண்டு பாடிய பாடல் களே பல்லவர் கால பக்தி இலக்கியங் களாகும்.

சங்க காலத்தில் இயற்கைக் காட்சிகளும் இயற்கை வர்ணனைகளும் அக ஒழுக்கங்களையும் புற ஒழுக்கங் களையும் விளக்குவதற்குப் பயன்படுத்தப் பட்டன. ஆனால் பல்லவர் காலத்தில் இவை ஆலயங்களின் சிறப்பை எடுத்துக்காட்டப் பயன்படுகின்றன. சம்பந்தர் பாடல்களில் இறுதி இரு வரிகளும் பெரும்பாலும் இவ்வாறு அமைந்திருக்கும்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது சமயக் கருத்துக்களை வலியுறுத்த புராண இதிகாசக் கதைகளை பயன்படுத்தி யிருக்கின்றனர். சம்பந்தர் பாடல்களில் அந்தகாசுரனைச் சங்கரித்தமை, காமனை எரித்தமை, காலனை உதைத்தமை, திரிபுரம் எரித்தமை, தக்கன் வேள்வி தகர்த்தமை, பிரமன் சிரத்தைக் கொய்தமை, முதலான இறை அருட்செயல்கள் இடம் பெற்றுள்ளன. அப்பர் பாடல்களிலும் இறைவனது அருட்செயல்கள் புராணக் கதைகள் ஊடாக கூறப்பட்டுள்ளன. இவ்வாறே ஆழ்வார்களும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களின் வழிநின்று கண்ணனது அவதாரச் சிறப்புக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

பக்தி இலக்கியங்களில் சைவ சித்தாந்தக் கருத்துகளும் பெருமளவு காணப்படுகின்றன. சம்பந்தப் பெருமானின் "ஈறாய் முதல் ஒன்றாய்..." என வரும் பாடல் இறைவனின் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கும் நிலையை விளக்குகின்றது. திருவாசகத்தில் சித்தாந்தக் கருத்துகள் பெருமளவில் உள்ளன.

நாயன்மார்கள் ஈடு இணையற்ற தலைவனாக இறைவனைக் கொண்டமை யால் எதற்கும் அஞ்சாத நெஞ்சுறுதி மிக்கவர்களாக விளங்கினர். 'நாமார்க்கும் குடியல்லோம்' என அரசருக்கெதிராக குரல் கொடுத்த பெருமை அப்பருக்குரியது. 'வானந்துளங்கிலென் மண்கம்ப மாகிலென்' எனும் தேவாரமும் அப்பரது மன உறுதியின் வெளிப்பாடே. இவ்வாறே தொண்டரடிப் பொடியாழ்வாரது பக்தி வைராக்கியச் சிறப்பிற்கு 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே' எனும் அடிகள் எடுத்துக் காட்டாகும்.

இவைமட்டுமன்றி சமுதாய சீர் திருத்தக் கருத்துகளும் இவர்கள் பாடல் களில் இடம்பெற்றுள்ளன. ஆரியர் வருகை யைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் வலிமை பெற்ற சாதிப் பாகுபாடும் மக்கள் சமண, பௌத்த மதங்களை நாட ஒரு காரணம் என நாயன்மார்கள் உணர்ந்தனர். இறைவனுக்கு முன் எல்லா அடியார்களும் சமம் என்ற வகையில் சகல மக்களையும் சாதி வேறுபாடு பாராட்டாது தமது பக்தி இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.

அங்கமெலாம் சிதைந்தழுகு தொழு
நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'

எனும் தேவார வரிகள் இறை யடியார்கள் சாதிப்பாகுபாட்டிற்கு அப்பாற் பட்டவர்கள் எனும் கருத்தைத் தருகின்றன.

ஒரு கால இலக்கியம் அதற்கு முற்பட்ட கால இலக்கியங்களின் செல்வாக் கினின்றும் முற்றாக விடுபட முடியாது என்ற வகையில் சங்க கால அகப் பொருள் மரபு பல்லவர்கால பக்தி பதிகங்களில் இழை யோடிக் காணப்படுகின்றது. சங்க கால அகப்பொருள் மரபை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பரவலாகக் கையாண் டுள்ளனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகி யோருடன் சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், பரணதேவர் முதலிய திரு முறை ஆசிரியர்களும் பெரியாழ்வார் குலசேகராழ்வார், நம்மாழ்வார் திருமங்கை யாழ்வார், ஆண்டாள் முதலான ஆழ்வார் களும் அகப்பொருள் துறைகளைப் பயன் படுத்தியுள்ளனர். ஆயினும் அடியார்கள் இறைவன்மீது தாம் கொண்ட காதலை வெளிப்படுத்த முற்பட்டமை காரணமாக இவை பெரும்பாலும் தலைவி, தோழி கூற்றாக அமைந்த பாடல்களாகவே உள்ளன. தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல், தலைவி காதல் மிகுதியால் அஃறிணைப் பொருள்களுடன் தன் நிறை அழிந்து பேசுதல், அஃறிணைப் பொருட் களைத் தூது விடுதல் முதலான அகப் பொருட் துறைகள் பல்லவர் கால அடியார் களால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறை பக்தியோடு அடியார் பக்திக்கும் வித்திட்டுச் சென்றனர். 'தில்லை வாழந் தணர் தம் அடியார்க்கும் அடியேன்...' எனத் தொடங்கும் சுந்தரரது திருத் தொண்டத் தொகை இறை அடியார்களைப் போற்றுவ தாக அமைந்ததுடன் பிற்காலத்தில் சேக்கிழார் சுவாமிகளது பெரிய புராணம் தோன்றவும் அடிப்படையாக அமைந்தது. அப்பர் சுவாமிகள் வயதில் மூத்தவராக இருந்தும் சம்பந்தர் சென்ற பல்லக்கைத் தூக்கிச் சென்றமை, நம்மாழ்வார் மீது மதுரகவி ஆழ்வார் பாடல் பாடியமை, தொண்டரடிப்பொடி ஆழ்வார் எனும் பெயர்க் காரணம் ஆகியனவும் அடியார் பக்திக்கான ஆதாரங்களாகும்.

ஒரு கால இலக்கியம் அதற்கு முந்திய கால இலக்கியப் பண்புகளினின்றும் முற்றாக விடுபட முடியாது என்பதற்கிணங்க சங்கமருவிய கால நிலையாமைக் கருத்து களும் பக்தியிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம். உலகியலில் ஈடுபாடு மிக்கவரும் தனது வாழ்வியல் தேவைகள் யாவற்றையும் இறைவனிடம் கேட்டுப் பெற்றவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களும் 'வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்' எனவும் 'தோற்றமுண்டேல் மரணமுண்டு துயர மனை வாழ்க்கை' எனவும் பாடியுள்ளார். வாழ்வின் இளமைப் பருவத்திலிருந்து துயரங்களையே சந்தித்த அப்பர் பாடல் களில் வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை பற்றிய கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் அதிகம் உள்ளன. 'ஊனுடுத்தி வாசல் வைத்து வெள்ளெலும்பு தூணா உரோமம் மேய்ந்து', 'விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப் படுத்தபோது பயனிலை பாவிகாள்' ஆகிய வரிகள் இதற்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.

பல்லவர்கால பக்தி இலக்கியங் களை அவற்றின் வடிவ அமைதியை வைத்து இரண்டாக வகுக்கலாம்.

1. பக்தி அனுபவங்களைத் தனித் தனிப் பதிகங்களில் கூறுவது
2. அவற்றை பிரபந்தங்களில் அமைத்துக் கூறுவது

பல்லவர் காலத்திற் பெரு வழக்கா யிருந்தது பதிகம் என்றே கூறுதல் வேண்டும். அடியார்கள் தாம் எடுத்துக் கொண்ட பொருளையும் அதனோடு தொடர்

புடைய உணர்ச்சி முதலியவற்றையும் வளர்ச்சிக் கிரமத்தில் அமைத்துக் காட்டுவதற்கு பதிகமுறை சிறந்ததாயிருந்தது. பதிகத்தின் முதலாவது செய்யுளில் ஆரம்பிக்கும் உணர்ச்சியின்பம் சிறிது சிறிதாக வளர்ந்து ஏழாவது எட்டாவது செய்யுளில் உச்ச நிலையடைந்து பின் குறையத் தொடங்கி பத்தாவது செய்யுளில் முடிவடைகின்றது. கோயில்களில் ஒன்றாகக் கூடி ஆடியும் பாடியும் ஆலயத்தை வலம் வர இப்பதிக முறை ஏற்றதாகையால் பல்லவர் கால அடியார்கள் பதிக வடிவத்தை கூடுதலாகப் பயன்படுத்தியுள்ளனர்.

பதிகத்தின் இறுதியில் இடம் பெறுவது முத்திரைக் கவி ஆகும். பாடியவர் பெயர், அப்பதிகத்தைப் பாடுவ தால் ஏற்படும் பயன் என்பவற்றை முத்திரைக்கவி குறிக்கும்.

பல்லவர் கால அடியார்கள் பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வடிவங்களில் பாத்திரங்களை அமைத்து அப்பாத்திரங்களின் மனோபாவங்களை எடுத்துக் கூறுவதன் வாயிலாக தமது பக்தி அனுபவங்களை வெளிப்படுத்தி உள்ளனர். இவ்வகையில்,

- கோவை - திருக்கோவையார், திருவாரூர் மும்மணிக் கோவை
- உலா - திருக்கைலாய ஞான உலா.
- அந்தாதி - பொன்வண்ணத்தந்தாதி
- தாண்டகம் - திருத்தாண்டகம்
- மடல் - பெரிய திருமடல், சிறிய திருமடல்

ஆகிய பிரபந்தங்களும் கண்ணனைக் குழந்தையாக வைத்துப் பாடிய பெரியாழ்வாரின் பாசுரங்களும் அடங்கும்.

மேலும் தமிழ் நாட்டில் ஆங்காங்கே பாமர மக்களிடையே வழங்கி வந்த நாட்டுப் பாடல் வடிவங்களைத் தழுவியும் பல பதிகங்கள் அமைந்துள்ளன. இவ்வகையில் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவம்மானை, திருச்சாழல், திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி ஆகியனவும் பெரியாழ்வாரின் கண்ணன் குழல் வாரக் காக்கையை அழைத்தல், குலசேகராழ்வாரின் தசரதன் புலம்பல், தேவகி புலம்பல் ஆகியனவும் குறிப்பிடத் தக்கன.

பல்லவர் கால அடியார்கள் பொருளமைதியில் புரட்சி செய்ததுடன் வடிவ அமைப்பிலும் மாற்றங்களைப் புகுத்தியதோடு அமையாது யாப்பமைதியிலும் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளனர். தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் பொதுவாக அமைந்த பாவினமாகிய விருத்தப்பாவின் ஊடாக பல்வேறு ஓசை விகற்பங்களையும் வெளிக்கொணர்ந்தனர். விருத்தப்பா மட்டுமன்றி தாழிசை, துறை ஆகிய பாவினங்களும் இக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

தொகுத்து நோக்கின் பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள், பக்தி சாரா இலக்கியங்கள் என இரு வகைப்பட்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருந்தாலும் பல்லவர் கால இலக்கியம் என்றவுடன் ஞாபகத்திற்கு வருவன பக்தி இலக்கியங்களே. இப்பக்தி இலக்கியங்களின் பொருள் மரபு, வடிவமைதி, யாப்பமைதி ஆகியன அக்கால இலக்கியப் போக்கின் தனிச் சிறப்பை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

# வள்ளுவம் காட்டும் மருத்துவம்

**திருநாவுக்கரசு குமணன்,**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ் போதனா வைத்தியசாலை,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**மருத்துவ பீடம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கருத்தில் எவருக்கும் இரு வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. நோய் அல்லது பிணியானது வாழ்க்கையில் உண்டு பண்ணும் தாக்கம் மிகப்பெரியது. உடல் உபாதை, மன உளைச்சல், வீண் பண விரயம், உயிரிழப்பு என இத் தாக்கங்களை கணக்கிட்டு கொண்டே போகலாம். ஒரு நோயாளியினால் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களுக்கும் அந்த நோயாளியினை பராமரிப்பவருக்கும் ஏற்படும் சிரமங்கள் சொல்லிலடங்காதவை.

நோயின் பரிமாணம் காலத்துக்கு காலம் மாறுபடுகின்றது. பண்டைய காலத்தில் தொற்றுநோய்களும், சிசு மரணங் களும், மகப்பேற்றுக் கால உயிரிழப்புக் களும் மனித சமுதாயத்தை உலுக்கிய பேரவலங்கள் ஆகும். மருத்துவம் பெரு வளர்ச்சி கண்ட பின் 21ம் நூற்றாண்டில் தொற்று நோய்களற்ற பல நோய்களும், புற்றுநோயும், விபத்துக்களும் மனித இனத்துக்கு பெரும் சவாலாக விளங்கு கின்றன.

வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களே இப்புதிய சவாலுக்கு காரணமாக அமைகின்றது. நீரிழிவு, உயர்குருதியமுக்கம், சிறுநீரக செயலிழப்பு போன்ற முக்கிய நோய்கள் மிக அண்மைக் காலத்தில் அதிகளவு பாதிப்பை எம் மக்களிடையே ஏற்படுத்தி வந்துள்ளன. இதய நோய், சுவாச நோய்களின் தாக்கங் களும் மிக அதிகரித்தே செல்கின்றது. ஒரு சாரார் இதற்கு பரம்பரை மீது பழியைப் போடலாம். கால் நூற்றாண்டுக்குள் ஏற்பட்ட இந்த நோய்களின் அதிகரிப்புக்கு, பரம்பரை மீது பழியை போடுவதை வீண் பழியென்றே கொள்ளலாம். வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம் என்று குறிப்பிடும் போது, குறிப்பாக நாம் உண்ணுகின்ற உணவு வகைகளில் ஏற்பட்ட மாற்றமும், உடற் பயிற்சிகள் அற்ற வாழ்க்கை முறையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு திருமண வைபவத்தில் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன் பரிமாறப் பட்ட வடை, முறுக்கு, சீனி அரியாரம், பால்ரொட்டி, சிப்பிபலகாரம் போன்றவற்றை இன்று காண்பது அரிது. மாறாக பற்றீஸ், கேக், ரோல்ஸ், பேஸ்ரி போன்ற சுத்தமான கோதுமை மா தயாரிப்புக்களே பரிமாறப்படு கின்றன. அதே போல் கால் நூற்றாண்டுக்கு முன் இருந்த துவிச்சக்கர வண்டிகள் இன்று கணிசமான அளவு குறைந்து விட்டன.

திருவள்ளுவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, உணவுதான் நோய்க்கு முக்கிய காரணி என்ற கருத்தை கோடிட்டுக் காட்டியுள்ளார். மருந்து என்ற தமது திருக்குறளின் 95 ஆவது அதிகாரத்தில் வள்ளுவர் முத்தான

7 குறள் மூலம் நாம் உண்ணும் உணவு எவ்வாறு நோய்த்தாக்கத்தை ஏற்படுத்து கின்றது என குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட கருத்துக்களை அதே ஒழுங்கில் நோக்குவோம்.

*"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று"*

இந்த முதலாவது குறள் உணர்த் துவது என்னவெனில் உணவு செயலும் மிகுந்தாலும் குறைந்தாலும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று நோய்களும் உடலுக்கு துன்பம் செய்யும் என்பதாகும்.

இதன் மூலம் வள்ளுவன் மூன்று முக்கிய நோய்களை கண்டறிந்துள்ளது என்ற கருத்தும், உணவு மிகுதியும் குறைவும் நோயை ஏற்படுத்தும் என்பது புலப்படுகிறது.

*"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அடுந்தியது அற்றது போற்றி உணின்"*

என்பது வள்ளுவரின் இரண்டாவது குறள். எவன் ஒருவன் முன்னின்ற உணவு செரித்த பின் அல்லது சமிபாடடைந்த பின் மீண்டும் உணவு உண்கிறானோ, அவனுடைய உடம்புக்கு மருந்து என்ற ஒன்று தேவைப் படுவதில்லை என்பது இதன் பொருள். எமது பண்டைய மக்கள் ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று வேளைகளில் மாத்திரமே உணவை உட்கொண்டு வந்திருந்தனர். ஆனால் இன்றைய இளைய சமுதாயம் சற்றே இதில் இருந்து விலகி காணுகின்ற போதெல்லாம் உண்ணுகின்ற வழக்கத்தை கைக்கொள்கின்றது என்பது புலப்படு கின்றது.

இந்த கருத்தையே மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்த முனைகின்றார் பொய்யாமொழியார்.

*"அற்றால் அளவு அறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு"*

என்ற குறள் மூலம், முன் உண்ட உணவு செரித்த பின் வேண்டிய அளவு உண்பவன் பெற்ற உணவை நெடுங்காலம் பேணிப் பாதுகாப்பான் எனக்குறிப்பிடுகிறார். அதாவது பசித்து உண்ணும் போதும் அளவு அறிந்து உண்க என்பது அதன் கருப்பொருள்.



பசித்த பின்பு தான் உணவை உண்ண வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய தெய்வப்புலவர் மீண்டும் ஒருமுறை

*"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறு அல்ல துய்க்க துவரப் பசித்து"*

என்ற குறள் மூலம் முன் கண்ட உணவு செரித்த பின் மாறுபாடில்லா உணவைக் கண்டறிந்து நன்றாக பசித்த பின்பு உண்ண வேண்டும் என்ற கருத்தையும் சொல்கிறார்.

பொய்யாமொழிப் புலவர் தனது நான்காவது குறளாக மருந்து என்ற அதிகாரத்தில் பின்வரும் கருத்தைக் குறிப்பிடுகின்றார்.

*"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு"*

அதாவது மாறுபாடு இல்லாத உணவை அளவோடு உண்டால் உயிர் உடம்பில் உறைவதற்கு ஊறு உண்டாகாது என்பதாகும்.

மாறுபாடில்லாத உணவு என்று வள்ளுவர் குறிப்பிடுவது வயதுக்கு ஏற்ற உணவாகவும், ஒருவருக்கு ஒத்துப்போகக் கூடிய, அழற்சியையோ அல்லது ஒவ்வாமை யையோ உண்டு பண்ணாத உணவாக இருக்கலாம். இப்படியான உணவை தேர்ந்து எடுத்து உண்டால் உயிர் உடம்பில் நெடுநாள் தங்கும். இதனால் தான் போலும் முனிவர்களும், ரிசிகளும் நூற்றாண்டுகாலம் வாழ்ந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் பறைசாற்றுகின்றன.

உணவின் அளவை மீண்டும் ஒருமுறை அடித்துரைக்க வந்த வள்ளுவர் இவ்வாறு தனது 5வது குறளைப் படைத்தார்.

*"இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்*
*போல் நிற்கும்*
*கழிபோரிரையான்கண் நோய்"*

குறைந்தளவு உணவு உண்பவ னிடம் இன்பம் நிலைத்து நிற்பது போன்று நிறைந்த அளவு உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்குமாம்.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற மூத்தோர் வாக்கு உணவுப் பழக்கத்துக்கும் சாலவே பொருத்தமாகும்.

நோய் ஏற்பட்ட பின் சுவையான, இனிமையான உணவுகளை விட்டு ஒதுங்கு வதிலும் பார்க்க நோய் வரும் முன்னே அவற்றை அளவோடு சுவைப்பதும், அனுபவிப்பதும் புத்திசாலித்தனமானது.

அறுதியாக ஒருவனுடைய பசிதான் உணவையும், அதன் அளவையும் தீர்மானிக்க வேண்டும் என்று வள்ளுவர் இயம்புகிறார்.

*"தீயளவு அன்றித் தெரியான் பெரிது*
*உண்ணின்*
*நோயளவு இன்றிப்படும்"*

அதாவது பசியின் அளவை அறிந்து உண்ணாமல், சுவை மிகுதியால் அதிகளவு உண்பவனுக்கு அளவில்லாத நோய்கள் உண்டாகும் என்பதாகும்.

ஒரு தோட்டத் தொழிலாளி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த பின் உண்ணுகின்ற சோற்றின் அளவும் வங்கி உத்தியோகத்தர் ஒரு கதிரையில் உட் கார்ந்து வேலை செய்த பின் உண்ணும் உணவின் அளவும் ஒன்றாக இருக்க முடியுமா? சுவை என்ற ஒரு புலன், பசி என்ற ஓர் உணர்வை விட மேலோங்கு வதனால் ஒருவர் தன்னை மறந்து அளவுக்கு அதிகமான உணவை உள்ளெடுக்க நேரிடு கின்றது. எனவே தான் பசிக்க உண்ண வேண்டும் என்ற கருத்தை தனது 7 ஆவது குறளில் முன்மொழிகிறார் வள்ளுவப் பெருந்தகை.

இந்த முத்தான ஏழு குறள்களும் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் எமக்கு மிகப் பொருத்தமானவையாகவே இருக் கின்றன.

வள்ளுவத்தின் வழி நின்று வாழ்வை வளப்படுத்த நாம் பகுத்துண்ண வேண்டும்! பசித்துண்ண வேண்டும்!

# நெகிழ்ச்சிக் கோட்பாடு

**செ.சிவராசசிங்கம்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல்,**
**புள்ளிவிபரவியல் துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



நெகிழ்ச்சி (Elasticity) என்ற பதம் சார்பு (Function) என்ற பதத்துடன் மிகவும் தொடர்புடையது. எங்கு சார்பு உண்டோ அங்கு நெகிழ்ச்சி என்ற பதமும் வரையறுக்கப்பட்ட முடியும். நெகிழ்ச்சி என்பது சாரா மாறியினால் ஏற்படும் சார்ந்த மாறியின் தூண்டற் பேற்றுத்தன்மையினை அளவிடுவதால் அது ஒரு அளவுகோல். இதனை E என்ற எழுத்தினால் பொதுவாகக் குறிப்பிடுவர்.

பொதுவாக நெகிழ்ச்சி என்ற பதத்தினை பின்வருமாறு வரையறுக்கலாம். சாராமாறியின் ஒப்பு மாற்ற வீதாசாரத்திற்கு அதனால் ஏற்படும் சார்ந்த மாறியின் ஒப்பு மாற்ற வீதாசாரத்திற்கு இடையிலான விகிதமே நெகிழ்ச்சி ஆகும்.

$$E = \frac{\text{சார்ந்த மாறியின் ஒப்புமாற்ற வீதம்}}{\text{சாரா மாறியின் ஒப்புமாற்ற வீதம்}}$$

இங்கு ஒப்பு மாற்ற வீதம் என்பது மாறியின் ஆரம்ப பெறுமானத்திலிருந்து புதிய பெறுமானம் எவ்வளவினால் மாறியுள்ளது என்பதனை ஆரம்ப பெறுமதியின் விகிதமாகக் கூறுவதாகும்.

நெகிழ்ச்சி என்ற பதம் பொருளியலில் மட்டுமன்றி இரசாயனம், பௌதீகவியல், கணிதம், பொறியியல் போன்ற பாடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. சுருங்கக் கூறின் எங்கு சார்பு (Function) பற்றி படிக்கின்றோமோ அங்கு நெகிழ்ச்சி பற்றியும் படிக்க முடியும்.

பொருளியலில் நெகிழ்ச்சி பல இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. நுண்பாகப் பொருளியலில் கேள்வி, நிரம்பல், உற்பத்தி, செலவு, வருமானம், இலாபச் சார்புகள் பற்றிய பாடப்பரப்பில் நெகிழ்ச்சியினை படிக்க முடியும். அதே போல் பேரண்டப் பொருளியலில் நுகர்வுச் சார்பு, முதலீட்டுச் சார்பு, இறக்குமதிச் சார்பு என்பவற்றிலும் நெகிழ்ச்சியினை பயன்படுத்த முடியும்.

பொருளியலில் கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி என்பன மிகவும் அடிப்படையானவையாகும்.

### கேள்வி நெகிழ்ச்சி

குறிப்பிட்ட பொருளின் விலையில் ஏற்படும் வீதாசார மாற்றத்திற்கும் அப்பொருளின் கேள்வித் தொகையில் ஏற்படும் வீதாசார மாற்றத்துக்கும் இடையே உள்ள தொடர்பினை கணித ரீதியில் அளவிட்டுக் கூறுவதே கேள்வி நெகிழ்ச்சி ஆகும். இன்னொரு வகையில் கூறின் கேள்வி தொகையில் ஏற்படும் வீதாசார மாற்றத்தினை விலையில் ஏற்படும் வீதாசார மாற்றத்தினால் வகுப்பதன் மூலம் கேள்வி நெகிழ்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

$$Q_X^D = f(P_x, P_C, P_s, T, Y, N, G)$$

$Q_X^D = f(P_x)$ குறித்த பொருளினது தன்விலையலான விலைசார கேள்விச் சார்பு

$Q_X^D = f(P_c)$ பிறவிலைசார் கேள்விச் சார்பு – நிரப்புப் பண்டம் $(P_c)$

$Q_X^D = f(P_s)$ பிறவிலைசார் கேள்விச் சார்பு – பிரதியீட்டுப்பண்டம் $(P_s)$

$Q_X^D = f(N)$ சனத்தொகை சார் கேள்விச் சார்பு

$Q_X^D = f(Y)$ வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி

$Q_X^D = f(T)$ சுவை சார் கேள்விச் சார்பு

இவ்வாறு கேள்வியினை நிர்ணயிக்கும் ஒவ்வொரு காரணிக்கும் நாம் ஒவ்வொரு கேள்விச் சார்பினை அமைக்க முடியும். இங்கு தனிச் சார்புகளை அமைக்கும் போது கேள்வியினை நிர்ணயிக்கும் காரணிகள் மாறவில்லை எனக் கருதுகின்றோம்.

| சார்பு | நெகிழ்ச்சி |
|---|---|
| $Q_X^D = f(P_x)$ | $E_p^x$ |
| $Q_X^D = f(P_c)$ | $E_{p_c}^x$ |
| $Q_X^D = f(P_s)$ | $E_{p_s}^x$ |
| $Q_X^D = f(Y)$ | $E_y^x$ |
| $Q_X^D = f(N)$ | $E_N^x$ |

இவ்வாறாக கேள்வியினை நிர்ணயிக்கும் ஒவ்வொரு காரணிகளுக்கும் தனித் தனியான சார்பினை அமைக்கும் போது கேள்வியினை நிர்ணயிக்கும் ஏனைய காரணிகள் மாறவில்லை எனக் கருதுகின்றோம். இந்த எடுகோள் நெகிழ்ச்சி பற்றி படிக்கும் போது முக்கியமானது. இப்போது ஒவ்வொரு சார்புக்குமுரிய நெகிழ்ச்சியினைக் கணிக்க முடியும்.

$$\text{கேள்வி நெகிழ்ச்சி} = \frac{\text{கேள்வித் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றம்}}{\text{விலையில் ஏற்பட்ட வீதாசாரமாற்றம்}}$$

கேள்வி விதியானது பண்டத்தின் விலை மாற்றமடையும் போது, கேள்வித் தொகை எத்திசையில் மாறும் என்று கூறுகின்றது. கேள்வி விதி திசையினை மட்டும் காட்ட கேள்வி நெகிழ்ச்சி என்பது விலை மாறும் போது கேள்வித்தொகை எவ்வளவால் மாறுகின்றது என்பதனை அளவிட்டு காட்டும். அதாவது விலையில் ஏற்படும் வீதாசார மாற்றம் கேள்வித் தொகையில் எந்தளவான வீத மாற்றத் தினை ஏற்படுத்தும் என்பதனைக் காட்டும்.

**கேள்வி நெகிழ்ச்சியினை நிர்ண யிக்கும் காரணிகள்**

**1) பொருட்களின் தன்மை**

நாம் நுகர்கின்ற அனைத்து பொருட் களும் அத்தியாவசியப் பொருட்களா கவோ அல்லது ஆடம்பரப் பொருட் களாகவோ காணப்பட மாட்டாது. ஒரு பொருள் எந்தளவிற்கு அத்தியாவசியப் பொருளாக காணப்படுகின்றதோ அந்தள விற்கு நெகிழ்ச்சி குறைந்த பொருளாக காணப்படும். இப்பொருளின் அளவு நுகர்வுத் தேவையினாலேயே தீர்மானிக் கப்படுகின்றது. ஆனால் விலைக்கும் பொருட்களின் அளவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஒரு அத்தியாவ சியப் பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு குறைந்ததாகும். காரணம் விலையில் பாதகமான சாதக மான நிலையினைக் கொண்டு வந் தாலும் நுகர்வோர் ஆடம்பரப் பொருட் களின் நுகர்வில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த மாட்டான்.

**2) பிரதியீட்டுப் பொருட்களின் விலை**

ஒரு பொருளைப் பொறுத்த வரை கூடியளவு கிட்டிய பதிலீடுகள் காணப் படுகின்றதா அல்லது குறைந்தளவு பதிலீடுகள் காணப்படுகின்றதா என்ற நிலை அப்பொருளை நெகிழ்ச்சியுடைய பொருளாகவோ அல்லது நெகிழ்ச்சி அற்ற பொருளாகவோ மாற்றும் சக்தி வாய்ந்ததாகும். அதாவது குறைந்தளவு பிரதியீடு கொண்ட பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவாகவும் கூடியளவு பிரதியீடு கொண்ட

பொருளுக்கு நெகிழ்ச்சி அதிகமாகும். பல பிரதியீட்டு பொருட்கள் குறிப்பிட்ட பொருட்களுக்கு இருக்கின்றபோது அதன் விலையில் ஏற்படும் உயர்வு அப்பொருளை நுகர்வதை விடுத்து அதன் பிரதியீட்டுப் பொருட்களை நுகர நுகர்வோரைத் தூண்டும்.

**3) பொருட்களின் வாழ்வுக்காலம்**

பொருட்களை பொறுத்தவரை நெடு வாழ்வுடைய பொருட்கள் குறுகிய வாழ் வுடைய பொருட்கள் என நாம் பாகு படுத்தலாம். இவற்றுள் நெகிழ்வுடைய பொருட்கள் கூடிய நெகிழ்ச்சியினைக் கொண்டதாக காணப்படும். ஏனெனில் குறுங்காலத்தில் ஒரு பொருளின் விலை மாற்றத்தினை நுகர்வோர் பலர் அறிந்து கொள்ள மாட்டார்கள். ஆகையால் விலை மாறுதலுக்கேற்ப கொள்வனவில் மாற்றத்தினை ஏற்படுத்த மாட்டார்கள். நீண்ட காலத்தில் விலை மாற்றம் பற்றி பலரும் அறிய வாய்ப்பிருப்பதனால் கேள்வித் தொகையிலும் மாற்றம் ஏற்படும்.

**4) பலவகைப் பயனுடைய பொருட்கள்**

பலவகைப் பயன்பாட்டுக்கும் உரிய பொருட்கள் கூடிய கேள்வி நெகிழ்ச்சி யைக் கொண்டிருக்கும். ஆனால் அதன் விலை உயரும் போது அத்தியாவசிய மற்ற பிற உபயோகங்களையும் குறைத் துக் கொள்வார்.

**5) சிறிது காலம் நுகர்வைப் பின் தள்ளி வைத்தல்**

சிறிது காலத்திற்கு நுகர்வினைப் பின் தள்ளிப் போகக் கூடிய தன்மை யினைக் கொண்டுள்ள பொருட் களுக்குரிய கேள்வி நெகிழ்ச்சியானது கூடியதாக இருக்கும். ஆனால் நுகர் வினை பின் தள்ளிப் போட முடியாத நுகர்வுக்குப் பொருட்களுக்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவாக இருக்கும். பொதுவாக நோக்குகின்றபோது ஆடம்பர பொருட்களின் நுகர்வு பின் தள்ளி போடக் கூடியதொன்றாகும். அத்தியா வசியப் பொருட்களின் நுகர்வு பின் தள்ளிப் போட முடியாமல் இருப்பதைக் காணலாம்.

**6) பொருட்களின் விலைமட்டம்**

பொருட்களின் விலைமட்டம் கேள்வி நெகிழ்ச்சியின் அளவினை தீர்மானிப்பதாக உள்ளது. மிகவும் விலையுயர்ந்த பொருட்களும் குறைந்த விலையுடைய பொருட்களும் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியினைக் கொண் டுள்ளன. மிகவும் விலையுயர்ந்த பொருட்களை வாங்குவோர் சமூகத்தில் வருமானம் கூடிய வகுப்பினர். இவர்கள் பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் கொள்வனவுத் தொகை யில் அதிக மாற்றத்தினை ஏற்படுத்த மாட்டார்கள். நடுத்தர விலையுடைய பொருளுக்கான நெகிழ்ச்சி கூடிய அளவுடையதாக இருக்கும்.

**7) வருமானத்தை செலவிடும் பங்கு**

இக் காரணியும் நெகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாம். தமது வருமானத்தில் மிகச்சிறிய பங்கினை ஒரு பொருள் மீது செலவிடும் போது அப்பொருளின் விலை அதிகரித் தாலும் நுகர்வோனின் மொத்த செலவீட்டில் பெரும் பாதிப்பினை ஏற் படுத்தாது. எனவே இத்தகைய பொருட்கள் குறைந்த நெகிழ்ச்சியை உடையவை.

**8) நீண்டகாலம் பயனளிக்கக் கூடிய பொருட்கள்**

நீடித்த வாழ்வுடைய பொருட்களை ஏற்கனவே கொள்வனவு செய்து வைத்திருக்கும் போது அவற்றின் விலையில் குறைவு ஏற்பட்டாலும் கேள்வித் தொகையில் அதிகம்

மாற்றம் ஏற்படமாட்டாது. இவற்றிற்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவாக இருக்கும்.

**9) பழக்க வழக்கம்**

பழக்கவழக்கத்திற்கு அடிமையாக் கப்பட்ட சில பொருட்களின் நெகிழ்ச்சி குறைவாகும். அதாவது இப் பொருட்கள் பழக்கத்திற்கு அடிமையாக்கப்பட்டவை ஆகையால் விலை அதிகரித்தாலும் அவற்றின் நுகர்வினை குறைக்க முடியாததால் ஆகும். விலை மாற்றம் கொள்வனவுத் தொகையில் அதிகம் பாதிக்காது என்பதால் இவற்றின் நெகிழ்ச்சி ஒன்றிற்கு குறைவாகும்.

**10) நுகர்வோன் மிகை**

நுகர்வோன் மிகையினை அதிக மாக தரக்கூடிய பொருட்களுக்கு நெகிழ்ச்சி குறைவாக இருக்கும்.

**11) கூட்டு நுகர்வுப் பொருட்கள்**

கூட்டு நுகர்வுப் பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி குறைவாக இருக்கும்.

**12) வருமான மட்டம்**

வறியவர்கள் பொருளின் விலை மாற்றத்திற்கு ஏற்ப கேள்வியில் மாற்றத் தினை செய்ய முற்படுவர். ஒரு பொருளின் விலை உயரும் போது அதன் கேள்வித் தொகையில் குறை வினை ஏற்படுத்துவார். ஒரு பொருளின் விலை குறையும் போது அதனை கொள்வனவு செய்ய முன்னிற்பார். தமது வருமானத்தின் உச்ச பயன் பெற முனைவர். ஆனால் செல்வந்தர்கள் விலைமாற்றத்தினை பொருட்படுத்துவ தில்லை. இதனால் செல்வந்தர்களை பொறுத்து கேள்வி நெகிழ்ச்சி குறை வாகவும் வறியவர்களைப் பொறுத்து கூடியதாகவும் காணப்படும்.

**13) மரபு ரீதியான பொருட்கள்**

மரபு ரீதியான பொருட்களுக்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவானதாக இருக்கும், ஏனெனில், அவற்றின் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும், பண்பாடு, கலாசாரக் காரணிகளால் அவற்றின் கொள்வனவில் அதிகம் மாற்றம் இருக்காது.

**நிரம்பல் நெகிழ்ச்சி**

பொருளின் விலை மாற்றமடை கின்ற போது நிரம்பல் தொகையும் மாறுகின்றது. ஒரு பொருளின் விலையில் ஏற்படும் வீதாசார மாறுதலுக்கும் அப் பொருளின் நிரம்பல் தொகையில் ஏற்படும் வீதாசார மாற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குவதே நிரம்பல் நெகிழ்ச்சியாகும். நிரம்பல் தொகையில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தினை, விலை யில் ஏற்பட்ட வீதாசார மாற்றத்தினால் பிரிப்பதன் மூலம் நிரம்பல் நெகிழ்ச்சியினை அளவிடலாம்.

$$\text{நிரம்பல் நெகிழ்ச்சி} = \frac{\text{நிரம்பல்தொகையின் வீதாசாரமாற்றம்}}{\text{விலையின் வீதாசார மாற்றம்}}$$

**நிரம்பல் நெகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் காரணிகள்**

1) கருத்தில் கொள்ளப்படும் பொருளின் விலை
2) பொருள் உற்பத்தி செய்யப் பயன்படும் உற்பத்தி வளங்கள் உள்ளீடுகளின் விலை
3) தொழில் நுட்பம்
4) தொடர்புடைய பொருளின் விலை
5) எதிர்பார்ப்பு
6) சந்தையில் உள்ள உற்பத்தியாளரின் எண்ணிக்கை
7) அரச கொள்கை
8) ஏனைய காரணிகள்

## நெகிழ்ச்சிக் கோட்பாட்டின் உபயோகங்கள்

நெகிழ்ச்சிக் கோட்பாடானது பல வேறு வழிகளிலும் உபயோகம் உள்ளதாகும். பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்கிக்கொள்வதற்கும், அரசாங்கம் தனது நிதிக் கொள்கையினை வகுப்பதற்கும், மற்றும் வர்த்தகம், வணிகம் போன்ற விடயங்களுக்கும் பெரிதும் உதவுவதாக உள்ளது.

**1. அரசாங்கம் தனது கொள்கையினை வகுப்பதற்கு :**

**1. தொழில்களுக்கு பாதுகாப்பை வழங்குதல்.**

குறிப்பிட்ட தொழிலை பாதுகாப்பதற்காக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள் மீது வரி விதிக்கலாம். அவ்வாறு வரி விதிக்கும்போது இறக்குமதி செய்யப்படும் பொருள் ஒன்றுக்கு கூடிய நெகிழ்ச்சியினைக் கொண்டிருப்பின் தான் அவற்றின் விலை உயருவதன் மூலம் பெருமளவு இறக்குமதியை கட்டுப்படுத்த முடியும். எனவே அரசாங்கம் மானியம் வழங்கும்போது கேள்வி நெகிழ்ச்சியினை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**2. அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டிய தொழில்களைத் தெரிவு செய்வதற்கு :**

அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் எத்தகைய தொழில்களை வைத்திருக்க வேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதிலும் கேள்வி நெகிழ்ச்சிக் கருத்து உதவுகின்றது. பொது மக்களுக்குப் பெரிதும் அத்தியாவசியமானவையாக இருப்பதும், ஒன்றுக்கு குறைந்த நெகிழ்ச்சியினைக் கொண்டவையாகவும் இருக்கின்ற தொழில்களை அரசாங்கம் தனியார் கையில் ஒப்படைக்காது தானே ஏற்று நடாத்த வேண்டும். உதாரணமாக நீர் விநியோகம், மின்சாரம், போக்குவரத்து சேவை, வைத்திய வசதிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**3. அரசாங்கம் வரிக் கொள்கையினைத் தீர்மானிப்பதற்கு :**

வரி வதிக்கும்போது அது வரி செலுத்துவோரைப் பாதிப்பதால், வரிச் சுமை சரியான பங்கிடக்கூடிய வகையில் வரிக்கொள்கையினை அமைக்க வேண்டும். மேலதிகமாக வரியினை விதிக்க முனையும்போது அவ் வரியின் பழு யாரைச் சென்றடையும் என்பதனையும் கவனித்தே செயற்பட வேண்டும்.

**2. பொருட்களின் விலையினை நிர்ணயித்தல்**

கேள்வி நெகிழ்ச்சி குறைந்த பொருட்களுக்கு உயர்ந்த விலை விதிக்கலாம். ஏனெனில் குறைந்த பொருட்களுக்கு உயர்ந்த விலையை உயர்த்தினாலும் கேள்வித் தொகையில் அதிகம் குறைவு ஏற்படாது. ஆகையால் மொத்த வருமானத்தினை அதிகமாகப் பெறலாம். மாறாக கேள்வி நெகிழ்ச்சி கூடுதலாக உள்ள பொருட்களுக்கான விலையை குறைவாக நிர்ணயிப்பதன் மூலம் மொத்த வருமானத்தினை அதிகரிக்கலாம். இதனால்தான் தனியுரிமையாளன் விலை பேதப்படுத்தலை மேற் கொள்ளும்போது தனது உற்பத்திப் பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவாக உள்ள சந்தையில் விலை யைக் கூடுதலாகவும் கேள்வி நெகிழ்ச்சி கூடுதலாக உள்ள சந்தை யில் விலையினைக் குறைவாகவும் நிர்ணயிக்கின்றான்.

**3. உழைப்பாளருக்கான கூலியை நிர்ணயித்தல்**

குறிப்பிட்ட ஒரு தொழிலில் உள்ள தொழிலாளருக்கான கேள்வி நெகிழ்ச்சி யுடையதாக கேள்வி நெகிழ்ச்சியுடையதாக இருக்குமாயின் வேலை நிறுத்தம், மற்றும் தொழிற்சங்க நடவடிக்கை கள் தொழி லாளருக்கான கூலியினை உயர்த்திக் கொடுப் பதில் அதிகம் வெற்றியினைக் கொடுக்க மாட்டாது. ஆனால் மேற்கூறியவற்றிக்கு மாறாக தொழிலாளருக்கான கேள்வி நெகிழ்ச்சி குறைந்ததாக இருக்குமாயின் தொழிற்சங்க வேலை நிறுத்தம் செய்யப் படும் என்ற பயமுறுத்தல் கூட தொழிலதிபர் களை தொழிலாளர்களின் கூலியினை அதிகரிக்குமாறு செய்கிறது. தொழில்நுட்ப வல்லுநர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர் கள் போன்றோர் இலகுவாக கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைந்ததாக இருப் பதும் ஒரு காரணம்.

**4. தனி உரிமையாளன் உற்பத்தியில் தீர்மானத்தினை மேற்கொள்ளல்.**

உச்சலாபத்தினை நோக்கமாகக் கொண்ட தனியுரிமையாளன் ஒருவன் தான் எதிர்நோக்கும் கேள்விக் கோட்டில் ஒன்றுக் குச் சமனான நெகிழ்ச்சியுள்ள இடத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நெகிழ்ச்சி யுள்ள இடத்தில் தனது உற்பத்தியினை நிறுத்த முனைவான். நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாக உள்ள இடத்தில் உற்பத்தி செய்ய முனைந்தால் எல்லை வருமானம் எதிர்க்கணியமாகும். எல்லை வருமானம் எதிர்க்கணியமாக அமைவது அவனது மொத்த வருமானத்தில் குறைப்பினைச் செய்வதற்கு ஒத்த நிலையாகும். இதனை உற்பத்தியாளன் விரும்ப மாட்டான்.

**5. கூட்டுப் பொருளுக்கான விலையைத் தீர்மானித்தல்.**

ஒரே நேரத்தில் பெறவேண்டிய இரண்டு பொருட்கள் கூட்டுப் பொருட் களாகும். உதாரணமாக நெல் - வைக்கோல், இறைச்சி தோல், பருத்தி பருத்திக் கொட்டை போன்ற கூட்டுப் பொருட்களாகும். இவற்றில் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியினைக் கொண்ட இறைச்சி, பருத்தி, நெல் போன்றவற்றிற்கு அதிக விலையும், வைக்கோல், பருத்திக் கொட்டை, தோல் போன்ற கேள்வி நெகிழ்ச்சி கூடிய பொருட்களுக்குக் குறைந்த விலையும் விதிக்கப்படுகின்றது.

**6. செழிப்பின் மத்தியில் வறுமையினை விளக்கல்**

விவசாயப் பொருட்கள் குறித்த கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு குறைந்த தாகும். இதனால் விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கின்ற போது அவற்றின் விலை பெருமளவு குறைவடைகின்றது. இதன் காரணமாக விவசாயிகள் தமது உற்பத்தியை அதிகரித்தாலும் சில சமயங்களில் முன்பிலும் பார்க்க குறைந்த வருமானத்தினைப் பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

**7. சர்வதேச வர்த்தகம் நன்மையைப் பெறுதல்**

வர்த்தகம் செய்யும் ஒரு நாட்டினது இறக்குமதிப் பொருட்கள் கேள்வி நெகிழ்ச்சி கூடியவையாகவும் ஏற்றுமதிப் பொருட்கள் கேள்வி நெகிழ்ச்சி குறைந்தவையாகவும் இருப்பின் அந்நாடு அதிக இலாபம் பெறலாம். குறைந்த கேள்வி நெகிழ்ச்சி உடைய தனது ஏற்றுமதிப் பொருளின் மீது அதிக விலையினை விதித்தும், ஏனைய நாட்டிடம் இருந்து பெறும் பொருட்களுக்கு குறைந்த விலையினைச் செலுத்துவதன் மூலமும் அந்நாடு இருவழிகளிலும் நன்மையடையலாம்.

# பெரிய புராணத்தின் பெருமை



**Mr.K.Tharmarajah (Teacher Educator)**
**B.A,.P.G.D.E,M.A(D), M.ED**
**Rtd.Lecturer: College of Education, Kopay**
**Rtd.Lecturer : Training College, Kopay.**

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 882 - 1325 க்கு இடைப்பட்ட காலப்பகுதி சோழர் காலமாகும். இக் காலம் தன்னில் நிலவிய அரசியல், பொருளாதார, சமய, சமுதாய நிலை காரணமாக தமிழ் இலக்கியம், காவியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணம், சித்தாந்த சாத்திரம், நிகண்டு, உரைநூல்கள், மெய்க்கீர்த்திகள், தொகுப்பு நூல்கள் எனப் பன்முகப்படுத்தப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டது. இவ் வளர்ச்சிப் படிகளுள் பேரிலக்கியமும் ஒன்றாகும். இக் காலந்தன்னில் தோன்றிய பேரிலக்கியங்களான கம்பராமாயணம், கந்தபுராணம் வரிசையில் பெரிய புராணமும் குறிப்பிடத்தக்கது.

காப்பிய இலட்சணம் கூறும் தண்டியலங்காரம்,

"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள்..............."

என்ற நூற்பாவால் தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டு அவனது வீரம், வெற்றி, கொடைச் சிறப்பு எடுத்தியம்புவ தாக நாட்டு நகர வர்ணனை கூறி, புருடார்த்தமாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்களை எடுத்தியம்பு வதாக அமைவது காப்பியம். இத்தகைய காப்பிய அந்தஸ்து பொருந்தியதாகப் பேரிலக்கியங்களும் அமைகின்றன. ஆனால் காவியங்கள் மானுடம் தழுவியதாக அமைய, பேரிலக்கியங்கள் தெய்வீகம் தழுவியதாக அமைந்த சிறப்பைக் காணலாம்.

இந்த வகையில் இறைவனோடு தோழமை உறவு பூண்டவரும் திருமண பந்தத்தில் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவருமான சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இடையிடையே ஏனைய அடியார் வரலாறுகளையும் இணைத்து பாடப்பட்ட தாக பெரியபுராணம் அமைகிறது. சுந்தர ரோடு ஏனைய அறுபத்து இரண்டு தனியடி யார் வரலாறுகளையும் தில்லை வாழ் அந்தணர் முதலான ஒன்பது தொகையடி யார் வரலாறுகளையும் இணைத்து எழுபத்து இரண்டு அடியார்கள் வரலாறு பேசுவதாக பெரியபுராணம் அமைகிறது.

இதனை யாத்தவர் அருள்மொழித் தேவர் என்னும் இயற் பெயர் கொண்ட சேக்கிழார், ஏற்கனவே சுந்தரர் பாடிய திருத் தொண்டர் தொகையையும், நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திரு வந்தாதியையும் மூலமாகக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணம் பாடினார்.

பெரியபுராணம் தோன்றிய சோழர் காலத்தில், சீவகசிந்தாமணி என்ற காவியம் தலைசிறந்த காவியமாகத் திகழ்ந்தது. இது

சமணமத காவியமாகத் திகழ்ந்தது. மன்னன் அநபாயச்சோழன் சீவகசிந்தாமணியில் அதிக நாட்டம் கொண்டான். ஒரு வேளை மன்னன் மதம் மாறிவிடுவானோ? என்ற ஐயப்பாடு அமைச்சரான சேக்கிழாருக்கு ஏற்பட்டது. இந்நிலையில் மன்னன் மனதை சைவத்தில் நிலைநிறுத்த விரும்பிய சேக்கிழார் பல்லவர் காலத்தில் வாழ்ந்து வழிகாட்டிய அடியார் வரலாறுகளைச் சிறந்த காவியமாக படைக்கலாம் என்று கூற "அவ்வாறாயின் அப்பணியை நீரே செய்க..." என சேக்கிழார் பெரியபுராணம் பாடியதாக வரலாறு உண்டு.

சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு இறைவன் "உலகெலாம்..." என அடியெடுத்துக் கொடுத்தார். இத் தொடரைக் காப்புச் செய்யுள்களின் முதலடியாகக் கொண்டு காப்புச் செய்யுள் அமைத்து அத்தோடு 4252 விருத்தப் பாக்களால் பெரியபுராணம் பாடினாராம். பெரிய புராணத்தின் காப்புச் செய்யுள் பெரிய புராணத்தின் மகிமையை எடுத்தியம்புகிறது.

"உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நில உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவோம்"

இக்காப்புச்செய்யுள் (20+14+19+19) 72 எழுத்துக்களாலானது. இது 72 அடியார் வரலாறு பேசுவது போல் உள்ளது. இதில் உலகு, உணர்ந்து, ஓதற்கு, அலகு, அம்பலத்து, ஆடு, சிலம்பு, வாழ்த்து, வணங்கு ஆகிய 9 குற்றியலுகரச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது தொகையடியார் ஒன்பது பேரைக் குறிப்பது போல் உள்ளது. காப்பியத்தின் காப்புச் செய்யுள் வாழ்த்து வணக்கம் வரும் பொருள் யாதாயினும் ஒன்றைக் குறிப்பதாக அமையும் பெரிய புராணக் காப்புச் செய்யுளில் இடம் பெறும்.

"அடி வாழ்த்தி வணங்குவோம்" என்ற தொடரை நோக்கும்போது வணங்குவோம் என்பது வணக்கத்தையும் வாழ்த்தி என்பது வாழ்த்தையும் அடி என்பது அடியார் வரலாறு ஆகிய வருபொருளினை எடுத்தியம்புவதாக அமைகிறது.

அந்தாதி என்பது சிற்றிலக்கிய வடிவம். ஒரு பாடலின் ஈற்றடிச் சொல் அடுத்த பாடலின் தொடக்கச் சொல்லாக அமைத்துப் பாடப் பெறுவது அந்தாதி ஆகும். பெரியபுராணத்தின் அமைப்பும் அந்தாதியில் அமைக்கப் பெற்ற சிறப்பினைக் காணலாம்.

ஓர் அடியார் வரலாறு கூறும் போது அப் புராணத்தின் இறுதிப்பாடலை இதுவரை இவ்வடியார் வரலாறு கூறி யான், அடுத்து எந்த அடியார் வரலாறு கூறுவேன்? என்று கூறுவதைக் காணலாம். புராணத்தில் 65 பாடல்களில் அம்மையாரின் வரலாறு கூறி இறுதிப்பாடலை

"ஆதியும் அந்தமுமிலான் அருள் நடமாடும்
- போது
கீதமுன் பாடுமம்மை கிளரொளி மலர்ந்தாள்
- போற்றி
சீதநீர் வயல் சூழ் திங்களூரின் அப்பூதியாரம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு
- புகலலுற்றேன்

என அமைத்து இதுவரை காரைக்கால் அம்மையார் வரலாறு கூறி யான் இனி அப்பூதியடிகள் வரலாறு கூறுவேன் என்று கூறுவதைக் காணலாம். இது போல் 27 பாடல்களைக் கொண்ட இளையான் குடிமாற நாயனார் புராணத்தின் இறுதிப் பாடலை,

இப்பரி சிவர்க்குத் தக்க வகையினால்
இன்பம் நல்கி

முப்புரஞ் செற்றார். அன்பர் முன்பெழுந்
தருளிப் போனார்
அப்பெரி யவர் தன் தூய அடியினைத்
தலை மேற்கொண்டு
மெய்ப் பொருட்சேதி வேந்தன் செயலினை
விளம்பலுற்றேன்.

என்று இதுவரை இளையான் குடிமாறநாயனார் வரலாறு கூறிய யான் இனி சேதி நாட்டையாண்ட மெய்ப்பொருள் நாயனார் வரலாறு கூறுவேன் என்று கூறுவதைக் காணலாம். இவ்வாறு அந்தாதி தொகையில் அமைக்கப்பட்ட சிறப்பினைக் காணலாம்.

பெரியபுராணம் போற்றும் நாயன் மார்களை நோக்குகையில் சம்பந்தர் அந்தணர் குலத்தவர், சுந்தரர் அந்தணர் குலத்தில் பிறந்து அரசமரபில் வளர்ந்தவர். சேரமான் பெருமாள், மெய்ப்பொருள் நாயனார் அரசமரபினர். காரைக்கால் அம்மையார் வணிக குலத்தவர். நந்தனார் புலையர் குலத்தவர், கண்ணப்பர் வேட்டுவர். அப்பர் சைவ வேளாள குலத்தவர். எறிபத்தர் மீனவர், திருக்குறிப்புத் தொண்டர் சலவைத் தொழிலாளி. இவ்வாறு பல்வேறு சாதியினரையும் பாட்டுடைத்தலைவர் களாகக் கொண்டதால் சாதிபேதமற்ற சமத்துவ சமுதாயத்துக் காண சேக்கிழார் விழைவதைக் காணலாம்.

சேக்கிழாருக்கு பெரியபுராணம் பாட இறைவன் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தார். இத் தொடரை சேக்கிழார் பெரியபுராணம் முழுவதிலும் 14 இடங்களில் கையாண்டுள்ளார். இது உலகங்கள் ஈரேழு பதினான்கு என்பதை உணர்த்துவது போல் உள்ளது.

சோழர் காலத்தில் தேவார, திருவாசகங்கள் நம்பியாண்டார் நம்பியி னால் பதினொரு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன. சிறப்புக் கருதி பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பெறும் பேறு பெற்றதென்றால் பெரிய புராணத்தின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ!

**இறைவனின் எண் குணங்கள்**

01. தன் வயத்தனாதல்
02. தூய உடம்பினனாதல்
03. இயற்கை உணர்வினனாதல்
04. முற்றுமுணர்தல்
05. பாசங்களில் நின்றும் நீங்குதல்
06. பேரருளுடமை
07. முடிவிலா ஆற்றலுடமை
08. வரம்பிலா இன்பமுடமை

# நம் வாழ்வில் வளம் சேர்க்கும் நகைச்சுவை



**ஆ.ரவீந்திரன்,**
**விரிவுரையாளர்,**
**தேசிய கல்வியியற் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

நகைச்சுவை என்பது நவரசங்களில் ஒன்று. நாம் அனைவரும் எல்லாக் கவலைகளையும் மறந்து மனம் விட்டுச் சிரித்து மகிழ, எம்மை நாமே புதுப்பித்துக் கொண்டு மீண்டும் உற்சாகத்தோடு செயற்பட உதவும் ஓர் உன்னதமான சுவை இந்த நகைச் சுவையாகும். இந்த உன்னத சுவையின் அருமை பெருமை தெரியாத சிலர் நகைச்சுவை என்று சொல்லிக் கொண்டு அதனைக் கொச்சைப்படுத்துவதும் உண்டு. ஒருவரின் உடலமைப்பு, குறைபாடு போன்றவற்றை கிண்டல் செய்து மற்றவர்களைச் சிரிக்க வைப்பது ஒரு போதும் நகைச்சுவையாகிவிடாது. "வயிறு வலிக்க சிரிப்பவர்கள் மனித ஜாதி பிறர் வயிறெரிய சிரிப்பவர்கள் மிருக ஜாதி" என்ற திரைப்பாடல் இங்கு மனங்கொள்ளத்தக்கது. நம் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் இந்த நகைச்சுவை பற்றி நாம் எந்தளவுக்கு புரிந்து கொண்டிருக்கின்றோம் என்பது சிந்தனைக்கு உரியது. ஒரு உண்மையான நகைச் சுவையாளனைக் கூட நாம் பல சந்தர்ப்பங்களில் "கோமாளி" என்று குறைவாக எடைபோட்டு விடுவதுண்டு. ஆனால் அந்தக் கோமாளி இறுகிப்போன எத்தனை இதயங்களை இளக வைக்கின்றான்? கருகிப்போன எத்தனை உள்ளங்களுக்கு ஊட்டம் அளிக்கின்றான்? என்பதை எல்லாம் சிந்திக்கத் தவறிவிடுகின்றோம். பல சந்தர்ப்பங்களில் நகைச்சுவை என்பது வேண்டாத்தகாத ஒன்று. என பலர் கருதிவிடுவதும் உண்டு. இதன் விளைவாகத் தானோ என்னவோ இன்று நம்மில் பலர் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைக்கக்கூடத் தெரியாதவர்களாய் இறுகிப்போன இதயங்களுடன் வாழ்கின்றார்கள். ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பன எல்லாம் வெறும் ஏட்டு வார்த்தைகளாய், எட்டாக் கனிகளாய் எங்கோ தொலைந்துபோக நாம் ஏனோ தானோ என்று எமது வாழ்நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றோம். இறுகிப் போன வளமற்ற மனங்களே பல ஈனத் தனமான செயல்கள் நிகழ வழிவகுக்கின்றன என்பதை நாம் ஒரு போதும் மறுக்க முடியாது. காலையில் பத்திரிகைகளை புரட்டினால் கொலை, தற்கொலை, படுகொலை, கடத்தல், பாலியல் வன்புணர்வு போன்ற வேண்டத்தகாத செய்திகளே பரவலாகக் காணப்படுகின்றன. இந்த இழி நிலைக்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டுமானால் நிச்சயமாக நம் மனங்கள் பண்பட வேண்டும். அதன் மூலம் மனிதம் தழைக்க வேண்டும். இதற்கு பல வழிகள் இருக்கலாம். ஆனாலும், நல்ல நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்வதும் இதற்குத் துணை செய்யும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

நமது முன்னோர்கள் நல்ல நகைச் சுவை உணர்வு மிக்கவர்களாய் வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்குப் பல சான்றுகள்

காணப்படுகின்றன. நம் தாய் மொழியாம் தமிழ்மொழியானது இந்த நகைச்சுவை தழைத்து வளர்வதற்கு ஏற்ற வளமான ஒரு மொழி எனக் கூறப்படுகின்றது. அதனால் தான் தமிழ்மொழியில் நகைச்சுவை இலக்கியங்கள் பரவலாகக் காணப்படு கின்றன. தமிழ் திரைப்படங்களை எடுத்துக் கொண்டால் அங்கும் ஒரு நீண்ட நகைச் சுவைப் பாரம்பரியத்தினை நாம் காண முடியும். கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் தொடக்கம் இன்றைய வடிவேலு, சந்தானம் வரை எத்தனையோ நகைச்சுவைச் சக்கர வர்த்திகளை நாம் திரையுலகில் காண முடி கின்றது. தமிழ் திரைப்படங்களில் காணப் படுகின்ற அளவுக்கு வேறு எந்த இந்திய திரைப்படங்களிலும் இந்த நகைச்சுவை வளர்ச்சியினைக் காண முடியாதுள்ளதாகத் திரைப்பட ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதுவும் மேற்குறிப்பிட்டவாறான தமிழ் மொழியின் சிறப்பினையே காட்டி நிற் கின்றது எனலாம்.

எத்தனையோ அறிஞர்கள், தலைவர் கள் எல்லோரும் நகைச்சுவை உணர்வு மிக்கவர்களாய் வாழ்ந்திருக்கின்றனர். வாழ் வில் வளங்கண்டிருக்கின்றனர் என்பதற்கு அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த பல சம்பவங் கள் சான்று பகர்கின்றன. இது பற்றி ஓரளவுக்கேனும் தெரிந்து கொள்வது நமக்குப் பயன் மிக்கதாய் அமையும்.

மகாத்மா காந்தியடிகளை ஓர் அகிம்சாவாதியாக, ஒப்பற்ற தலைவராக, இந்திய விடுதலைப் போராட்டத்தின் தந்தையாகத்தான் நமக்குத் தெரியும். ஆனால், இதற்கெல்லாம் அப்பால் அவர் ஒரு நல்ல நகைச்சுவையாளராகவும் இருக்கின்றார் என்பது நம்மில் பலருக்குத் தெரியாத ஒரு விடயம். காந்தியடிகள் நகைச்சுவை பற்றி கூறும் கூற்றே அவர் எந்த அளவுக்கு நகைச்சுவையை நேசித்தார் என்பதற்குச் சான்றாகின்றது. "என் சுவாசத்தை நிறுத்திவிட்டாலும் சில கணங்கள் என்னால் உயிரோடு இருக்க முடியும். ஆனால், என்னிடமுள்ள நகைச் சுவை உணர்வை எடுத்துவிட்டால் அந்தக் கணமே நான் இறந்து விடுவேன்" என்கிறார் காந்தியடிகள். ஒரு சமயம் காந்தியடி களைப் பற்றி மிகவும் அவதூறாக எழுதி அந்தக் காகிதங்களை ஒரு குண்டூசியால் இணைத்து காந்தியடிகளிடமே கொடுத்தார் களாம் சில இளைஞர்கள். அதை வாங்கிய காந்தியடிகள் குண்டூசியை மட்டும் எடுத்துக் கொண்டு காகிதங்களை அப்பால் வீசிவிட்டு "எனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டேன், பல்லுக்குத்த இது உதவுமல்லவா?" என்றாராம் சிரித்தவாறே.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு ஒரு தடவை ஒரு நிகழ்வில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தாராம். அப்போது அவரை வழிமறித்த ஒருவர் "என்னையா ஏதோ சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று பிரமாதமாகப் பேசிக் கொள்கின்றார்களே, எங்களுக்கு அப்படி என்னதான் கிடைத்து விட்டது?" என்றாராம். நேரு சினமடைய வில்லை. "நாற்பது கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டின் தலைவரை நடு வீதியில் வைத்து கேள்வி கேட்குமளவுக்கு உனக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கின்றது. இதைவிட வேறென்ன வேண்டும்" என்றாராம்.

சேர் வின்சன் சேச்சிலைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது இங்கிலாந்தை வழிநடத்திய ஒப்பற்ற பிரதமர் அவர். சேச்சிலுக்கும் ஒரு பெண்மணிக்குமிடையே எப்போதும் தகராறுகள் வந்து கொண்டே இருக்குமாம். ஒரு சமயம் அந்தப் பெண் சேச்சலைப் பார்த்து "திரு சேச்சில் அவர்களே, நான்

மட்டும் உங்கள் மனைவியாக இருந்தால் காப்பியில் விசம் கலந்தே உங்களைக் கொன்றிருப்பேன் என்றாராம். அதற்கு விடையளித்த சேச்சில் உன் கணவனாக வாழ்வதை விட மரணம் பன்மடங்கு மேலானதல்லவா?'' என்றாராம்.

புகழ் பெற்ற விஞ்ஞானியான சேர் ஐசாக் நியூட்டனின் அயல் வீட்டில் ஓர் அம்மையார் இருந்தாராம். அவரின் மைந்தனுக்கு சுட்டுப் போட்டாலும் படிப்பு ஏறாது. அந்த மகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி அவர் நியூட்டனை நச்சரித்துக் கொண்டே இருந்தாராம். நியூட்டன் எவ்வளவோ தட்டிக்கழித்தும் அந்த அம்மையார் விட்டபாடாக இல்லை. நச்சரிப்புத் தாங்க முடியாமல் நியூட்டன் அந்தப் பையனுக்கு பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தாராம். ஒரு மாதத்தின் பின் ஒரு நாள் அந்த அம்மையார் நியூட்டனிடம் வந்து "ஐயா, என் மகன் படிக்கிறானா?" என்று கேட்டாராம். நியூட்டன் "அவனிடமிருந்து நான் நிறையப் படித்துவிட்டேனம்மா" என்றாராம்.

அமெரிக்காவின் புகழ் பூத்த ஜனாதிபதிகளில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றிருந்தாராம். அவருக்கு முன் பேசியவர் லிங்கன் ஒரு சாராயக் கடையில் வேலை செய்கிறார் என்று அவரை மிகவும் தரக்குறைவாக பேசினாராம். அவருக்குப் பின் உரையாற்றிய லிங்கன் "நண்பர் கூறியது மிகவும் சரி. அவர் எங்கள் சாராயக்கடைக்குத் தான் தினமும் வந்து மணிக்கணக்காகக் குடித்துக் கொண்டிருப்பார்'' என்றாராம். அந்த சாதுரியமான பேச்சே லிங்கனுக்கு மக்களின் பேராதரவைப் பெற்றுத் தந்தது.

கிரேக்கத் தத்துவஞானியான சோக்கிரட்டீஸ் ஒரு தடவை நண்பர் ஒருவரோடு ஒரு மேலான தத்துவம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாராம். அவரின் பேச்சு வெறும் வெட்டிப் பேச்சாக அவரின் மனைவிக்குப் பட்டதாம். அவள் தன் கோபத்தைக் காட்டுவதற்காக அடுக்களையில் இருந்த பொருட்களையெல்லாம் அங்குமிங்கும் போட்டுக் கொண்டிருந்தாளாம். சோக்கிரட்டீஸ் இதையெல்லாம் லட்சியம் செய்யாமல் நண்பரோடு பேசிக் கொண்டிருந்தாராம். அதனால் மேலும் ஆத்திரமடைந்த மனைவி ஒரு குடம் நீரைக் கொண்டுவந்து அவர் தலையில் கொட்டினாளாம். அந்த அரிய காட்சியைக் கண்டு வெலவெலத்துப் போய் நின்ற நண்பரைப் பார்த்து சோக்கிரட்டீஸ், "நண்பா, இதுவரை இடி இடித்தது. இப்போது மழை பொழிந்தது. இனியெல்லாம் சரியாகிவிடும்'' என்றாராம் சிரித்தவாறே.

இவ்விதமாக அறிஞர்கள், பெரியோர்களின் வாழ்வில் நடந்த நகைச்சுவைச் சம்பவங்களை அடுக்கி கொண்டே போகலாம். இவற்றில் இருந்து நிச்சயமாக நாம் ஒரு படிப்பினையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாமும் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு, நம் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள இந்த நகைச்சுவை மிகவும் அவசியமானது என்பதுதான் அது. உப்பு உணவுக்குச் சுவை சேர்க்கும், வளம் சேர்க்கும். எனினும், இந்த நகைச்சுவை உணர்வோடு நாளெல்லாம் சிரித்த முகத்தோடு வாழ்ந்து நமது இறுதி மூச்சைவிடும் போது கூட ஓர் இனிய புன்னகையோடு இந்த மண்ணைவிட்டு விடைபெற முடிந்தால் அந்த வாழ்க்கையை விட உன்னதமானது வேறெதுவும் இருக்க முடியாது. அந்த அரிய வாழ்வை நோக்கிய நமது நகர்வை நாமும் இன்றே ஆரம்பிப்போம். நகைச்சுவையைக் கொண்டு நமது வாழ்வை வளம்படுத்தி நலமாக வாழ வோமாக.

# 'பள்ளு' ஒரு கிராமிய நடனம்



**கலாபூஷணம், பண்டிதை**
**வை.கணேசபிள்ளை,**
**ஓய்வு பெற்ற ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி.**

**கிராமிய கதைகளின் தனித்துவம்**

பள்ளுப் பிரபந்தங்கள் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தவை. கிராமிய, அல்லது ஒரு பிரதேசக் கலையைப், பாரம்பரியத்தை இங்கே காணலாம். கிராமியக் கலைகள் சாஸ்திரியக் கலைக்கு ஆதாரமானவை. இயற்கை எழிலும், கற்பனை வளமும் உள்ளவை. ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கிராமிய நடனம் அல்லது கிராமியக் கலைகளினூடு அறியலாம். மக்களின் வாழ்வியல், தொழில் நடத்தை, கலாசாரம், மொழி யாவும் அப் பிரதேச மண் வாசனையாகும். பாரம்பரியக் கலையாக இவை பேணிப் பாதுகாத்து வரப் படுகின்றன. இக்கிராமிய நடனங்கள் பிரதேச ரீதியாக வேறுபட்டுக் காணப்படும். இக் கலை காலத்திற்குக் காலம் மாறுதல்களை ஏற்றுக்கொண்டாலும், தன் தனித்துவத்தை இழந்து விடுவதில்லை. சாஸ்திரிய நடனக் கலை கிராமியக் கலைகளில் இருந்தே தோற்றம் பெற்றன. கிராமத்திற்குரிய மரபு வழி உரிமை, கலைப்பாரம்பரியம் மிளிருவன. செம்மைப்படுத்தப்படாதவை கிராமியக் கலைகள்.

**கிராமியக் கலைகள்**

"வடவேங்கடம் தென்குமரியா யிடைத் தமிழ் கூறும் நல்லுலகில் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து..." காணப்படுவது. இக்கிராமியக் கலை பாரதத்தில் மட்டுமல்ல இலங்கை போன்ற ஏனைய நாடுகளிலும் கிராமியக் கலைகள் வனப்புற்று உள்ளன. இவற்றை வைத்து நோக்கும்போது வெறிகொண்டு ஆடுதல், சமய பக்தி கொண்டு ஆடுதல், கரம், காவடி, கும்மி, கோலாட்டம், குரவை, ஒயிலாட்டம் முதலியவையும் அடங்கும். மழை வேண்டியும், நோய்களைத் தடுத்தல் வேண்டியும், விழாக் காலங்களிலும், கங்கை, யமுனை அம்மன் முதலிய கிராம தேவதைகளை மகிழ்விக்கவும் ஆடுதல் யாவும் காணலாம். இவ்வாறு ஆடும் பொழுது, நேர்த்தி வைத்தல், கடா வெட்டல், சேவல் பலியிடல், அம்மனுக்கு கள்ளுக்குடம் வைத்து வழிபடல், முளைப் பாலிகை வைத்து ஆடல் முதலியவற்றைக் கிராமிய நடனங்களில் காணலாம். இத்தகைய கிராமிய நடன அம்சங்கள் யாவும் முக்கூடற் பள்ளில் காணப்படு கின்றமையின் இது ஒரு கிராமிய நடனம் எனக் கூற முடியும்.

**முக்கூடற்பள்ளு என்பது**

இப் பள்ளுப் பிரபந்தமானது வயல் களிலே வேலை செய்யும் உழவர்களையும் உழத்தியரையும் நாயக, நாயகியராகக் கொண்டு கிராமப்புற வாழ்க்கை சித்திரிக் கப்படுகிறது. இங்கே பள்ளர் என்ற

சாதியினரே குறிப்பிடப்படுகின்றனர். பள்ளர் - உழவர் என்று கொள்ளலாம். மேலும் முக்கூடற் பள்ளு என்பதில் முக்கூடல் என்பது மூன்று நதிகள் கூடுமிடம் எனப்படும்.

பொருனையாறும், சிற்றாறும், கோதண்ட இராம ஆறும் கூடுமிடமே குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே அமர்ந்திருக்கும் முக்கூடல் அழகரையே முக்கூடற் பள்ளு விதந்துரைக்கின்றது. கண்டோர் மயங்கும் பேரழகரும், காத்தற் கடவுளுமாகிய திருமால் முக்கூடல் அழகர் என்னுந் திருநாமத்துடன் கோயில் கொண்டிருக்கிறார். பொருனை நதிக்கு வடகரையிலும், தென் கரையிலும் உள்ளவர்கள் வணங்கிப் பயன் பெறுமாறு இப்பள்ளுப் பாடப்பட்டது.

**மருதநிலப் பண்பு கூறும் முக்கூடற்பள்ளு**

தமிழ் நாட்டிலுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், (பாலை) என்ற நானிலங்களுக்கும் அவற்றிற்குரிய ஒழுக்கங்களையும் காண முடிகிறது. ஆயினும் மருத நிலப் பண்பையே முக்கூடற் பள்ளு விதந்து கூறுதலைக் காணலாம். அதாவது வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், மருதத்திற்குரிய ஒழுக்கம் ஊடல், உழவர் உழத்தியர் வாழ்க்கை காதற் பரத்தை முதலியன அழகாகச் சித்திரிக்கப் படுகின்றன. மூத்தபள்ளி தலைவி, இளைய பள்ளி காதற்பரத்தை, குடும்பன் தலைவன் இவர்களுடைய வாழ்க்கை முறை சித்திரிக்கப்படுகிறது. குடும்பன் இளைய பள்ளியிடம் செல்லல் கண்டு மூத்தபள்ளி கோபித்தல் முதலிய கிராமப்புற வாழ்க்கை, அங்கே அவர்கள் பயன்படுத்தும் மொழி - பேச்சு வழக்கில் தரப்படுகிறது. பண்ணையார் பெரு நிலச் சுவாந்தராகக் காட்டப்படுகிறார். அவரது பண்ணையிலே பள்ளர், பள்ளியர் வயல்வேலையில் ஈடுபடுகின்றனர், வரம்பு கட்டுதல், பட்டி அடைத்தல். (எருவிடல்) உழுதல் விதைத்தல், மழை வேண்டிப் பாடல், நாற்று நடல், பாதுகாத்தல், அருவி வெட்டல், சூடடித்தல், நெல்லளத்தல், தெய்வம் போற்றல் முதலியன நடைபெறு கின்றன. இவற்றையெல்லாம் சிந்துநடைக் கவிதையாகச் சந்தத்துடனும், தாளக் கட்டு டனும் கவிஞர் தந்துள்ளார். ஆட்டக் கூத்தின் முக்கிய அம்சங்கள் தாளமும் சந்தமுமே. இவற்றை இக்கிராமிய நடனப் பள்ளு மூலம் அறியலாம். மேலும் சமயச் சார்புடையதாக இம்முக்கூடற் பள்ளு அமைந்திருக்கிறது. பண்ணையார், வடிவழக் குடும்பன், மூத்த பள்ளி, இளைய பள்ளி, தோழி யாவரையும் வைத்து ஒரு கதையாக்கி, நாடகமாகவும் நடித்து மக்களைக் கவரச் செய்யலாம். கருத்தை நடித்து நாட்டிய நடனமாகவும் கலைஞர் களைக் கவரலாம். பாடல்கள் யாவும் வேண்டிய வேண்டிய இடங்களில் சந்தமும் தாளக் கட்டும் உடையனவாக உணர்ச்சி யைத் தூண்ட வல்லனவாக அமைந்திருக் கின்றன. இந்தக் கதை மூலம் மருத நில மக்கள் பெரும்பாலும் கிராமப் புற மக்களே என்பதும், அவர்களுடைய தொழில் உழவு என்பதும், அவர்களுடைய பொழுதுபோக்கு ஆடல், பாடல்களே என்பதும், ஆடு, மாடு மேய்த்தல், பால் எடுத்தல் முதலிய தொழில் களோடு, திருமால், காவல் தெய்வத்தை வழிபடல், அம்மனை வழிபடல் முதலியன யாவும் இப்பள்ளின் மூலம் அறியவுண்டு. இரசனையுள்ள பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போர் எல்லாப் பாடல்களும் சிந்து நடையில் அமைந்திருத்தல் இன்னொரு சிறப்பாகும். இங்கே பள்ளர், பள்ளியர் என்று குறிப்பிடும் பொழுது சாதிப்பாகுபாடும் சற்றுக் காட்டப்படுகிறது. அதனைக் கவிஞர் பள்ளன் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

"தக்க சோறென் வெள்ளாண்மை
பள்ளா பள்ளா என்பர்"

தள்ளிப் போ என்று கூறுவர் உண்மை உணராதோர் என்கிறான் பள்ளன்.

**வசந்தகால வரவு**

வடகரை வளங்கூறுமிடத்து வசந்த கால வரவினை அறிந்த மயில் களிப்பிலே மேட்டின் மீது ஏறி நின்று தன்கால்களைப் பவிசுடன் எடுத்து வைத்து, தோகையை விரித்து வானத்தை நிமிர்ந்து பார்த்து நடனம் ஆடத் தொடங்கியது.

வசந்த காலம் வந்துவிட்டதோ எனத் தன் குரல் எடுத்து கூவிக் கேட்டதாக நினைத்த மாமரத்தில் இருந்த பெட்டைக் குயில், மயிலின் ஆட்டத்தைக் கண்டு கூவும் தன்மையிழந்து நின்றது என்பதை அழகாக,

"மேடை ஏறித்தன் காலைப் பவுசு
விரித்த பீலி
மயிலெட்டிப் பார்க்கப்
பேடை மாங்குயில் வாய் கொண்டு உசாவப்
பிளந்த வாய்தனைப்
பேசாமல் மூட
கோடை போய்விட்ட சோபனங் கொண்டு
குளிர்ந்த கொண்டற்
குறிந்துளி போட
வாடையோடி வரக்களி சூரும்
வளமையா சூர்
வடகரை நாடே"

எனக் கவிதை அமைந்துள்ளது.

மேலும் "கறை பட்டுள்ளது வெண்கலைத் திங்கள்"

"சிறைபட்டுள்ளது விண்ணெழும்புள்ளு"
"குறைபட்டுள்ளது கம்மியரம்மி"

என்பன போன்ற கிராமத்து மொழியிலே எதுகை மோனை ஒழுங்கிலே இசை படப் பல பாடல்கள் இங்கே காணக்கூடியதாக உள்ளது. சித்திரா நதி வெள்ளம் நிலங்களை வளம்படுத்திச் செல்லும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

**மழை வளம் வேண்டல்**

திருமால் திருவடிகளை மறவாத பண்ணைக்கு அடிமைப்பட்ட பள்ளர், எல்லோருங் கூடி மழை வேண்டி முக்கூடல் அழகரை வேண்டித் தெய்வநிலை போற்றினர். மழைக்கறிகுறி வானத்தில் தோன்றியது. இதனைப் புலவர் அழகாகச் சிந்துநடையில் அட தாளத்தில் பாடியுள்ளார். இப்பாடலைத் தனிப் பாடலாகவும், நடனத்துடன் பாடி ஆடியும் இன்புறலாம்.

"ஆற்றுவெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்று மின்றுங் கொம்புசுற்றிக்
காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக்குதே - மழை
தேடியொரு கோடி வானம்
பாடி ஆடுதே
போற்றி திருமாலழகர்
கேற்றமாம் பண்ணைச் - சேரி
பள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித்
துள்ளிக் கொள்வோமே"

என்னும் பாடல் மழை வரப் போகின்றது என்பதை அறிந்து தென் மேற்கிலுள்ள மலையாள மின்னலும், ஈழத்து மின்னலும் சூழவளைந்து மின்னிக் கொண்டிருக்க, நேற்றுமின்றும் மரக் கொம்புகள் சுற்றும்படி காற்றடிக்கிறது. நீரிலுள்ள சொறித்தவளை கூப்பிடுகிறது. நண்டுகள் தமது இருப்பிடங்களுள் மழை நீர் புகாதவாறு வளை வாயில்களைச் சேற்றினால்

அடைக்கின்றன. வானம்பாடிப் பறவைகள் ஆடிப்பாடி அங்குமிங்குமாகப் பறக்கின்றன. முக்கூடல் அழகருக்கு ஏற்றவாறான சேரிப் பள்ளர் மழையினை வரவேற்று ஆடிப் பாடித் துள்ளிக் கொள்வோமே என ஏனை யோரையும் ஆடிப்பாட அழைப்பது போல இப்பாடல் கிராமிய மொழியிலே கிராமப் புறக் கலை அழகாகப் பாடப்பட்டுள்ளது. கொம்பு, சுற்றி, சொறித்தவளை, கூப்பிடுகுதே, மலையாளம், ஈழம், மின்னல், சேற்றுநண்டு என்னும் பதங்கள் கிராமப்புறக் கலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேலும் மழைவளம் சிறக்க வேண்டி மக்கள் எல்லாம் சேரியில் கூடி குரவை ஒலி ஓங்கத் தெய்வம் போற்றினர் என்பதை

"மாரிப் பொருட் டால் வரங்குறித்து
பள்ளரெல்லாம்
சேரிக் குரவை எழத் தெய்வநிலை
போற்றினரே"

என்றும் அந்த வழிபாட்டில்,

"பொங்கலிட்டு தேங்காயும் கரும்பும்
பூலாவுடையாருக்கு - கொடுங்கள்
குங்குமத்தோடு சந்தனங் கலந்து -
சாத்துமின்

" ...................... ஏழு செங்கடாயும்
வெட்டும்" என்றும்
"செஞ்சேவற் சாத்திரத்தாலே - பலியிடுமின்"
சாராயமும், கள்ளும் - குடத்தில்
வையும்"
"மழை பெய்ய அழகர் பேரை வாழ்த்தி
எல்லோரும் வாரும்"

"பள்ளர் எல்லோரும்" என்ற பாடல் அடிகளால் கிராமப்புற மக்களின் குரவை ஆடல், பாடல், தெய்வம் போற்றுதலை அறியலாம்.

## இருத்தல் ஒழுக்கம்

முல்லை நிலப் பண்பு இருத்தல் ஒழுக்கமாகும். வானத்திலிருந்து பெய்கின்ற மழையானது மதகளிறு போல யாவற்றை யும் நாசம் செய்து ஏனைய நிலங்கள் வழியே பாய்ந்து ஓடி முல்லை நிலத்தை அடைந்தது. வெள்ளத்தின் வரவைக் கண்ட தலைவி தலைவன் இன்னும் வராததால் அவனது வரவை எதிர்பார்த்து வீட்டில் இருந்து வருந்துவதாகவும் தோழி தலைவி யைத் தேற்றுவதாகவும் குறிப்பிடும் பாடல்,

"குன்றைக் குடைகவித்த கோவலரா முக்
கூடலிலே
இன்றைக்கிரவில் இவளை எவர் தேற்றுவரே
கன்றைக் கழுத்தணைத்துக் கற்றாவைக்
கூவுமண்டர்
கொன்றைக் குழல்பூங்குழலி செவிக்
காகாதே"

என மருதநில ஒழுக்கத்தை காட்டி நிற்கின்றது. எனவே முக்கூடற்பள்ளு ஒரு கிராமிய நடனம் என்பதில் ஐயமில்லை.

## பராக்குக்கூறல்

முற்காலத்திலே, அரசர்களுக்கும், பண்ணைத்தலைவர்களுக்கும், உயர்வு காரணமாக "பராக்குக்" கூறி வரவேற்பது வழக்கம். இங்கேயும் கவிஞர் மூத்த பள்ளி வாயிலாகப் பண்ணையாருக்குப் "பராக்கு" கூறி மகிழ வைத்துப் பள்ளனை மன்னித்து வேலை வாய்ப்புக் கொடுக்கும்படி வேண்டுகிறாள். "ஐயா பராக்கு பராக்கும் மைக் கும்பிட்டேன் - உம்மை - என்ற வரிகள் இதனை உணர்த்தும்.

ஐயா பராக்குப் பராக்கும்மைக்
கும்பிட்டேனாண்டே - உம்மை
அல்லவோ தேடி அடியாளிங்
கேவந்தேன் ஆண்டே

கையாரக் கண்ட கனவும்
பொறுப்பீரே ஆண்டே - பள்ளன்
காவலைக் கண்ணாலே
பார்க்கப்படாது காண் ஆண்டே”

**பள்ளியர் அன்பு**

பள்ளன் செய்த கள்ளத் தனத்தில் மூத்த பள்ளியின் சொற்கேட்டுத் தண்டனை வழுங்கல், மீண்டும் மூத்த பள்ளி பண்ணை யாரை மன்றாடி விடுவித்தல், பள்ளன் மாடுகளைக் கொண்டு சென்று உழுதல், காளை மாடு குத்துதல், பள்ளன் மயங்கிய தைக் கண்டு இரு பள்ளிகளும் துடித்து ஓடி வரல்.

“துள்ளி யெழுங்காளை தொடர்ந்து
பள்ளனைப் பாய்ந்து
தள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றுந்
தரியாமல்....
புள்ளியின் வாய் கிழித்த புங்கவனார்
முக்கூடற்
பள்ளி வரத்தென் மருதூரப் பள்ளியும்
வந்துற்றாளே”

என்று புலவர் தன் கவி வன்மை யால் பள்ளன் மேல் பள்ளியர் வைத்திருந்த அன்பைக் காட்டுகிறார். இப்படியாக வாழ்க்கை முறையை மருத நிலக் கிராமப் புற மக்கள் வாழ்ந்தமையைத் துல்லிய மாகக் காட்டுகிறார். புலவர் பள்ளனின் இரு மனைவியரும் அழுது புலம்பக் குடும்பன் சிரித்துக் கொண்டெழுந்து உழுது விதைத்து, நாற்று நட்டு அறுவடை செய்து நெல்லளந்து கொடுத்தல் முதலிய பணி களைச் செய்தான்.

**வாழ்வியல்**

இங்கே காணும் எல்லாப் பாடல் களும் கிராமப் புற மக்களின் வாழ்விய லைப் படம்பிடித்துக் காட்டுவதோடு சுவை மிக்க பாடல்களாக அமைந்துள்ளன. வேளாண்மை குறைவுபடாமல் இருக்க வேண்டிப் பள்ளியர் கூடிக் கும்மி அடிக்கின்றனர்.

மருதூரில் உள்ள ஆற்றிலே புனல் மோதிக்கொண்டுருகும் வேளை தங்கள் நாற்று நடும்வேலைக்குப் பள்ளர் எதிர் பார்த்திருக்க சோற்றுக்கு காலம் தாமதம் ஏற்பட எல்லோரும் ஒன்று சேர்ந்து பள்ளியர் எல்லாம் மேட்டில் கூடி, காப்புகள் ஒலிக்க வும், சங்கிலிகள் அதிரவும், காதிலணி ஊசலாடவும் சிவந்த கைகளை நீட்டி கும்மி அடிக்கும் காட்சி தரப்படுகிறது.

தங்கள் வேலை நாற்றுக்கும் பள்ளர்
அங்கலாய்க்கும் சோற்றுக்கும்
தாமதப்படவே மற்ற தொன்றைச்
சாட்டி மேட்டிற் கூட்டமாய்,
“எங்கும் காப்பொலி பொங்கவேயதற்கு
எதிராய்ச் சங்கொலி அதிரவே” என்றும்

அங்குமிங்கும் செங்கை நீட்டி அருதியும் சின்னமருதியும் அரியாரும் கட்டைப் பெரியாரும் - கும்மி அடிப்பதைப் பாருங்கடி” என்பது போன்ற பாடல்கள் அமைவதால் பள்ளு ஓர் கிராமிய நடனமாகும்.

**நிறைவு**

கிராமிய நடனங்கள் பெரும்பாலும் செப்பனிடப்படாதவையாகும். கிராமப் புற மக்களின் வாழ்க்கை முறைகள், கலைகள், பண்பாட்டு விழுமியங்கள் யாவும் இங்கே, பிரதிபலிக்கின்றன. கிராமத்தின் அதற்கே யுரிய பாணியில் கூறப்படும் விதம், இசை, தாளம், ஆட்டம், நடை, உடை, பாவனை யாவும் கிராமியத் தனித்துவத்தைக் காட்டுவதனால் பள்ளுப் பிரபந்தம் ஒரு கிராமிய நடனம் எனலாம்.

# இருபதாம் நூற்றாண்டில் அரசியல் மற்றும் சமுதாயப் பணியில் பத்மஸ்ரீஅம்புஜம்மாள்



**திருமதி. விக்னேஸ்வரி பவநேசன்**
**முதுநிலை விரிவுரையாளர் - 1**
**இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

பாரதநாடு பழம்பெரும்நாடு, நீரதன் புதல்வர் "இந்நினைவகற் றாதீர்" எனப் பாடினர் மகாகவிபாரதியார். இந்தப்பாரதத் தாயின் நாகரிகப் பாரம்பரியம் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலானது. நான்கு வேதங்களும் இராமாயணம், மகா பாரதம் போன்ற இதிகாசங்களும் இந்தப் பாரம்பரிய நாகரிகத்திற்கு நிலைத்த சான்று களாகும். இந்த இதிகாசங்களில் கன்னியா குமரி முதல் இமயமலை வரையில் உள்ள நிலத்தின் வருணனைகளே இந்தத் தேசத் தின் கலாசார ஒற்றுமைக்குச் சான்றாகும்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போ
மென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"

எனப் புதுயுகக் கவிஞன் பாடியதற் கேற்ப இருபதாம் நூற்றாண்டில் மகளிர் குலம் வீறுகொண்டெழுந்து,

"ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப் பில்லை காண்"

என்று அனைத்துத் துறைகளிலும் முன்னோடியாகத் திகழ்கின்றனர்.

அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா வில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய இலட்சக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களின் வரிசையில் மகளிர் குல மாணிக்கங்களும் அடங்குவர். அரசியல் துறையில் மட்டுமன்றி சமுதாயத் துறை யிலும் இவர்கள் பங்கு கொண்டதற்குக் காரணம் இவர்களுடைய குடும்பத்தினரே ஆவர். அவர்கள் கல்வியறிவு பெற்றவர் களாக இருந்தமையால் தமது பிள்ளை களையும் அரசியல் மற்றும் சமுதாயத் துறைகளில் ஈடுபடுத்தினர். அவ்வாறு ஈடுபட்டு நாட்டிற்காக உழைத்த பெண்கள் வாழ்வு எமக்கு ஓர் எடுத்துக் காட்டாய் விளங்குகின்றது. இத்தகைய பெண்கள் வரிசையில் பத்மஸ்ரீ அம்புஜம் மாள் (பத்மஸ்ரீ அம்புஜத்தம்மாள்) விடுதலை வீராங்கனை ருக்மணி லட்சுமிபதி, சரஸ்வதி பாண்டு-ரங்கம், முத்துலட்சுமிரெட்டி, மஞ்சு பாஷினி, அம்முசுவாமிநாதன், டாக்டர் சௌந்தரம் அம்மா, சரோஜினி வரதப்பன், மற்றும் மணியம்மை போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## பத்மஸ்ரீ அம்புஜம்மாள்

1899 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8ம் நாள் சீனிவாச ஐயங்காருக்கும் ரங்கநாயகி அம்மாளுக்கும் மகளாகப் பிறந்தவர் அம்புஜம்மாள் . சீனிவாச ஐயங் கார் தூயவெண்ணிற கதரையே அணிந்தார். பொதுநலத்தொண்டையே தம் வாழ்க்கைக்

குறிக்கோளாய்க் கொண்டவர். ஏழை எளியவர்களுக்காக வாதாடினார்[2]. இவர் இளவயதில் திருமணம் செய்யும் முடிவை வற்புறுத்தியும் 'சமூகச்சீர்திருத்தம்' என்னும் மாத இதழில் எழுதி வந்தார். 1908 இல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட சீனிவாசஐயங்காரின் அரசியல் பிரவேசம் கண்டு வீட்டில் எல்லோரும் கவலை கொண்டனர்[3].

1915 ஆம் ஆண்டு காந்திஜி தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார். ஆர்வத்துடன் தம்கொள்கை களைப் பரப்பினார். உயர்நிலையிலிருந்த இந்தியர் பலர் அவருக்கு உறுதுணை யானார்கள். அவர்களுள் சென்னையில் உள்ள சீனிவாசஐயங்காரும் ஒருவராவார். இவரின் மகள் அம்புஜம்மாள் தனது பதினைந்தாவது வயதில் காந்தியுடன் அறிமுகமானாள். வசதிமிக்க குடும்பத்தில் பிறந்தவராதலால் வாழ்வில் எந்தவித கவலையுமின்றி தந்தையின் பாசம்மிக்க அரவணைப்பால் வளர்ந்தார். எனினும் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த வழக்கப்படி வெளியில் கல்விச்சாலைகளில் சென்று கல்விபெற அனுமதிக்கப்பட வில்லை.

எனவே இவருக்கு வீட்டிலேயே தகுந்த ஆசிரியரைக் கொண்டு கல்வி போதிக்கப்பட்டது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி என நான்குவித மொழிகளில் கல்வித்திறம் பெற்றவராக இவர் விளங்கினார். விடுதலைப்போராட்டச் சூழலில் தன்னை இணைத்துக் கொண்டு நாட்டு நலனில் பங்கு கொண்டார்.[4] அம்புஜவல்லியின் தாய் ரங்கநாயகி அம்மாளும் மற்றும் சில ஆங்கிலேயப் பெண்மணிகளும் சேர்ந்து பெண்கள் பொழுதுபோக்குச் சங்கம் ஒன்றை ஆரம்பித்தனர். அதில் அவர்கள் வாரம் இருமுறை சந்தித்து உரையாடுதல், மற்றும் பூப்பந்து, வலைபந்து போன்ற விளை யாட்டுக்களை விளையாடுதல் போன்ற வற்றில் பொழுதைக்கழித்தனர். இச்சங்கம் வேகமாக வளர ஆரம்பித்தது. பல பெரிய இடத்துப் பெண்மணிகளும் இதில் இடம் பெறலாயினர். மேல்நாட்டுப் பெண்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இந்தியப்பெண்கள் மிகவும் வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் நெருக்கடி நிலைமைகளில் மிகப்பெரிய பொறுப்புக்களையும் ஏற்றுச்சிறந்த முறை யில் செயலாற்றக்கூடிய ஆற்றலும் அறிவும் துணிவும் படைத்தவர்களாக விளங்கினர். அம்புஜவல்லி பெண்கள் சங்கத்தில் சேர்ந்து உறுப்பினராகிய பின் அச்சங்கத் தின் மூலம் பல புதிய தொடர்புகளும் அனுபவங்களும் கிடைத்தன.

அன்னிபெசன்ட் அம்மையாரின் பேச்சைக்கேட்க அம்புஜம்மாளும் அவளது சித்தி ஜானம்மாவும் சென்று வந்தனர். இதுவே அம்புஜவல்லியின் மனதில் தேசபக்தி என்னும் முதல்வித்தை ஊன்றிய நிகழ்வாகும்.

## விழிப்புணர்வு ஏற்படல்

இந்திய நாட்டுப்பற்றுப் போராட்டம் முழுவளர்ச்சி எய்தாத அந்நிலையில் காங்கிரஸ் - பிரிட்டிஷ் நட்பு செழுமையுடன் திகழ்ந்தது என்றே கூறலாம்[5]. இருபதாம் நூற்றாண்டின் முதல்பத்தாண்டுக் காலப் பகுதியில் இந்தியாவின் பல பகுதியிலும் பிரிட்டிஷாருக்கு எதிரான கலவரங்கள் வெடிக்கத்தொடங்கின. காங்கிரஸிலும் பிளவுகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஆரம்பித்தன. நாட்டுப்பற்றாளர்கள்

பிரிட்டிஷ் அரசிற்கு எதிராக தீவிரப்பிரச்சாரம் செய்தனர். எனினும் மிதவாதிகள் இன்னமும் தமது உணர்வினை வெளிப்படுத்தாமல் பிரிட்டிஷ் அரசிடம் நட்புக் கொண்டவர் களாக இருந்தனர் [6].

## வாழ்க்கைத்திருப்பம்

காந்திஜி எழுதிய "ஆரோக்கிய வாழ்க்கை" என்ற நூலை அம்புஜவல்லி பலதடவை படித்து காந்திஜியின் கருத்துக் களை மனதில் அசை போட்டு வந்தார். மேலும் விவேகானந்தர், திலகர் போன் றோரின் பக்தி நூல்களையும் அவர் படித்தார். காந்திஜியின் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கிய பின் அம்புஜவல்லி யின் மனதில் பெரிய மனமாற்றம் ஏற்பட்டது. மானிடப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் ஒரு குறிக்கோளுடன் வாழவேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கியது. தனது வாழ் நாளைத் தேசசேவையிலோ சமூகசேவை யிலோ ஈடுபட்டுக் கழிக்க வேண்டும் என்ற குறிக்கோள் மனதில் ஆழமாக வேரூன்றியது.

சென்னை நகரில் அம்புஜம்மாளின் பெயர் மிகவும் பெரிய அளவில் பிரபலமாக விளங்கியது. தமது சித்தியார் ஜானம் மாளுடன் பல்வேறு பொதுக்கூட்டங்களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். காந்திய நிர்மாணத்திட்டப் பணிகளான சுதேசிக பிரச்சாரம், நூல்நூற்பது, ஹிந்தி கற்பிப்பது, போன்றவற்றில் ஈடுபடபெண்கள் சுதேசிக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஜானம்மாவும் கிருஷ்ணபாய் என்பவரும் செயலாளர்களாகவும் அம்புஜவல்லி பொரு ளாளராகவும் இருந்து செயற்பட்டனர்.

சென்னை காங்கிரஸ் காரியக் கமிட்டி சுதந்திரப் போராட்டத்திற்கு அம்புஜ வல்லியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அது பெண் தொண்டர்களைத் திரட்டி அந்நியத்துணி விற்பனை மறியலை நடத்தத்திட்டமிட்டது. அம்புஜவல்லி, ஜானம்மாள் போன்றோர் பாரதியாரின் பாடல்களை வீராவேசமாகப் பாடிக்கொண்டு செல்லப்பெண் தொண்டர் படை அணி வகுத்துச் சென்றது. அவர்கள் அனைவரை யும் பொலிசார் கைதுசெய்தனர். அவர் களுள் அம்புஜவல்லி தவிர மற்றவர்கள் யாவரும் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வெளியில் இருந்த அம்புஜவல்லி தினமும் மறியலைத் தொடர்ந்து நடாத்தினார். காலை முதல் மாலை வரை துணிக் கடைகளின் முன்நின்று துணிவாங்க வருபவர்களை 'அந்நியத்துணிகளை வாங்காதீர்கள்' என்று கைகூப்பிக் கேட்டுக் கொள்வதும் மறியல் செய்வதும் தொடர்ந்து நடந்து வந்தது. சில நாட்களில் வேலூர் சிறையிலிருந்த பெண்தொண்டர்கள் விடுதலை பெற்று வீடு திரும்பினர். அதற்குப் பின்னர் தான் அம்புஜவல்லியும் தனது வீட்டுக்குத் திரும்பினார்.

## ஆசிரம வாழ்க்கை

தந்தையைப் போலவே அம்புஜ வல்லியும் தீவிரநாட்டுச் சேவையில் இறங்கிவிட்டார். பின்பு காந்தியடிகளின் அழைப்பின்பேரில் ஆசிரமத்தில் வாழ்க்கை மேற்கொண்டார். இவருடைய சித்தி ஜானம்மாவும் இவருடன் சில நாட்கள் தங்கியிருந்தார். நாற்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள தன் தங்க நகைகள் எல்லா வற்றையும் கழற்றி தந்தையின் அனுமதி யுடன் காந்தியிடம் அளித்தார். காந்தி அவற்றை ஏழை எளிய மக்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கப் பயன் படுத்தினார். பின்னர் ஆசிரம வாழ்க்கையை

முடித்துக்கொண்டு சென்னை திரும்பினார்[7]. ஆனால் முன்னரை விடப் பன்மடங்கு ஆவேசத்துடன் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டார். இதன் விளைவாக இந்திய மாதர் சங்கத்திற்கு செயலாளரானார் அக்காலத்தில் காணப்பட்ட பழமையான கருத்துக்கள் கொண்ட சமுதாயத்தில் பலபுதிய விளைவுகளை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மகளிர் ஆர்வத்துடன் இணைந்து செயல்பட்டனர். தமிழகம் இத்தகைய மகளிரைப் பெற்றதில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றது. சென்னையும் சமுதாய சீர்திருத்த இயக்கத்தில் மிகமுக்கியமான இடத்தினைப் பெற்றது எனலாம்.

ஆதரவற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும் எனச் சாரதா மகளிர் அமைப்பினையும் இவர் ஏற்படுத்தினார். அக்காலத்தில் பெண் ஆசிரியைகள் இருப்பது மிக அரிதான ஒன்றாக இருந்தது. எனவே இவர் மகளிர்க்கு ஆசிரியப்பயிற்சி அளிப்பதில் காட்டிய தீவிரம் அரசாங்கத்தால் பாராட்டப் பெற்றதாக இருந்தது. பெண்களுக்கு 'சாரதா வித்தியாலயம்' எனும் பள்ளியினைத் தொடங்கி மகளிருக்காக 'மகளிர் சங்கம்' ஒன்றையும் நிறுவினார். தமது வீட்டின் ஒரு சிறிய பகுதியினை இதற்கெனப் பயன் படுத்திக்கொண்டார்[8]. இம் மகளிர் சங்கத்திற்கு சுப்புலட்சுமி தலைமைப்பொறுப்பேற்க அம்புஜம்மாள் செயலாளரானார். இம்மகளிர் சங்கத்தில் இந்தி வகுப்புக்கள் நடைபெற்றன அத்துடன் டென்னிஸ், பட்மின்டென் போன்ற விளையாட்டுக்களிலும் மகளிர் ஈடுபட்டனர். வழிகாட்டும் கூட்டமைப்பாகத் திகழ்ந்த மகளிர் அமைப்பு சமுதாயத்தில் பல மாறுதல்களை நிகழ்த்தியது. மகளிர் விடுதலைக்காக ஆர்வத்துடன் பாடுபடல், சமுதாயவிழிப்புணர்விற்கு வழிவகுத்தல் என்பன மூலம் இந்திய மகளிரிடையே பண்பாடு குறித்து ஒருவிழிப்புணர்வு உருவானது[9]. இதனால் இந்திய மகளிர் அமைதியும் மகிழ்வும் நிறைந்த பாதையில் முன்னேறத்தலைப்பட்டனர். காந்தியின் மகிமையினைப் பிரச்சாரம் செய்தலும் இச்சங்கத்தின் குறிக்கோளாக இருந்தது. ஏழைக்குழந்தைகளுக்கான சிறார்பள்ளி, மதிய உணவுத்திட்டம், இலவச மருத்துவ உதவி குழந்தைகளுக்கு அளித்தல் எனப் பல்வேறு திட்டங்கள் இங்கு செயல் படுத்தப்பட்டன[10].

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஈடுஇணையற்ற சேவையினை அம்புஜம்மாள் அளித்தார். இதன் விளைவாக மாதர்நல சமூக நலத்திட்டக் கமிட்டித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1961 முதல் 1964 வரை இதன் வழியாக மகளிருக்கும் குழந்தைகளுக்கும் பலவகையான நலத்திட்டங்களை மேற்கொண்டார். தமிழ்நாடு முழுவதிலும் இவரது பணி தொடர்ந்து நடைபெற்றது. இவர் தமிழ்நாட்டில் செயல்பட்ட பிற நலச்சங்கங்களுக்கும் சென்று பார்த்து புதியவகைநலத்திட்டங்களைச் செயல்படுத்தினார். 1964 ஆம் ஆண்டு கண்பார்வையில் குறைவு ஏற்பட்டமையால் மேற்கொண்டு தனது தலைமைப்பதவியினைத் தொடராமல் இராஜினாமாச் செய்தார்.

### அகதிகள் முகாமில் ஆற்றிய தொண்டு

இந்திய மாதர் சங்கத்தின் பிரதிநிதியாகவும் சென்னை நகரசபை உறுப்பினராகவும் அம்புஜம்மாள் இருந்தார். பர்மாவில் இருந்து வெளியேறி வந்த இந்திய மக்களை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அம்மையாரின் மனதில் வேரூன்றியது. உடனே நகரசபைக்

கூட்டத்தை கூட்டி பர்மாவிலிருந்து சென்னைக்கு வரும் அகதிகளுக்கு வேண்டு மானவற்றைச் செய்ய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார். இந்த முகாமில் இவருடன் முன்னின்று பணியாற்றியவர் களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஜானம்மா, மஞ்சுபாஷினி, சர்க்கரைரெட்டி, பிளஸ்ராம சாமிஐயர், கிளப்வாலாஜாதவ், பி.கே. கல்பகம் ஆகியோர் ஆவர். அகதிகள் களைப்பாறி ஓய்வெடுத்தபின் அவரவர் களின் சொந்த ஊருக்குப்போக ஏற்பாடு செய்தனர். சிலர் போக்கிடமின்றி முகாமி லேயே தங்கியும் இருந்தனர். இவர்களின் துயரங்களைக் கேட்டு அம்புஜம்மாள் கண்ணீர் விட்டதும் உண்டு. சுமார் நான்கு மாதம் நடைபெற்ற அகதிகள் முகாமில் தாய்தந்தையற்ற, ஊர்பெயர் தெரியாத சுமார் முப்பது குழந்தைகளை டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நடாத்தி வந்த ஔவை இல்லத்தில் சேர்த்துவிட்டார்.[11]

## எழுத்துப்பணி

அம்புஜம்மாள் தமது இளம் வயது முதற்கொண்டு இலக்கியப்பணியிலும் ஆர்வம் கொண்டு விளங்கினார். இந்தி மொழியின் மீது தீராத ஆர்வம் கொண்ட இவர் இந்தி இலக்கியங்களைக் கற்று அறிந்து கொள்வதில் பெரிதும் தனது சிந்தனையைச் செலுத்தினார். இதன் விளைவாக 'பிரேம் சத்தின்', 'சேவாசதன்' ஆகியவற்றை தமிழில் மொழி பெயர்த்தார். இது இவரது முதல் மொழி பெயர்ப்பாகும். தமிழ் வாரப்பத்திரிகை ஒன்றில் இது தொடராக வெளியானது பின்னர் இது தமிழில் திரைப்படமாக எழுதப்பட்டு மிக வெற்றிகரமாக ஓடியது. இவர் 'துளசி இராமாயணத்தையும் இந்தியில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தார்.

அம்புஜம்மாள் காந்தியடிகளை கடவுளாக நினைத்து வழிபாடு செய்தார். இவர் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது இவர் தன்னுடைய சுயசரிதையை எழுதிய "நான் கண்ட பாரதம்" என்னும் நூலாகும். மேலும் என் தந்தையார், காந்தி நினைவு மாலை போன்ற நூல்கள் அவருடைய எழுத்தாற்றலுக்கு சிறந்த சான்றுகளாக உள்ளன.[12]

## சீனிவாச காந்தி நிலையம்

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் அம்புஜம் மற்றும் பெண் தொண்டர்களும் வெற்றி ஊர்வலம் நடத்தி மகிழ்ச்சியுற்றனர். அகில இந்தியமாதர் சங்கத்தின் ஆண்டு மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அதன் வரவேற்புக் குழுத்தலைவியாக அம்புஜம் நியமிக்கப் பட்டார். இம் மாநாட்டில் திருமதி. விஸ்வநாதன் சாவித்திரி, ராஜன் சரோஜினி, வரதப்பன் குகப்பிரியை, வசுமதி ராமசாமி, திருமதி ராதாபாய் சுப்பராயன், திருமதி அம்முசுவாமிநாதன், டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி போன்றோர் பெரும் பங்கு கொண்டு வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

காந்தி 1948 ஜனவரி 30ம் நாள் மறைந்தார். அவரது மறைவு அம்புஜத்தை மிகவும் சோகத்தில் ஆழ்த்தியது. காந்தியின் விருப்பப்படி சென்னையில் பெண்கள் சேர்ந்து படிக்கும் கல்வி நிலையம் ஒன்றை உருவாக்கத் திட்ட மிடப்பட்டது. இதற்காகச் சொந்தச் செலவில் தமது சகோதரனின் மனையில் ரூபா 15000 (இந்திய ரூபாய்) செலவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடம் பயன்படுத்தப் பட்டது. அக்கட்டிடத்துக்கு "சீனிவாச

காந்தி நிலையம்" எனப் பெயரிடப்பட்டது. இது ஒருசமூகப்பொதுநலப்பணி அற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.[13]

**சமூகநலவாரியத்தில் பதவியும் தொண்டும்**

1955 இல் காங்கிரஸின் வரவேற்புக் குழு தலைமைப்பொறுப்புக்கு அம்புஜம்மாள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதைய தமிழ் நாட்டின் முதலமைச்சர் காமராஜர். அம்புஜம்மாளின் கணவர் தேசிகாச்சாரி 04. 02. 1955 இல் மரண மடைந்தார். சுமார் ஒரு வருடகாலம் தமிழ் நாட்டின் சமூகநலவாரியத் தலைவியாகப் பொறுப்பேற்றிருந்த அம்புஜம்மாள் பல உதவிகளைச் செய்து அவர்கள் சார்ந் துள்ள நிறுவனங்களுக்கான நிதி உதவி யையும் பெற்றுக் கொடுத்தார்[14]

இவ்வாறாக அம்புஜம்மாளின் சமூக நலப்பணியினைப்பாராட்டி 1964ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான டாக்டர். இராதாக்கிருஷ்ணனிடமிருந்து "பத்மஸ்ரீ" என்ற விருதினைப் பெற்றார். 1973ஆம் ஆண்டு தேசிய விடுதலைப்போராட்டத்தில் இவர் கொண்ட சிறப்புக்களின் காரணமாக "செப்புப்பட்டய" விருதினையும் பெற்றார்.[15] இவர் 6.10.1983 ஆம் ஆண்டு பூதவுடலை நீத்துப் புகழுடம்பெய்தினார். அம்மையார் மறைந்தாலும் அவரது புகழ் நிலைத்து நிற்கும். அவரது பணிகள் பெண் குலத் திற்குத் தக்க பாடமாக அமைகின்றன. அவரது "சீனிவாச காந்தி நிலையம்" என்றும் தமது பணியில் சிறந்து நின்று அவரது புகழை நிலைநாட்டும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புக்கள்**



1. ஜெயந்தி ஆனந்தன், பத்மஸ்ரீ அம்புஜம் மாள், சென்னை, 1987,ப.21.
2. ஜெ. ஜான்துரைராஜ், புலவர், செல்வ நாதன்.மு.ஐம்பது தலைவர்களின் அரிய வரலாறு,சென்னை,1991, ப.125.
3. ஜெயந்தி ஆனந்தன் மு.கு.நூல், ப.30
4. அம்புஜம்மாள்.எஸ் நான் கண்ட பாரதம்,சென்னை, 1973, ப.64
5. Majumdar R.C, Advanced History of India Vol iii-iv Bombay 1963, p.135
6. Majumdar R.C History of the freedam movement in india vol iii, culcutta, 1975,p.66
7. ஜெ. ஜான்துரைராஜ், புலவர். மு. செல்வநாதன்,ஐம்பது தலைவர்களின் அரிய வரலாறு,சென்னை, 1991, ப.126
8. அம்புஜம்மாள், சீ. நான் கண்ட பாரதம், சென்னை,1973, பக்.20-125
9. மேலது பக்53-155
10. தினத்தந்தி (தமிழ் நாளிதழ்) ஜுலை 25ம் திகதி 1973
11. ஜெயந்தி ஆனந்தன் மு.கு நூல் சென்னை1987 பக் 84-87
12. Vasumathi Ramaswami **Some Illustrious Women of india** ,Madras, 1975, p.10
13. ஜெயந்தி ஆனந்தன் மு.கு.நூல் பக்91-94
14. மேலது, ப.98
15. **S.P.Sen Dictionary of National Biography Vol 1 Culcutta, 1972, p. 105.**

# மாணவரின் எதிர்கால வாழ்வை வளமாக்கும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம்



**திரு. P .அருந்தவம்**
**சேவைக்கால ஆலோசகர்**
**வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம்**
(வருகை விரிவுரையாளர் பயிற்சி தொழில்நுட்ப பீடம் வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம்)

2008ம் ஆண்டின் 31ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் இலங்கையில் வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்ப வியல் பல்கலைக்கழகம் UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY (UNIVOTEC) ஸ்தாபிக்கப்பட்டது. இது இரத்மலானையில் கந்தவல எனும் இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.




இப் பல்கலைக்கழகத்தின் செயற் பாடுகள் யாவும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி முறைமையில் அவர்களது உளச்சார்பு மற்றும் இயலுமையை அடிப்படையாகக் கொண்டு மேல் நோக்கி முன்னேற்ற நகர்வை வழங்கி உயர்கல்விக்கு வித்திடு வதை நோக்கமாக கொண்டது.



உயர் தொழில்சார் உன்னதத்தை அடைய அவாவுடைய சகலருக்கும் தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில் சார் கல்வியை வழங்கும் பிரதான பல்கலைக்கழகம் எனும் தொலை நோக் குடன் தொழில்துறை மற்றும் வாழ்க்கைத் தொழில்நுட்பவியல் பீடம், பயிற்சி தொழில் நுட்பப்பீடம் என இரு பீடங்களையும் இவற்றின் கீழ் அமைந்த எட்டுத்துறைகளை யும் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது.

பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் கீழ்

1) கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்
2) தொழில்சார் கற்கைத் திணைக்களம்

3) தகவல் மற்றும் தொடர்பாடல் திணைக் களம்

4) முகாமைத்துவ கற்கைகள் திணைக் களம் என்பவற்றையும்

தொழில்துறை மற்றும் வாழ்க்கைத் தொழில்நுட்பவியல் பீடத்தின் கீழ்

1) நிர்மாண தொழில்நுட்ப திணைக்களம்

2) உற்பத்தி தொழில்நுட்ப திணைக்களம்


3) மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப திணைக்களம்

4) விவசாய மற்றும் உணவுத் தொழில் நுட்பத் திணைக்களம்


என்பவற்றையும் கொண்டது.

**NVQ** கற்கையும் **UNIVOTEC** ம்

க.பொ.த (சா.த) சான்றிதழ் மற்றும் க.பொ.த (உ.த) சான்றிதழ் பெற்றவர்களும், பெறாதவர்களும் சரி, டிப்ளோமா பட்டம் பெற்றவர்களும், உயர் தேசிய டிப்ளோமா பெற்றவர்களும் தங்களின் இயலுமைக்கு ஏற்ப தேசிய தொழிற் தகைமை மட்ட (NVQ Level) த்தினை தெரிவு செய்து அதனூடு படிப்படியாக முன்னேறி பட்டச் சான்றிதழைப் பெறக்கூடிய நிலை தற்போது நமது நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதனை கீழ்வரும் படம் விபரிக்கின்றது.



இங்குNVQ நிலைகள் 1 முதல் 6 ஐயும் கடந்து 7 ஆவது மட்டத்தை அடைந்து UNIVOTEC ஊடாக பட்டச் சான்றிதழைப் பெறலாம். இச் சான்றிதழ் களை மாற்று வழிகளினூடும் பெறுவதை கீழ் வரும் படம் விளக்குகின்றது.




இங்கு NVQ மட்டம் 1 - 3 வரையான கற்கைகளை பிரதேசரீதியாக அமைக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களிலும், அரசசார்பற்ற மற்றும் தனியார் TVET இனால் அங்கீகரித்த நிறுவனங்களிலும் பெற முடியும். இதே போல் NVQ மட்டம் 4 ஐ நாடு பூராகவும் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஒன்றின் மூலம் பெறலாம். இதே போல் NVQ பட்டம் 5, 6 ஐ தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மூலமும் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் மூலமும் பெறலாம். இவ்வாறு NVQ மட்டம் 6 ஐ பூர்த்தி செய்தவர்கள் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகமோடு தமது பட்டச் சான்றிதழை பெற முடியும்.

**வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**


1) தொழில்நுட்ப இளமாணி (B. Tech)
2) தொழிற்சாலை முகாமைத்துவ இளமாணி (B. Tech in IM)

3) B. Tech in Film மற்றும் Television உற்பத்தி தொழில்நுட்பவியல்

4) தொழில்நுட்பக் கல்வி இளமாணிப் பட்டம் (BEd. Tech)

5) ஆங்கில மொழிப் போதனா கல்வி இளமாணி (BEd. ELT)

இப் பல்கலைக்கழகத்தின் பட்டக் கல்வி செயற்பாடுகள் யாவும் மூன்று ஆண்டுகளைக் கொண்டதாகவும், ஆங்கில மொழியையே போதனா மொழியாகவும் கொண்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது. இப் பட்டக் கற்கைக்கான தெரிவுகள் யாவும் குறித்த தகைமையைப் பூர்த்தி செய்தவர்கள் ஒரு உளச்சார்புச் சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படுவார்கள்.



இங்கு தொழில்நுட்ப இளமாணி (B. Tech) பட்டமானது உணவு செயன் முறைத் தொழில்நுட்பவியல், மென்பொருள் தொழில்நுட்பவியல், பல்லூடக மற்றும் இணையத் தொழில்நுட்பவியல், வலைப் பின்னல் தொழில்நுட்பவியல், இயந்திர இலத்திரனியல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் பெறமுடியும்.

இதே போல் தொழில்நுட்பக் கல்வி இளமாணிப் பட்டமும் (BEd. Tech) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், நிர்மாணத் தொழில்நுட்பவியல், உற்பத்தி தொழில்நுட்பவியல், மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியல், உணவுத் தொழில் நுட்பவியல், விவசாயத் தொழில்நுட்பவியல் ஆகிய ஏதாவது ஒரு துறையிலும் பெறமுடியும்.

இப் பல்கலைக்கழகத்தின் மூதவை யால் தேசிய கல்வியற் கல்லூரியின் குறித்த துறையில் பயிற்சி நெறியைப் பெற்றுக் கொண்டவர்களும் ஆசிரியர் கலாசாலை சான்றிதழ் பெற்றோரும் தேசிய கல்வி நிறுவகத்தால் குறித்த துறையில் சான்றிதழ் பெற்றோரும் தொழில்நுட்பக் கல்வி இளமாணிப் பட்டம் (BEd.Tech) மற்றும் ஆங்கில மொழிப் போதனையில் கல்வி இளமாணிப் பட்டம் (BEd. ELT) விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட்டமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

இத்துடன் இப்பல்கலைக்கழகத் தால் கணிய அளவையியல் தேசிய டிப்ளோமா (NDQS) தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில்கல்வி தேசிய டிப்ளோமா (NDTVE) ஆகிய இரு டிப்ளோமா கற்கை நெறிகளும் தற்போது போதிக்கப்பட்டு வருகின்றது.

சகல வள வசதிகளும் கொண்ட வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப வியல் பல்கலைக்கழகம் தரம் வாய்ந்த ஆற்றலுடைய தொழில்படையை உருவாக்கு வதில் இன்று முன் நிற்கும் பல்கலைக் கழகமாகவும் திகழ்கின்றது.

இப் பல்கலைக் கழகம் பற்றியும் இதன் பயிற்சி நெறிகள் பற்றியும் அறிய ஒரு முறை www.univotec.ac.lk எனும் இணையத்தளத்தை தரிசித்துப் பாருங்கள்.

# இலங்கையின் உயிர்ப்பல்வகைமை
# (Bio Diversity of Sri lanka)



**திரு. கிருஷ்ணன் வினோஜ்குமார்,**
**விரிவுரையாளர்,**
**இலங்கை விவசாயக் கல்லூரி,**
**குண்டகசாலை.**

இலங்கையானது ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள ஒரு மிகச் சிறிய தீவு என்பது யாவரும் அறிந்ததே. எனினும் இலங்கையானது உலகில் உயிர்ப் பல்வகைமை செறிவான பிரதேசங்கள் (Bio Diversity Hot Spots) என அடையாளம் காணப்பட்டுள்ள ஏறக்குறைய 35 இடங்களில் ஒரு இடமாக இனங்காணப் பட்டுள்ளது என்பது ஒரு சிலர் மட்டுமே அறிந்த விடயமாகும். இப்பட்டியலில் மடகஸ்கார், நியூசிலாந்து போன்ற சில தீவுகளும் இமாலயப் பிரதேசம் உட்பட இந்தியாவின் மேற்கு எல்லை பகுதிகளும் அடங்குகின்றன. இதனால் சூழலியலாளர்கள் மத்தியில் இலங்கையானது முக்கியத்துவம் வாய்ந்த நாடாக திகழ்கின்றது. எனவே சூழலியல் சார்பாக எமது நாட்டின் சிறப்புக் களை நாம் அறிந்து வைத்திருத்தல் மிகவும் அவசியமாகும். இவ்வாக்கத்தின் மூலம் இச் சிறப்புக்களை தெளிவுபடுத்துவதே எனது இலக்காகும்.

இலங்கையின் உயிர்ப்பல்வகைமை, இங்கு வாழும் தாவர விலங்கினங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு முன் நாம் உயிர்பல்வகைமை, இதன் பாகுபாடு போன்ற சில விடயங்களை தெளிவுபடுத்தி கொள்ளுதல் அவசியமாகும். உலகில் வாழும் அனைத்து உயிரினங் களும் (தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் உட்பட) யாதேனுமொரு காரணிகளினால் ஒன்றுக்கு ஒன்று வேறு பட்டு காணப்படுகின்றது. ஒரு உயிர்வாழும் இனம் இன்னுமொரு இனத்திலிருந்து அதன் தோற்றம், செயற்பாடுகள் போன்ற காரணி களால் வேறுபட்டு காணப்படுகின்றது. இவ் வேறுபாட்டினையே நாம் உயிர்ப்பல் வகைமை (Bio Diversity) என குறிப்பிடு கின்றோம். உயிர்ப்பல்வகைமை பற்றிய கற்கையை இலகுபடுத்தவே சூழலியலாளர் கள் இதனை இனப் பல்வகைமை (Species Diversity), சூழல் தொகுதி பல்வகைமை (Ecosystem Diversity), பிறப்புரிமைப் பல்வகைமை (Genetic Diversity) என மூன்று கூறுகளாக வகைப்படுத்தியுள்ளனர். எனவே இம் மூன்று கூறுகளையும் தனித்தனியே ஆராய்ந்து கற்போமாயின் உயிர்ப்பல்வகைமை பற்றி அனைத்து அறிவினை எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

இதில் தாவரங்கள், விலங்குகள் உட்பட அனைத்து உயிர்வாழ் இனங் களுக்கு இடையிலான வேறுபாடுகளையே இப் பல்வகைமை குறிப்பிடுகின்றது. இதே வேளை ஒரு குறிப்பிட்ட இனத்தை மட்டும்

எடுத்துக் கொள்வோமாயின் (Eg:-மனித இனம்) அவ் இனத்தின் அங்கிகளுக்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளையே பிறப்புரிமைப் பல்வகைமை விளக்கு கின்றது. சூழல் தொகுதி பல்வகைமை யானது நாம் வாழும் சூழலில் காணப்படும் காடுகள், விவசாய நிலங்கள், களப்புகள், நீர்ச்சூழல் போன்ற வெவ்வேறான சூழல் தொகுதிகளுக்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளைக் குறிப்பிடுகின்றது. இச் சூழல் தொகுதி பல்வகைமையே தாவரங் களுக்கு இடையே நிலவும் பல்வகை மையை அறிந்து கொள்ள உதவுகின்றது. எனவே இலங்கை சார்பாக இம் மூன்று கூறுகளையும் தனித்தனியே ஆராய்வோ மாயின் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை பற்றிய அறிவை எம்மால் பெறமுடியும்.

இலங்கையின் சூழல் தொகுதி பல் வகைமையை எடுத்துக் கொண்டால் மிகப் பரந்த அளவிலான வேறுபாட்டை எம்மால் இனங்காண முடியும். இலங்கையின் சூழல் தொகுதிகளை காடுகள், புல் நிலங்கள், ஈரநிலங்கள், கடற்கரைச் சூழல் தொகுதி கள் என வகைப்படுத்தலாம். இவற்றில் மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல் தொகுதிகளையும் உள்ளடக்க முடியும். இச் சூழல் தொகுதிகளில் காடுகள் மிகவும் முக்கியத்துவம் வாயந்தவை. ஏனெனில் இவை இலங்கையின் காலநிலையிலும், உயிர்ப் பல்வகைமையிலும் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இலங்கையில் எம்மால் ஆறு விதமான காடுகளை இனங் காண முடியும். அயனமண்டல மழைக் காடுகள் (Tropical Rain Forest), அயன மண்டல பருவக்காற்றுக் காடுகள் (Tropical Monsoon Forest), அயனமண்டல மலைக் காடுகள் (Tropical Mountain Forest), அயன மண்டல இடைவலயக் காடுகள் (Tropical Intermediate Zone Forest), அயன மண்டல சவன்னா காடுகள் (Tropical Savanna Forest) என்பவை அவையாகும். இவ் ஒவ்வொரு வகைக் காடுகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் ஆனவை. இலங்கையின் தரைத் தோற்றத் திலும் காலநிலையிலும் காணப்படும் வேறுபாடுகளே இக் காடுகளின் அல்லது இங்கு காணப்படும் தாவரங்களின் இயல்பு களையும், தோற்ற வித்தியாசங்களை தீர்மானிக்கின்றன.

மேலும் இக்காடுகளில் நிலவும் காலநிலைக் காரணிகளின் வேறுபாட்டிற் கமைய விலங்குகளின் பல்வகைமையும் வேறுபடுகிறது. எனினும் சில விலங்குகள் பொதுவாக அனைத்து வகையான காடு களிலும் வாழக் கூடியதாக காணப்படும். இதற்கு சிறுத்தை, காட்டுக்கோழி போன்ற வற்றை உதாரணமாகக் கொள்ளலாம். மேற் கூறப்பட்ட காட்டுச் சூழற்தொகுதி களை விட இலங்கையில் ஆற்றோரக் காடுகள் (Reverine forest), கண்டல் காடுகள் (Mangrove forest) என்பனவும் காணப்படுகின்றன. எனினும் இவை குறிப்பிடத்தக்க உயிர்பல்வகைமையை கொண்டிருப்பதில்லை. கண்டல் காடு களுக்கு உவர் நீருடன் நேரடி தொடர்பு காணப்படுவதால் இங்கு மண்ணில் காணப்படும் ஒட்சிசன் செறிவு குறைவாகும். இதுவே இங்கு உயிர்ப்பல்வகைமையை பாதிக்கும் பிரதான காரணியாகும்.

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற காடுகளான சிவனொளிபாத மலை, ஹட்டன் சமவெளி, ஹக்கல, பீதுறு தாலகால மலை (இலங்கையின் மிக உயரமான மலை) போன்றவை அயன மண்டல மலைக்காட்டுக்கு உரியவை யாகும். மேலும் இலங்கையில் பாதுகாக்கப் பட்ட வனப்பிரதேசங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக ஹட்டன் சமவெளி யுனெஸ்கோ நிறுவனத்

தால் 2010 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் திகதியன்று உலகின் பாரம்பரிய சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் ஹட்டன் சமவெளி இலங்கை வெளிநாட்டவர்களால் அடிமைப் படுத்தப்பட்ட காலம் முதல் இன்று வரை உலக மக்களால் விரும்பப்படும் ஒரு சுற்றுலாத்தளம். ஏனெனில் இங்கு தான் உலகமுடிவு (world end) என அழைக்கப் படும் பெரிய பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. மேலும் தமக்கே உரித்தான உயிர்ப் பல்வகைமையையும் இக்காடுகள் கொண் டமைந்துள்ளன. இங்கு இலங்கைக்கே உரித்தான சில பறவையினங்களையும், ஏனைய விலங்கினங்களையும் எம்மால் அவதானிக்க முடியும். அத்துடன் சிவபெரு மானின் காலடிச்சுவடு அமைந்துள்ள பிரதேசமாக இந்துக்கள் கருதும் சிவனொளி பாத மலைக்கும் எவ்வளவு கலாசார முக்கியத்துவம் காணப்படுகின்றதோ அதே அளவு முக்கியத்துவம் ஹட்டன் சமவெளிக் கும் உண்டு என்பது பலர் அறியாத விடயம். ஏனெனில் இங்கு தான் இராவணன் சீதையை கடத்தி வந்து தமது புஸ்பக விமானத்தை தரையிறக்கியதாக கருதப் படும் கொடுபலைமலை அமைந்துள்ளது. இது இலங்கையின் மிக உயரமான மூன்றாவது மலை என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் இங்கிருந்து தான் சீதையை ஹக்கல மலைப்பகுதியில் அமைந்துள்ள "சீதா எலிய" என தற்போது கூறப்படும் பிரதேசத்திற்கு கொண்டு சென்று சிறை வைத்தான் எனவும் நம்பப்படுகின்றது.

இலங்கையின் புல்நிலச் சூழல் தொகுதிகளை பொதுவாக அனைத்து கால நிலை வலயங்களிலும் அவதானிக்க முடியும். இவற்றுள் பத்தன புல்நிலம் ஈர வலயத்தில் அமைந்துள்ள பரந்த புல்நிலச் சூழல் தொகுதியாகும். துலாவ, கெக்கில பன்னை நிலங்கள், தமன என்பன உலர் வலயத்தில் அமைந்துள்ள புல்நிலங் களாகும். ஈரநிலங்களைப் பொறுத்த வரையில் அனைத்து நீர்சூழல் தொகுதி களும் அடங்குகின்றன. ஆறுகள், குளங் கள், வாவிகள், சேற்று நிலங்கள், நீர்வீழ்ச்சி கள் என்பவை இதற்கு சில உதாரணங் களாகும். இலங்கையில் 103 ஆறுகள் காணப்படுவதாக நீர்பாசனத் திணைக் களத்தினால் கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவை மலைப் பிரதேசங்களில் உற்பத்தி யாகி தாழ்நாட்டை நோக்கிப் பாய்வதால் இலங்கையில் மலைப்பகுதிகளையும், தாழ் நிலங்களையும் இணைக்கும் ஓர் ஊடகங் களாக அமைகின்றன. இதன் மூலம் மலை நாட்டில் காணப்படும் சூழற்தொகுதி களுக்கும் தாழ் நாட்டில் காணப்படும் சூழற் தொகுதிகளுக்கும் இடையில் ஓர் இணைப்பு உருவாகின்றது. இது உயிர் பல்வகைமை நிலைநிறுத்தலில் விபரிக்கப் படும் ஒரு எண்ணக்கருவாகும். இதன் மூலம் நீர்வாழ் அங்கிகளின் நிலைநிறுத்தல் உறுதிப்படுத்தப்படும். ஒரு சூழல் தொகுதி யாதேனும் பாதிப்புக்குட்படுமாயின் அதற் குள் வாழும் உயிரினங்கள் (குறிப்பாக நீர்வாழிகள், ஈருடக வாழிகள்) இந் நீரிணைப்பின் மூலமாக இன்னொரு சூழற் தொகுதியை அடையும். எனவே இலங்கை யில் உயிர்ப்பல்வகைமை நிலைத்திருப் பதில் ஆறுகள் முக்கிய இடத்தை வகிக் கின்றன என்பதை உணர்ந்திருப்பீர்கள். ஆறுகள் தவிர இயற்கையான குளங்கள் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட குளங்கள் இலங்கையில் பெருமளவு காணப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் எம்மால் பெருமளவு குளங்களை அவ்தானிக்க முடியும். மேலும் இலங்கையில் மலையகம், யால, வில்பத்து போன்ற பகுதிகளில் அதிக சேற்றுநிலங்கள்

காணப்படுகின்றன. நீர்வீழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் இவை இலங்கையின் மலையகப்பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படுகின்றன. இதில் பம்பரகந்த நீர்வீழ்ச்சி, சென்கிளையார் நீர்வீழ்ச்சி, டெனென் நீர்வீழ்ச்சி, இராவணன் நீர்வீழ்ச்சி, லக்ஷபான நீர்வீழ்ச்சி, இறம்பொடை நீர்வீழ்ச்சி போன்றவை இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற நீர்வீழ்ச்சிகளாகும்.

மேற்குறிப்பிட்ட சூழற்தொகுதிகளைத் தவிர மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல் தொகுதிகளும் இலங்கையின் உயிர்ப் பல்வகைமையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றில் வயல் நிலங்கள், பெருந்தோட்ட பயிர்நிலங்கள், வீட்டுத் தோட்டங்கள், பழத்தோட்டங்கள் என்பன தாவரப்பல்வகைமையின் நிலைத்திருத்தலில் உதவுகின்றன. இங்கு இயற்கை தாவர வர்க்கங்களை விட மனிதனால் கலப்பு முறையில் இனவிருத்தி செய்யப்படும் வர்க்கங்களும் பிராமரிக்கப்படுவதன் காரணமாக இவை பிறப்புரிமையியல் பல்வகைமையிலும் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும் சில பறவையினங்கள், ஓணான் போன்ற சிறிய நகருயிர்கள், வண்ணத்துப்பூச்சிகள் போன்றவற்றின் நிலைத்திருத்தலிலும் செயற்கை சூழல் தொகுதிகள் உதவுகின்றன. இலங்கையில் நாம் சூழல் தொகுதிகளின் பாகுபாட்டில் கடற்கரைச் சூழல் தொகுதிகளையும் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இதுவும் தனித்துவம் வாய்ந்த சூழல் தொகுதியாகும். இங்கு பல வித்தியாசமான தாவரங்கள் மற்றும் மீன்கள், ஆமைகள், நண்டுகள் போன்ற நீர்வாழ் அங்கிகளும், முருங்கைகல் பாறைகளும் இணைந்து இது பெறுமதிமிக்க சூழல் தொகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையில் கரையோரங்களில் உயிர்பல்வகைமை தேக்கத்தில் ஆக்கக் கூறுகளாக அமைவது இக் கடற்கரைச் சூழல் தொகுதிகளாகும்.

இலங்கையின் இனப்பல்வகைமையை எடுத்துக் கொண்டால் தாவர இனங்களில் பூக்கும் தாவரங்கள் பெருமளவு பல்வகைமையை காட்டுகின்றன. இதனைத் தொடர்ந்து நுண்ணங்கிகள் பல்வகைமை காணப்படுகின்றன. இதன் பின்னரே விலங்குகளின் பல்வகைமை தொடங்குகின்றது. இலங்கையில் காணப்படும் தாவரங்களில் 28 சதவீதமானவை இலங்கைக்கே உரித்தான தாவரங்களாகும். விலங்குகளில் 30 சதவீதமானவை இலங்கைக்கு மட்டுமே உரித்தானவை எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் முலையூட்டிகள், பறவையினங்கள், ஊர்வன, வண்ணத்துப்பூச்சிகள் போன்றன விலங்கினங்களுக்குள் அடங்குகின்றன. இலங்கையில் வாழும் முலையூட்டிகளில் சிறுத்தைகள், குரங்குகள், மான்கள் ஆகியன முக்கியமானவை. உலகின் தலைசிறந்த வனவிலங்கு புகைப்பட சேகரிப்பாளர்கள் யானைகள், சிறுத்தைகளின் புகைப்படங்களை பெற இலங்கை சிறந்த இடம் என கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வாழும் மிகப்பெரிய முலையூட்டி இனம் யானை எனினும் இது அனைத்து காட்டுப் பகுதிகளிலும் வாழ்வது இல்லை. குறிப்பாக இவை உலர் வலய தாழ்நிலப் பகுதிகளிலே அதிகமாக காணப்படுகின்றன. மலைப்பகுதிகளில் இதன் எண்ணிக்கை மிகக்குறைவு. இன்று மலைநாட்டில் சமவெளி பாரமலை தொடரின் ஒரு பகுதியில் மட்டும் இவை

வாழ்கின்றன. எனினும் முன்னர் ஹட்டன் சமவெளி மலைப்பகுதிகளில் யானைகள் வாழ்ந்தன. எனினும் இவை பிரித்தானியர்களினால் வேட்டையாடி அழிக்கப்பட்டன. இதில் சாமுவெல் பேகரீஸ் (Samual bakers) என்பவர் ஏறக்குறைய 1300 யானைகளை வேட்டையாடினார் என்பது குறிப்பிடத் தக்கது. இவரின் நினைவாக ஹட்டன் சமவெளியில் அமைந்துள்ள ஒரு நீர் வீழ்ச்சிக்கு பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இறுதியில் சாமுவெல் பேக்கர்ஸ் இடித்தாக்கத்தால் இறந்தபோது இது இவர் செய்த பாவச்செயலுக்கு கடவுளினால் தரப்பட்ட தண்டனை என மக்கள் கூறினார்களாம். இவருடைய கல்லறையும் இரு தடவைகள் இடித் தாக்கத்தால் பாதிப்படைந்தமையால் இக் கூற்று பலராலும் நம்பப்படுகின்றது.

சிறுத்தையினங்கள் “காட்டுப் பூனைகள்” என்ற முலையூட்டிக்குள் உள்ளடக்கப்படுகின்றது. இதில் சிறுத்தை களே பெரிய பூனை இனங்கள் என்பதோடு இலங்கையில் காணப்படுவது தனித்துவ மான இனமாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. சிறுத்தை தவிர காட்டுப்பூனை, புடைப்பூனை, வெரவாப்பூனை போன்ற சில பூனை இனங்களும் இலங்கையில் வாழ்கின்றன. மேலும் முலையூட்டிகளில் புள்ளிமான், கரைக்கும் மான், மரைமான் போன்ற மான் இனங்களும், கரடிக்குரங்கு, மந்திகள் போன்ற குரங்கு இனங்களும் காட்டுப்பகுதிகளிலும் உள்ளன. தேவாங்கு கள் என அழைக்கப்படும் முலையூட்டி இனம் இலங்கையில் அழிவடைந்து வரும் இனமாகும். இவை ஒரு மரம் விட்டு மரம் செல்வதற்கு அடர்த்தியான விதானப் படைகள் அவசியம். இல்லையெனில் இவை அம்மரத்திலேயே வாழ விருப்பம் கொண்டவை. அதனால் இலங்கையில் குடியேற்ற வசதிகளுக்காக மேற் கொள்ளப் பட்ட பெரும் காடழிப்பு நடவடிக்கைகள் காரணமாக இவை பெருமளவில் அழி வடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை பறவை இனங்களில் காட்டுக் கோழி மிக முக்கியமான பறவை. ஏனெனில் இலங்கையின் தேசியப்பறவை என்பதனால் ஆகும். இலங்கையின் எல்லா பகுதி களிலும் இவை வாழ்கின்றன. இவை தவிர காட்டுப்புறா, வெண்விழிக்குருவி, வழி மறிச்சான் குருவி, மஞ்சள் குரட்டுக் குக்குரவன் போன்ற இலங்கைக்கே உரித்தான பறவையினங்கள் பல அடை யாளம் காணப்பட்டுள்ளன. குறிப்பாக சிவனொளிபாதமலையில் வாழும் நூறுக் கும் மேற்பட்ட பறவை இனங்களில் 35 இனங்கள் எமது நாட்டிற்கே உரித்தானவை யாகும். மேலும் சில பறவை இனங்கள் வெளிநாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இலங்கையில் சில காலங்கள் வாழ்ந்து மீண்டும் தமது சொந்த நாடு களுக்கே திரும்பும் வழக்கம் கொண்டவை. இதில் இந்தியாவின் காஸ்மீர் பகுதி யிலிருந்து இடம்பெயர்ந்து வரும் “காஷ்மீர் ஈப்பிடிப்பான்” எனும் பறவை இனம் குறிப்பிடத்தக்கது. இவை காஷ்மீர் பிரதேசத்தில் பனிப்பொழிவு நிகழும் காலங் களில் இலங்கையின் மலைப் பகுதிகளில் வந்து தஞ்சமடைகின்றன. ஏறத்தாழ 6 மாதங்கள் தங்கிய பின் மீண்டும் அந் நாட்டுக்கே சென்று விடுகின்றன. இவ் வாறான பறவையினங்களும் எமது நாட்டின் இனப் பல்வகைமையில் பங்கு வகிக் கின்றன.

இலங்கையில் இதுவரை 245 வண்ணத்துப்பூச்சி இனங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கை யின் வண்ணத்துப்பூச்சிகள் மலைப் பகுதிகளில் வாழ்கின்றன. மலைப் பகுதி காலநிலை பொதுவாக அதிக குளிரும் மழைவீழ்ச்சியும் கொண்டது. இது வண்ணத் துப்பூச்சியின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும் காரணிகள் எனினும் இக்காலநிலைக்கு இசைவாக்கமடைந்த சில வண்ணத்துப்பூச்சி இனங்கள் இலங்கை யின் மலையகப்பகுதிகளில் மட்டும் வாழ்கின்றன. இவற்றை உலகின் வேறெந்த பகுதியிலும் காணமுடியாது. எனினும் 2012ம் ஆண்டின் செந்தரவுப் பட்டியலின் அடிப் படையில் இலங்கையின் 99 வகை வண்ணத்துப்பூச்சி ஆபத்தை எதிர் நோக்கி யுள்ள இனங்களாக அடையாளம் காணப் பட்டுள்ளன. இதனால் இலங்கை அரசின் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் இவற்றை பாதுகாப்பதற் கான பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக இலங்கையின் மிகப்பெரிய வண்ணத்துப் பூச்சியினை (Srilanka Birdwing) தேசிய இனமாக அறிவித்ததுடன் மாகாண ரீதியாக வும் சில வண்ணத்துப்பூச்சிகள் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது சில வண்ணத்துப் பூச்சிகளை குறிப்பிட்ட ஒரு மாகாண எல்லைக்குள்ளேயே எம்மால் காணமுடியும். இதனை அடிப்படையாகக் கொண்டு இவை வகைப்படுத்தப்பட்டது. இவ்வகையில் வடமாகாணத்துக்கு சொந்த மான வண்ணத்துப்பூச்சி Large Salmon Arab இனம் அடையாளப்படுத்தப்பட் டுள்ளது. மேல்மாகாணத்துக்கு Blue Slassy Tiger இனமும், மத்திய மாகாணத்துக்கு Spoted Sward Tail இனமும் சொந்தமாக அமைகின்றது. இலங்கையில் வாழும் நகருயிர்களில் ஓணான் இனங்களுக்கு மிக முக்கிய இடமுண்டு. ஏனெனில் உலகில் வாழும் 5600 ஓணான் இனங்களில் 15 இனங்கள் எமது நாட்டில் மட்டுமே வாழ்கின்றன. இவற்றுள் பச்சை ஓணான், கறுப்புக்கன்ன ஓணான், கொம்பு ஓணான், தோட்ட ஓணான் என்பவை முக்கிய மானவை. இவை தவிர ஈருடக வாழிகளில் தவளை இனங்கள் அதிக பல்வகைமை யைக் காட்டுவதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் உயிர்ப்பல் வகைமை என இவ் ஆக்கத்தினால் ஆராயப்பட்ட விடயங்கள் மிக மிகச் குறைவானவை என்பதை கண்டிப்பாக இவ்விடத்தில் குறிப் பிட வேண்டும். ஏனெனில் உயிர்ப்பல் வகைமை என்பது ஒரு பரந்த விடயம். அதிலும் இலங்கைத் தீவானது நம் கற்பனையிலும் அற்பாற்பட்ட பல இயற்கை வளங்களை கொண்டமைந்த நாடு. எனினும் இன்றைய காலகட்டத்தில் இவ்வளங்கள் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக உயிர்ப் பல்வகைமை இழப்பு நம் நாட்டின் பல சொத்துக்களை அழித்து வருகின்றது. காடுகளை அழித்தல், விவசாய இரசாயனப் பாவனைகள், காட்டுத்தீ, வன விலங்கு வேட்டை, குடியேற்றங்கள் அமைத்தல் போன்ற காரணிகள் உயிர்ப் பல்வகைமை இழப்பை அதிகரித்து வரு கின்றன. இதிலிருந்து மீள நாம் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுப்பதும், அவற்றில் ஈடுபடுவதற்கும் ஒத்துழைப்பு நல்குவதும் எமது கடமையாகும்.

# சங்ககால இலக்கியங்கள் உணர்த்தும் இலங்கைத் தமிழர்களின் இருப்புக்கள் - ஒரு வரலாற்றுப்பார்வை

**செல்வி. மங்களரூபி சிவகுமார்**
**விரிவுரையாளர்,**
**வரலாற்றுத்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்**

**அறிமுகம்**

சங்ககாலம் பற்றிய காலவரையறை தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணம் காணப்பட்டாலும் கூட தமிழக வரலாறு பொறுத்து இக்காலப்பகுதியானது பல்வேறு முக்கியத்துவத்தினைப் பெற்ற காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் சிலவற்றின் மூலமாக சமகாலத்து இலங்கைத் தமிழர்கள் தொடர்பான பல்வேறு விபரங்களை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. இவை தருகின்ற தகவல்கள் தமிழர்களின் சிறப்பினை வெளியுலகிற்கு எடுத்துச் செல்கின்ற வகையில் அமைந்து காணப்படுகின்றது. சேர, சோழ, பாண்டியர் எனப்பட்ட முடியுடை மூவேந்தர்களதும் பாரி, காரி போன்ற குறுநில மன்னர்கள் பலரும் வடக்கே வேங்கடத்தினையும் தெற்கே குமரிமுனையினையும் எல்லைகளாகக் கொண்டு ஆட்சி செய்த காலமாக இக்காலம் காணப்பட்டது. இக்காலத்தில் தமிழகம் செல்வச்சிறப்புடன் காணப்பட்டதோடு பல் வேறு கலைகளும் வளர்ச்சி கண்டிருந்தன. அது மட்டுமன்றி பிறநாடுகளுடனான அதன் வர்த்தக நடவடிக்கைகளும் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் காணப்பட்டன.

**காலவரையறை**

சங்ககாலத்தினை ஆராய முற்படுகின்ற தமிழக வரலாற்றாளர்கள் பலரும் இக்காலந் தொடர்பான வரையறை பற்றிய கணிப்பில் முரண்பாடுகளைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். சிலர் இதனை வரலாற்றுத் தொடக்க காலமாகக் கொள்கின்றனர். தமிழிலக்கிய அறிஞர்களான ஆ.வேலுப்பிளளை, ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை போன்றவர்கள் இக்காலத்தினை கி.பி 1ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகக் கருதுகின்றனர். அதேநேரத்தில் தமிழக வரலாற்றிஞர்கள் பலரும் சங்ககால இலக்கியங்களையும் தொல்லியற் சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு கி.மு 1ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகச் சங்ககாலத்தினைக் குறிப்பிடுகின்றனர். ஏறத்தாழ இதே கருத்தினையே இலங்கை வரலாற்றாசிரியர்கள் பலரும் கொண்டிருப்பதும் அவதானிக்கத்தக்கது. இருப்பினும் பொதுவாக இக்காலப்பகுதியினை கி.பி 1ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகக் கொள்ளுபவரும் உள்ளனர்.

**சங்ககால இலக்கியங்கள்**

இத்தகைய சங்ககாலத்துப் பண்பாட்டினுடைய உயரிய வளர்ச்சி நிலையின் வெளிப்பாடாக அமைந்ததே சங்க இலக்கியங்களது தோற்றமாகும். இத்தகைய சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இரண்டு பிரிவுகளுக்குள் அடங்குகின்றன. முதற் பிரிவினுள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை போன்றனவும் மற்றையதில் திருமுருகாற்றுப் படை, பொருநாராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடு கடாம் போன்றன அடங்குகின்றன. மேலும் அகத்திணை, புறத்திணை எனப்பட்ட வகைப்பாட்டுக்குள்ளும் இவை அடங்கு கின்றன. அகத்திணை எனப்படுவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பட்ட ஐவகையான நிலங் களுக்குரிய ஒழுக்கங்களையும் காதலையும் கூறுவதாக அமையப் புறத்திணை எனப் படுவது போர் மற்றும் வீரம் என்பவற்றினைச் சிறப்பித்துக் கூறுகின்றது. அந்த வகையில் இவ்வாறு தோன்றிய இலக்கியங்களில் இலங்கைத் தமிழர்களின் இருப்புப் பற்றிய பல்வேறு விபரங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

### இலங்கை தமிழகத் தொடர்பு

இலங்கைக்கும் தமிழகத்திற்கு மிடையிலே காணப்பட்ட தொடர்பானது மிக நீண்டகாலத்திலிருந்தே ஆரம்பித்திருந்தது. இதற்கு முக்கியமான காரணம் இவ்விரு நாடுகளனிதும் அமைவிடமே. மிகப்பழைய காலத்தில் இலங்கையானது தென்னிந்தியத் தீபகற்பத்தினுடைய ஒரு பகுதியாக அமைந்திருந்தமையினைச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ஆனால் காலப்போக்கில் கடல்கோள்களின் தாக்கத்தினால் இவ்விரு பகுதிகளும் தனியான பகுதிகளாக ஆக்கப்பட்டன. தென்னிந்திய மரபுகளும் இலங்கை மரபுகளும் கடல்கோள்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற அதேநேரத்தில் சங்க இலக்கியங்களிலொன்றான புறநானூற்றில் "முந்நீர் விழவினெடிபோனன்னீர்ப் ப.'. றுளி மணலினும் பலவே......" என்ற பாடல் வரிகள் இக்கடல்கோள் தொடர்பான செய்தியினைத் தருகின்றமை குறிப்பிடத் தக்கது. வி.ஆர்.ஆர் தீட்சிதர் என்பவர் Tertiary epoch என்ற யுகத்தின் நடுப்பகுதியில் இது பிரிந்திருக்கலாமென்ற கருத்தினையும் இவ்விடத்தில் அவதானிக் கலாம்.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து சங்ககாலம் எனப்படுகின்ற காலப்பகுதிக்கு முன்ன ராகவே காணப்பட்ட தொடர்பானது பிரிந்ததன் பின்னராகவும் பேணப்பட்டதன் பின்னணியிலேதான் தமிழகத்திலே சங்க காலப் பண்பாடு நிலவிய சமகாலத்தில் இலங்கையில் தமிழரது இருப்பு காணப் பட்டதனை சங்ககால இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

வரலாற்றின் தொடக்க காலமாகக் கருதப்படுகின்ற சங்ககாலத்தில் அக்கால இலக்கியங்களை உருவாக்கிய புலவர் களில் ஒருவரான ஈழத்துப்பூதந்தேவனார் ஈழநாட்டினைச் சேர்ந்தவரென்று கருத்துக் கள் பரவலாகக் காணப்படுகின்றன. இதனை உறுதியாகக் கூறமுடியாவிடினும் இப்பெயர் அகம் - 88, 231, 307, குறுந்தொகை 189, 360, 343, நற்றிணை 366 போன்ற பாடல்களில் இடம்பெறு வதனைக் காணமுடிகின்றது. அதே நேரத்தில் இக்கால இலக்கியங்களைத் தொகுத்தவர்களோ அல்லது தொகுப்பித்த வர்களோ இவரை ஈழநாட்டினைச் சேர்ந்தவ ரென்று குறிப்புக்கள் எதனையும் விட்டு வைக்கவில்லை. எது எவ்வாறாயினும் பூதந்தேவனாருக்கு அடிப்படையாக

வருகின்ற "ஈழம்" என்ற சொல்லானது இலங்கையினைத் தான் கூறுகின்றது எனக் கருதவும் இடமுண்டு. பொதுவாகச் சங்க இலக்கியங்களில் இலங்கையானது ஈழம் என்ற பெயரிலினாலேயே அழைக்கப் பட்டிருப்பதனைப் பல இடங்களில் காண லாம். எடுத்துக்காட்டாகப் பட்டினப்பாலையில் வருகின்ற " ஈழத்துணவும் காளகத்தாக்கமும் ......" என்ற வரிகளின் மூலமாக இதனை உணரமுடிகின்றது. இத்தகைய ஆதாரங்கள் ஈழத்தினைச் சேர்ந்த பூதந்தேவனார் இங் கிருந்து தமிழகம் சென்று வாழ்ந்தமை யினால் இப்பெயரினைப் பெற்றிருக்கலாம். சங்ககாலத்திற்கு முன்னராகவும் பின்னராக வும் இலங்கையானது ஈழமென்ற பெயரி னால் அழைக்கப்பட்டமைக்கு முத்துப்பட்டிக் கல்வெட்டில் செய்யளன் எனப்பட்ட ஈழத்தோன் முத்துப்பட்டிக்குகைக்குத் தானம் வழங்கியுள்ளான் என்பதனை "ஈழபரத்தில் வாழுகின்ற தமிழ்ச்சமணரால் எடுக்கப்பட்ட தமிழ் இல்லத்தோர் மாளிகை ......" என்ற வரிகள் மூலமாகவும் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட பழைய தாழிக் கல்வெட்டுக்களில் ஈழத்துக் குடி மக்களது கொடைகள் தொடர்பான விபரங்கள் உள்ளன.

"எரு கோடூர் ஈழக்குடுமிகன் போலையாம் செய்த ஆய்ச்சயன் நெடுசாதன்......" எனப்பட்ட கல்வெட்டில் உள்ள வரிகள் எருக்காட்டூரினைச் சேர்ந்த ஈழத்தவனான பொலாலையன் என்பவன் திருப்பரங்குன்றத்திற்கு வழங்கிய தானம் பற்றிக் கூறுகின்றது. மேலும் அனுராதபுரத்திலுள்ள பிராமிக்கல்வெட் டொன்று "ஈழபரதத்து" தமிழர் ஒருவரது வதிவிடம் பற்றியும் குறிப்பிடுகின்றது. சங்க காலத்திற்குப் பின்னராகவும் இலங்கை யானது "ஈழம்" என்ற பெயரினாலேயே அழைக்கப்பட்டு வந்துள்ளது. கி.பி 9ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரான சோழ சாசனங்கள் மற்றும் பாண்டியச் செப்பேடு களில் இலங்கை "ஈழம்: என்றே அழைக்கப் பட்டதனை முதலாம் இராஜராஜனது கல் வெட்டுக்கள் குலோத்துங்கனது மெய்க் கீர்த்திகள் போன்றவற்றில் வருகின்ற வரிகள் ஊடாக அறியலாம்.

சங்ககாலப் பண்பாடு காணப்பட்ட காலத்தினை வரலாற்றுக்காலம் அதாவது பெருங்கற்காலத்தின் தொடக்கமாகவே வரலாற்றறிஞர்கள் பலரும் எடுத்துக் கொள்ளுகின்றனர். சமகாலத்தில் இலங்கை யிலும் வரலாற்றுக்காலமான பெருங் கற்காலப்பண்பாடு காணப்பட்டதென் பதனைச் சங்க இலக்கியங்கள், தொல் லியல் ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இது சமகாலப் பண்பாட்டினது வெளிப் பாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந் துள்ளதனைக் காணலாம். பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய முக்கிய அம்சமாகத் திகழுகின்ற தாழி அடக்கமுறைகள், கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் போன்றவை தமிழகத்தினை ஒத்தவகையில் இங்கே கிடைத்துள்ளன. இது இலங்கைத் தமிழரது இருப்பினை மேலும் அதிகரிப்பதாக உள்ளது. சங்க இலக்கியங்களில் கூறப்படு கின்ற தாழி அடக்கமுறையும் நீளக்கிடத்தி அடக்கஞ் செய்கின்ற முறையும் மதுரை, திருநெல்வெலி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் காணப்பட்டது போன்று இலங்கையிலும் இத்தகையமுறைகள் காணப்பட்டதென்பதற்கு பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, மாந்தை, சந்திரகாந்தை போன்ற இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும் இத்தகைய தாழிகளது தோற்ற அமைப்புக்களும்கூட தமிழக - இலங்கைத் தமிழர்களுக்கிடையிலே காணப்பட்ட தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அமைந்துள்ள தனைக் காணலாம். இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட தாழிகள் தோற்றத்தில் தமிழகத்தின் கொற்கை, ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், பெருமாள்மலை போன்ற தாழிகளுடன் ஒத்தவகையில் அமைந் துள்ளது. பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா அவர்கள் தன்னுடைய கட்டுரையொன்றில் சங்ககாலத் தமிழக மக்கள் மத்தியில் வீரக்கல் வழிபாடானது பெருவழக்கில் இருந்தமைக்கான தொல்லியற் தடயங்கள் பல அண்மைக்காலத்தில் கிடைத்துள்ள தாகக் குறிப்பிடுகின்றார். மேலும் சங்க காலத்திற்குரியதொரு கருங்கல்லினால் செய்யப்பட்ட மனித உருவமொன்று நிலத்தின் அடியில் புதைந்திருந்ததாகக் குறிப்பிடுகின்றார். இது பெருங்கற்காலத்தய தொழில்நுட்பத்தினைக் காட்டுகின்ற தென்பது அவருடைய கருத்தாக உள்ளது. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இத் தகைய மனித வடிவத்திற்கும் கந்தரோடை யில் கிடைத்த மட்பாண்டத்தில் இடம் பெற்றுள்ள கோட்டு வரைபுமுறையிலமைந்த ஆள்வடிவத்திற்குமிடையிலே நெருக்கமான ஒற்றுமைகள் காணப்படுவதாக மேலும் இவர் கூறுகின்றார். 1970இல் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த விமலா பேக்ளி மேற்கொண்ட ஆய்வில் ஈழத்தின் வறண்ட வலயப்புவியியல் பண்புகள் தமிழகத்துப் புவியியல் பண்புகளுடன் ஒத்துக் காணப்பட்டதாலும் தமிழக மக்கள் தமது பிராந்தியத்தில் தமக்குக்கிடைத்த பரீட்சியமான புவியியல் பண்புகளுடன் ஒத்த இன்னோரிடத்திற்குப் பரவுவது இலகு வாயிற்று என்று அவர் வெளிப்படுத்திய கருத்தும் இவ்விடத்தில் நோக்கத்தக்கது. இத்தாழிகளோடு காணப்பட்ட கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் தமிழகத்தினை ஒத்தவகையில் காணப்படுகின்ற தன்மை யானது தமிழகத்தினை ஒத்த காலத்தில் ஈழக்குடியேற்ற மக்களது நடவடிக்கை களைப் புலப்படுத்தும் வகையில் அமைந் துள்ளதெனலாம்.

இலங்கைத் தமிழர்களின் இருப் பினைச் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற மொழி அடிப்படையிலான தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. 1981இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் ஆனைக்கோட்டை யில் மேற்கொண்ட அகழ்வாய்வின் மூல மாக சங்ககாலத்துத் தமிழ்மொழி வழக்கி லிருந்ததனை உறுதி செய்வதாக அமைந்தது. இங்கே அங்கு தமிழ்ப் பிராமிச்சாசனமொன்றினை மீட்டனர். இதில் இடம்பெற்ற "கோவேத" என்ற வாசகம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் கந்தரோடை என்ற இடத்தில் உச்சப்பனை என்ற பகுதியில் தமிழ்ப்பிராமி வரி வடிவம் பொறிக்கப்பட்ட பெருந் தொகையான கறுப்பு சிவப்பு மட் பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் சிலவற்றில் ஈ, ம, ற, ன, ள, ழ போன்ற தமிழ்மொழிக்கே உரியதான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் சில பெயர்கள் அன், ன் என்ற விகுதியுடன் முடிவடைகின்றது. இப்பெயர்கள் ஆணி னைக் குறிப்பதற்கு பயன்படுத்தப் பட்டுள்ளது. இதே இயல்புகள் தமிழகத்தில் கொடுமணல், அழகன்குளம், காவிரிப்பூம்

பட்டினம், அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களிலும் அவதானிக்க முடிகின்றது. இவற்றிலிருந்து சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்மொழி பேசிய மக்கள் இங்கே வாழ்ந்துள்ளனரென்பது புலனாகின்றது. பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு சங்ககால வேள் ஆட்சி பற்றிக் கூறுகின்றார். சங்க இலக்கியங்களில் நன்னன், கங்கன், கட்டிவாணன் போன்ற வேளீர் தலைவர்கள் பேசப்படுகின்றன ரென்பதனை அகம் 44. 325 அடி மூலமாக அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களில் குறுநில மன்னரது பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வருகின்ற இச்சொல்லானது சில குறுநில மன்னரது பெயர்களின் முன்னொட்டுச் சொல்லாக வேள்ளி எவ்வி, வேள் பேகன், வேள் ஆய், வேள் பாரி நெடுவேள் ஆதன் போன்ற சொற்கள் சான்றாக உள்ளன. சங்ககாலத்தில் புழக்கத்தில் காணப்பட்ட வேள் என்ற தமிழ்ச் சொல்லினையொத்த சொற்களே சமகாலத்து பிராமிக்கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றது.

தமிழகத்திற்கும் இலங்கைக்கு மிடையிலே நடைபெற்ற வர்த்தக ரீதியான தொடர்புகளையும் சங்ககால இலக்கியங் கள் மூலமாக அறிந்துகொள்ளலாம். சங்க இலக்கியங்களிலொன்றான பட்டினப்பாலை யில் வருகின்ற "ஈழத்துணவும் காளகத் தாக்கமும்....." என்ற வரிகள் இலங்கைக் கும் தமிழகத்திற்குமிடையிலான வர்த்தக உறவுப்பற்றித் தெளிவாகத் தருகின்றது. பேராசிரியர் செ.கிருஷ்ணராசா அவர்கள் கந்தரோடை சங்ககாலப்பகுதியில் பிரதான வர்த்தக மையமாக வளர்ச்சி கண்டிருந்த தென்பதனை புறாவடிவம் உட்பக்கத்தில் பொறிக்கப்பட்ட நிலையில் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்பாண்டத்தினை அடிப் படையாக வைத்து விளக்குகின்றார். மேலும் அவர் புறாவினை கடற் பயணத் துடன் இணைந்ததொரு பறவை எனவும் அதற்கு ஆதாரமாகச் சங்க இலக்கியங் களிலொன்றான பட்டினப்பாலையில் வரு கின்ற " தூதுணம் புறாவொடு துச்சிற் நோக்கு ...." எனவும் நெடுநல் வாடையில் வருகின்ற " மனையுறைப் புறாவின் செங்காற் சேவல்...." எனவும் வருகின்ற புறா தொடர்பான செய்திகளை ஆதார மாகக் கொடுக்கின்றார்.

அத்துடன் இலங்கையில் சங்க காலப்பகுதியினைச் சேர்ந்த பரதவர் எனப் பட்ட இனத்தவர் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டதாகப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள் கூறுகின்றார். இலங்கையில் கிடைத்த பிராமிக்கல்வெட்டுக்கள் சிலவற்றில் "பரத" என்ற சொல் காணப் படுகின்றது. மேலும் இச்சமூகத்தவர்கள் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகள் பற்றி சங்க இலக்கியங்களில் காணப் படுகின்ற கருத்துக்கள் சிலவற்றினையும் இதற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டியிருந் தார். அகநானூற்றில் சங்கிற்காகக் கடலில் மூழ்கியதனையும் அவற்றினைக் கள்ளுக் காக விற்ற செய்தியும் காணப்படுகின்றது. சமகாலத்தில் இருபகுதிகளிலும் நடை பெற்ற வர்த்தகம் பற்றி அறிவதற்கு அனுராதபுரம், மாதோட்டம், கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த தமிழக ஆட்சியாளர்களது நாணயங்கள் சான்றாக உள்ளது. "பெருவழுதி" எனப் பொறிக்கப்பட்ட பல நாணயங்கள் இப் பகுதிகளில் மீட்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

சங்ககாலத் தொடர்பு பற்றி யறிவதற்கு இலங்கையில் காணப்படுகின்ற இடப்பெயர்கள் சிலவற்றினை வரலாற் றாசிரியர்கள் சிலர் ஆதாரமாகக் கொள்ளு கின்றனர். எடுத்துக்காட்டாக குறிஞ்சிகளது பெயர் வரிசையில் வருகின்ற சங்கம், புலவு, தில்லையங்கூடல், கயல்கன்னி, அங்கண் போன்றனவற்றினைக் குறிப்பிடுகின்றனர்.

பெருங்கற்காலத்திற்குரிய எலும்புக் கூடுகளை ஆராய்ந்த கெனடி என்பவர் தென்னிந்தியப் பெருங்கற்கால மக்களுக் கும் இலங்கையிலுள்ள பெருங்கற்காலத்து மக்களுக்குமிடையிலே இழைவிட்டோடிய ஒற்றுமையினை காட்டியுள்ளார்.

## முடிவுரை

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் எல்லாம் சங்ககாலம் என்றதொரு பொற் காலம் தமிழகத்தில் சிறப்புற்றிருந்த நேரத்தில் இலங்கையிலும் தமிழர்களது இருப்புப் பேணப்பட்டமையினை அறிந்து கொள்ள முடிகின்றது. இதன் தொடர்ச்சியே இன்றுவரை பேணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற பல செய்திகளைத் தொல்லியற் சான்றுகளின் மூலமாக உறுதிப்படுத்த முடிகின்றது. "ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடர்களே" என்ற சுவாமி ஞானப் பிரகாசரது கருத்து இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும்.

## உசாத்துணை நூல்கள்


1. கிருஷ்ணராசா, செ., இலங்கைப் பண் பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள், அப்கிறியேட்டர் வெளியீடு, 2012.
2. சிற்றம்பலம், சி.க., பண்டைய தமிழகம், யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம், 1991.
3. சின்னத்தம்பி, ஆ., ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு, தமிழ்ப்பூங்கா, 1994.
4. சீனிசாசஜயங்கார், பி.டி., தமிழர் வரலாறு, திருநெல்வேலி பதிப்பு, 1989.
5. செல்வநாயகம், வி., தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம், 1997.
6. புஷ்பரட்ணம், ப., தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, தமிழ்ச்சங்க வெளியீடு, 2005.


- அறிவு மௌனத்தைக் கற்றுத் தரும். அன்பு பேசக் கற்றுத் தரும்.
- யாரையும் தீயவன் என்று கூற வேண்டாம். நீ நல்லவன்; இன்னும் நல்லவனாய் இரு என்று சொல்லுங்கள்.
- உயிர் பிரியும் முன் பலமுறை இறப்பார்கள் கோழைகள். வீரனுக்கு மரணம் ஒரு முறைதான்.
- நான் என்ற அகந்தையைப் போக்கிவிடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள்.
- உயர்ந்த உன்னதமான கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிறந்தவன் நீ என்று எப்பொழுதும் எண்ணு.

# உழைப்பின்றி ஊதியமில்லை



திருமதி. கனேஸ்வரி லிங்கேஸ்வரன்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
அந்த உன்னத தொழிலை
ஊக்குவிப்போமே................

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
அந்த ஆனந்தத் தொழிலை
அரவணைப்போமே!
ஆடுவோமே....................
காளைகள் கறவைகள்
வளர்த்திடுவோமே
எங்கள் களனிகள் நன்றாய்
உழுதிடுவோமே
ஆறுகள் குளங்கள் அனைத்தும் அமைத்து
அன்புடன் பல பயிர் செய்திடுவோமே

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
அந்த ஆனந்தத் தொழிலை
அரவணைப்போமே!
ஆடுவோமே.....................

மாணவர் நாங்கள் மகிழ்வுடன் கற்கும்
விருப்பமான பாடம் விவசாயமேயாம்
பண்டிதர், பாமரர் பலரும் வாழ்ந்திட
பாரினில் பயிர்கள் வளர்த்திடுவோம்
காடுகள் அழித்து களனிகள் ஆக்கி
புவியினை அழகாய் காத்திடுவோம் - நாம்
என்றும் முயற்சி உடையோராய் வாழ்ந்திடுவோம்.

# வாழ்வை உயர்த்தும் நற்குறிக்கோள்கள்



**திருமதி.புஸ்பராணி கனகலிங்கம்,**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி.**

"குறிக்கோள் இல்லாத வாழ்வு குப்பைத்தொட்டிக்குச் சமன்" என்பது ஒரு வாசகம். மாணவர்கள் கல்வி கற்க முற்பட்டால் அதில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். நாம் எந்தத் தொழிலைச் செய்ய முற்பட்டாலும் அதில் ஒரு குறிக்கோள் இருக்கும். குறிக்கோள் நல்லதாக இருப்பின் வாழ்வு நல்லதாக இருக்கும். குறிக்கோள் கெட்டதாக இருப்பின் எமது வாழ்வு சிதைந்துவிடும்.

நல்ல குறிக்கோளுடன் வாழ்பவரே வாழ்வினை உயர்த்துவர். தியாகம், சேவை, பரந்த மனப்பாங்கு, மானம் என்பன நல்ல குறிக்கோள்கள். இக் குறிக்கோள்கள், இலட்சியங்கள் சிறு வயதிலே மாணவர்கள் மனதில் வேரூன்றி விட வேண்டும். நாம் கற்கும் காலத்தில் எதற்காகக் கற்கின்றோம், எப்படிக் கற்கின்றோம், இதன் பயன் யாது? என்ற கேள்விகள் எழும்புகின்றன. இக் கேள்விகளுக்கு வரும் விடைகளே குறிக்கோள்களாக மாறுகின்றன. குறிக்கோள்கள் இல்லாதவரின் கல்வி பயனற்றது. அது முழுமை பெறாமல் வாழ்வையே பாழடித்து விடும்.

இவ்வாறே வாழ்வில் உயர்ந்தவர்களின் இதயத்தில் ஒரு குறிக்கோள் இருந்து அவர்களை ஆட்கொள்கிறது. சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்ற ஆத்ம ஞானிகளின் உள்ளத்திலே கடவுள் பற்றிய ஆன்மீகக் கேள்விகள் குறிக்கோள்களாக இருந்தன. அவர்களை ஆன்மீக வீரர்களாக அவை உலகுக்கு ஈய்ந்தன.

விஞ்ஞானிகள் எல்லோரும் தம் இதயத்தில் விஞ்ஞானம் பற்றிய ஆய்வை ஏற்படுத்தும் கேள்விகளை நிரப்பினர். அவற்றை ஆராய்ந்தனர். அவர்களின் சேவையாலேயே நாம் இன்று அளப் பெரிய நன்மைகள் அடைந்துள்ளோம். நோய்களுக்கு மருந்து கண்டவர்கள், சிகிச்சைக்கு வழிவகுத்தவர்கள், மற்றும் துணை சாதனங்களைக் கண்டுபிடித்து அறிவியலில் துணை நின்றவர்கள் எல்லோரும் குறிக்கோளுடன் வாழ்ந்தவர்களே.

புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் பல படைப்புக்களைப் படைக்கிறார்கள். பல ஆக்கங்களை உலகுக்கு ஈய்ந்தார்கள். அவர்களின் குறிக்கோள்கள் எமக்கு அறிவுப்பசியை நீக்க உதவின.

கலைகளைக் கற்றுணர்ந்தோர்கள் இசைகளாலும், ஆடல் பாடல்களாலும் எம்மை ஆனந்தமடையச் செய்தார்கள். சிற்பிகள் நுணுக்கமான முறையில் பல சிற்பங்களை உருவாக்கினர். இவ்வாறு அவர்களது குறிக்கோள்கள் நல்ல வகையாக இருந்து வாழ்வை மேம்படுத்தின.

குறிக்கோள் சுயநலமற்றது, தியாக உள்ளம் கொண்டது, மற்றவர்களை மதிக்கச் செய்வது, கீழ்ப்படிவு கொண்டது, மற்றவர்களுக்கு நல்வழி காட்டுவது ஆகும். இவ்வாறு குறிக்கோளுடன் வாழ்பவர் வாழ்வை

உயர்த்திக் கொள்வார்கள். அவர்களை உலகம் என்றும் மறக்க மாட்டாது.

இன்று எம்மிடையே தியாக உள்ளத்துடன் வாழும் இளைஞர்கள், யுவதிகள் பலர் உள்ளனர். அவர்கள் சமூகத்திற்காக, நாட்டிற்காக தம்மைத் தியாகம் செய்துள்ளனர். அந்தக் குறிக்கோளை எல்லோரும் அடையமாட்டார்கள். மக்களின் நல்வாழ்வுக்காக முன்னின்று போராடி தம் அரிய உயிரை மண்ணுக்காக ஈய்ந்துள்ளனர். இவ்வாறு வாழும் இளைஞர்களின் குறிக்கோளும் உயர்ந்த தன்மை வாய்ந்தது. மற்றவர்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வதே பெரிய இன்பமாகும்.

ஆகவே குறிக்கோள்கள் வாழ்வை மேம்படுத்தும் அதே சமயம் சுயநலம், பொறாமை, ஆணவம், வஞ்சனை, தீய பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சீரழிவுகள் என்பன-தீய குறிக்கோள்கள் ஆகும். தீய குறிக்கோள்களை உடையவர்கள் தமக்குத் தாமே பெரியவர்கள். ஆனால் உலகத்திற்கோ பெரியவர்கள் அல்லர்.

உயர்ந்த குறிக்கோள்களை உடையவர்கள் மேன்மையான வாழ்வு அடைவார்கள். அரிச்சந்திரன் உண்மையைக் குறிக்கோளாகக் கொண்டு பெருமை பெற்றான். மகாத்மா காந்தி அகிம்சை வழியில் நின்று வாழ்ந்த உயர்ந்தார். ஆகவே உண்மையான நற்குறிக்கோள் வாழ்வை மேம்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"தாழ்ந்த குறிக்கோளில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த கொள்கைக்காகத் தோல்வியுறுவதே ஏற்றது."

- ❊ தன்னுடைய மனதைக் கட்டுப்படுத்தி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றவன் விரும்பக்கூடிய எல்லாவற்றையும் அடைந்துவிடுவான்.
- ❊ அவசரமாக தவறு செய்வதை விடத் தாமதமாகச் சரியாகச் செய்வதே மேல்.
- ❊ உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதை இழக்கும்வரை அதன் மதிப்பு தெரிவதில்லை.
- ❊ மற்றவர்களின் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி அடையாதவனால் நற்செயல்களைச் செய்ய இயலாது.
- ❊ நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு நம்மை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.
- ❊ மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.
- ❊ நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
- ❊ எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.

# திரையிசைப்பாடல்களில் இலக்கிய கூறுகள்



**திரு. தியாகராசா விக்னேஸ்வரன்**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி.**

இன்றைய திரையிசைப்பாடல்களில் சமுதாயச் சிந்தனை, காதல், நட்பு, பக்தி, அறிவியல், விஞ்ஞானம், விடுதலையுணர்வு, போன்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. இசையுடன் கூடிய பாடல்கள் இன்று மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்று வருகின்றன. அத்தகைய திரை இசைப்பாடல்களுக்கு உள்ளீடாய் இருந்து திரையிசைப்பாடல்களின் செழுமைக்கு முக்கிய பங்காற்றுவது திரை இசைப் பாடல்களில் காணப்படும் கவிதைக் கூறுகளேயாகும்.

தமிழிலக்கிய வரலாற்றுப் பரப்பில் செய்யுள், மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைகூ எனப் பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ள கவிதை திரை இசைப் பாடல்களில் தன் மூல வடிவங்களைத் தாங்கி நிலைபேறு உடையதாக விளங்குகின்றது. கருத்துச் செறிவு, வடிவம் ஆகியவற்றில் மரபுக் கூறுகள் மாறாது விளங்குவதுடன் இன்றும் மக்களால் விரும்பிப் போற்றப்பட்டு வருகின்றது. எளிதில் பாமரரையும் சென்றடையும் திரையிசைப் பாடல்கள் இசை வடிவம் பெற்றிருந்தாலும் அவற்றில் கவிதைக்குரிய மரபுக் கூறுகள் நிலைத்துக் காணப்படுகின்றன.

தமிழ்த் திரைப்படங்களில் நெஞ்சம் மறக்க முடியாத அருமையான பாடல்கள் ஆரம்ப காலத்தில் இடம்பெற்றன. தியாகராச பாகவதர், பாபநாசம் சிவன், கே.பி.சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி போன்றோர் அருமையான பாடல்களைப் பாடினார். இடைக்காலத்தில் எல்.ஆர். ஈஸ்வரி, ஜானகி, ரி.எம்.சௌந்தரராஜன், சுசீலா, கே.ஜே.ஜேசுதாஸ், மலேசியா வாசுதேவன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ஜெயச்சந்திரன் போன்றோரும் தற்காலத்தில் ஹரிகரன், உன்னிக்கிருஸ்ணன், ஹருணி, ஹரிஸ் ராகவேந்திரா, சுஜாத்தா, பவதாரணி, கார்த்திக், விஜய் ஜேசுதாஸ், திப்பு, அனுராதா ஸ்ரீராம் போன்றோரும் சிறப்பிடம் பெறுகின்றார்கள்.

கவிஞர்கள் வரிசையில் பாபநாசம் சிவன், கவி. க.மு.ஷரீப், கம்பதாசன் பட்டுக்கோட்டை, கல்யாணசுந்தரம், கவியரசு கண்ணதாசன், கவிஞர் முத்துலிங்கம், வாலி, வைரமுத்து, விஜயராஜேந்திரன் ஆகியோரது பாடல் வரிகள் என்றும் அழியா இடம் பெறுகின்றன.

**திரைப்பாடல்களான கவிதைகள்**

ஆரம்பகாலத்தில் திரைப்படங்களில் கவிதைகள் அப்படியே பாடல்களாக எழுதப்பட்டன. பின் கவிதைகளுக்கு ஏற்ற படி இசையமைத்து திரைப்படங்களில் புகுத்தினர். மகாகவி பாரதியார், பாரதிதாசன் போன்றோரது பாடல்கள் இவ்வகையில் குறிப்பிட்டு கூறத்தக்கன.

பாரதியாரின்,

*"காற்று வெளியிடைக் கண்ணம்மா -*
*காதலை எண்ணிக் களிக்கின்றேன்"*

*"காக்கை சிறகினிலே நந்தலாலா கரிய நிறம் தோன்றுதையா நந்தலாலா"*

பாரதிதாசனின்,

*"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"*

*"சித்திரச் சோலைகளே! உமை நன்கு*
*திருத்த இப்பாரினிலே முன்னர்*
*எத்தனை தோழர்கள் இரத்தம்*
*சொரிந்தனரோ*
*உங்கள் வேரினிலே"*

*"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ*
*இன்பம் சேர்க்க மாட்டாயா?"*

போன்ற பாடல்களை எடுத்துக் காட்டுகளாக் கூறலாம். இவ்வாறு பல கவிதைகள் இசையமைத்து திரையிசைப் பாடலாக உருவாயின.

**திரையிசைப்பாடல்களில் கவிதை**

திரைப்படத்திற்காக பாடல் எழுதும் போது கதையின் காட்சிச் சூழலுக்கு ஏற்ற வகையில் எழுதப்படும் இப்பாடல்கள், முதலில் எழுதப்பட்டு பின்னர் இசை யமைக்கப்பட்டோ அல்லது இசை அமைக் கப்பட்ட பிறகு இசைக்கு ஏற்ப எழுதப் பட்டோ உருவாகும். இவ்விரு வகையிலும் நாம் கவிதைக்குரிய வடிவங்களை கண்டு தெளியலாம்.

**எழுதி இசையமைக்கப்பட்ட பாடல்கள்**

கவிதைகளாக அன்றித் திரைப் படத்திற்காக எழுதி இசையமைக்கப்பட்ட,

*"கட்டித்தங்கம் வெட்டி எடுத்து*
*காதல் என்னும் சாறு பிழிந்து*
*தட்டித் தட்டி சிற்பிகள் செய்த உருவமடா*
*அவள் தளதள என ததும்பி நிற்கும்*
*பருவமடா!"*

என்ற கண்ணதாசனின் பாடலில் பல்லவி எதுகை மோனை பெற்றுச் சரணத்தில்,

*"தங்கரதம் போல் வருகிறாள் - அல்லித்*
*தண்டுகள் போலே வளைகிறாள்*
*குங்குமப் பூப்போல் சிரிக்கிறாள் - இன்பக்*
*கோட்டைக்கு என்னை அழைக்கிறாள்"*

என ஆசிரியப்பாவின் வடிவத்தையும் நாம் காணலாம். இவ்வாறே,

*"பாலும் பழமும் கைகளில் ஏந்தி*
*பவள வாயில் புன்னகை சிந்தி*
*கோல மயில் போல் நீவரு வாயே*
*கொஞ்சுங் கிளியே அமைதி கொள்வாயே"*

என்ற பாடலிலும் ஆசிரியப்பாவின் வடிவம் பயின்று வருவதைக் காணலாம்.

*"ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்*
*இதயச் சுரங்கத்தில் எத்தனை கேள்வி*
*வாழும் மனிதருக்குள் எத்தனை சலனம் -*
*வெறும் கற்பனைச் சந்தோசத்தில் அவளது*
*கவனம்"*

என்ற பாடல் பல்லவியிலும்,

*"எனக்காக நீயழுதால் இயற்கையின்*
*சலனம் - நீ*
*எனக்காக உணவு உண்ண எப்படி நடக்கும்*
*நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு*
*அதை*
*நமக்காக நம்கையால் செய்வது நன்று"*

எனச் சரணத்திலும்,

*"தங்கத்தின் முகமெடுத்து*
*சந்தனத்தில் உடலெடுத்து*
*மங்கையென்று வந்திருக்கும் மலரோ நீ*
*மாலை நேரப் பெண் மஞ்சள் நிலவோ!"*

என்ற பாடலிலும்,

*"மாஞ்சோலைக் கிளிதானோ? மான் தானோ?*
*வேப்பந் தோப்புக்குயிலும் நீதானோ? -*
*இவள்*
*ஆவாரம் பூ தானோ? நடை தேர் தானோ?*
*சலங்கைகள் தரும் இசை தேன் தானோ!"?..*

என்ற பாடலிலும்,

*"காஞ்சிப் பட்டுடுத்தி கஸ்தூரிப் பொட்டு*
*வைத்து*
*தேவதை போல் நீ நடந்து வரவேண்டும் -*
*அந்தத்*
*திருமகளும் உன்னழகைப் பெற வேண்டும்"*

என்ற பாடல்களில் எதுகை மோனைகள் ததும்ப உயர்வு நவிற்சி, உருவக அணிகளை கையாண்டு பாடி இருப்பது கவிதை தாத்தை திரையிசைப் பாடல்களுக்கு உரமூட்டுவதாக அமை கின்றது.

**இசைக்கு எழுதப்பட்ட பாடல்கள்**

கண்ணதாசனின்,

*"கண்ணே கலை மானே,*
*கன்னி மயிலெனக் கண்டேன் உனை*
*நானே"*

என்ற மூன்றாம் பிறை திரைப்படத் தில் எழுதி இசையமைக்கப்பட்ட பாட லாகும். இதில் வரும்

*"ஏழை என்றால் அதிலொரு அமைதி*
*ஊமை என்றால் ஒருவகை அமைதி"*

என்ற சரணத்தின் வரிகளும்,

*"காதல் கொண்டேன் கனவினை*
*வளர்த்தேன்*
*கண்மணி உனை நான் கருத்தினில்*
*நிறைத்தேன்"*

என்ற வரிகளும் பாவினத்தில் ஆசிரியப்பாவின் வடிவம் பெற்றுள்ளதை அறியலாம்.

புலவர் புலமைப்பித்தனின் "மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்" திரைப்படத்தில்,

*"தாயகத்தின் சுதந்திரமே எங்கள்*
*கொள்கை*
*தன்மானம் ஒன்றே தான் எங்கள் செல்வம்*
*ஒற்றுமையால் பகைவர்களை ஓட*
*வைப்போம்*
*உழைப்பாலே நம்நாட்டை உயர்த்தி*
*வைப்போம்"*

என்று எண்சீர் விருத்தப்பாடல் அமைந்து கவிதை நயம் கூட்டுகிறது.

இதே கவிஞரின் இசைக்கு எழுதப் பட்ட பாடல்

*"உச்சி வகுந்தெடுத்துப் பிச்சிபூ வெச்சகிளி*
*பச்சை மலைப் பக்கத்துலெ மேயுதுன்னு*
*சொன்னாங்க*
*மேயுதுன்னு சொன்னதிலே*
*ஞாயமென்ன கண்ணாத்தா?"*

என்று அடிதோறும் எதுகை மோனை பெற்று கலிப்பா வடிவம் தாங்கியுள்ளது. "பணம் படைத்தவன்" திரைப்படத்தில் கவிஞர் வாலி எழுதிய,

*"பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்*
*புன்னகை என்றே பேராகும்*
*கன்னி ஓவியம் உயிர்கொண்டு வந்தால்*
*பெண்மயில் என்றே பேராகும்"*

என எழுசீர் ஆசிரிய விருத்தப்பா வடிவினை பெற்றுள்ளது இப்பாடல்.

மேலும் "காதலன்" திரைப்படத்துக் காக வாலி எழுதிய "முக்கால முக்காப் பொல - லைலா ஓ லைலா........." என்ற பாடல் உள் கருத்துக்கள் எவையும் காணப்படாது விட்டாலும் ஏ.ஆர்.ரகுமானின் இசை அப்பாடலை உயர்ந்த இடத்தில் நிற்க வைக்கின்றது.

**பாட்டும் மரபும்**

அகவற்பாவில் எதுகை மோனை யின்றி ஓசை நயம் மட்டுமே பயின்று வருவது போலத் திரைப்படப்பாடல்களில் எதுகை மோனையின்றி ஓசை மட்டுமே கொண்டு ஒரே வகையான சொல்லடுக்கு களை உள்ளடக்கி வரியின் இறுதியில் எதுகை பெற்ற சொற்களை கொண்டு அழகிய கவிதை வடிவம் பெறுகின்றது.

மு.மேத்தாவின்

"பாடு நிலாவே!

தேன் கவிதை........ பூ.......... மலர

உன் பாடலை........... நான் தேடினேன்

நீ போகும் பாதை என் பூங்காவனம்

நீ பார்க்கும் பார்வை என்

பிருந்தாவனம்............."

என்று பல்லவியிலும், சரணத்திலும் கவிதை வடிவம் பெற்றுத் திகழ்கிறது.

கவிஞர் வைரமுத்துவின் "இது ஒரு பொன்மாலைப் பொழுது" என்ற பாடலில்

"ஆயிரம் நிறங்கள் ஜாலமிடும்
ராத்திரி வாசலில் கோலமிடும்
வானம் இரவுக்குப் பாலமிடும்
பாடும் பறவைகள் கானமிடும்"

என்று அழகிய கவிதை ஓசை யினைத் தந்து விளக்குகின்றது.

அந்தி மழை பொழிகின்றது என்ற பாடலில்,

"தேனில் வண்டு மூழ்கும் போது
பாவம் என்று வந்தாள் மாது"

என்று ஆசிரியப்பா வடிவிலும்

"நெஞ்சுக்குள் தீயை வைத்து மோகம் என்பாய்
தண்ணீரில் மூழ்கிக் கொண்டே தாகம் என்பாய்"

என்ற எண்சீர்விருத்த வரிகளும் வந்து கவிதையை அழகூட்டுகின்றன.

இந்தநிலை இன்றைய திரை யிசைப் பாடல்களிலும் பயின்று வந்துள்ள மையை காணலாம்.

"மான்குட்டியே! புள்ளி மான்குட்டியே!

உன் மேனிதான் பூந்தொட்டியே!"

என்ற பாடலிலும்

"பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
புல்லாங்குழலின் துளைகள் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
சிரிக்கும் கண்களில் கண்மணி பார்த்தேன்
கடிகாரத்தில் நேரம் பார்த்தேன்"

என்ற பாடலிலும்

"மன்மதராசா.... மன்மதராசா...... என்னை கணக்கு பண்ணேன்டா......"

என்ற பாடலில்

"பச்சை உடம்புலெ உச்சி நரம்புலே
கிச்சு கிச்சு கிச்சு மூட்டாதே..... என்
ஒத்தை உசிருலே முத்து கொலுசுலே
என்னை வெச்சு..... வெச்சு.... பூட்டாதே"

என்ற பாடலிலும், சிம்பு (சிலம்பரசன்) பாடிய

"போட்டுத்தாக்கு....... போட்டுத்தாக்கு
கிட்டு சோங்கொன்று போட்டுதாக்கு..."

என்ற அடிகளில் வல்லின மெய்கள் ததும்பிவர அடி தோறும் எதுகை மோனை கள் பெற்று கவிதை நயம் பெற்றிருப்பதை உணரலாம்.

**இலக்கியப் பாடல்களை சினிமா பாடலுக்குள் புகுத்தல்**

இராமாயணத்தில் இராமனும் சீதை யும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளும் காட்சியை கம்பர்,

"அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள்" என அக்காதல் காட்சியை கம்பர் படம் பிடித்துக் காட்டுவார். இதை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்

"கண்ணும் கண்ணும் கலந்து பேசின
பேசின பேச்சில் பிறந்தது காதல்"

என தனது கவிதையில் வர்ணிக் கின்றார்.

இதனை சினிமாவில்

*"கண்ணும் கண்ணும் கொள்ளை அடித்தால் காதல் என்று அர்த்தம்"*

எனவும்,

*"கண்ணும் கண்ணும் நோக்கியா......"*

எனவும் வர்ணிக்கின்றார்கள்.

பாரதியாரின் வேதாந்த கருத்துக்கள் ததும்ப பாடி இருக்கும் "குயிற்பாட்டில்"

*"காதல் காதல் காதல்*
*காதல் போயிற் சாதல் சாதல், சாதல்"*

என பாடியிருப்பதை சினிமாவில்,

*"டாவு டாவு டாவடா.....*
*டா வில்லாட்டி டை யடா...."*
*(டா - காதல் டை - சாவு)*

எனவும்

*"டாவடிக்காதே டா அடித்தால்*
*டை அடிக்காதே"*

என ஆங்கிலப்பதங்களை தமிழில் கலந்து புது மெருகூட்டியிருக்கின்றனர்.

இது தவிர சங்கப் பாடல்களை அதன் உட்கருத்துகளை சினிமாப் பாடல்களில் சிலமாற்றங்களுடன் கையாண்டு பாடல் பாடி இருப்பதையும் அவதானிக்கலாம் இதற்கு "நறுமுகையே...... நறுமுகையே........" என்ற பாடலை சான்றாக கொள்ளலாம்.

சில சினிமாப்பாடல்கள் பக்திப் பாடல் மெட்டுக்களை உள்வாங்கி சினிமாப் பாடல்களில் புகுத்தியுள்ளார்கள். எடுத்துக் காட்டாக கந்தசஷ்டி கவசத்தில் எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படும் ஹிந்தோளம் இராகத்தில் அமைந்த "சஷ்டியை நோக்க சரவணபவனார்" என்ற பாடல் மெட்டை சினிமாவில்,

*"பதினெட்டு வயது இளவெட்ட மனசு*
*ஏங்குது பாய் போட.........."*

என்ற பாடல் சமயப்பற்றுள்ளவர்களால் விமர்சிக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

இன்று இலக்கியங்களை விரும்பிப் படிக்கும் காலம் குறைந்து வருவதால் சினிமாவுக்குள் நீதிப்பாடல்களை புதிய மெட்டுகளில் அமைத்து பாடும் முயற்சியும் இடம் பெறுகின்றது.

எடுத்துக்காட்டாக

*"ஆத்திசூடி............ ஆத்திசூடி..........."*

என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு திரைப்படப் பாடல்கள் கவிதைக்குரிய எதுகை, மோனை, ஓசை, சந்தம், யாப்பு ஆகிய கூறுகளோடு கற்பனை, கருத்து, பல்வகை அணிகள், பல்வகை உத்திகள் என்பனவற்றினையும் உள்ளடக்கி தமிழ்க்கவிதை வடிவத்தினை நிலை நாட்டி வருகின்றன.

புதுக்கவிதை வடிவங்கள் பாடல்களில் இடம் பெற முயன்றும் அவை நிலைக்காது வரவேற்பின்றி கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. எனவே, கவிதை தனக்குள் இசையைக் கொண்டும் இசை வடிவாக பாடல் வடிவம் அமைந்திருப்பதும் இயற்றமிழுக்கும் இசைக்கும் உள்ள ஒன்றுதலைப் பறைசாற்றுகின்றன. ஆகவே தான் இன்றும் மக்களிடையே செல்வாக்கு பெற்று வரும் திரை இசைப் பாடல்கள் தமிழ்க் கவிதையின் மரபுக் கூறுகளைக் காத்து வரும் தனிக்கவிதை இலக்கிய வடிவமாக திகழ்கிறது.

# ஆந்திரக் கலையில் - நாகர்சுன கொண்டா

**செல்வி. சின்னத்தம்பி யோகேஸ்வரி**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி**

உலகில் உள்ள பல்வேறு மக்களின் தொகுப்புக்களின் அருமை பெருமைகளையும், சீரையும், சிறப்பையும் அளவிட்டு எடை போட்டுப் பார்ப்பதற்கு இரு அளவீடுகளை வைத்திருப்பர் அறிஞர் பெருமக்கள். ஒன்று நாகரிகம் என்பது, மற்றொன்று பண்பாடு. இவை மனிதனது புறத் தோற்ற வளர்ச்சியின் செம்மையையும் அகர்வுணர்வு வளர்ச்சியின் சீர்மையையும் வெளிப்படுத்துவன. இதில் கலைக்குப் பெரும் பங்கு உண்டு. இது மனுக்குலம் முழுமைக்கும் பொதுவாகி மொழி, கலாசாரம், மத வேறுபாடுகளைத் தகர்த்து தேசங்களிடையே விரிந்த எல்லைகளைக் கடந்து மனிதர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் சாதனம் எனலாம். இந் நிலையினை ஆந்திரக் கலைச்சம்பிரதாயம் ஊடாகவும் நாம் காணலாம்

ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் ஜில்லாவை சேர்ந்த பல்நாடுதாலுகாவின் வடகிழக்கே பரவிக் கிடக்கும் கண்ணுக்கினிய பள்ளத்தாக்குத் தான் நாகர்சுன் கொண்டா. இதன் பாதுகாப்பு, வாணிபம் இவைகளைக் கருத்தில் கொண்டு இயற்கை அன்னையின் ஆணைக்குட்பட்டு சுற்றி நிற்கும் குன்றுகளின் சங்கிலித் தொடர் ஒருபுறம், பல வளைவுகளில் வேகமாய் பாய்ந்தோடிப் பள்ளத்தாக்குகளை மூன்று சம பகுதிகளாக பிரித்து அகழியும் ஆற்றுப்படுக்கையும் அகத்தே கொடுத்து ஆதரித்து நிற்கும் கிருஸ்ணாநதி ஒருபுறமாக தனிச்சிறப்புடன் இயற்கை எழில் புரிந்து நிற்கும் நாகர்சுன் கொண்டா தன்னகத்தே அனைவரையும் வசீகரிப்பதில் வியப்பில்லை.

இப் பள்ளத்தாக்கில் புத்த மதமும் ஆந்திரக்கலையும், சிறப்புற்றுச் செழித்து வளர்ந்துள்ளமையை அறிய முடிகின்றது. அதே சமயம் இப்பள்ளத்தாக்கில் செய்யப்பட்ட புதைபொருள் ஆய்வுகள் மூலம் கிடைத்த ஞாபகச்சின்னங்களும் பண்டைய பொருட்களும் இங்கு இந்து மதம் சிறப்புற்றுச் செழித்தோங்கியதை சான்று பகிர்கின்றது. காலக் கிரமப்படி இப் பள்ளத்தாக்கின் சரித்திரத்திலே ஒரு சிறு இடைவெளியைத் தவிர்த்துப் பார்ப்போமானால் இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டில் சாதவாகனர் காலத்திலும் இஷ்வாகு வம்சத்தினர் காலத்திலும் இப் பள்ளத்தாக்கு புகழ் அடைந்ததோடு புத்த மதமும் இந்து மதமும் இன்பகரமான சூழலில் பரஸ்பரம் ஒன்றை ஒன்று ஊக்குவித்து ஒத்தவாறு வளர்ந்து பரவின என்பதை உணரமுடிகின்றது.

தக்கிணத்து வழிவந்த ஆந்திரர் வேதகால முனிவரான விசுவாமித்திரர் வழிவந்தோர் என ஐதேய புராணம் கூறுகின்றது. கோதாவரி, கிருஸ்ணா ஆறுகளின் கழிமுகத்தில் முன்பு வாழ்ந்த திராவிட மொழி பேசும் தெலுங்கர்களே ஆந்திரர் எனப் பொதுவாக நம்பப்படுகின்றது. இவர்கள் இந்துக்களாய் இருந்த போதிலும் பௌத்தத்தையும் ஆதரித்து வந்தனர்.

ஆந்திரக் கலைச் சம்பிரதாயங்களை அமராவதி, நாகர்ஜீன் கொண்டா நிர்மாணங்கள் ஊடாக நோக்கலாம். அமராவதி தூபி நிர்மாணத்தின் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் நாகர்ஜீன் கொண்டா எனும் இடத்தில் தூபி நிர்மாணிக்கப்பட்டதாக ஆய்வாளர் கூறுவர்.

சுவர்களில் இடம் பெற்ற அலங்காரச் செதுக்கல் வேலைப்பாடுகள் பெரும்பாலும் அமராவதி வேலைப்பாடுகளை ஒத்தவை. இவை புத்தரது வாழ்க்கை நிகழ்வுடன் கூடிய சிறந்த வேலைப்பாடுகள் ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக துசிததேவ நகரில் தேவாராதனை, சித்தாத்தரின் பிறப்பு, அசித முனிவரின் வருகை, பெயர் சூட்டல், முற்றும் துறந்து வெளியேறல், நந்த குமாரன் விண்ணுலகடைதல், ஆலவன என்னும் அடக்குதல், மந்தாது ஜாதகக் கதை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அமராவதி கலையம்சங்களுடன் நாகர்ஜீன் கொண்டா கலையம்சங்களை ஒப்பிடும் போது நாகர்ஜீன் வேலைப்பாடுகள் தெளிவாக விளங்கக் கூடிய அம்சங்களைக் கொண்டவை ஒரு விடயத்தைச் சித்தரிக்கும் வேலைப்பாட்டில் அதற்குரிய உருவங்களை மட்டும் சித்தரிக்கும் பண்பு காணப்படு கின்றது. தேவையற்ற மனிதர்கள், பரிவாரங் கள் காட்டப்படவில்லை. அமராவதி செதுக்கல்களில் ஒரு கட்டத்துள் ஒரு விடயம் மட்டும் காணப்படினும் மேலும் பொதுவான அம்சங்ககளாக பல உருவங் களைக் கொண்டு முழுப் பரப்பும் மூடப்பட்ட தாகக் காணப்படுகிறது. இதில் உயிரோட்ட மும் நாட்டிய இலட்சணமும் காட்டப்படல் சிறப்பம்சம் எனலாம். இதற்கு எடுத்துக் காட்டாக மகாமாயா தேவியைக் காண் பதற்கு சுத்தோதன மன்னன் அசோகவனம் வரும் காட்சி, அசித் முனிவர் போதிசத்து வரைக் காணவரும் காட்சியை இதற்கு உதாரணமாகக் காணலாம். அமராவதிக் கலையில் கிரேக்க உரோமச் செல்வாக்கு காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருது கின்றனர். இவர்களே கல்லில் சிறபம் வடிக்காது ஓவியம் படைக்கின்றனர் என "கிளேசெற்று" அழகியலாளர் கூறுகின்றார்.

நாகர்ஜீன், அமராவதி கலையம்சங் களில் பொதுவாகப் புத்த பெருமானைக் காட்டும உருவங்களும் அதற்கு பதிலாக குறியீடுகளால் காட்டும் அம்சங்களும் காணப்படுகின்றது. உதாரணமாக புத்தரின் பிறப்பைக் குறிப்பிடலாம். மாயாதேவி சல்மரக் கிளையொன்றைப் பிடித்திருக்கும் காட்சியில் போதிசத்துவரை வரவேற்கும் விதத்தைக் காட்டும்போது போதிசத்துவர் வருகையை உணர்த்துவதற்கு சல் மரத்தின் மேல் சாமரை ஒரு சோடி காட்டப் பட்டுள்ளது.

நாகர்ஜீன் வேலைப்பாடுகளில் உயர்ந்த தன்மையைக் காட்டுவதாக யுத்தக்காட்சி உள்ளது எனக் கலை விமர்சகர்கள் கூறுவார். இந்தியாவில் காந்தாரம், மதுரை, அமராவதி என்னும் இடங்களில் சிற்ப வேலைப்பாடுகளில் வரும் போர் காட்சியில் போர் புரிசேனை புத்த பெருமானைச் சுற்றி காணப்படுகின்றது. ஆனால் இங்கு புதிய கலையம்சத்துடன் காணப்படுகின்றது. புத்த பெருமானின் வலப்புறம் போர்புரியும் சேனையும் இடப் புறம் தோற்ற பின் ஓடிச் செல்லும் படைகள் புத்த பெருமானை வணங்கும் காட்சியையும் காணலாம். யுத்தத்தையும், தோல்வியையும் இங்கு ஒரே சட்டத்துள் காட்டும் முயற்சி இடம் பெற்றுள்ளது.

நாகர்ஜீன் பள்ளத்தாக்கு நாகரிகத் தில் கலையை வெளிப்படுத்த சில விதி முறைகளைக் கையாண்டுள்ளனர். இதில் தொன்று தொட்டுப் பழக்கத்தில் இருக்கும் மூன்று முறைகள்

1) சின்னங்களால் (சங்கேதங்களினால்) அறிவித்தல்
2) சுருக்கமாக தெரிவித்தல்
3) விஸ்தாரமாகக் காட்டுதல்

என்பனவாகும். சித்தாத்தர் துறவறம் செல்லும் காட்சியை அசுவகோஷர் எனும் வடமொழிக் கவிஞர் "புத்தசரிதம்" என்னும் நூலில் சிறப்புக் கவிநயம் சொட்ட எடுத்துரைக்கின்றார்.

அரண்மனையில் நடுநிசியில் இன்பக் கனவு கண்டு புரள்கின்றாள் யசோதை. ராகுலன் அதே வேளை என்ன அற்புதமான விளையாட்டைக் கனவில் கண்டானோ? தாயை அணைத்துக் கொள்கின்றான். உலக ஜீவராசிகள் அனைத்தும் இன்ப துன்பங்களை மறந்து ஆனந்தமாக நித்திரை செய்யும் நேரம். ஒரு ஜீவன் மட்டும் இமைக்காமல் உட்கார்ந்து இருக்கின்றது. உலகின் துன்பங்களை எல்லாம் மறந்து உயர் நிலை அடையும் ஆவல் கொண்ட உள்ளம் மனை, மனைவி, மக்களை விட்டுப் புறப்பட்டு யாரும் அறியா இடத்தில் சென்று மெஞ்ஞானம் பெறத் திட்டமிடுகிறது. மனைவி யும், மகனும் தூங்கும் நள்ளிரவில் சகல ராஜலட்சணமும் பொருந்திய குதிரை, எஜமான் வரவை எதர்பார்த்து வாலை அசைக்கின்றது. பின்னர் எஜமானை தன் முதுகில் ஏற்றி மெதுவாக நடந்து சென்றது. இரவோடு இரவாக போக வேண்டிய இடத்துக்கு கொண்டு சென்றுவிட்டு பொழுது விடியும் நேரம் அரண்மனைக்குத் திம்பியது. இராகுலனும் அன்னை யாசோதையும் தூக்கம் கலைத்தனர். இருவருக்கும் ஒரே ஏமாற்றம் உள்ளத்தை உலுக்கும் இந் நிலையைச் சிறப்புற கவிஞர் கற்பனை செய்கின்றார். சொற்சித்திரமாக உள்ளத்தை உருக்கும் வார்த்தைகளால் தன்னை யாசோதையாகவும், மகன் ராகுலனாகவும், அக் காட்சியினை நேரில் காண்போனாகவும் பல கோணங்களில் வெளிப்படுத்துகின்றார்.

நாகர்ஜீன் கொண்டா இந்து மதக் கலை ஆக்கங்களாக மனைவி, தேவ சேனையுடன் கூடிய சிவகுமாரன், கார்த்தி கேயன் பெருமைகளும் சித்தரித்து காட்டி யிருக்கின்றார்கள். இங்குள்ள விசேட அம்சங்கள் தேவி தேவசேனையுடன் தனித்தும் காட்டப்பட்டுள்ளது. கானகத்தே கண்ட கந்தனை கடிமணம் புரிந்து கொண்ட குலமகள் வள்ளி கார்த்திகேயன் அருகில் காணப்படவில்லை. மேலும் திருமால், நாராயணன், அஷ்டபுஜ சுவாமி, திரிவிக் கிரமர் என்பன காணப்படுகின்றன. இங்கே ஆட்சி புரிந்த அரச பரம்பரையினர் ஒவ் வொருவரும் தங்களுக்கென தனிப்பட்ட பெண்குல தெய்வங்களை ஏற்படுத்தி வழி பட்டுள்ளனர். வீர வழிபாடும் இங்கு இடம் பெற்றுள்ளது.

தெய்வங்களுக்கிடையே இந்திரனை தலைவனாகக் கொண்ட திக்கு பாலகர் களையும், லோக பாலகர்களையும், நாக ராசர்களையும் மன்மதனையும், அஸ்டவசுக் கள் போன்ற உப தேவதைகளையும் காணலாம். இப்பள்ளத்தாக்கின் கலைக் குவியல்களிலே மண்ணுலகம், விண்ணு லகம், வாயுமண்டலம், நட்சத்திர மண்டலம் ஆகிய பகுதிகளில் வாழும் குடிகளும் இடம்பெற்றிருந்தனர். கட்டிடக் கலை சார்பாக மாளிகைகள், சைத்தியங்கள், விகாரைகள், தெய்வங்களுக்கான வாசஸ் தலங்கள், ஆலயங்கள், சமயச் சடங்குகள் செய்யும் மண்டபங்கள், அவயிருதம் எனப் படும் பொய்கைகள், விளையாட்டு மைதானங்கள், திறந்த வெளி அரங்கம், பிராத்தனைக்கூடம், சுடுகாடு, நாடகசாலை கள் போன்றவற்றையும் காணலாம்.

இவ்வாறு தொல் பொருள் ஆய் வூடாக நாகர்ச்சுன கொண்டா கலை ஆக்கங் களை பழைய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை நோக்கலாம். பொது நோக்கில் பழைய கற்காலத்தில் கற்களால் ஆன ஆயதங்களையும் புதிய கற்காலத்தில் நுடபங்களைக் கொண்ட கல்லாயுதங்கள் நிறமூட்டப்பட்ட மட்பாண்டங்கள், சங்கு, பணிக்கல் போன்றவற்றால் மணிகள் செய்வதையும் அறிய முடிகின்றது. பெருங் கற்கால மக்கள் கற்களால் ஆக்கப்பட்ட சவக்குழியை அமைத்தனர்.

வரலாற்றுக் காலப்பகுதியில் சாத வாகனர் கால காசும், கல்வெட்டும் கிடைத் துள்ளது. இட்சுவாகு வம்ச காலத்தில்

நாகர்ச்சுனா கொண்டா சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகின்றது. இக் காலப் பகுதிக்குரிய இரு கிணறுகள் அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. இந் நகர் சங்கு அறுப்பதில் சிறப்பிடம் பெற்ற விளங்குகின்றது. இங்குள்ள அரங்கு ஒன்றில் மற்போர் செய்வது போன்ற சிற்பங்கள் காணப்படுகிறது. இவ் அரங்கு உரோமானிய விளையாட்டரங்கை முன்னோடியாகக் கொண்டு கட்டப்பட்டது.

நாகர்சுன கொண்டாவில் கோயில் அமைப்பு இரு வகைகளாக பிரிக்கப் பட்டுள்ளது.

1. கருவறை மட்டும் தனித்து இருக்கும் கோயில்கள்
2. கருவறை, மண்டபம் சேர்ந்துள்ள கோவில்கள்

இவை செங்கறகளும் கல்லும் கொண்டு ஆக்கப்பட்டவை. கி.பி 278 இல் கட்டப்பட்ட அட்டபுய சுவாமி கோயில் கல்வெட்டில் எட்டுத் தலை கொண்ட திருமாலின் மரச்சிற்பம் இருந்ததாகக் கூறப்படுகிறது. நோடகிசுவ சாமி கோயிலில் மலரால் அலங்கரிக்கப்பட்ட குடத்துடன் உள்ள பெண்ணின் உருவம் காணப் படுகின்றது. இங்கு மேலும் அளவற்ற சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. இட்சுவாகு மன்னர் காலத்தில் இறந்தவர் களுக்கான நினைவுத் தூண்கள் கண் டெடுக்கப்பட்டது.

சாதவாகன அரச பரம்பரைக் காலத்தில் ஆந்திர நாட்டிற்குப் பிறநாட்டுத் தொடர்பு ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் இலங்கையிலும் அமராவதி கலை மரபு பரவியது. சிராவர்த்தியின் அற்புதச் செயலையும் மாயா தேவியின் கனவையும் விளக்கும் சிற்பங்கள் பழைமையானவை. இவை தவிர சேதவனராம, கந்தக சைத்தியத்தில் உள்ள சிற்பங்களும் அமராவதி சிற்பக் கலை அம்சங்களைக் கொண்டது என்பது டாக்டர் பரணவிதான என்பவர் கருத்தாகும். சேதவனராமவில் நாகராஜனை உபதேசிக்கும் போதி சத்துவ உருவம் சிறப்பான வடிவமாகும். ருவான்வெலிசாயாவின் தாது கோப அருகில் மூன்று நின்ற பாவனையுள்ள உருவங்கள் எடுக்கப்பட்டன. அவையும் அமைப்பு முறையில் அமராவதி சிற்பங் களை ஒத்தன.

மகா இலுப்பலாமா புத்தர் சிலையானது அமராவதி சம்பிரதாயம் கொண்டது. ஆனால் இச்சிலை ஆக்கப்பட்ட ஊடகமான பளிங்குக்கல் இலங்கையில் காணப்படவில்லை. எனவே இச்சிலை ஆந்திர தேசத்திலிருந்து ஆக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் அல்லது கல் இங்கு கொண்டுவரப்பட்ட ஆந்திரக் கலைஞர்களின் ஆலோசனையுடன் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. மேலும் ருவான் வெலிசாய புத்தர் சிலை, அவுக்கணப் புத்தர் சிலை, சஸ்சேறுவ புத்தர் சிலை என்பனவும் அனுராதபுரக் கால தாது கோபங்களில் காணப்படும் வாஹல் கட அமைப்பிலும் அமராவதி லட்சணங்களைக் காணக்கூடியதாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது.

# புவியியல் தகவல் ஒழுங்கு [GIS]



**திருமதி. தமிழ்வாணி குமரதாஸ்**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி**

**GIS இன் விரிவாக்கம்**

Geographic Information System என்பதாகும். அதாவது Geographic புவியியல் (சார்ந்த) Information தகவல் System தொகுதி அல்லது முறைமை என்றவாறு அதனுடைய மொழி பெயர்ப்பு அமைகின்றது. இதற்கமைய புவியியல் தகவல் தொகுதி, புவியியல் தகவல் முறைமை என தமிழில் அழைக்கப்படு கின்றது. GIS எனப்படுவது "படம் வரைதல் மற்றும் இடம்சார் தரவுகளின் பகுப்பாய்வு என்பவற்றை மேற்கொள்வதற்கான கணினியை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருவி அல்லது தொகுதி" என பொதுவாக வரை விலக்கணப் படுத்தப்படுகின்றது.

**GIS** இன் வரலாறு (**History of GIS**)

GIS இன் வளர்ச்சியினை அவதானிக் கின்ற போது 1960களின் முற்பகுதியில் அணு ஆயுத ஆராய்ச்சி உத்வேகம் பெற்ற தால் ஏற்பட்ட கணினி வன்பொருள் வளர்ச்சிக்கு வித்திட்டது. 1960 ஆம் ஆண்டில் கனடாவின் காடு மற்றும் அபிவிருத்தி திணைக்களமானது உலகில் முதன்முதலாக GIS நுட்பத்தை செயற் படுத்திக் காட்டியது. இந்த GIS நுட்பமானது கனடா புவியியல் தொகுதி (Canada Geographic Information System - (GIS) என அழைக்கப்பட்டதுடன் இதனை கலாநிதி றொகர் தொம்லின்சன் (Dr. Roger tomlinsor) என்பவரால் உருவாக்கப்பட்டது.

1964 ஆம் ஆண்டில் கவாட்.ரி.பிசர் என்பவர் கணினி வரைகலை மற்றும் இடம் சார்ந்த பகுப்பாய்வுகளுக்குமான ஆய்வு கூடமொன்றை உருவாக்கினார். 1977இல் மேற்கத்தேய சக்தி மற்றும் நிலப்பயன் பாட்டு குழுவினதும் அமெரிக்காவின் மீன் மற்றும் வனவிலங்கு சேவை அமைப் பினதும் மேற்பார்வையில் Fort Collins என்னுமிடத்தில் வரைபட மேற்பரப்பு மற்றும் புள்ளியியல் தொகுதி செயற்திட்டம் ஆரம் பிக்கப்பட்டது. 1981களில் அமெரிக்காவின் ESRI என்னும் நிறுவனம் அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தக் கூடியளவிற்கு GIS மென்பொருட்களை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

1982 இல் ஐக்கிய அமெரிக்காவின் பொறியியல் ஆராய்ச்சி ஆய்வு கூட இராணுவத் துறையானது நில முகாமைத் துவம் மற்றும் சூழல் திட்டமிடல் என்பவற்றுக்காக GRASS GIS எனும் மென் பொருளினை வெளியிட்டது. 1990 களின் பின்னர் பல மென்பொருட்கள் GIS நுட்பத் திற்காக வெளிவந்ததுடன் GIS இன் வளர்ச்சியும் உலகில் பரவத் தொடங் கியது. 1999 இல் ESRI நிறுவனமானது முதன் முதலாக GIS தினத்தை தேசிய புவியியல் சமூகம் எனும் அமைப்புடன் இணைந்து நடாத்தியது. GIS தினமானது வருடத்தில் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் கொண்டாடப்படுகின்றது.

## GIS இன் கூறுகள்

புவியியல் தகவல் முறைமை என்பது கணினியின் உதவியுடன் இடம் சார்ந்த தரவுகளைக் கையாளுகின்ற ஒரு முறைமையாகும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கூறுகளின் இணைப்பு மற்றும் இடைத் தொடர்பினால் உருவான வையே தொகுதி அல்லது முறைமை எனப்படுகின்றது. அந்த வகையில் புவியியல் தகவல் முறைமையானது.

- வன்பொருள் (Hardware)
- மென்பொருள் (Software)
- தரவு (DATA)
- முறை (Method)
- மக்கள் (People)

ஆகிய ஐந்து கூறுகளின் இடைத் தொடர்பினால் உருவாகியதாகும்.

### வன்பொருள் (Hardware)

வன்பொருட்களான கணினி மற்றும் உள்ளீட்டுச் சாதனங்கள், வெளியீட்டுச் சாதனங்கள், தரவு சேகரிப்பு சாதனங்கள் என்பனவும் பிரதானமாக அடங்குகின்றன.

Input device - Keyboard, Mouse, Digitizer, Scanner, Digital tape reader

Output device - Printer, Platter, Digital Data

Data storage device - Harddisk, External Hard disk, DVD, CD, Web Server

### மென்பொருள் (Software)

GIS நுட்பத்தில் பல மென் பொருட்கள் இன்று பயன்படுத்தப்படுகின்ற போதிலும் ESRI என்னும் நிறுவனமே GIS மென்பொருள் உற்பத்தியில் முதன்மை நிறுவனமாக விளங்குகின்றது. இவை தவிர பல மென் பொருட்களும் பயன்படுத்தப் படுகின்றன.

ESRI Products - Arc, Arc view, Arc Info, Arc desktop, Arc map

Other - Global mapper, Erdas, Udig GIS, Map window GIS, SAGA GIS, OGIS

### மக்கள் அல்லது பயனாளர்கள்

தொழில்நுட்ப நிபுணர்களில் இருந்து தமது அன்றாட தேவைகளுக்கான புவியியல் தகவல் முறையைப் பயன் படுத்துகின்றவர்கள் வரை பயனாளர்களாக இருக்கின்றனர். இன்றைய தொழில் சந்தையில் GIS பயனாளர்கள் பலவிதமான நன்மைகளைப் பெற்று வருவதனால் கல்வி துறையில் மாணவர்களுக்கு இவற்றி னுடைய அடிப்படை இன்று போதிக்கப்பட்டு வருகின்றது.

### முறை (Method)

ஒரு வெற்றிகரமாக புவியியல் தகவல் தொகுதி ஒவ்வொரு உற்பத்தி நிறுவனத்தினதும் நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டம் மற்றும் வியாபார விதிகளின் அடிப் படையில் செயற்படுகின்றது. புவியியல் தகவல் தொகுதியில் தரவு உள்ளீடு முகாமைத்துவம், பகுப்பாய்வு, காட்சிப் படுத்தல் ஆகியவற்றிற்கான முறை காணப் படுகின்றன.

### தரவு (Data)

புவியியல் தகவல் தொகுதியின் முக்கிய கூறாக தரவு விளங்குகின்றது. புவியியல் தகவல் முறைமைப்

பொறுத்தவரையில் பிரதானமாக இடம் சார்ந்த தரவுகளும் பண்பு சார்ந்த தரவு களும் பயன்படுத்தப்படுகின்றன.

**புவியியல் தகவல் ஒழுங்கின் தரவுகள்**

எல்லா அடிப்படை விடயங்களும் (Facts) அம்சங்களும் வேறுபட்ட நடவடிக் கையை மேற்கொள்கின்றன. விடயங்கள், நிகழ்வுகள் (Events) விவகாரங்கள் (Invans Actions) என்பன தரவுகளாக உள்ளன. புவியியல் தரவுகள் என்பது GIS இல் மிக முக்கியமானவை அத்தியாவசியப் பிரிவாக உள்ளன. இத்தரவுகள் இரண்டு வகைப் படும்.

I. இடம்சாரா தரவுகள் (Non spatial data) அல்லது பண்பியல் தரவுகள் (Attribute data)

II. இடம் சார் தரவுகள் (Spatial data)

**இடம்சாரா தரவுகள் (Non spatial data)**

புவியியல் தரவுகளில் இடம் சாரா தரவுகள் என்பது இடம் சார்தரவுகளின் மேலதிக பண்புகளினை வெளிப்படுத்தும் தரவுகளினைக் குறிக்கின்றது. இவை ஏதாவது ஒரு பிரதேசத்தின் விஸ்தீரணம், மக்கள் தொகை, மண் வகை, நிலப் பயன்பாடு போன்ற பண்புசார் தரவுகளை வெளிப்படுத்தல் GIS தரவுத்தளத்திலும் அட்டவணைகளாக (Attribute tables) இவை சேமித்து வைக்கப்படுகின்றன.

**இடம் சார் தரவுகள் (Spatial data)**

GIS பிரயோகத்தின் உடைய அத்திவாரமாக இடம்சார் தரவுகள் காணப் படுகின்றன. வீதிகள் எவ்வாறு வாகனம் ஓட்டுவது அவசியமோ அதே போல GIS தொழிற்பாட்டில் இடம்சார் தரவுகள் முக்கியம் பெறுகின்றன. புவிசார் தரவுகளின் வடிவம், அளவு மற்றும் உருவவியல் தோற்றப்பாடு ரீதியாக வெளிக்கொணரப்படும். தரவுகள் அனைத்தும் இடம்சார் தரவுகள் எனப்படும். இங்கு வரைபடங்களே முதன்மை பெறு கின்றது. இது ஒரு வகை அமைப்புக் களைக் கொண்டது.

௧. **வன்பிரதி வரைபடத் தரவுகள்** (Hard copy maps)

இது தாள்களில் வரையப்பட்டு இருக்கும். தரவுகளைக் குறிக்கும். அதாவது

தரைத்தோற்றப்படங்கள்
விமான ஒளிப்படங்கள்
செய்மதிப்படங்கள்
புவிமைய ஒழுங்குப் படங்கள்

௨. **மென்பிரதி வரைபடத் தரவுகள்**

இது கணினி மொழியாகிய எண்ணியல் அமைப்பினை கொண்டமைந்த இடம்சார் தரவுகளே மென்பிரதி வரை படத்தரவுகள் எனப்படும். இது பல்வேறு மென் பிரதிகளைக் கொண்டு செயற்படு கின்றது.

1. காவித்தரவு மாதிரி (Vector data model)
2. நெய்யரித் தரவு மாதிரி (Raster data model)


**1) காவித்தரவு மாதிரி (Vector data model)**

தொடர்புகளைக் கொண்ட x,y ஆகிய இரண்டு புள்ளிகளுக்கு இடையில் உள்ள ஆள்கூறுகளை (Coordinates) நேர் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் காவித்தரவுகள் (Vector data) எனப்படும். காவித்தரவுகளில் கேத்திர கணித (Geometries) முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை புள்ளி,

கோடு, மூடிய, உரு (Point, line, polygon) என்ற மூன்று வகையான இடம் சார் தோற்றப்பாடுகளை பிரதிபலிக்கின்றன.


**1. புள்ளித் தரவுகள் (Point Data)**

இது ஒரு இடம் சார் வரைபடத்தின் நிலையங்களை அதாவது குடிமனைகள், கட்டடங்கள், நிறுவனங்கள் போன்றவற்றின் புள்ளிகளைக் குறிக்கும்.




**2. கோட்டுத் தோற்றப்பாட்டு தரவுகள் (Line Feature Data)**

ஒரு இடம் சார் வரைபடத்தில் வீதிகள், கால்வாய்கள், ஆறுகள், நிர்வாக எல்லைகள் என்பவற்றைக் குறிக்கும் தோற்றப்பாடுகளே கோட்டுத் தரவுகள் எனப்படும்.




**3. மூடிய உருத்தரவுகள் (Polygon Data)**


ஒரு இடம் சார் பரம்பலில் காணப் படும் நீர் நிலைகள் பிரதேச பரம்பல்கள் பிரதிபலிப்பவை அனைத்தும் மூடிய உரு எனப்படும்.



**2) நெய்யரித் தரவு மாதிரி (Raster Data model)**




**காவித்தரவு, நெய்யரித் தரவுகளின் பல்வேறு பயன்பாடு**




GIS ஆனது தரவுகளை சேகரித்தல், உள்ளீடு செய்தல், ஆய்வு செய்தல், பிரதிநிதிப்படுத்தல் போன்ற கணனித் தகவல் ஒழுங்கு செயற்பாட்டின் ஊடாக பிரதேசம் சார்ந்த பெறுமதியான தகவல்களை திட்டமிடாளர்களுக்கும் தீர்மானம் எடுப்பவர்களுக்கும் வழங்குகின்றது.

புவியியல் தகவல் தொகுதியினுடைய பிரதான செயற்பாடுகள் (**Main task of GIS**)

- தரவுகளை உட்செலுத்தல்
- வரைபடம் தயாரித்தல்
- தரவுகளை கையாளுதல்
- கோப்பு முகாமைத்துவம்
- கேள்வி, மற்றும் பகுப்பாய்வு
- பெறுபேற்றினைக் காட்சிப்படுத்தல்

**புவியியல் தகவல் முறையின் பிரயோகங்கள்**

**(Application of GIS)**

- படவரை கலையியல் (Cartography)
- புவியின் மேற்பரப்பு சார்ந்த அறிவியல் ஆய்வுகள் (Earth surface based scientific investigations)
- சூழல் தாக்க மதிப்பீடு (Environmental Impact assessment)
- சூழல் முகாமைத்துவம் (Environmental management)
- வள முகாமைத்துவம் (Resource management)
- புள்ளிவிபர பகுப்பாய்வு (Statistical analysis)
- சொத்து முகாமைத்துவம் மற்றும் அமைவிட திட்டமிடல் (Asset management and Location planning)
- மக்கள் மற்றும் மக்கள் தொகை ஆய்வுகள் (Population and demo graphic studies)
- நிலப்பரப்பு புலனாய்வு (Geospatial in telligence)
- GIS தரவுவிருத்தி (Data development)
- உட்கட்டமைப்பு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி
- நகர திட்டமிடல்
- இராணுவத்திட்டமிடல்
- குற்றவியல்
- புவியியல் வரலாறு
- தொல்லியல்
- தளபாடங்கள்
- சந்தைப்படுத்தல்
- பொதுச் சுகாதாரத் திட்டமிடல்
- எதிர்கால நோக்கு வரைபடங்கள்
- நோய் கண்காணிப்பு
- தொலைபேசி வலையமைப்புக்கள்

## நேரத்தைச் செலவிடு

- உழைக்க நேரத்தை எடுத்துக்கொள். அது வெற்றியின் விலை.
- சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள். அது சக்தியின் ஊற்று.
- விளையாட நேரத்தை எடுத்துக்கொள் அது இளமையின் இரகசியம்.
- படிக்க நேரத்தை எடுத்துக்கொள். அது அறிவின் வாயில்.
- நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள். அது இன்பத்தின் பாதை.
- கனவு காண நேரத்தை எடுத்துக்கொள். அது சாதனைக்கு வழி.
- அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள். அது இறைவனின் கொடை.
- சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள். அது இதயத்தின் இசை.

# ஆடி மாதத்தின் சிறப்புக்கள்



**திருமதி. பாமினி ஜீவசங்கர்**
**B.A(Hons)M.A.**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி**

ஆடி மாதம் இந்துக்களின் வாழ்வில் முக்கியமானதாக அமைகின்றது. சூரியனின் பாதையில் உத்தராயண தொடக்கநாள் தை மாதப்பிறப்பாகவும் தெட்சிணாயன தொடக்க நாள் ஆடி மாதப்பிறப்பாகவும் விளங்கு கின்றது. தமிழர் பண்பாட்டில் கூடியிருந்து மகிழும் இனிய நாள் ஆடிப்பிறப்பாகும். ஆடி பிறந்து விட்டாலே அடுத்து வரும் விசேட நாட்கள் அனைத்தும் அம்பாளுக்குரியவை யாகும். "மாதங்களில் நான் மார்கழி" என்று கீதையில் கண்ணன் கூறினான். ஆடி மாதம் அம்பாளுக்குரியதாகவே அமைகின்றது. சக்தி வழிபாட்டின் சிறப்பான நாட்கள் இம் மாதத்திலேயே வருகின்றன. எனவே இந்துக் களின் வாழ்வில் ஆடி மாதம் புனிதமான, பக்தியை வளர்க்கின்ற மாதமாக விளங்கு கின்றது.

### ✶ ஆடிப்பிறப்பு

தெட்சணாயத்தின் தொடக்க நாளான இந்நாளில் கூழும் கொழுக்கட்டையும் செய்து இறைவனுக்குப் படைத்து பிதிர் வழிபாட்டில் ஈடுபட்டு மகிழ்கின்றோம். உடல் ஆரோக்கியம் கருதி பனங்கட்டியில் கூழ் வைத்து அருந்தி மகிழ்கின்றோம். வெப்ப காலத்தில் எமது உடலில் சேர்ந்திருந்த கெட்டநீர், கபம், பித்தம் போன்றவை மாரியில் நோய்க்கு ஏதுவாக இருப்பவை. எனவே இதை நீக்கவே ஆடிக்கூழ் அருந்தப்படுகிறது. தேக ஆரோக்கியம் வேண்டி உத்தராயண தொடக்கப் பகுதியிலும் (தையிலும்) தெட்சணாயன தொடக்கப் பகுதியிலும் (ஆடியிலும்) பேதி மருந்து உட்கொள்ளும் வழக்கம் தமிழ் வைத்திய முறையில் காணப்படுவதும் இதனாலே தான். ஆடிப்பிறப்பென்றதும் நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் ஞாபகத்திற்கு வருகின்றது. ஆடிப்பிறப்பு சமூக ஒற்றுமையை வளர்க்கின்ற ஒரு விழாவாக புலவர் இப்பாடலில் காட்டு கின்றார்.

### ✶ ஆடி அமாவாசை

ஆடி மாதத்தில் இடம் பெறும் பிதிர் வழிபாட்டிற்குரிய விசேட நாள் இதுவாகும். இறந்த தந்தைக்காக ஆடி மாத அமா வாசைத் திதியில் விரதமிருந்து தர்ப்பணம் செய்வது வழக்காகும். புண்ணிய நீர்களில் தர்ப்பணம் செய்வது சிறந்தது. இராமேஸ் வரத்தில் அக்கினித் தீர்த்தத்திலும் கன்னியாக்குமரியில் திரிவேணி சங்கமத் திலும் அதிக இந்துக்கள் தர்ப்பணம் செய்வர். ஈழத்தில் கீரிமலை, மாமாங்கம் போன்ற புண்ணிய நீர் நிலைகளில் தர்ப்பணம் செய்கின்றனர். இந்நாளில் பிதிர் வழிபாட்டில் ஈடுபட்டு ஏழைகளுக்கு உணவு கொடுப்பர். இதனால் எமது மிகுதிக் காலம் பாதுகாப்பாக அமைகின்றது என்ற நம்பிக்கையும் இந்துக்களிடையே உண்டு.

## ✶ ஆடிப்பூரம்

27 நட்சத்திரங்களில் பூரமும் ஒன்று ஆடிமாதம் பூர நட்சத்திர நாளன்று அம்பாள் ருதுவான நாளாகும். எனவே இந்நாளில் அம்பாள் ஆலயங்களில் விசேட வழிபாடும் கிரியைகளும் இடம்பெறுகின்றன. மூத்த சுமங்கலிகள் அம்பாளுக்குப் பொட்டிட்டு ஆரத்தி எடுத்து வணங்கி சடங்கு செய்யும் கிரியைகளைப் பல அம்மன் ஆலயங்களில் காணலாம். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பிறந்தது இவ் ஆடிப் பூர நட்சத்திரத்திலாகும். எனவே தாய்க்குரிய வழிபாட்டை ஆண்டாளுக்கும் செய்வர். தமிழ் நாட்டிற்து அருகில் உள்ள தென்காசியிலே ஆண்டாள் பிறந்தார். இப் பிரதேசத்தில் இந்நாள் முக்கியமானதாக அமைகின்றது. திருவரங்கத்தில் ஆடிப்பூரநாளில் தொடங்கி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் இடம் பெற்று இறுதி நாளில் திருக் கல்யாணம் செய்வர். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற தமிழர் வாழும் இடங்களில் இவ் ஆடிப்பூர வழிபாடு சிறப்பாகக் காணப்படுகிறது.

## ✶ ஆடிப் பெருக்கு

ஆடி மாதத்தின் பதினெட்டாவது நாளில் ஆடிப் பெருக்கு விழா கொண்டாடப் படுகின்றது. ஊற்றுக்கள் பெருக்கெடுக்கும் நாள் இதுவாகும். ஊற்றுக்களைக் கண்டு பிடிப்பது இந்நாளில் இலகுவாக அமையும். விவசாயிகள் இனிவரும் நாட்களில் தடையின்றி நீர் கிடைக்கவும் அறுவடை ஒழுங்காக நடக்க வேண்டும் எனவும் வேண்டி வழிபடும் நாள் இது. இந்நாளில் பொதுவாக அம்மன் வழிபாடு காணப்படுகிறது. தமிழ் நாட்டில் திருமுல்லை வாயிலில் உள்ள பச்சையம்மன் ஆலயத்தில் இந்நாள் சிறப்பான கிரியைகளோடு அனுஷ்டிக்கப்படுகின்றது. திருமணத்திற்காக காத்திருக்கும் கன்னிப் பெண்கள் அம்பாளை வழிபடுவர். வாழ்வில் வளமும் நலமும் வேண்டி பெண்கள் செய்யும் பிரார்த்தனைக்கு திருமுல்லை வாயிலில் பச்சையம்மன் அருள்பாலிக்கின்றாள்.

## ✶ ஆடிக் கார்த்திகை

ஆடி மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் முருகனுக்குரிய முக்கிய நாளாகும். பக்தர்கள் பூக்காவடி எடுத்து கலியுக் வரதனை வேண்டி வழிபடுவர். உப்பு சேர்க்காத உணவை உண்டு விரதமிருந்து வழிபடுவர். சிலர் உபவாசமிருப்பர். முருகன் ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம் பெறும்.

## ✶ ஆடி வெள்ளி, ஆடிச் செவ்வாய்

ஆடி மாதத்து வெள்ளி, செவ்வாய் தினங்களில் சக்தி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறும். கன்னிப் பெண்களும், சுமங்கலிகளும் அம்மனை வழிபடுவர். மாங்கல்ய பாக்கியம் வேண்டியும், கிடைத்திருக்கும் மாங்கல்ய பாக்கியம் நன்கு நிலைத்திருக்கவும் அம்பாள் ஆலயங்களில் குங்கும அர்ச்சனைகள் செய்து பெண்கள் வழிபடுகின்ற விசேட நாட்கள் இவை. திருவிடையம்மன், வடிவுடையம்மன், கொடியிடையம்மன் ஆலயங்களில் சிறப்பான வழிபாடுகள் கிரியைகள் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டு அந்தணப் பெருமக்களால் மாங்கல்யம் நிலைத்திருக்க வேண்டி சுமங்கலிகள் சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், பூ, வெற்றிலை, பாக்கு, பழம், புடவை என்பவற்றை வழங்கி வழிபாடு செய்யும் நாள் ஆடி வெள்ளி, செவ்வாய் நாட்களாகும். நாகங்களுக்குரிய வழிபாடு முக்கியமாக இடம் பெறுவதும் ஆடிமாதமாகும். பாம்புப் புற்றில் பால், சீனி, சர்க்கரை போட்டு வழிபடுவர்.

விவசாயத்திற்குத் தடையாக அமையும் எலிகளை நீக்கும் பாம்புகளுக்கு பால், சீனி, சர்க்கரை போட்டு வழிபடும் வழக்கமும் உண்டு. ஈழத்தில் பிரசித்தி பெற்ற துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆடி மாத செவ்வாய், வெள்ளி தினங்கள் விசேட வழிபாட்டுக்குரிய தினங்களாக அமைகின்றன. இந்நாளில் அம்பாளுக்கு சர்க்கரைப் பொங்கலும் சேமியாப் பாயாசமும் படைத்து குங்கும அர்ச்சனை செய்து வழிபடுவது சிறப்பானதாகும். தேசிக்காய் கோதுகளில் நெய்விளக்கேற்றி வேண்டுதல்கள் செய்வதும் மாவிளக்குப் போடுவதும் எம் வழக்கத்தில் உண்டு.

ஆடி மாத்திலே அம்பாளுக்குரிய வரலக்ஷ்மி விரதமும் இடம்பெறுகின்றது. கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் வரன் வேண்டியும், கிடைத்த வரன் நீடு வாழவும் வேண்டி விரதமிருப்பர். மங்கலான மஞ்சள் பட்டுடன் மிளிரும் அம்பாளிடம் தம் மன விருப்பைத் தெரிவித்து விரதமிருந்து நூல் அணிந்து பயன்பெறுவர்.

இத்தனை சிறப்பான வழிபாட்டுத் தினங்கள் கொண்டது ஆடி மாதம் ஆனால் இவ் ஆடி மாதத்தில் சுபகாரியங்கள் எதையும் நாம் செய்வதில்லை. தொன்று தொட்டு இந்நடைமுறை இந்துக்களிடையே உண்டு. தமிழகத்தில் புதிதாக மணமான தம்பதிகளை பிரித்து வைக்கும் வழக்கமும் உண்டு. பெண்களைப் பெற்றோர் தம் வீட்டிற்கு அழைப்பர். ஆடிமுடிந்ததும் அழைத்துச் சென்று விடுவர். ஆடிமாதத்தின் இத்தனை அம்சங்களையும் அறிந்திராத இளம் தலைமுறையினர் ஆடித்தள்ளுபடி, ஆடி விற்பனை பற்றி நன்கு அறிவர். ஆடியின் மகத்துவத்தை உணர்ந்து நாம் அம்பாளை வழிபட்டுப் பயனடைவோம்.

*"யாதேவீ சர்வபூதேசு மாத்ரு*

*ரூபேண சமஸ்திதா*

*நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை*

*நமோ நமக."*

என்று தேவி மகாத்மியம் குறிப்பிடுகின்றது. அதாவது எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் தாய் வடிவில் அமர்ந்திருக்கிறாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம் என்று பிரார்த்தனை செய்கின்றது. அன்பு வடிவான தாயை வணங்கி நன்மை பெறுவோம்.

## வாழ்வுக்கு சில சிந்தனை

- வாழ்க்கையில் சந்தோசமாக இருக்க எமக்குள் இருக்கும் ஆசைகளைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். ஆசைகள் குறையும்போது அவஸ்தைகள் நீங்கி இன்பம் பெற முடியும்.
- இன்னொருவர் மீது நாம் தங்கி வாழாமல் எமக்கான தேவைகளை நாமே செய்ய முயற்சித்தல் வேண்டும். அடுத்தவர் மீது எமது தேவைகளைப் பாரப்படுத்த நினைத்தோமானால் வீணான பேச்சுக்களும் மனச் சங்கடங்களும்தான் ஏற்படும்.
- எமது வாழ்வை நாம் பாதுகாக்க எமது புலன் உறுப்புக்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறின்றி எம்மையறியாமல் எமது புலன்களை நடனமாட விட்டோமானால் சமூகத்தில் அவப்பெயர்களுக்கும் இம்சைகளுக்கும் ஆளாகவேண்டி வரும்.

# கல்வெட்டுக்களில் நாட்டிய ஆசான் பற்றிய குறிப்புக்கள்

**திருமதி. செல்வாம்பிகை வீரசிங்கம்**
B.A, M.F.A, M.Phil (பரதநாட்டியம்)
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி.**



"பரதம்" அல்லது பரதநாட்டியம் எனும் பெயர் நம் தமிழகத்து ஆடற் கலைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் பிருந்தே வழங்கப் பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்துக்கு முன்பும் பின்பும் பல நாட்டிய நூல்கள், நாட்டிய இலக்கண நூல்களும் தோன்றின. "நாட்டிய நன்னூல் நன்கு கடைபிடித்து அரங்கேறிய மாதவி" என்ற சொற்றொடர் இதை உறுதிப்படுத்தும்.

தொல்காப்பியம், சங்க இலக்கிய நூல்களிலும் நடனம் தொடர்பான நிகழ்வுகள் பற்றி சான்றுகள் கிடைக்கின்றன. தொடர்ந்து வரும் பிற்கால சான்றுகளில் கல்வெட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழகத்தில் நாட்டியம் அல்லது கூத்து பற்றிய குறிப்பினைத் தரும் தொன்மையான கல்வெட்டு அரச்சலூர் என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இது தாளம் பற்றிக் கூறும் கல்வெட்டு என்று கூறப் படுகின்றது. இங்குள்ள மற்றொரு பிராமி கல்வெட்டில்,

*"எழுத்தும் புணருத்தான் மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்"*

என்று எழுதப்பட்டுள்ளது. எழுத்தும் புணருத்தான் என்பது இசையோடு சொற்களும் குறிமானமும் (Notation) சொல்லித்தந்தான் என்ற பொருளில் வருகிறது. முதலாவது கல்வெட்டானது "த" எனும் சொல்லைத் தொடராக கொண்டுள்ளது. இதிலிருந்து அக்காலத்தில் இது பாதபாட அமைப்புக்கான சொல்லுக் கட்டாக காணப்பட்டதிலிருந்து அக்காலத்தில் நடனத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் காணப்பட்டனர் என்றும் கற்பதற்கு மாணவர்கள் இருந்துள்ளார்கள் என்பதை அறிய முடிக்கின்றது. குரு சிஷ்ய முறையிலான ஒரு தொடர்பு இருந்தமையை இங்கு பார்க்க முடிகின்றது.

அடுத்து பல்லவர் காலக் கல்வெட்டான காஞ்சிபுரம் முத்தீசுவரர் கோயிலிலும், திருவொற்றியூர்க் கோயிலிலும் நாட்டியம் ஆடுவதற்கு மகளிரை ஏற்பாடு செய்ததை பல்லவர் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. பரதமுனிவர் பற்றிக் குறிப்பிடும் முதல் கல்வெட்டு இராஜசிம்மனது ஆகும். சாளுவங்குப்பம் அதிரணச்சணடேசுவரர் குடைவரையில் உள்ள இக்கல்வெட்டில் "பரதர்" குறிப்பிட்டிருப்பதும், இம் மன்னனின் கோயில்களில் நாட்டியச் சிற்பங்கள் பரவியிருப்பதும் இக்காலத்தில் நாட்டியக் கலை பெற்றிருந்த சிறப்பையே காட்டுகிறது.

இரண்டாம் நந்தி வர்மன் காலத்தில் முத்தீசுவரர் கோயிலில் நர்ட்டியம் ஆடுவதற்காக இருபத்தேழு ஆண்களும், பெண்களும் அமர்த்தப் பட்டிருந்தனர் என்றும், இவர்களில்

ஆண்கள் தட்டாளி கொட்டுவார்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களே பின்னாளில் “நட்டுவனார்கள்” எனப்பட்டனர்.

குடுமியாமலையிலும், திருமயத் திலும், மாமண்டூரிலும், பல்லவர் கால இசைக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றில் நாட்டியம் பற்றிய குறிப்புகள் சிலவற்றில் உள்ளன. முதலாம் இராஜ ராஜன் காலத்தில் திருவாவடுதுறையில் நானாவித நாடகசாலை என்ற பெயரில் நாடக அரங்கு ஒன்று இருந்தது. சாக்கை யன் குமரன் ஸ்ரீகண்டன் என்பார் அங்கு புரட்டாசி விழாவில் நடித்துள்ளார். திரு வொற்றியூர் கோயிலில் சாந்திக் கூத்தின் ஒரு பகுதியாகிய அகமார்க்கத்தை ஆவணித்திருவிழா எட்டாந் திருவிழாவில், பதியிலாரில் “உறவாக்கினத் தலைக் கோலி” நிகழ்த்த மூன்றாம் இராஜராஜன் பார்த்து மகிழ்ந்த செய்தி கல்வெட்டாக உள்ளது. சிலப்பதிகாரம் கூறிநிற்கும் சாந்திக்கூத்து, ஆரியக்கூத்தும் தமிழ்க் கூத்தும், சாக்கையர் கூத்தும் அக்காலத்துக் கலைஞர்களினால் சிறப்பாக மன்னர்கள் முன்னிலையில் ஆடப்பட்டதினை இக்கல் வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது.

நாட்டியக் கலையில் வல்ல ஆண் கள் தம் பெயரோடு அரசரின் பெயர்களை யும் சேர்த்துக் கொள்ளவும் அனுமதிக்கப் பட்டனர். அவர்களைப் போன்றே நாட்டியக் கணிகைகள் “தலைக்கோலி” என்ற பட்டப்பெயர் கொடுத்து மதிக்கப்பட்டனர். தலைக்கோலிப் பட்டமானது குருவிடமிருந்து சிஷ்ஷைக்கு வழங்கப்படும்.

1ம் இராஜராஜனின் தஞ்சை பெரிய கோயிலாகிய பிருகதீஸ்வரர் கோவிலில் உள்ள 55.78 மீட்டர் நீளமுள்ள மிக நீண்ட கல்வெட்டுக்களுள் ஒன்று இத்திருக் கோயில் சார்ந்திருந்த தளிச்சேரி பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது. இத்தளிச்சேரிக் குடியிருப்புக்கள் பெரிய கோவிலின் வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலுமாக அமைந்திருந்தன. இவற்றுள் தெற்கு, வடக்குத் தளிச்சேரிகள் வடசிறகு, தென்சிறகு எனும் இரு பிரிவுகளைக் கொண்டிருந்தன. தெற்கு தளச்சேரி தென் சிறகிலே 92 நடனமாதரும், தெற்கு தளிச்சேரி வடசிறகிலே 92 நடனமாதரும், வடக்கு தளிச்சேரி தென்சிறகிலே 95 நடன மாதரும், வடக்கு தளச்சேரி வடசிறகிலே 96 நடகமாதரும் மேற்கு தளிச்சேரியில் 25 நடனமாதரும் என 400 பெண்கள் குடியமர்த் தப்பட்டனர்.

இவர்களுடன் ஆடற்சேவை சிறப்புற,

*“நட்டவந் செய்ய நட்டவம் ஒன்றுக்கு*
*அரையன் சுந்தரசோழனான மும்முடி*
*நிர்த்த மாராயன்.......... சோழ”*

என்றபடி எழுவர் நடனம் கற்றுக் கொடுக்க கோயிலில் நிவந்தம் வழங்கி வைக்கப்பட்டிருந்தனர். கூத்தபேரரையன், மராயன், நிருத்த பேரரையன், கூத்தரசன், சாக்கை மராயன், நட்டுவ ஆசான் என்றப் பட்டங்களால் இவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் பெற்றருந்த காணி, கூத்தக்காணி, நட்டுவனார்கள் என அழைக்கப்பட்டனர்.

நாட்டியப் பெண்கள் அனை வருடைய பணிகளையும் வசதிகளையும் மேற்பார்வையிட சாவூர் பரஞ்சோதி என்பவனும் கோவிந்தன், சோமாநாதனும் நியமிக்கப்பட்டனர். நானூறு பெண்களின் ஆடலுக்கு நட்டவம் செய்ய ஏழு ஆசான்களை நியமித்தான்

1. அரையன் சுந்தர சோழனான மும்முடி சோழ நிருத்த மாராயன்
2. குமரன் வடவாயிலான மும்முடி சோழ நிருத்தப் பேரையன்
3. விக்கிபட்டாலகன்
4. அரையன் அபிமான தொங்கனான அரு மொழி நிருத்த பேரையன்
5. மல்லன் இரட்டையன்
6. சித்ரன் கேசவன்
7. மணஞ்சேரியான வகையிலி நிருத்தப் பேரையன்

இவர்கள் தாம் இராஜராஜன் காலத்து திகழ்ந்த தலைசிறந்த நட்டு வனார்கள் ஆவார். இவர்களிலும் சிறந் தோருக்கு, இராஜராஜனுடைய பெயர்களே பட்டப் பெயர்களாகக் கொடுக்கப்பட் டுள்ளதைக் காணலாம். தஞ்சாவூர் பெரிய கோயிலில் நானூறு நாட்டிய மகளிரை நடனமாட நியமித்த கல்வெட்டு வாசகங் களில் இருந்து அக்காலத்து நாட்டிய மங்கையருக்கு நடன ஆசான்களாக விளங்கியவர்கள் பற்றிய குறிப்புக்களை அறிய முடிகிறது.

தேவதாசிகளுக்கு நடனம் கற்பித்த ஆசிரியர்கள் "நட்டுவனார்" என அழைக்கப் பட்டனர். இவர்கள் தேவதாசிகளைப் போலவே கலைக்காகவே தமது வாழ் நாளை அர்ப்பணித்திருந்தார்கள். இவற்றிற் குரிய ஆதாரங்களை சாசனங்கள் வாயி லாகவும், கல்வெட்டுக்கள் மூலமும் சுவடுகள் மூலமும் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## பொன் மொழிகள்

- வெற்றியின் சிகரத்தை அடைந்திட வேண்டுமெனில் முயற்சிகளை அத்திவார மிட்டுக்கொள்.
- பல தீபங்கள் உன்னால்தான் ஒளிருமாக இருந்தால் நீ தீக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.
- மரணத்தைக் கண்டு பயப்படுவதைப் போல பாவங்களைக் கண்டு விலகிக் கொள்.
- முயற்சி பயிற்சி இவையே உன் வாழ்க்கையின் உயர்ச்சி. அதுவே நாளைய புகழ்ச்சி.
- தப்புக் கணக்குகளை நீ அதிகம் போடாதே. ஏனெனில் உன் வாழ்வே தப்பாகிப் போய்விடும்.
- அடிபணிந்து வாழ்வதை விட துணிந்து நின்று சாவதே மேல்.
- மந்திரம் சொல்லும் நாவை விட உதவி செய்யும் கை மேலானது.
- எதை உனக்கு மற்றவர்கள் செய்யக்கூடாது என்று எண்ணுகிறாயோ அதை பிறருக்குச் செய்வதைத் தவிர்.
- தலை குனிந்து படிப்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே.

# யப்பானின் "நோ" (NOH) அரங்கு
## ஓர் அறிமுகம்



திருமதி. அனுசியா கமலக்கண்ணன்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

யப்பானியர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக நாடகக் கலையில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆவர்கள் நன்கு வரை யறுக்கப்பட்ட அரங்க வகைகளில் கவனம் செலுத்தியுள்ளனர்.

அவ் வகையில் யப்பானிய நாடகங் களை பின்வரும் வகைகளாக வகுத்து நோக்க முடியும்.

1) நோ (NOH)
2) கபுக்கி (KABUKI)
3) கொவாகா (KOWAKA)
4) கியோஜின் (KYOGEN)
5) புண்றக்கு (BUNRAKU)

மேற்குறிப்பிட்ட ஐந்து அரங்க வகை கள் காணப்பட்ட போதும் நோ (NOH) அரங்கு பற்றிய பார்வையை இங்கு செலுத்துவோமாக.

யப்பானின் புராதன "கரணப் பண் புடைய அரங்காக" நோ காணப்படுகின்றது. யப்பானின் பாரம்பரிய நடன வகைகளான புகாகு, கிகாகு என்பன நோ நாடக அரங்கின் விருத்திக்கு உதவின. ஆரம்ப காலங்களில் பல வடிவங்களில் ஆற்றப்பட்டு வந்த நோ 14ம் நூற்றாண்டில் (1384) அதன் இன்றைய நிலையைப் பெற்றது.

ஆங்கிலத்தில் NOH என்பது "மிகத் தேர்ந்த நாடகம்" எனப் பொருள்படும். இவ் நோ நாடகமானது இசை, நடனம், ஊமம், கவிதை, நடிப்பு போன்றவற்றை நிறைவாகக் கொண்டிருக்கும். நோ அரங்கின் விதி முறைப் படி ஐந்து நோ நாடகங்களும் அவற்றின் காத்திரமான காட்சிகளுக்கு இடையில் கியோஜின் (KYOGEN) எனும் விகடப் பண்புடைய இடை நிகழ்வும் இடம்பெறும்.

முழுமையான நோ நாடக ஆற்றுகை யில் அரங்கேற்றப்படும் ஐந்து நாடகங் களும் கடவுள் பகுதி, மறவர் பகுதி, பெண் பகுதி, வாழும் மனிதர் பகுதி, இறந்த நிகழ்ச்சிப் பகுதி எனும் வகையில் அமைந்திருக்கும்.

நோ நாடகத்தின் வளர்ச்சியில் கனாமி கியோககு [KANAMI KIYOGAGU (1333- 1384)] அவரது மகன் சியாமி மோட்டோக்கியோ (ZEAMI MOTOKIYO) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கிடைக் கப் பெற்ற 240 நோ நாடகங்களின் பட்டியலில் பாதியளவு

இவர்கள் இருவரும் இணைந்து எழுதியவை ஆகும். 240 நோ நாடகங் களையும் ஐந்து வகைப்பாடுகளுள் அடக்கலாம். அவை வருமாறு

1) கமி (கடவுளுடன் தொடர்புடையது)
2) அசுரா (அசுரர், வீரருடன் தொடர் புடையது)
3) கச்சுரா (பெண்களுடன் தொடர் புடையது)
4) ஜிம்சாய் (சாதாரண மனிதருடன் தொடர்புடையது)
5) கிச்சிகு (தேவதை, பிசாசுகளுடன் தொடர்புடையது)

இவ் அரங்கின் பார்வையாளர்கள் அரச பரம்பரையினர், பிரபுக்கள், போர் வீரர்கள் போன்ற உயர் மட்டத்தினராவர். இவ் நாடகத்தில் வெளிப்படும் ரச உணர்வை யூஜின் (YUGEN) என்பர். இவ் அரங்கின் இசையானது பக்தி, இசையுணர்வு கொண்டதாக காணப்படும். நோ நாடகத்தில் முன் நாடக இலக்கம் கொண்ட பாத்திரத்தை "ஒகினா" (OKINA) என்பர்.

நோ நாடகத்தின் பாத்திரங்களாக

1) ஷைற் (Shite) பிரதான பாத்திரம்
2) வக்கி (Waki) பிரதான துணைப் பாத்திரம்
3) டோமோ (Tomo)
4) சூறி (Tsure)
5) அகி (Agi)
6) கொறாட்டோ (Corado) குழந்தைப் பாத்திரம்

போன்றன காணப்படும். இப் பாத்திரங்கள் தோன்றும் போது விசிறி யுடனேயே தோன்றும் சில பாத்திரங்கள் வேடமுகம் அணிந்திருக்கும், சில பாத்திரங்கள் வேடமுகம் போன்று முகத்தில் ஒப்பனை செய்திருக்கும். இப்பாத்திரங்கள் அணியும் காலுறை டாக்கி (Taki) எனும் பெயரால் அழைக்கப்படும்.

நோ நாடக அரங்கு பற்றி நோக்கின் இது சதுர மேடையாகக் காணப்படும். மூன்று பக்கமும் பார்வையாளர் காணப்படுவர். மேடையின் பின் சுவரில் ஒரு பைன் மரம் நிரந்தரமாக வரையப்பட்டிருக்கும். அரங்கின் கூரை சின்ரோ (Shinto) ஆலயக் கூரை போன்று அழகாக இருக்கும். மேடையின் பின்புறத்தில் ஒப்பனை அறை (Green room) அமைந்திருக்கும். பார்வையார்கள் கூடத்தின் பின்புறம் உயர்த்தப்பட்டதாக (Balcony) காணப்படும். அரங்கின் வலது பின்புறத்தில் இருந்து பின்நோக்கி சாய்வாக ஹசிககாரி (Kasigahari) எனும் பாவப் பாதை காணப்படும். இது அரங்கையும் கண்ணாடி அறையையும் இணைக்கும் நடைபாதையாகும். இதன் இரு மருங்கிலும் பதிவான இரும்புச் சட்டங்கள் காணப்படும். சம இடைவெளியில் மூன்று பைன் மரங்கள் காணப்படும். இக் ஹசிககாரியானது நாடகத்தின் பிரதான பிரவேசம், வெளியேற்றம் என்பவற்றிற்கு பயன்படுவதோடு வரவிருக்கும் இயக்கத் திற்கு முன்னைய கட்புலக் காட்சியை வழங்கும் இடமாகவும் அமையும்.

இவ் அரங்கில் இசைக் கலைஞர்கள் மேடையின் பின்பகுதியில் பார்வையாளர் பார்க்கும் வகையில் இருப்பர். இவர்கள் இடமிருந்து வலமாக முறையே

1) நீண்ட மேளம் வாசிப்பவர்
2) பெரிய கை மேளம் வாசிப்பவர் (தோளில் வைத்து)
3) சிறிய கை மேளம் வாசிப்பவர் (இடுப்பில் வைத்து)
4) புல்லாங்குழல் வாசிப்பவர்

எனும் ஒழுங்கில் அமர்ந்திருப்பார். நாடகமானது புல்லாங்குழல் இசையுடனேயே ஆரம்பிக்கும். 14ம் நூற்றாண்டில் யப்பானில் காத்திரமாக காணப்பட்ட அரங்கின் சிந்தனைப் பள்ளிகளாக

1) கான்சி (Kanze)
2) கோசோ (Hosho)
3) கொங்கோ (Kongo)
4) கோம்பர் (Kompar)
5) கித்தா (Kita)

போன்றவற்றை குறிப்பிட முடியும். எனவே உலக அரங்க வரலாறுகளில் யப்பானியர்கள் தமக்கென அரங்க முறைமைகளை வகுத்து நாடகங்களை ஆற்றுகை செய்து வந்த போதும் அவற்றுள் "நோ" குறிப்பிடத்தக்க அளவு காத்திரப்பண்பு கொண்டதாக அமைந்து காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக இசையும் தமிழிசையும்



**திருமதி. சிவரஞ்சினி ரமணா**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி.**

சிலப்பதிகாரம் அரங்கேற்று கதையில்,

*"ஆடல் பாடல் இசையே தமிழே*
*பண்ணே பாணி தூக்கே முடமே*
*தேசிகம் என்றிவை ஆகின் உணர்ந்து*
*கூடை நிலத்தைக் குறைவின்றி மிகுத்தாங்கு*
*வார நிலத்தை வாங்கு வாங்கி*
*வாங்கிய வாரத்து யாழும் குழலும்*
*ஏந்திய மிடறும் இசைவினை கேட்ப"*

என்பன போன்ற பகுதிகள் அன்று இசைத்தமிழ் அடைந்திருந்த ஏற்றத்தையும் தோற்றத்தையும் தெரியப்படுத்துகின்றன. பொதுவாக உலக இசைகளின் வரலாறு கிரேக்க நாட்டிசையின் தொடக்கத்தி லிருந்தே ஆராயப்படுகின்றது. பழம் பெருமை யுடைய கிரேக்க நாடு தமிழ் நாட்டுடன் மிகப் பழங்காலம் முதல் கொண்டே பல்வகைத் தொடர்பு கொண்டது. தமிழ் இசையின் பண்பு கிரேக்க இசையில் காணப்படுவதை அறியலாம்.

தமிழர்கள் தங்கள் ஐவகை நிலத்திற்கேற்ப பண்ணை முல்லைப்பண், மருதப்பண், பாலைப்பண், குறிஞ்சிப்பண், நெய்தல் பண் எனச் சுமார் ஈராயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே பெயரிட்டு அழைக்கலாயினர். தமிழ் மக்களின் இசை முறைப் பகுப்பைப் போல் எகிப்தியரும் பழைய கிரேக்கர்களும் அவர்களின் இசைப் பெயர்களை நிலத்தின் பெயரிலேயே அழைத்தனர். DORIAN எனும் நிலப் பகுதியில் வாழ்ந்தே கிரேக்க மக்கள் (DORIAN MODS) எனும் இசையைக் கையாண்டனர். இம் மக்கள் தோரியர் எனப்படுவர். இதே போன்று Lydian, Phrygian, Junian ஆகிய நிலங்களைப் பகுத்து அப்பெயர் களையே அந்நிலங்களில் வாழும் மக்களின் இசைக்கும் பெயரிட்டனர்.

கிரேக்கர்களின் mods களை இசைக்கும் முறை Melodic system அல்லது ஒரு ஸ்வர இசையமைப்பைக் கொண்டது. இவ்வமைப்பே தமிழிசையிலும் கையாளப்பட்ட முறையாகும். தமிழ் இசையின் அடிப்படை பாலையான செம்பாலைப் பண் Mixo Lydian எனும் பெயரில் கிரேக்க இசையின் பண்களில் சிறந்து விளங்குகின்றது. சங்க நூல்களில் கூறப்படும் தமிழ் இசையின் இசை இலக்கண முறையான "மாறு முதல் பண்ணுதலால்" கிட்டும் பண்களைப் போலவே கிரேக்க நாட்டின் Model shift & tonic எனும் கிரஹபேத முறையில் கிரேக்க இசையில் Modes பிறந்தன.

பண்டைய தமிழ் இசையில் கையாண்ட செங்கோட்டு யாழ் எனப்படும் பதினான்கு நரம்பினையுடைய யாழ் கிரேக்க நாட்டிசையில் "Medieval Harp" எனும் பெயரில் மிகுந்த செல்வாக்குடன் விளங்குகின்றது. தமிழிசையில் ஏழிசை கொண்ட இசையமைப்பு அதாவது குரல் முதல் தாரம் வரையுள்ள ஏழு இசை ஒலிகளின் இசையமைப்பைப் பற்றி தமிழ் இசை நூல்களில் தான் முதன் முதலில் காணக்கிடைக்கின்றது. இதுவே பன்னாட்டு இசைக்கும் அடிப்படையான ஒலிகளாகும்.

தமிழிசையைப் போல ஏழிசைப் பகுப்பைக் கிரேக்க இசை பின்னர் அதன் Mode இல் கொண்டது. தமிழர்களுக்கும், கிரேக்கர் களுக்கும் அக்காலத்தில் இருந்த தொடர் பினால் ஏழிசை முறையும், நிலங்களின் அடிப்படையில் பண்களின் பிரிவும் இசைக்கருவிகளிலும், தமிழ் இசையில் பெருமையோடு போற்றப் பெற்ற பல யாழின் வகைகளும், பறை வகைகளும் கிரேக்க நாட்டில் பரவி உலாவுகின்றமை தமிழ் இசையின் பண்பினையும் பழைமையினை யும் நிலைநாட்டியது.

ஏழிசை அமைப்பு உலக இசை வரலாற்றில் தமிழ் இசையிலேயே முதன் முதலாக காணப்படுகின்றது. ஏழிசையின் தமிழ்ப் பெயர்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவையாகும். மேனாட்டு இசையில் இவற்றை Tonic, Super tonic, mediant, Sub dominant, dominant, sub mediant, leading note என அழைக்கின்றனர்.

இம் மேல்நாட்டு ஆங்கிலச் சொற்களை நம் தமிழ்ச் சொற்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் தமிழ் இசையின் குரல் முதல் ஏழ் பெயர்களும் ஒத்து ஒலிகள் புணர்வதை அறிந்து, மிகத் தொன்மையான காலத்திலேயே சங்க காலத்திற்கு முன் பெயரிட்டமையைக் காணும் பொழுது மேல்நாட்டிசை முறையில் ஆங்கிலச் சொற்கள் தமிழிசையில் காணப்பெறும் கருத்துக்களை அடிப்படை யாக கொண்டு அமைந்திருப்பது தெளி வாகப் புலப்படுகின்றது. ஸ ரி க ம ப த நி எனும் ஸ்வர எழுத்துக்களும் உலக இசை வரலாற்றில் இந்தியாவிலேயே குறிப்பாக தமிழ் நாட்டிலேயே முதன் முதலில் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் குடுமி யான் மலைக் கல்வெட்டில் ஏழு ஸ்வரங்களின் பெயர்கள் கி.பி. 7ம் நூற்றாண்டிலேயே பொறிக்கப்பட்டு இருப் பதைக் காணலாம்.

இவற்றைத் தவிர உலக நாடு களின் இசை வரலாற்றில் 12 ஸ்வர இடங்களை முதன் முதலில் விளங்கிய பெருமையும் தமிழ் இசையையே சாரும். மேலும் உலக இசையில் கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செந் துருத்திப் பண்ணும், பழந்தக்க இராகமும் மேற்காசிய நாடுகளில் (Iran, Iraq, Turkey, Algahisthan, Soudi - Arabia) ஆகிய நாடுகளில் செந்துருத்திப் பண்ணும் காந்தாரப் பண்ணும் காணப்படுகின்றன.

AFRO AMERICAN MUSIC எனப்படும் ஜாஸ் இசையில் சுத்த தன்யாசி இராகம் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. மேனாட்டிசையில் MAJOR எனும் அடிப்படை SCALE தமிழ் இசையில் காணும் பழம் பஞ்சுரம் எனும் பண்ணாகும். இது இன்றைய சங்கராபரணமாகும். இவ்வாறு பண்ணாட்டிசை வகைகளை ஆராயுங்கால் உலக இசைகளில் நம் தமிழ் இசையின் பங்கினையும், பழமையையும் எண்ணிப் பெருமையடையலாம்.

தொல்காப்பியர் காலத்திலேயே பண்ணொடு பொருந்திப் பாடுவதற்குரிய வகையில் பல இசைப் பாடல்கள் இயற்றப் பட்டன. தொல்காப்பியம் குறிப்பிடும் பண்ணத்தியும் ஒருவகை இசைப் பாடலா கவே கருதப்படுகிறது. பண்களும், அவற்றுக்குரிய சுவைகளும், அவைகளை இசைக்க வேண்டிய காலமும் தொல் காப்பியர் காலத்திலேயே கூறப்பட்டிருப் பதனைக் காணலாம். நாரதர் இயற்றிய வடமொழி இசை இலக்கண நூலான சங்கீத மகரந்தத்தில் சூர்யாம்ச ராகங்கள், சந்திராம்ச ராகங்கள் எனும் பகுப்பை கி.பி 10ம் நூற்றாண்டில் தான் கூறுகிறது. வட இந்திய ஹிந்துஸ்தானி இசை, பங்களா தேஸ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இசையின் இலக்கணத்தின் பழமையை நினைவூட்டுகின்றது.

உலகின் மற்ற ஆசிய நாடுகளில் தென் கிழக்காசிய நாடுகளில் இவ்வித காலப்பகுப்புடன் கூடிய இராகங்களைக் காணலாம். தமிழ் இசை மரபுப்படி சங்க காலத்தில் ஆம்பல் பண்மாலை, முன்னிர விற்கும், செவ்வழி மாலைக்கும், தைவதம் பகல், காலை, நண்பகலிற்கும் மேலும் இவைகளிற்குரிய சுவைகளும் (ஆம்பல் - ஏக்கச்சுவை, குறிஞ்சி அச்சம், செவ்வழி - இரக்கம், தைவதம் - இன்பம், பாலை - இன்பம், மருதம் - இன்பம்) எனவும் குறிக்கப்பட்டுள்ளது. Turkey நாட்டிசையில் உள்ள ஆயபரயஅ எனும் பண்ணை ஒத்த இசைகளுக்கும் Iran, Iraq, Soudi Arabia ஆகிய நாடுகளில் உள்ள Gushesh எனும் மெட்டு வகைகளுக்கும் சுவைகள் கூறப்பட்டிருப்பதற்கும் பல நூற்றாண்டு களுக்குப் பின்னரே இம் மரபுகளைக் கையாள்வதால் உலக இசையில் தமிழ் இசையின் முக்கியத்துவம் மிகப் பழமை யான காலத்திலேயே உயர்ந்துள்ளமை யினை நாம் காணலாம். பண்டைய தமிழ் இசை நூல்களில் இசைக் கருவிகளைப் பற்றியும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. உலக இசைகளின் இயலில் இசைக் கருவிகளான தந்தி, காற்று, தோற் கருவிகள், கஞ்சக் கருவிகள் எனப் பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது.

இவ்விதமான பிரிவு அல்லது பகுப்பு முறையை முதன் முதலில் கண்டது தமிழ் இசைதான். யாழ் எனப்படும் நரம்புக் கருவியும், அதன் பல்வேறு வகைகளும் வங்கியம் அல்லது குழல் எனப்படும். துளைக்கருவிகளும், ஏனைய காற்றுக் கருவிகளும், பறை எனப்படும் தோற் கருவியும் அதன் வகைகளும் தமிழ் இசை நூல்களில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அறியப் பெற்று இலக்கணம் எழுதப்பட்டிருக்கின்றது. உலக இசை அரங்கில் தமிழிசை சிறப்பு இடம் பெற்று இருப்பதற்கு காரணம் பற்பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் நாட்டில் தமிழிசையும், அதன் இலக்கணமும் மிகுந்த வளர்ச்சியுற்று இருந்தமையுமே யாகும்.

நம் பண்டைய தமிழ் இசையில் யாழுக்குச் சிறப்பான இடம் அளிக்கப் பட்டிருப்பதனைக் காணலாம். சிலப்பதி காரத்தில் யாழ் மிகச் சிறந்த இசைக் கருவியாக மதிக்கப்பெற்று பண்படைத்துக் காட்டும் பாங்கினையும், தமிழிசை இலக் கணங்களை விளக்க உதவும் கருவியாக வும் அமைந்திருப்பதனைக் காணலாம். தமிழிசை நூல்களில் கூறப்பட்டிருக்கும் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங் கோட்டியாழ் ஆகியவைகளில் இன்றும் பர்மாவில் இசைக்கப்படும் (SAWANG) என்றும் HARP நம் மகர யாழை ஒத்திருக்கிறது. கிரேக்க இசையில் MEDIEVEL HARP எனும் பெயரில் செங்கோட்டி யாழ் இசைக்கப்படுவதை அறியலாம். சிலப்பதிகாரத்தில் வீணை யைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்படு கின்றன. “நாரதன் வீணை நயந்தெரி பாடலும்” எனவும் “மங்களம் இசைப்ப வீணை மண் மிசை” எனும் வரிகளையும் காண்கின்றோம். இவ் வீணை கிழக்காசிய நாடுகளில் ஒன்றான சைனாவில் WEJ NA என அழைக்கப்பட்டு ஒரு LUTE வகையைச் சேர்ந்த இசைக் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மரத்தினாலும், மூங்கிலாலும் செய்யப் பட்ட குழல் வகைகளும் அவற்றை இசைக்கும் முறையினையும் முதன் முதலில் நம் பண்டைய தமிழிசை நூல்களிலேயே அறியக் காணலாம். பண்டைய தமிழ் இசை நூல்களில் கூறப்பட்டிருக்கும் குழல் வகைகள் இன்று கிழக்காசியா, மேற்காசியா, தெற்காசியா நாடுகளில் பரவலாக இசைக்கப்படுவதைக் காணலாம். சங்க காலத்தில் கூறப்பட்ட பறை எனும் தோற்கருவி “கூறுதல்” எனும் பொருள்பட அமைந்திருப்பதைப் போல, மேற்கு ஆபிரிக்காவில் (Jallcing Drums)

எனப் பறைகளைப் பெயரிட்டு "செய்திகள்" கூறுவதாக இசைக்கின்றனர். பண்டைய தமிழ் இரச நூல்களில் கூறப்படும் இடை சுருங்கிய பறை, இன்று சீனா, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் மிகப் பிரபல்யமாக இருப்பதனையும் அவர்களின் இசை அரங்குகளில் பெண்கள் இப்பறையை இசைப்பதையும் காணலாம்.

சீனாவில் (Jang Dynasty) கி.பி 615 907 இல் தமிழகத்தினின்று இவ் இசைக்கருவி சென்றதாக சைனாவின் இசை வரலாறு கூறுகின்றது. ஜப்பானில் காகு இசையிலும், கொரியா இசையிலும் இடைச் சுருங்கு பறை பெரிய அளவில் உருவாக்கப் பட்டு இசைக்கப்படுகின்றது. பழந்தமிழ் இசைக்கருவிகளில் வெண்கலம், பித்தளை போன்ற உலோகத்தினாலான கஞ்சக் கருவிகள் (Cymbuls) இசை நாடகங்களில் இசைக்கப்படுகிறது.

மேற்கூறிய நாடுகளில் இன்று மிகப் பிரபலமாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ள Western Symphony Orchestra இன் அடிப்படையான கூட்டு வாத்திய இசை அமைப்பு, மேனாடுகளில் செயற்படத் தொடங்கியதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே பண்டைய தமிழ் இயில் சங்ககாலத்தில் இசைக் கருவிகள் கூட்டி சையைத் தமிழ் இசையில் "அமந்திரிகை" என அமைத்தனர். இதனை பல்லியம் எனவும் குறிப்பிடுவர். சிலப்பதிகாரத்தில் குழல் அல்லது யாழ் தலைமையாக இசைக்க, மற்றைய இசைக் கருவிகளும் முழங்குதலை ஆமந்திரிகை எனக் கூறினார்.

*"குழல் வழி நின்றது யாழே யாழ் வழித்*
*தண்ணுமை நின்றது தகவே் தண்ணுமைப்*
*பின் வழி நின்றது முடிவே முடிவொடு*
*கூடி நின்றிசைத்தது*
*ஆமந்திரிகை..............."*

சிலப்பதிகாரம்.

நச்சினர்க்கினியர் ஆமந்திரிகை என்பது பல்லியங்கள் கூடி நின்றிசைப்பது என்றார். விபுலானந்தரும் தனது யாழ் நூலில் ஆமந்திரிகை என்பதனைக் கூட்டு வாத்திய இசை என்று கூறுகிறார். சங்க இலக்கியங்களில் பரிபாடல், புறநானூறு, நற்றிணை, கலித்தொகை ஆகிய நூல் களில் பல்லிய இசை அரங்குகளைப் பற்றியும் குறிப்புகளை காணலாம். உலக இசைகளில் Orchestral Concept அல்லது கூட்டு வாத்திய இசை எனும் கருத்து நம் பண்டைய தமிழ் இசையில் தான் முதன் முதலாக தோன்றியது. உலக இசைகளின் வரலாற்றில் தமிழ் இசையே மிகத் தொன்மையான சிறந்த இசை இலக்கணப் பண்பாடுகளுடன் கூடிய இசையாகத் திகழ்ந்தது என்பதற்கு ஆதாரமாக நமக்குப் பல இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. பண்டைய தமிழ் இசை வல்லுநர்கள் தமிழில் பாக்களை இயற்றிப் பண்களை அமைத்துப் பண் சுமந்த பாடல்களாகப் பாடியும் தமிழகத்துக்குரிய பற்பல இசைக்கருவிகளை கூட்டிசையாக வும், தனியிசையாகவும் பயன்படுத்தியும் இவ்விசைக்கு இலக்கணங்கள் உலக இசைகளின் வரலாற்றில் சிறப்பான தனி யிடத்தைப் பெற்றிருப்பதோடு, அதன் பங்கினையும், பழமையினையும் இன்றும் உலகின் பல நாடுகளின் இசை அமைப்பில் நாம் காணும் போது பெருமைப்பட வேண்டிய விடயமாக அமைந்துள்ளது.

மேலும் மேனாட்டு இசையிலும், கிழக்காசிய நாட்டிலும் பெரும்பான்மையான பாடல்கள் இயற்கையின் அழகை வர்ணிக் கும் பாடல்களாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால் பண்டைய தமிழ் இசை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயற்கை வர்ணனைகளுடன் கூடிய பல பக்திபாடல்களை நமக்கு அளித்திருக் கின்றது என்றால் மிகையாகாது.

# உரோம நாகரிகம்



**திருமதி. சுலோசனா யோகராசா**
**B.A,Dip-in.Edu,MED**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி**

மத்திய தரைக் கடலின் நடுவில் அமைந்துள்ள இத்தாலிய தீபகற்பத்தில் சிறு நகரமாக உருவாகிய உரோம் மகத்தான பெரிய சாம்ராஜ்ஜியமாக உருவெடுத்தது. பிடிவாதம், சுறுசுறுப்பு, கடும் உழைப்பு, வீரம், துணிவு, மனோதிடம், கட்டுப்பாடு, நேர்மை என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு கைதேர்ந்த ஆட்சியை உரோமர்கள் அமைத்தனர். இவர்கள் உருவாக்கிய ரோம இராச்சியம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் கோலோச்சி கி.பி. 5ம் நூற்றாண்டில் தான் அழிவுற்றது.

உரோம் தோன்றியமை பற்றிய மரபியல் கதைகள் வழக்கில் உண்டு. கி.மு 12ம் நூற்றாண்டளவில் அயினியர் கிரேக்கர்களுடன் பத்து வருடங்களாக நடாத்திய போரை "ட்ரோஜன்" போர் என்பர். இப்போரில் கிரேக்கர் வெற்றி பெற்று அயினியரின் ட்ராய் நகரம் அழிக்கப்பட்டது. தோல்வியுற்ற அயினியர் இடம்பெயர்ந்தோடி இத்தாலி சென்று தைபர் நதி ஓரம் குடியேறினர். அயினியரின் இரண்டு வாரிசுகளான ரோமுலஸ், ரேமஸ் எனும் இரட்டையர்கள் பொறாமை கொண்ட மாமாவினால் தைபர் நதியில் வீசப்பட்டனர். தைபர் நதி இவர்களை கரையொதுக்கியது. அங்கு ஒரு பெண் ஓநாய் இவர்களை பாலூட்டி வளர்த்தது. ஓநாய் தாயால் வளர்க்கப்பட்ட இவர்கள் உரோம் நகரை உருவாக்கினர். ஆனால் சகோதரச் சண்டை ஏற்பட்டு ரேமஸ் இறந்தான். ஏழு குன்றுகளை ஒன்றிணைத்து உரோம் நகரை உருவாக்கிய ரோமுலஸ் அதன் முதலாவது மன்னன் ஆனான். இக்கதையை லிவி எனும் உரோமிய எழுத்தாளர் எழுதியுள்ளார்.

இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தையே மேற்கொண்டு வாழ்ந்தனர். இதற்காக வளம் மிக்க இடங்களை பெறும் பொருட்டு அடிக்கடி போரில் ஈடுபட்டனர். இதனால் விவசாயிகளாகவும் போர்வீரர்களாகவும் உரோம் மக்கள் விருத்தியடைந்தனர். சமூக அடிப்படையில் நிலவுடமையாளர்கள் பற்றீசியன்ஸ் எனவும் சிறு வர்த்தகர்கள், விவசாயிகள், பிளிபியன்ஸ் எனவும் பிளவுபட்டு இருந்தனர். உரோமர்கள் ஆட்சி முறையானது ஆரம்பத்தில் மன்னராட்சியாக இருந்தாலும் குடியரசாகவும் பின்பு பேரரசாகவும் மாற்றமடைந்தது. கி.பி 4ம் நூற்றாண்டளவில் மிலேச்சர்களது படை எடுப்பால் உரோம் பேரரசு தளர்வடைந்து தன் எல்லைகளை இழந்தது. இதனால் தமது புதிய தலைநகரமாக கொன்ஸ்தாந்துநோபிளை கொன்ஸ்ரன்ரைன் எனும் பேரரசன் கி.பி 330 இல் உருவாக்கினான். இதனை பைசாந்தியம் என அழைத்தனர். கி.பி 1453 இல் துருக்கியர் படையெடுப்பினால் உரோமப் பேரரசு பேரழிவுக்கு உட்பட்டது.

உரோம மக்களின் ஆரம்ப கால மன்னராட்சி முதலில் சிறப்பாக நடைபெற்றது. எனினும் உரோமை ஆட்சி செய்த

மன்னர்கள் காலப்போக்கில் கொடுமையான வர்களாக மாறினார். நீதி நேர்மையை மீறினர். கௌரவம் ஒழுக்கம் மீறினர். இவ் இழிவு செயல்களை பொறுக்க முடியாத மக்கள் புரட்சி செய்ய ஆயத்தமாயினர். கி.மு 509 இல் ஜீனியஸ் புருட்டஸ் தலைமையில் புரட்சி உருவானது. இதனால் மன்னர் ஆட்சி நீக்கப்பட்டது. இதன் பின் மக்கள் தெரிவினடிப்படையில் குடியரசு அமைக்கப்பட்டது. உரோமில் 18 வயதிற்கு மேற்பட்ட சுதந்திரக் குடிமக்களுக்கு கொன்சல் எனும் அதிகாரியை தெரிவு செய்யும் உரிமை கொடுக்கப்பட்டது. கொன்சலுக்கு ஆலோசனை வழங்க செனட் கழகம் அமைக்கப்பட்டது. சட்டம் நிதி, நீதி நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இவ் அலுவலர்கள் மக்களால் தெரிந்து எடுக்கப்பட்டனர். இந்த உரோம மக்களே முதன் முதலாக ஜனநாயகத் தன்மை கொண்ட குடியரசு முறையை உருவாக்கி உலகிற்கு தந்தனர்.

காலப்போக்கிலே இக் குடியரசு முறையும் கைவிடப்பட்டது. உரோமர்கள் அயற் பிரதேசத்தை கைப்பற்றினர். சிசிலி கோர்சிகா, சார்டினியா ஸ்பெயின், வட ஆபிரிக்கா மசிடோனியாவிலிருந்து ஆசியா வரை உரோம ஆட்சி நிலவியது. இதனால் புதிய மத்தியமயமான பேரரசு ஆட்சி முறையை கையாண்டனர். இதனால் பெரு மளவிற்கு கட்டுப்பாடற்ற சர்வாதிகார அதிகாரங்கள் கொண்ட பேரரசு முறையை மேற்கொண்டனர்.கைப்பற்றிய பிரதேசங் களில் உள்ள பல்வேறு ஜன மக்களையும் காலப்போக்கில் உரோம ஆட்சியை விரும்பி ஏற்கும் வகையில் பேரரசு ஆட்சியை அமைத்தனர்.

மன்னராட்சி, குடியரசாட்சி, பேரரசு முறை என்பனவற்றை உலகிற்கு அழித்த உரோம ஆட்சி மிலேச்சர் படையெடுப்பில் அழிந்தபோதும் பல்வேறுபட்ட தடயங்களை அவர்கள் விட்டுச் சென்றனர். ஜீலியஸ் ஸீஸரால் உருவான கலண்டர்முறை கி.மு 46 இல் வெளிவந்தது.

வருடத்திற்கு 365 நாட்கள் உள்ள கலண்டர் முறை உலகிற்கு கிடைத்த சொத்தாகும்.

ஜனவரி மாதத்தினை "ஜேனஸ்" என்னும் உரோமக் கடவுளின் பெயரால் உருவாக்கினார்கள். பிப்ரவரி புதிய சடங்குகளை குறிக்கும் "பெப்ருயரி" எனும் நினைவாக வைத்தனர். மார்ச் என்பது "மையா" எனும் பெண் கடவுளின் பெயராகவும் வீனஸ் கடவுளின் நினைவாக ஏப்ரல் மாதத்தையும் உருவாக்கினர். போர்ப் கடவுள் மார்ஸின் நினைவாக மே மாதத்தையும், ஜீனோ எனும் பெண் கடவுள் நினைவாக ஜுன் மாதத்தையும், ஜீலியஸ் ஸீஸர் நினைவாக ஜுலை மாதத்தையும், உரோமச் சக்கரவர்த்தி அகஸ்டஸ் நினைவாக ஆகஸ்ட் மாதத்தையும் உருவாக்கினர்.

உரோமினியர் கிறீஸ்தவ மதத்தை தழுவு முன் வாழ்க்கைக்கு தேவையான சக்திகளுக்கு பெயரிட்டு கடவுளாக வணங்கினர்.

ஜீபிடர் - உரோமியரின் காவல் தெய்வம்

மார்ஸ் - போர்த் தேவதை

ஜீனோ ஜீபிடரின் மனைவி

வெஸ்டா அடுப்பங்கரை தேவதை

செரஸ் - பூமாதேவி

வீனஸ் - காதல் தேவதை

யேசு கிறிஸ்துவுக்கு தண்டனை அளித்த உரோமர்களே காலப்போக்கில் கிறிஸ்தவ மதத்தை தழுவினர். உரோமப் போரரசில் கிறிஸ்தவம் அரச மதமாக

மாற்றப்பட்டது. உரோமர்கள் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி ஐரோப்பா முழுவதும் சிறந்த பொதுப்பாதைகள், பாலங்கள், அணைகள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள், நீர்த்தேக்கங்கள் அமைத்தனர். அப்பியன் பாதை, பிளமியன் பாதை என்பன அவர்கள் அமைத்த பெருந்தெருக்களுக்கு இன்னும் சான்று பகிர்கின்றன. பரந்த பேரரசை நிரவகிக்கும் பொறுப்பை ஏற்றதன் மூலம் உரோம சட்ட முறையை இவர்கள் உருவாக்கினர். இச் சட்டங்கள் யாவற்றையும் தொகுத்து கி.பி 529 இல் ஐஸ்ரினியன் மன்னனால் ஐஸ்ரினியன் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. இன்று உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் உள்ள சட்டங்களில் உரோமச் சட்டத்தின் பாதிப்பு உள்ளது. ரோம வரலாற்றை கூறுபவர்களில் ரிசிற்றஸ் பிரபலமானவர். ஆண்டுத் தொகுப்புக்கள் எனும் இவரது நூல் மூலம் மன்னர்களின் ஆட்சி வரலாற்றை அறியலாம். பொலிபியஸ் என்பார் உரோமப் பேரரசை பற்றியும் எழுதி உள்ளார்.

உரோமர்களே முதன் முதலில் தற்கால பண்புகள் கொண்ட வைத்திய சாலைகளை, கல்லூரிகளை அமைத்தவர்கள். லத்தீன் மொழியானது 1000 வருடங்களுக்கு மேலாக உரோம இலக்கிய மொழியாக விளங்கி சட்டம், மருத்துவம், இலக்கியம், கல்வி போன்ற துறைகளில் ஆதிக்கம் செலுத்தியது.

உரோமர்கள் அறிவியற் துறைகளில் சாதனை புரியாத போதிலும் பரந்த பேரரசை அமைத்து அரசியல் நிர்வாகம் பொறியியல் சட்டம், கட்டிடத் துறைகளில் அளப்பரிய தொண்டினையாற்றி பிற்கால உலகத்தவர் அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சாதனை செய்துள்ளனர். பொதுவாக நோக்கின் ஐரோப்பிய நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது உரோம நாகரிகம் ஆகும்.

**தகுதி**

முதலில் உன்னுடைய தகுதியை வளர்த்துக்கொள்!
அதன் பின் உன் ஆசையை வளர்த்துக்கொள்.
தகுதியை வளர்த்துக்கொள்ளாமல் உன் ஆசையை
வளர்த்துக்கொள்ளாதே.
வேலையில் உன்னுடைய நேர்மையை எண்ணி
கற்பனை செய்யாதே! – ஆனால்
நேர்மையாக உன்னுடைய கற்பனையைக்கொண்டு
வேலை செய்.


# இலத்திரனியல் கழிவுகள் (E - Waste)



திருமதி. கோமளாரஞ்சிதம் கந்தவேள்
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி


நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் என்பவற்றின் விளைவாக பலதரப்பட்ட மின்னியல், இலத்திரனியல் சாதகங்கள் பாவனையில் உள்ளன. இச்சாதனங்களினால் மனிதர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனுகூலங்கள் சொல்லில் அடங்காதவை. தொழில் நுட்ப முன்னேற்றத்தின் துரித வளர்ச்சியின் வெளிப்பாடாக மின்னியல், இலத்திரனியல் சாதனங்கள் நாளுக்கு நாள் நவீனமடைந்து புதிய பரிமாணத்தில் வந்த வண்ணமுள்ளன.

உலக மயமாக்கலின் நேரடி விளைவாக காணப்படும் இத் தொழில் நுட்ப சாதனங்களின் அபரிமித பயன்பாடு நாகரிகமாக / கௌரவமாக தோன்றி அவற்றின் பால் அனைவரையும் ஈர்க்கச் செய்துள்ளது.




புதிய பொருட்கள் வரும் போது பழைய பொருட்கள் ஒதுக்கப்பட்டு ஓரிடத்தில் சேகரித்து வைக்கப்படும் அல்லது சாதாரண குப்பைகளுடன் குப்பையாக வீசப்படும் அல்லது எரித்து அழிக்கப்படும். பாவனைக்காலம் முடிவடைந்த அல்லது பழுதுபார்க்க முடியாத கழிவாக அகற்றப்படும் மின் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் (E - Waste) எனப்படும். இந்த E - Waste பொருட்களின் விபரீதமான விளைவுகளை அறியாது மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான கழிவு முகாமைத்துவம் மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் பாரிய பிரச்சனையாக அமைகின்றது.


இந்த மின், இலத்திரனியல் சாதனங்களில் இயற்கை அழிவுக்குட்படாத பல உலோகங்கள் காணப்படுகின்றன. இவ் உலோகங்கள் பார உலோகங்கள் எனப்படுகின்றன. இவற்றுள் இரசம், கட்மியம், ஆசனிக், குறோமியம், ஈயம் போன்ற உலோகங்கள் மனிதனுக்கும் சூழலுக்கும் மிகவும் ஆபத்தானவை. E - Waste பொருட்கள் சூழலில் வீசப்படும் போது பார உலோக கசிவுகள் மண்ணை அல்லது நீரை சென்றடைந்து நீண்ட காலம் நிலைத்திருக்கும். இவை அழிவடையாது உணவுச் சங்கிலிக் கூடாக கடத்தப்பட்டு மனித உடலை சென்றடையக் கூடியவை.



வீடுகளில் காணப்படும் E - Waste பொருட்களாக கையடக்க தொலைபேசிகள், தொலைபேசி பற்றிகள், தொலைக்காட்சி, வானொலி, DVD Player, CD , Foatable CD, Memory Chips, Degital Camera, Vedio Game, Rice cooker, CFL Bulb, Joy Stick, Remote, U. tube divices குளிர்சாதனப் பெட்டிகள், கசட்டுக்கள், புளோரசன் bulbs மற்றும் குழந்தைகளின் இலத்திரனியல் விளையாட்டுப் பொருட்கள் (Electronics toys) என்பவற்றைக் குறிப்பிடலாம்.




அவ்வாறே அலுவலகங்களில் காணப்படும் E - Waste பொருட்களென Printer, Scannaer, Telephone, Speaker, photocopier, Fax machine, Card Reader, Finger print mechine என்பவற்றையும் மற்றும் Monitor, Keyboard, Mouse, Mother board, Network card, Memory card, Flash drive, Floppy Disk, CD drive, Laptop, Desktop PC என்பன குறிப்பிடத் தக்கன.



இவ்விலத்திரனியல் சாதனங்களின் சேர்கிற்றுக்களில் (Circuites) பார உலோகங்களுடன் 38 இற்கும் மேலான ஆபத்து மிக்க இரசாயன பொருட்கள் (Chemicals) பயன்படுத்தப்படுகின்றன. இவை மனித உடலின் நரம்புத்தொகுதி, ஈரல், சிறுநீரகம் என்பவற்றை பாதிக்கச் செய்கின்றன. நரம்புத்தொகுதி வளர்ச்சி இன்றி பிள்ளைகள் பிறத்தல், நுண்ணறிவு, ஞாபகசக்தித் திறன் பாதிப்புறுதல், தோல் நோய்கள், காசினோமா போன்ற பாரிய பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடியவை.

சிறுவர்கள் பழுதடைந்த Mobile phones, CD, Remote, பற்றிகள் (batteries) என்பவற்றை விளையாட அனுமதித்தல் ஆபத்தானதாகும். Mobile phone சேர்கிற்று களில் (Circuits) ஈயம், இரசம், நிக்கல், கட்மியம், லித்தியம், போன்ற உலோகங் கள் காணப்படுகின்றன. இந்த Mobile phone கள் பழுதடையும் போது அல்லது உடையும் போது இவற்றிலிருந்து வெளி யேறும் பார உலோக கசிவுகள், வாயுக்கள் என்பன குழந்தைகளுக்கு மட்டுமல்லாது வீசி எறியப்பட்ட நிலத்தினையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.




தொலைபேசி பற்றிகள் (Batteries), CFL மின்குமிழ்கள், Fluoreccent tubes, TV என்பவற்றில் 3.5 - 5.0 mg இரசம் காணப் படுகின்றது. இந்த உபகரணங்கள்


பழுதடைவதனால் அல்லது உடைவதனால் வெளியறும் இரச ஆவியினால் நுரையீரல் பாதிக்கப்படல், கண் நோய்கள், பார்வைக் குறைபாடு, இரத்தக் கொதிப்பு, அலேஜிக், தோல் நோய்கள் என்பன ஏற்படும்.

நிலத்தில் சிந்தப்படும் ஒரு துளி இரசம் அறுபது வருடங்கள் அழிவடையாது அந்நிலத்திலிருந்து அங்கிகளுக்கும் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இலத்திரனியல் கழிவுகளை எரிப்பதனால் பாதிப்பு பன்மடங்காக அதிகரிக்கின்றது. அதாவது கட்மியம், இரசம், ஈயம் போன்ற உலோகங்கள் எரிக்கப்படும் போது அவை சாம்பலாக வளிமண்டலத்தை சென்றடைந்து பின்பு மழை, காற்று போன்றவற்றினால் மீண்டும் நீர்நிலைகள், பயிர்நிலங்கள், புல் நிலங்களைச் சென்றடைவதானால் உணவு சங்கிலிகளின் ஊடாக அதிகளவில் மனிதனில் செறிவடைய வழிவகுக்கின்றது.

இந்த இலத்திரனியல் சாதனங் களில் பெரும்பாலானவை பொலிவைனைல் குளோரைட் (PVC) போன்ற பொலிமர் களால் ஆக்கப்பட்டவை. இவை எரிக்கப் படும் போது உயர் நச்சுத் தன்மையான டயொக்சின் (Dioxins), Brominate Dioxins, பியூரன் (Furan) போன்ற வாயுக்கள் வெளியேறுகின்றன. இவ் வாயுக்கள் Carcinogen போன்ற பாரிய நோய்களினை உண்டாக்கக் கூடியவை.



இன்று இலங்கையில் 15 மில்லி யனுக்கும் மேற்பட்ட மக்கள் Mobile phone களை பயன்படுத்துகின்றனர். இவற்றுக் குரிய பற்றிகள் பாவனையின் பின்னர் எவ்வாறு அகற்றப்படுகின்றன? வருடம் தோறும் இலங்கையில் 7 10 மில்லியன் CD கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இப் பாரிய தொகையாக காணப்படும் இரசத் தினாலும் வேறு பல இரசாயனப் பதார்த்தங் களாலும் பூச்சிடப்பட்ட CD கள் எவ்வாறு கழிவாக அகற்றப்படுகின்றன?



உலகளாவிய ரீதியில் காணப்படும் E Waste இல் 12.5% கழிவுகள் மட்டுமே உரிய முறையில் கழிவு முகாமைக்கு உட் பட்டு மீள் சுழற்சிக்கு அனுப்பப்படுகின்றது என புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 87.5% E Wasteகள் வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஏதோ ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனை விட அறிந்தோ அறியாமலோ ஒருபகுதி E Waste சூழலில் சாதாரண குப்பை மேடு களில் வீசப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இவற்றின் தாக்கத்திற்கு உட்படப் போவது மனித குலமே.

எனவே எமது ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள இலத்

திரனியற் கழிவுகளை உரிய முறையில் அகற்ற தாமாகவே முன்வர வேண்டும். Batteries, Bulb, Remotes போன்றவை சிறிய பொருட்கள் தானே என அசட்டை செய்யக் கூடாது, அவை நச்சூட்டப்பட்ட ஆட் கொல்லிகளாகும். இந்த இலத்திரனியற் கழிவுகளை சாதாரண குப்பைகளுடன் சேரவிடாது தனியான ஒன்று சேர்த்து பொதியாக்கி, இலத்திரனியல் கழிவுகள் சேகரிக்கப்படும் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

பிரதேச சபைகள், மாநகர சபை கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சுற்றாடல் காப்பு நிறுவனங்கள் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வரவேண்டும். பொறுப்புடன் செயற்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமானதும், அவசர மானதுமாகும்.

இலங்கையில் 14 தனியார் நிறுவனங் கள் E Waste சேகரிக்கும் திட்டத்தில் முன்னிலையில் உள்ளன. கிறின் லிங் (Green link), Geocycle, Singer, Abans ஆகிய நிறுவனங்களிடம் எமது வீடு களிலுள்ள E- Waste களை கையளிக்க முடியும். அவ்வாறே Metro politan, E Wis, Virtusa, ABC Trade & Inuestment ஆகிய நிறுவனங்களிடம் அலுவலக இலத்திரனியற் கழிவுகளை கையளிக்க முடியும்.

அத்துடன் பாவனையாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமான காணப் படும் E Waste ஆன கையடக்க தொலை பேசிகள், பற்றிகளை ஸ்ரீலங்கா ரெலிக் கோம், மொபிரல், டயலொக், லங்கா பெல், எடிசெலாற்ட், Hutch ஆகிய நிறுவனங் களிடம் ஒப்படைத்து E Waste களால் ஏற்படும் அபாயத்தை தடுத்து நிறுத்த முடியும்.

எனவே ஒவ்வொரு தனிமனிதனும் காலம் தாழ்த்தாது தங்களிடமுள்ள நச்சு கழிவான இலத்திரனியல் கழிவுகளை இந் நிறுவனங்களினூடாக எமது சூழலில் இருந்து அகற்ற முன்வருவதன் மூலம் நம்மையும் நம் சூழலையும் பாதுகாக்க முன்வருவோமாக.

### கஷ்டங்கள்

கஷ்டங்கள் வரும் ஆனால் அவை ஓரிடத்தில் நிலைத் திருப்பவை அல்ல. கடின உழைப்பும் நல்ல எண்ணங்களும் வெளிப்படும் இடத்தில் கஷ்டங்கள் ஆற்று நீரைப்போல் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக ஓடுவதை உணரலாம்.



கலைப்பிரிவு தரம் 12$^{A}$ (2016) மாணவர்கள்



கலைப்பிரிவு தரம் 12$^{B}$ (2016) மாணவர்கள்



கலைப்பிரிவு தரம் $13^{A}$ (2015) மாணவர்கள்



கலைப்பிரிவு தரம் 13$^{B}$ (2015) மாணவர்கள்



மாணவ தலைவர்கள் (2014)

# 2012 க.பொ.த (உ-த) பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்தில் பயில்வோர்



செல்வி.ரவிச்சந்திரன்
சுவஸ்திகா



செல்வி.ஜெயசேகரம்பிள்ளை
ஜெயப்பிரசாந்தி



செல்வி.தங்கராசா
சிந்துஜா



செல்வி.ஜெயக்குமார்
தேவறாபி

செல்வி.செல்வலிங்கம்
சிவானுஜா



# என்றுமுள தென்தமிழ்



**திருமதி. சிவசோதி ஸ்ரீதரன்**
**ஆசிரியர்,**
**யா/இராமநாதன் கல்லூரி**

மனோன்மணீயம் என்னும் நாடக நூல் இயற்றிய அழியாப் புகழ் பெற்றவர் பேராசிரியர் சுந்தரனார். அந்நூலிலே தமிழ்த் தாய் வாழ்த்தாக அமைந்துள்ள பாடல் இப்பொழுது நாடெங்கும் முழங்குகின்றது. அருமையான மொழிநூற் கருத்தொன்றை அழகாக வெளியிடுவது அப்பாட்டு ஆகும்.

இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள பாரத நாட்டில் பழங்காலம் முதல் இருவேறு குடும்ப மொழிகள் வழங்கி வருகின்றன. ஒன்று ஆரியம் மற்றொன்று தமிழ். ஆரியமும் தமிழும் தொன்மை வாய்ந்த செம்மொழிகள் இவ்விரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றின. இம்மை மறுமை என்னும் இருமையும் பயக்கும் அருள் நூல்களை உடையன. ஆதலால் "இரு மொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுளதோ?" என்று இரு மொழிப் புலமை வாய்ந்த பெரியோர் கருதுகிறார்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குச் சிறப்பாயிரம் அளித்த பெரும் புலவர்களுள் ஒருவராகிய வண்ணக்கன் சாத்தனார்

*"ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து*
*தேனின் இது*
*சீரியது என்றொன்றைச் செப்பரிதால்*
*ஆரியம்*
*வேதமுடைத்து தமிழ் திருவள்ளுவர்*
*ஓது குறட்பா உடைத்து"*

என்று பாடினார். ஆரியத்தையும் செந்தமிழையும் ஆராய்ந்து சீர்தூக்கி இதனினும் இது சிறந்தது என ஒன்றை விதந்து கூறுதல் எவர்க்கும் எளிதன்று, எனினும் ஆரிய மொழியில் வேதம் உள்ளது, தமிழ் மொழியில் திருக்குறள் உள்ளது என்று கூறுதல் சாலும் என்பது சாத்தனார் கருத்து.

சங்ககாலம் என்று சொல்லப்படுகின்ற பழங்காலத்திலும், சமயச் சான்றோர்கள் வாழ்ந்த தேவார காலத்திலும் "ஆரியமும் தமிழும் ஒன்றுக்கொன்று சரிநிகர் சமமானது" என்னும் கொள்கையே தமிழ் நாட்டில் பரவி இருந்தது.

இதனாலேயே ஈசனை "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்று பாடினார் நாவுக்கரசர். ஆரியம் வடபுலத்தில் வழங்கிய மொழியாதலால் வடமொழி என்று பெயர் பெற்றது. தமிழ் தென் புலத்து வழங்கிய மொழியாதலால் தென் தமிழ் என்று வழங்கப் பெற்றது.

வடமொழியாகிய ஆரியத்தினின்றும் பல மொழிகள் பிறந்தன. அவ்வாறே தென் மொழியாகிய தமிழினின்றும் பல மொழிகள் தோன்றின. எனவே தொன்மையிலும் செம்மையிலும் ஒன்றையொன்று ஒத்திருந்த இவ் இரு மொழிகளும் தாய்மை நலமும் பெற்று தமிழ் நாட்டிலே திகழ்ந்தன. ஆயினும் தாய்மையில் ஒரு வேற்றுமை உண்டு. வட நாட்டில் பல மொழிகளை ஈன்ற தாய் இறந்துவிட்டாள், தென் நாட்டில் பல மொழிகளை ஈன்ற தாய் இன்றும் இளமை குன்றாது இருக்கிறாள். இச் சீர்மையை

அறிந்து வாழ்த்துகின்றார் மனோன்மணீய ஆசிரியர்,

*"பல்லுயிரும் பலவுலகும்*
*படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்*
*எல்லையறு பரம் பொருள் முன்*
*இருந்தபடி இருப்பது போல்*
*கன்னடமும் இருப்பது போர்*
*காலின் மலையாளமுந்துளுவும்*
*உன்னுரத்து உதித்தெழுந்தே*
*ஒன்று பல ஆயிடினும்*
*ஆரியம் போல் உலக வழக்கு*
*சீரிளமைத் திறம் வியந்து*
*செயல் மறந்து வாழ்த்துதுமே......!"*

என்று அழகிய பாட்டில் தமிழின் தனிச் சிறப்பு நன்றாக உணர்த்தப்படு கின்றது. திராவிட நாட்டில் வழங்கி வரும் கன்னடம் முதலிய நான்கு மொழிகளும் தமிழ்த்தாயின் சேய்கள் என்று திட்டவட்ட மாகக் கூறுகின்றார். இக் கொள்கையை இன்று கன்னடரும், தெலுங்கரும், மலை யாளத்தாரும், துளுவரும் ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும் வருங்காலத்தில் திராவிட மொழி நூல் ஆராய்ச்சியின் பயனாக இவ் வுண்மை நன்கு நிலை பெறும் என்பதில் ஐய மில்லை. இந்த நான்கு சிறந்த மக்களையும் ஈன்ற நற்றாய் இவ்வுலகெங்கும் தன்மையை எண்ணி இறைஞ்சுகின்றார் கவிஞர். இவ்வுலகில் உள்ள சாரசரங்களை எல்லாம் ஈன்ற பரம்பொருளாகிய இறைவன் என்றும் ஒரு படியனாய் இருத்தல் போன்று, மூவாச் சாவா மொழியாகிய தமிழும் "என்று முள தென் தமிழாய்" வாழ்கின்றது என்று போற்றினார்.

சங்கத்தில் அரங்கேறிய தமிழ் நூல்களில் சாலச் சிறந்த நூல்கள் என்று தமிழ் அறிஞர்களாலும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாண்டி நாட்டுக் கட்டுத் தமிழ்ப் பெருமையை பாடப்போந்த கவிஞர் ஒருவர்,

*"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை"*

என்று போற்றிப் புகழ்ந்தார். இவ்வுலகில் எத்தனையோ செம் மொழிகள் பிறந்தன. செழித்து வளர்ந்தன. நாளடை வில் முதுமையுற்று நாட்டு வழக்கற்று ஏட்டில் அடங்கிவிட்டன. ஐரோப்பிய நாட்டு செம்மொழிகளாகிய இலத்தீன், கிரேக்கம் என்னும் இரு மொழிகளும் உலக வழக்கந்த செம்மொழிகளே ஆகும். பாரசீக நாட்டு பழைய மொமியும் சுமெரிய நாட்டு தொன் மொழியும் வழக்காறு அற்ற மொழிகளே ஆகும்.

இத்தகைய செம்மொழி இனத் தைச் சேர்ந்தது ஆரியம் என்னும் வட மொழியும் தென்மொழியாகிய தமிழ் தொன்மை வாய்ந்த மொழியே ஆயினும் இன்றும் வளத்தொடு நாட்டு வழக்கமும் உடையதாய் விளங்குதல் ஒரு தனிச் சிறப்பேயாகும்.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனாய் வாழ்கின்றான். இறைவன் என்று பாடினார் மணிவாசகர் அவ்வண்ணமே பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் பசுந்தமிழை வியந்து போற்றி னார் சுந்தரனார்.

என்றுமுள தென் தமிழை என் றென்றும் எம்முயிரினும் இனியதாய் போற்றி தமிழனாய் வாழப் பேறு பெற்றவராக வாழக் கடவோமாக.

*வாழ்க தமிழ் வளர்க நம் மொழி*
*வாழிய நீடுழி*

# GOOD MANNERS

Mrs.P.Kamsananthy
Teacher of English,
J/Ramanathan college,
Chunnakam.

Manners form a part of everyman. Good manners make a man and bad manners undo him. A polite, cultured and well manners man is liked and repeated by everyone. Manners are certain accepted ways of behaving in the society. Social behaviour is called manners. They are determined by customs and differ from society to society.

Good manners begin at home. They are taught,learnt and practised at home. Respect for the parents is very necessary. Children help mothers at home. The school children travel to their schools everyday by bus. A good student will offer his seat to women, the sick and old people. He obeys the bus rules and does not jump on or off from the bus.

A good child is always polite to his/her teachers. They respect them and greets them every morning. Manners include the regularity of home work. The role of manners come into play in public or in the company of friends. One should not talk very loudly. They must listen to other's viewpoint and respect them.

Use of foul language and abusive words is unbecoming of a good mannered child. The use of a dirty word in every sentence is unnecessary. It spoils the beauty of a language and often leads to quarrels.

Papers, sweet wrappers are strewn all over the roads and pavenents. A person who is educated in the proper way will use a dusbin instead. The pedestrians use the zebra crossing to cross the roads safer. The physically handicapped should be given help in crossing the road. The sportsmanship and fair play are a result of good education. Manners become manifest from every activity of ours. They help us to lead a proper and disciplined life. If every one obeys these rules, life will become very pleasant to live.

# Morpheme

**Mrs. Sunedra Sathiyalingam**
**Teacher,**
**J/Ramanathan college.**

The basic of units of analysis recognized in morphology are called "morpheme". In other words morpheme is a minimal unit of meaning or grammatical function. They can not be broken down further into recognizable or meaningful parts. Morpheme consists of phonemes. For instance, the morpheme (i)consists or morpheme/i/and/ŋ/and also morpheme in general are larger than phonemes. In fact they are composed of one or more phonemes. Thus, 'singing' would be said to be made up of the phonemes/ s/ ,/ i/ ,/ ŋ/ ,/i/,/ŋ/.

We can recognize the English word-forms such as 'talks' , 'talked' and 'talking' must consist of one element 'talk' and a number of other elements such as '-s', 'er' and 'ing'. All these elements are described as morphemes. For instance, when we take the world 'reopened', it consists of three morphemes. Here the world 'open' is the root world 're 'is the minimal unit of meaning and '-ed' is a minimal unit of grammatical function that is indicating past tense.

Morphemes occur as forms in a language strictly speaking however morphemes, like lexemes (and phonemes) do not accur: morphemes are abstract elements of analysis and what actually occurs is a phonetic (or orthographic) from which realize the morphemes. When the phonetic (or orthographic) strings which realize the morphemes are ssegment able, these are termeed 'morphs'. In the world untouchables thus in the form un-touch-able-s, the segmented portions are morphs, each of which represenes a morpheme. A morph can be defined as a segmented of a world-form which respresents a particular morpheme.

When a particular morpheme is not represented everywhere by the same morph, but by different morphs in diffeent environment, these alternative representations are called 'allomorphs'.

i.e An allomorph is phonetically, lexically or grammatical conditioned member of a set of morph representing a particular morpheme.

1) Plural morpheme 's'

There are three phonologically different elements though is the same morphemes 's'.

The 's' in cats - /s/
The 's' in beds - /z/ → allmorph
The 's' in sizes - /iz/

2) Past tense form 'ed'

- Ed is a past tense marker but the 'ed' on the below one is phoetically different.

The 'ed' in tried - /d/

The 'ed' in walked - /t/

The 'ed' in painted - /id/

3) Opposite forms such as 'im', 'in', 'dis', 'ir'

Impossible -/impesibl/

Indirect -/indirekt/

Illogic -/ilcdzik/

Disarrange -/iregual/

All these allmorphs are phonological conditioned.

4) Genetive orpossessive case

Dog 's' - /z/ → allmorph

Girl 's' - /s/ → allmorph

Note:

A lwxical item as deer-sheep has the same forms for number singular/ plural hence is classified as zero morphemes and is represented by the symbol. /o/

# அலுவலக வெற்றிக்குச் சில அறிவுரைகள்

- சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்குச் செல்லுங்கள்.
- உங்கள் சக ஊழியர்களுடன் ஒத்துழைத்துப் பணிபுரியுங் கள்.
- நேரத்தை வீணாக்காமல் முடிந்தளவு வேலை செய்யுங்கள்.
- அதிகாரியிடம் பணிவாகப் பேசுங்கள்.
- எப்பொழுதும் முகத்தில் புன்னகையை வைத்திருங்கள்.
- உதவி கேட்பவரைத் தட்டிக் கழிக்காதீர்கள்.
- அனைவரிடமும் நம்புமுணர்வுடன் பழகுங்கள்.
- உங்களிடம் பணிபுரிபவர்களிடம் பொறுமையாக பேசுங்கள்.
- களைத்த தோற்றம் இல்லாமல் எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் தென்படுங்கள்.
- மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கத் தவறாதீர் கள்.
- அலுவலகத்தில் மனம் தளர்ந்தோ, கோபமாகவோ இருப்பதைத் தவிருங்கள்.
- தேவையில்லாமல் யாரிடமும் மற்றவர்களைப் பற்றித் தவறாகப் பேசாதீர்கள்.
- எந்த வேலை கொடுத்தாலும் முடியாது என்று சொல்லாதீர்கள்.
- உங்கள் பணியை எப்பொழுதும் நேசியுங்கள்.

# Role of Information Technology in the Modern world



**Ampalavanar Suganthan**
**Teacher,**
**J/Ramanathan college.**

In the modern world information technology plays a vital role in everone's life. Today we can easily say people can't lead their day today life without the help of information technology. It helps to people to great extent.

When we hear the word information technology we associate it at the once with computer, mobile phones and the internet. Today the world is closely connected and marching forward very fast . because of information technology. But in the past we didn't have many relatives who were living far away from us. We had to travel or write letter. It took several hours or days to reach these places. There were lot of incoviniences invention of computers, mobile phones, e-mail, internet facilities, skype and facebook all have brought the world closer than in the past. Information technology is used in many sectors. Such as trade, transport, communication, health education and science. People travel to abroad for meetings and conferences. Now a days a person can talk or exchange the information throught the internet, skype, facebook and having teleconferency.

Alone with all the advantages there are some disadvantages too that we have to accept. We can borrows good and bad information through internet. But no one is responsible for the information available in it.

Many youngsters and small children are exposed to wrong and harmful information throught this facility. We should take necessary action to control these type of incidents.

It is our duty to select what is good for us and get the maximum benefit out of information technology with out any harm to us and others.

# Collaborative work in independent learning.



Miss J .Vaithilingam
MA (English Literature)

## Introduction

Collaborative work in independent learning has become orthodoxy in learning process. It has been focused by different researchers during the last three decades. Most of the researchers focussed on strategies of collaborative learning, theories, and advantages of collaborative learning and how it could be implemented in the classroom to enhance language learning.

Based upon research findings in both linguistics and psychology, is that learners do not acquire the target language in the order it is presented to them .Language learning is a developmental, organic process that follows its own internal agenda. This has led to the development of collaborative work in independent learning.

## What is collaborative learning?

According to' Johnson (1986) that cooperative teams achieve at higher level of thought and retain information longer than students work individually.

According to 'Gerlach,"collaborative learning is based on the idea that learning is a naturally social act in which the participants talk about themselves. (Gerlach 1994)It is through talking learning occurs.

(Smith and Mac Gregor ,1992 )

Collaborative Learning is an active process whereby students assimilate the information and relate this new knowledge to a frame work of pair knowledge.

## Theories of collaborative learning

The collaborative learning concept is based on the idea that diversity of knowledge and experience positively impacts learning out comes. It is based on JeanPiaget's theory that children learn when they are cognitively ready and on Jean Vygotsky's "Zone proximal development theory."

## How collaborative learning support does accelerated learning?

It also requires that concepts are reformulated so that they become firmly embedded. It provides lot of visual clues, allow students to synthesise information and subsequently pass it on their peers.

Collaborative actives can provide a motivating context and remind everybody that there is a purpose behind skill development .The activities also provide students to consolidate and move to independent learning.

It provides opportunities for reading extended text together and planning extended writing.

In the collaborative learning environment the learners are challenged both socially and emotionally as they listen to different perspectives and are required to articulate and defend their ideas.

Learners begin to create their own unique frame work and not relay solely on an expert's or a text's frame work. Learns have the opportunities to converse with peers, present and defend ideas, exchange diverse beliefs, question other conceptual framework and actively engage

Learns requires a challenge that opens the door for the learn to actively engage his/her peer, and to process and synthesize information rather than simply memorize and regurgitate it.

**Examples of collaborative work**

Collaborative work is a method of teaching and learning in which students' team together to explore a significant question or create a meaningful project. By engaging in meaningful activities such as **problem- solving, discussions, case studies, Debate ,collaborative presentation and project work which usually integrates language skills work through** a number of activities .It has a particular goal and may include planning problem solving and written or oral presentation.

The most common method used in collaborative learning is **Jigsaw activity**. It is a group work activity in which different members of the group have different tasks related to the same topic. First student perform the task individually, then come back to the group to put the information or pieces together. It is called as" Jigsaw puzzle" style.

Project work has been part of educational thinking on experiential learning for the greater part of this century and has influenced the teaching methodology of curriculum subject at the school level.

**Advantages of collaborative work in independent learning**

1. Normal repertoire tends to be **calmer** and more self regulating.
2. Class room responsibilities are shared
3. Activities do take time to prepare both in planning and the trialling of the resources.
4. **Self esteem** Students develop social and academic esteem so they are accepted by peers.
5. **Responsibilities**-It enhance internal sense of control .Students take initiatives and feel responsible for the out comes and feel more effective Also they have choice and more input.
6. **Develop social skill**-Students develop social skill such as listening to others , giving opinions, taking turns solve problems, finding solution, mutual understanding and caring for others.
7. **Critical thinking**-Encourage each others thinking, mediate and come to conclusion when people are grouped with students of diverse background and learn how to focus on common goal

8. **Equal participation**

9. It increase cross-race friendships and mutual understanding

10. Can Brainstorm ideas and generate larger number of responses to a single question.

**Teacher role in collaborative work**

Teachers role is to create an environment to work collaboratively where there are plenty of opportunities stimulating context for learners to work with others where they feel to share the emerging ideas.

1. They have to do more planning and design work in advance.

2. Form different kind of groups for different purpose.

3 Use different methods.

Work with students move around the class and have discussions.

4. Train peers to teach peers.

5 Give more feed back on the process of learning and teaching.

Conclusion: This article has discussed the implementation issues in collaborative work in independent learning from the perspective of the learner and the teacher. It has been suggested that teachers who envisage adopting collaborative work should think carefully of the implementation of this choice

As Richardson (1976) pointed out "group activities whether conducted in the L1,L2,L3 or whatever , give students an opportunity to gain some self-knowledge ,rather than language- knowledge.

**References and Bibliography**


1. Ellis,R .1994.The study of second Language Acquisition. Oxford: Oxford University press

2. Foster, P.and P.Skehan.1996."The influence of planning and task type on second language performance"

3. Grille and Keith, M.2004.Year of the Young Learner: Oxford: Oxford University Press

4. John Rogers. Group Activities for language learning.

5. Skehan, P.1998.A cognitive Approach to language learning.

**Article from online Magazine**

Britishcouncil.org/learnenglish

http://www.onestopenglish.com

www.johnsesl.com

http://eltj.oxfordjournals.org

Kugan online magazine, winter.1999.

Assessment and collaborative Learning: htpp://bit.ly/d3ey5


Educause/Learning initiative.

www.educause.ed/eli/collaborative

Collaborative learning structures strategies and technique.

http://www.gdre.org/kmgmt/c-learn/methods/htm/.

# இசைக்கலை - இசைக்கருவிக்கு உயிரூட்டும் மிருதங்கம் ஓர் அறிமுகம்



**திரு.நி.மதிரூபன்,**
**ஆசிரியர் (இசை),**
**யா/இராமநாதன் கல்லூரி.**

உலகத்தின் இயக்கம் காலவரையறைக்குட்பட்டது. இதில் நீர், நிலம், தீ, காற்று, வானம் என்கின்ற பஞ்சபூதங்களின் பணிகளால் தோன்றும் மாற்றங்களால் நாதம் உண்டாகின்றது. நாதம் எப்படித் தோன்றுகிறது? அணுக்களின் அசைவினால் ஒலி தோன்றி அந்த ஒலியினால் வெளிப்படும் இனிய ஓசையே நாதமாகிறது. இந்த நாதத்தினால் உலகில் உள்ள உயிர்கள் உய்கின்றன என்றால் மிகையாகாது. இனிய ஓசையை உடையது என்பதே இசையாகும்.

ஒரு மொழியின் தொன்மை, அதன் பாரம்பரியத்தை விளக்கும் பழமையான இலக்கியங்களைக் கொண்டே தீர்மானிக்கப் படுகிறது. இற்றைக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் தோன்றிய திருக்குறள் போன்ற அரிய நூல்களில் உள்ள கருத்துக்களில் எல்லாக் கலைகளிலும் உள்ள நுட்பங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு ஆராயும்போது தமிழர் பண்டைக் காலத்திலேயே மிகுந்த நாகரிகம் உடையவராய் இருந்தனர் என்பது தெளிவாக விளங்குகின்றது.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய இரு பெரும் நூல்களிலிருந்தும் நாம் காணும் இசைக் குறிப்புகளினால் ஐந்நூறு ஆண்டுகட்கும் முன்பே கூட தமிழ் மக்கள் இசைக்கலையில் சிறந்து விளங்கி இருக்கக் கூடும்.

*"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு"*

என்பார் தெய்வப் புலவர். இசைபட வாழ்தல் என்று அவர் கூறவேண்டுமா! புகழ் பட வாழ்தல் என்றே சொல்லியிருக்கலாமே! இசையும், வசையும் அக்காலத்தில் பாணர்களால் பாடலாகப் பாடப்பட்டு வந்ததாலேயே புகழுக்கு இசை என்று பெயர் வந்தது.

## இசைக்கலையும் இசைக்கருவிகளும்

இசைக்கலையின் சிறப்பு என்னவென்றால் இசை, மழையைப் பொழிவிக்கும், மக்களை மக்களாக்கும், மழலையை உறங்கச் செய்யும், சோகத்தைப் போக்கும், சுகந்தரும், நாதத்தை வரவழைக்கும், கள்வர்களும் கூட இசை கேட்டு மயங்கித் தம் தொழிலையே சற்று நேரம் மறந்திருப்பார் என்பதெல்லாம் மட்டுமல்ல, மேலே சொன்ன பாணர்கள் குழுவினால் ஒரு நாட்டின் நாகரிகமும் பெருமையும் வேற்று நாட்டுக்கும் பரவக் காரணமாயிருந்தது என்பதே மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

இசையால் இலக்கியம் செழித்தது.
இசையால் பகைமை ஒழிந்தது.
இசையால் புதிய படைப்புக்கள் பிறந்தன.

இசையால் மக்களிடையே விழிப்புணர்ச்சி தோன்றியது.

எனப் பல்வேறு தனித்தன்மை மிக்க சிறப்பியல்புகளைக் கொண்ட இத்தகைய ஒப்பற்ற இசைக்கலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை அந்த இசையை எழுப்பத் துணையாக இருந்த இசைக் கருவிகளேயாகும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவை நான்கு வகைப்படும்.

1. தோற்கருவிகள்
2. துளைக் கருவிகள்
3. நரம்புக் கருவிகள்
4. கஞ்சற் கருவிகள்

தோற்கருவிகளில் மிகவும் சிறப்பானதும் நந்தியால் வாசிக்கப்பட்டதும் மிருதங்கமாகும்.

### தோற்கருவிகளில் மிருதங்கம்


மிருதங்கள் தேவ வாத்தியங்களில் ஒன்றாகும். வரலாற்றுக் கருவிகளுள் வீணா, வேணு, மிருதங்கம் என்பன அதி முக்கிய மானவையாகும். இசைக் கருவிகளுள் சர்வ மத வாத்திய வகையைச் சேர்ந்த கருவி யாகும். உலகிலே சகல ஜீவராசிகளையும் தனது இசைச் சக்தியால் இறைவனுடன் இசைவுபடச் செய்யவல்ல ஓர் சக்தி பொருந்திய வாத்தியமாகும். இது மத்தளம், தண்ணுமை, முட்டு, முழவு, ஆனந்த வாத்தியம், நந்தி வாத்தியம் போன்ற காரணப் பெயராலும் காலத்திற்கேற்ப அழைக்கப்பட்டு வருகிறது.

இது அமைப்பிலும் வாசிக்கப்படும் போது மிருதுவான நாதத்தைக் கொடுக்கிற காரணத்தினாலும் மேலும் மண்ணினால் ஆக்கப்பட்ட சாதம் எனும் பகுதியினைப் பிரதானமாகக் கொண்டிருப்பதாலும் மிருதங்கம் என்னும் பெயரைப் பெறுகிறது. இசை எனப் படுகிற நாத ஒலிகள் யாவற்றிற்கும் ஆதார மாக நிலம் போல அமைவதால் மத்தளம் எனப் பெயர் பெற்றது. அத்துடன் இரு கை களிலும் அடித்து வாசிக்கப்படுவதனால் மரத்தனம் எனப்படுகிறது. அத்துடன் மிருது + அங்கம் = மிருதங்கம் எனப்படுகிறது.

இது பற்றி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் "சொகசுகா மிருதங்க தாளமு" எனும் கீர்த்தனையில் எடுத்துக் கூறி யுள்ளார். அம்பிகைக்கு பிரியமானதான இவ் வாத்தியத்தின் பெருமையை மதிப்பிடு மளவுக்கு "வீணா, வேணு, மிருதங்கரஸிகா" என தேவிமஹாத்மியத்தில் வர்ணிக்கப் பட்டுள்ளது.

### மிருதங்கம் - அமைப்பு விளக்கம்

**படம்**




மிருதங்கம் மரத்தினாலும், தோல் களினாலும் ஆக்கப்பட்ட நீண்ட உருளை வடிவமுடையதாகும். அது வலந்தரை, இடந்தரை, கட்டை எனும் மூன்று பகுதி களையுடையது. வலந்தரை மூட்டிற்கு "புடா" எனவும் இடந்தரை மூட்டிற்கு "தொப்பி" எனவும் அழைக்கப்படுகிறது.

வலந்தரை மூட்டில் வெட்டுத் தட்டு, கொட்டுதட்டு, உட்காரத்தட்டு ஆகியவற்றை முறையே மேலிருந்து கீழாக ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்டு சாட்டை வாரினால் இணைத்துப் பின்னப்பட்ட ஒரு அங்கமாகும். இந்த மூட்டானது 48 சாட்டை வார்க்கண் களையும் பின்னலின் வார் கோர்க்கப்படு கின்ற 16 கண்களையும் உடையது. கொட்டுத்தட்டின் மேற்புறத்தே நடுப்பாகத் தில் 03 அங்குல விட்டமுள்ள சாதம் பூசப் பட்டிருக்கும். இதன் மூலமே மிருதங்கம் இனிமையான நாதத்தினை அளிக்கின்றது. மிருதங்கத்தின் இடது புறப் பகுதியான இடந்தரை மூட்டில் தோல்கள் பொருத்தப் பட்டுள்ளன. வலந்தரையினைப் போன்று வெட்டுத் தட்டுக்கள் இரண்டினையும் உட் பாகத்தே தொப்பித் தோலினையும் உடை யது. இதன் நடுவே நீரில் பிசைந்த கோதுமை றவையை அல்லது சாம்பருடன் கலந்த சோற்றுப் பசையை நீரில் நனைத்து வைத்து இடது கையினால் விரல்களைச் சேர்த்து தட்டும்போது "தோம்" எனும் நாதம் உண்டாகும். இது குளிர்மையான நாதத் தினைத் தருகின்றது. மற்றும் இதன் முக்கிய மான பகுதியான கட்டை சந்தனம், பலா, கொண்டல், அகில், வேம்பு, தென்னை, மாவிலங்கை ஆகிய மரங்களில் செய்யப் படுகிறது. இதன் விளிம்புக் கனம் 01 அங்குலம் ஆகும். தக்கு சுருதிக்குரிய கட்டையாயின் 24" - 25" வரையில் இருக்கலாம். சுற்றளவு 36" - 39" வரையில் இருக்கலாம். வலந்தரைவாய் விட்டம் 6 ¾ " - 7" வரையும் தொப்பிவாய் விட்டம் 7 ½" வரையும் இருக்கலாம். எச்சு சுருதிக் கட்டை யின் நீளம் 20" - 22" வரையும் வலந்தரை விட்டம் 6¼" - 6½" வரையிலும், தொப்பி வாய் விட்டம் 6¾" - 7" வரையிலும் காணப்படும். கட்டையானது கோயில் மணியோசை கேட்ட மரத்தில் ஆக்குவது நல்லதாயிருக்கும். இதற்கு "அரடா" எனவும் பெயருண்டு.

## இசையரங்கும் மிருதங்கமும்

இசையரங்குகளில் மிருதங்கம் பக்க வாததியமாகவும் தாள வாத்தியமாக வும் அங்கம் வகிக்கிறது. ஆனால் தாள வாத்திய அரங்குகளில் மிருதங்கமானது முதலிடத்தை வகிக்கின்றது. அதாவது மிருதங்கம் முதலில் ஆரம்பித்து வாசித்துத் தீர்மானம் வைத்த பின்னரே ஏனைய தாள வாத்தியங்களான கஞ்சிரா, கடம், டொலக், தவில், முகர்சிங் போன்றவைகள் ஒன்றன் பின் ஒன்றாக கிரமந்தவறாமல் வாசிக்கப் படுகின்றன. மிருதங்கத்தில் எம்மாதிரியான ஜதி வாசிக்கப்படுகின்றதோ அவைகளைப் பின்பற்றியதாகவே உபதாள வாத்தியங் களும் ஜதி, டேகா, பரன்கள் போன்ற வற்றை வாசிக்கின்றன. இப்படி மாறி மாறி வாசிக்கையில் வரிசையாக ஆவர்த்தன அட்சரக் கணக்குகளில் குறைப்பு வாசிக்கப் பட்டும் இறுதியில் எல்லா வாத்தியங்களும் ஒன்று சேர்ந்த பரன்கள் சர்வலகு வாசித்தும் ஒரே மாதிரியாக மோராக்கோர்வைகளை வாசித்து முடிப்பார்கள்.

இசையரங்குகளில் மற்றைய தாள வாத்திய இசையரங்குகளிலும் பார்க்க சில முக்கிய பங்கு மிருதங்கத்திற்கு உண்டு. குறிப்பாக வாய்ப்பாட்டு அரங்குகளில் சுருதி லயத்துடன் கூடிய மெருகூட்டும் வாசிப்பாக வும் அரங்கில் இடம்பெறும் சங்கதிகளுடன் சேர்ந்தும், இணைந்து வாசிக்க முடியாத நெருடலான சங்கதிகளின்போது சர்வலகு மெல்லின வல்லினமாக வாசிக்க வேண்டிய கடப்பாடு அவசியமாகின்றது. வாத்திய இசையரங்குகளில் கும்காரம் சேர்த்து மிருதுவான ஒலியுடனும் வாசிக்க வேண்டிய நிலை. நாட்டிய நிகழ்வுகளில் பாடல்களை ஒற்றியும் லயம் தவறாமல் நட்டுவாங்கம், நடிகர் பாத அசைவு என்பவற்றிற்கேற்ப ஜதி களை வேண்டிய இடங்களில் உணர்ச்சி

தரும் வகையில் அழுத்தமாக வாசிப்பது அவசியமாகின்றது. எனவே மிருதங்க கலைஞர் பல்வகை நிகழ்வுகளுக்கும் ஏற்ற வாறு தன்னையும் இசைக் கருவியையும் தயாராக வைத்திருக்க வேண்டிய நிலையை யுடையவனாக அமைய வேண்டியுள்ளது.

**மிருதங்கக் கருவியினைக் கையாண்டு அமரத்துவம் அடைந்த நம் நாட்டுக் கலைஞர்கள் சிலர்,**

| | | |
|---|---|---|
| அச்சுதன் | - | கொழும்பு |
| வே.அம்பலவாணர் | - | நாச்சிமார் கோவில் |
| பொன்.ஆத்மானந்தா | - | நல்லூர் |
| ஆறுமுகம்பிள்ளை | - | மூளாய் |
| எஸ்.என்.இரத்தினம் | - | புத்துவாட்டி |
| கணபதிப்பிள்ளை | - | நல்லூர் |
| ஏ.கணேசசர்மா | - | கொழும்பு |
| எஸ்.கணேசஐயர் | - | கோப்பாய் |
| கே.சங்கரசிவம் | - | இணுவில் |
| எஸ்.சுப்பையாபிள்ளை | - | யாழ்ப்பாணம் |
| என்.தங்கம் | - | யாழ்ப்பாணம் |
| தட்ஷணாமூர்த்தி | - | அளவெட்டி |
| சி.எஸ்.மணிபாகவதர் | - | நல்லூர் |
| வி.மாசிலாமணி | - | இணுவில் |

## தமிழ்த்தொண்டாற்றிய அறிஞர்கள் சிலர்

**திருவள்ளுவர்:** உலகப் பொதுமறையாம் திருக்குறளை அருளிய சான்றோர் திருவள்ளுவர். எந்நாட்டவர்க்கும் எம்மொழியினர்க்கும், எவ்வினத் தவர்க்கும், எக்கட்சியினர்க்கும், எக்காலத்தவர்க்கும் பயன்படும் திருக்குறள் என்ற தெய்வத்தன்மையுடைய நூலை அருளினார்.

**ஔவையார்:** நல்லிசைப்புலமை மெல்லியலாராகிய ஔவையார் தமிழ் மக்களுக்கு வேண்டிய ஒழுக்கங்கங்களையும் அறிவுரைகளையும் இனிக்க இனிக்க இனிய தமிழில் பாடியவர்.

**கம்பர்:** படிக்கப் படிக்க, பாடப் பாட, நினைக்க நினைக்க இன்பம் தரும் இனிய பாடல்களில் இராமாயணத்தைப் பாடித் தமிழ்த்தாய்க்கு அணி செய்தவர்.

**பாரதியார்:** பாரதியை அறியாத தமிழர் இருக்க மாட்டார். ஆங்கிலேய அடக்கு முறைக்குட்பட்டு, அடிமை மோகம் கொண்டு அல்லல் உற்றுக் கிடந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பி விடுதலை வேட்கையை உண்டாக்க எளிய இனிய உணர்ச்சி மிக்க தேசியப் பாட்டுக்களையும், பிற பாட்டுக்களையும் இயற்றினார்.

**பாரதிதாசன்:** பாரதி காட்டிய வழியைப் பின்பற்றி, புரட்சிக் கருத்துக்களை இனிய பாடல்களில் அமைத்துப் பாடிய புரட்சிக் கவிஞரே பாரதிதாசன் ஆவார்.

# இடதுசாரி இயக்கம்

செல்வி வே.கஜேந்தினி
13^A கலைப்பிரிவு (2015)
யா/இராமநாதன் கல்லூரி

இலங்கையின் கட்சிமுறை வரலாற்றில் இடதுசாரிக் கட்சிகளின் தோற்றம் குறிப் பிடத்தக்கது. ஆயினும் இடதுசாரி இயக்கம் இலங்கையின் கட்சிமுறை வரலாற்றில் குறுகிய வரலாறு ஒன்றைக் கொண்டதாகும். 1919 இல் அகில இலங்கை தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட போது அது தொடர்ந்து நிலைபெறவில்லை. கால்மாக்ஸி னுடைய சோசலிச கோட்பாட்டினை தங்களது கொள்கையாக கொண்டவர்களே இடதுசாரிகள் என அழைக்கப்படுவர். இவ் இடதுசாரியானது 1930களின் பின்னரே இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் 1935 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி ஒழுங்கமைந்த கட்சியாகத் தோற்றம் பெற்றது. இலங்கையினுடைய நவீன அரசியல் வரலாறு ஆனது பிரித்தானிய கோல்புறூக்கமரன் சீர்திருத்தத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து வளர்ச்சியடைந்த சீர்திருத்தங்களின் தன்மை 1931 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சர்வஜன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் போன்றவற்றின் விருத்தி காரணமாக இலங்கையில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. அந்த வகையில் இலங்கை வரலாற்றில் முதலாவதாகத் தோற்றம் பெற்ற அரசியல் கட்சியாக “லங்கா சமசமாஜக் கட்சி” காணப்பட்டது.

இலங்கையில் ஆங்கிலக் கல்வி கற்று மேற்படிப்பிற்காக பிரித்தானியாவுக்குச் சென்ற உயர்குழாத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அங்கு செயற்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தாய் நாட்டிற்கு திரும்பி வந்த அவர்கள் தமது நோக்கத்தை அடைவதற்கு மேற்கொண்ட இடதுசாரி நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் பொருட்டு லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. கலாநிதி என்.எம். பெரேரா அக் கட்சியின் தலைவராகச் செயற்பட்டார். சுதந்திரத்தை வென் றெடுத்தல் தொடர்பாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்பற்றிய உடன்பாட்டுத் தன்மை பொருந்திய நடைமுறைக்கு எதிராக இவ் இடதுசாரி இயக்கமானது தீவிர தன்மை உடையதாக காணப்பட்டது.

1920களில் இடதுசாரி இயக்க மானது நகர்ப்புறத் தொழிலாளர்களையும் கிராமப்புறத் தொழிலாளர்களையும் மையப் படுத்திக்காணப்பட்டது. ஆரம்பகாலத்தில் இடதுசாரி இயக்கம் தேசிய சுதந்திரத்தை பெறுதல் சோசலிச முறையை ஸ்தாபித்தல் என்ற இரு நோக்கங்களைக் கொண் டிருந்தது. இலங்கை தேசிய காங்கிரஸ் கவனத்தில் எடுக்காத நகர்புறக் கிராமப் புறத் தொழிலாளர்களை தேசிய சுதந்திரப் போராட்டத்தில் இணைத்ததோடு ஏகாதி பத்திய எதிர்ப்பு போராட்டத்தை பரந்த மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமையும் இவ்விடதுசாரிகளையே சாரும்.

**இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்**

1. 1930களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தநிலை
2. காலனித்துவப் பொருளாதாரம் காரணமாக தொழிலாளர் வர்க்கத் தினரது எழுச்சி
3. மேற்கத்தையக் கல்வியை கற்ற இளைஞர் குழுவினரது எழுச்சி

4. சூரியமல் இயக்கமும் மலேரியா நோய்த் தடுப்பு இயக்கமும்

இதில் பல்வேறு அமைப்புக்கள் பங்களிப்பினைச் செய்துள்ளது. அந்த வகையில் லண்டனில் உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் செயற்பாடு முக்கிய மானது. இதனை விட பின்வரும் இயக்கங் களும் அதன் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தின. அவை

1. வெள்ளவத்தை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
2. சூரியமல் இயக்கம்
3. மலேரியா நிவாரண இயக்கம்
4. லங்கா சமசமாஜக் கட்சி

போன்றனவாகும். அத்தோடு ஏகாதி பத்திய எதிர்ப்பு, அந்நியநாட்டு பொருட் களின் சந்தைகளாக எமது நாடு மாறுவதனை தடுத்தல் போன்றன மிகத்தீவிர மாக முன்னெடுக்கப்பட்டன. இக் கட்சியில் ஏற்படுத்தப்பட்ட முடிவின் பிரகாரம் அரசாங்க சபை தேர்தலில் என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தன ஆகியோர் வெற்றி பெற்று வறிய மக்களின் நலன்களைப் பேணவும் அவர்களது குறைகளை வெளிக் கொணரவும் அரும்பாடுபட்டனர்.

**இலங்கை இடதுசாரிகளின் பிளவு**

1939 ஆம் ஆண்டு முதலாம் உலகமகாயுத்தம் நடைபெற்றது. இதில் கருத்து வேறுபாடு காரணமாக லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து எஸ்.ஏ. விக்கிரமசிங்க குழுவினர் 1940களில் சோசலிச கட்சியினை உருவாக்கினர். பின்னர் இக் கட்சி 1943 இல் இலங்கை கம்யூனிசக் கட்சி என அழைக்கப்பட்டது. இக்கட்சியில் பீற்றர் கெனமன், பொன் கந்தையா, எம்.ஜீ மெண்டீஸ் போன்றோர் பங்காற்றினர்.

1945 இல் இரண்டாம் உலக மகாயுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கொல்வின் ஆர்.டீ.சில்வா, என்.எம்.பெரேரா போன்றவர்களுக்கிடையிலான முரண்பாடு காரணமாக கொல்வின் ஆர்.டீ.சில்வா தலைமையிலான குழுவினர் வெளியேறி 1945 இல் போல்ஷ்விக் லெனின் கட்சியை ஆரம்பித்தனர். 1950 ஆம் ஆண்டளவில் லங்கா சமசமாஜக் கட்சியுடன் போல்ஷ்விக் லெனின் கட்சி இணைந்து கொண்டது. இதனை விரும்பாத பிலிப்குணவர்த்தன தலைமையிலான ஒரு குழுவினர் வெளி யேறி "நவாலங்கா சமசமாஜக் கட்சி" என்ற அமைப்பினை உருவாக்கிக் கொண்டனர்.

1965 ஆம் ஆண்டு கம்யூனிசக் கட்சி வாலிப முன்னணியின் தலைவராக இருந்த ரோஹண விஜேவீர(J.V.P) மக்கள் விடுதலை முன்னணி எனும் அமைப்பை உருவாக்கினர். இது மிகத் தீவிர வாதத்துடன் செயற்பட்ட இயக்கமாகும். 1971, 1989 ஆகிய காலப்பகுதியில் அரசுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டு அடக்கப்பட்டது. பிற்காலத்தில் J.V.Pதனது இருப்பை நிலைநிறுத்துவதற்காக பாராளு மன்ற அரசு அமைப்புக்குள் நுழைந்து அரசியல் தாக்கம் செலுத்துகின்ற கட்சி யாக மாறியுள்ளது. இந்நிலையில் J.V.P இலிருந்து "விமல் வீரசிங்க" தலைமை யிலான குழு பிரிந்து தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்படு கின்றது.

இவ்வாறு இடதுசாரி இயக்கமானது இலங்கை வரலாற்றில் காலத்துக்குக் காலம் கருத்து முரண்பாடுகளினால் பல பகுதிகளாக பிளவுபட்டிருந்தது. இதனால் ஓர் ஆரோக்கியமான அரசியலை நடை முறைப்படுத்த முடியவில்லை. அவர் களுடைய அடையாளங்கள், தத்துவங்கள் முரண்பாடுகளினால் தமது உயரிய நிலையை இழந்துள்ளனர் எனக் கூறலாம்.

# இத்தாலியில் மறுமலர்ச்சி உருவாவதற்கான காரணங்கள்

**செல்வி.சிவகுமார் மிதிலா**
**13^B கலைப்பிரிவு (2015),**
**யா/இராமநாதன் கல்லூரி.**

வரலாற்று ஆசிரியர்களால் ஐரோப்பாவின் கல்விச்சாலை, மறுமலர்ச்சியின் தொட்டில், மறுமலர்ச்சியின் பிறப்பிடம் போன்ற பதங்களால் இத்தாலி அழைக்கப் படுகின்றது. 1453இல் துருக்கியர் கொன்ஸ் தாந்துநோபிளைக் கைப்பற்றியதும் கிரேக்க உரோம இலக்கிய, அறிவியல் படைப்புக்கள் இத்தாலி நோக்கி நகர்ந்தன. இந்நாட்டில் இவை பெரும் வரவேற்பினைப் பெற்றன.

இத்தாலியில் பல நகரங்கள் வணிகத்தில் ஈடுபட்டு பெருமளவு வருமானத்தைப் பெற்று வந்தன. வெனிஸ், மிலான், ஜெனோவா, புளோரன்ஸ் போன்ற நகரங்கள் செல்வமும் செல்வாக்கும் பெற்று வர்த்தகத் திலும் முன்னிலையில் நின்றன. இவை மறுமலர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு தம்மாலான பங்களிப்பினை நல்கின. வட இத்தாலிய நகரங்களான இவை நகர வாழ்க்கையிலும் தொழில் நடவடிக்கையிலும் முன்னேற்றம் கண்டிருந்தன.

புளோரன்ஸ் நகர அரசரான லோரன்ஸ்சோ டி மெடிசி மறுமலர்ச்சி இயக்கத்துக்கு பெரும் உதவி புரிந்தார். கலைஞர்களுக்கு பல்வேறு வசதிகளும் சலுகைகளும் இவரால் செய்து கொடுக்கப் பட்டன. பண்டைய கலை இலக்கியங்களை பாதுகாக்க ஏற்பாடுகளை செய்தார். பாப் பாண்டவர் 5ம் நிக்கலஸ் தன் அரண் மனையில் கிரேக்க உரோம நூல்களை பாதுகாக்கும் பொருட்டு நூல் நிலையங் களையும் நிறுவியிருந்தார்.

இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பல இலத்தீன் மொழியில் தோன்றின. கடினமான மொழியாக காணப் பட்ட இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட நூல்களை சிலரால் மட்டுமே வாசிக்க முடிந்தது. ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில் தேசிய மொழிகளில் நூல்கள் வெளிவந்தன. இத்தாலியில் ஆரம்பத்தில் பிரதேசமொழி களில் நூல்கள் வெளிவந்தன. சாதாரண மக்களும் அங்கு நூல்களைப் பெற்று மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

ஏனைய ஐரோப்பிய நாடுகள் போன்று இத்தாலியில் மானியமுறை உறுதி யான தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் வளர்ந்து வந்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கு இம் மானியமுறை எவ்வித மான தடைகளையும் ஏற்படுத்தவில்லை. சிலுவைப்போர், வெடிமருந்துகளின் கண்டு பிடிப்பு, தேசிய அரசின் எழுச்சி நகரங்களின் வளர்ச்சி என்பவற்றால் சிதைவடைந்திருந்த நிலமானிய முறையின் தன்மைகள் இத்தாலி யில் மறைந்து போயின.

இடைக்காலத்தில் இத்தாலியில் பல பல்கலைக்கழகங்கள் தோன்றியிருந்தன. பொலக்ன, பாதுவா போன்ற பல்கலைக் கழகங்கள் இத்தாலியில் சமய சார்பற்றவர் களால் உருவாக்கப்பட்டது. இங்கு கட்டிடக் கல்வி, மருத்துவக்கல்வி என்பன பிரதான மாக கற்பிக்கப்பட்டன. சமய போதனை குறைந்தளவில் காணப்பட்டது. மறுமலர்ச்சிக் கால அறிஞர்களான பெற்றாக், தாந்தே என்போர் இங்கு கற்றவர்களே. இத்தாலியின் பல்கலைக் கழகங்களின் தோற்றமும் இத்தாலியில் மறுமலர்ச்சி உருவாக காரண மாயிற்று.

இத்தாலி மக்கள் பழைய உரோமப் பண்பாடுகளை அழிவுறாது பாதுகாத்து வந்தனர். 1453இல் கொன்ஸ்தாந்துநோபிள் வீழ்ச்சியடைய அறிஞர் இத்தாலியில் புகலிடம் தேடி வந்து அறிவு ஒளியினைப் பரப்பினர். கிரேக்க உரோம அறிவியற் கோட்பாட்டை அறிந்த இத்தாலி மக்கள் அதன் பெருமையை சிந்தித்தனர்.

அத்துடன் இத்தாலி மத்திய தரைக்கடலின் மையத்தில் சரியான அமை விடத்தில் அமைந்து காணப்பட்டது. அறிஞர் கள் உடனடியாக கொன்ஸ்தாந்து நோபிளில் இருந்து வரக்கூடியதாக இருந்தது. இவை யாவும் சேர்ந்தே இத்தாலியில் மறுமலர்ச்சி முதலில் உருவானது.

# வாய்மையே வெல்லும்

செல்வி.ஆறுமுகம் தயாளினி,
$13^B$ கலைப்பிரிவு (2015)
யா/இராமநாதன் கல்லூரி

"வாய்மையே வெல்லும்" என்பது நம் சான்றோர் வழங்கிய பொன் மொழியாகும். உண்மை பேசுதல் ஓர் உயர்ந்த நல்லொழுக்கமாகும். இது உலகோர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. உண்மை தான் என்றும் வெல்லும் என்பதை நமது இதிகாசங்களும், புராணங்களும், அறநூல்களும் நன்கு எடுத்துரைக்கின்றன. வான் புகழ் கொண்ட வள்ளுவனாரும் தமது திருக்குறளில் வாய்மையின் சிறப்பினை உயர்த்தும் வகையில் அதற்கெனத் தனியாக ஒரு அத்தியாயம் வகுத்தமை இங்கு மனங் கொள்ளத்தக்கது.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்த்த
நன்மை பயக்கும் எனின்"

எனினும் இவ்விரு குறட்பாக்களும் வாய்மைக்கான இலக்கணத்தை நாம் அறிந்திட உதவுகின்றன. வாய்மை என்று சொல்லப்படுவது எது எனின் எவ்வுயிர்க்கும் எவ்வகைத் தீங்கும் இல்லாத சொற்களைச் சொல்லுதலாம். நற்பண்புகள் எல்லா வற்றிலும் சிறந்தது உண்மை பேசுதலாம். உண்மை பேசுவார் வாழ்வில் உயர் வடைவர். இதேவேளையில் வள்ளுவர் குறளில் மற்றொரு கருத்தையும் நமக்குப் புலப்படுத்துகிறார். பிற உயிர்களுக்கு குற்றமற்ற நன்மையைத் தரும் எனின் பொய்மையும் பொய்யான சொற்களும் வாய்மையாகவே கருதப்படும் என்கிறார். வள்ளுவரது இக் கருத்துக்கள் நம் சிந்தனைக்குரியனவாகும். வாய்மையின் சிறப்பினை வலியுறுத்தும் அவர் கையாண்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றும் நம் நெஞ்சத்தைத் தொடுவனவாகவுள்ளன. உடல் தூய்மை நீரால் அமைவது போல உள்ளத் தூய்மை வாய்மை பேசுவதால் உண்டாகும் என்கிறார். பொய்யாமை பெரும் அறமாகும். அந்த அறத்தை ஒருவன் விடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து ஒழுகுவானாயின் அவன் பிற அறங்களைச் செய்யாதிருத்தலே நல்லதாம் என்கிறார். இதன் மூலம் வாய்மையைப் பேசுதலை அறமாகக் கொண்டு ஒழுகுபவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டியதில்லை என்பது நன்கு புலனாகிறது. நாம் உண்மையான அறங்களாகக் கண்ட வற்றுள் வாய்மை போலச் சிறந்தது வேறில்லை என்பதே வள்ளுவரது கருத் தாகவுள்ளது.

இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது வாய்மையே என்றும் வெல்லும் என்ற உண்மையை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. இதனாற் றான் நற்பண்புகள் எல்லாவற்றுக்கும் தாய் போன்ற உண்மையைப் பேசுபவனை எல்லா அறங்களும் தேடிவரும் என நம் முன்னோர் கூறியுள்ளனர். உண்மை பேசுவோரே வாழ் வில் உயர்வடைவர். பொய் பேசுபவர் தாழ் வடைவர் இந்த உண்மையை "பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது", "உண்மை சொல்லி கெட்டாரும் இல்லை பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை" என்னும் பழமொழிகள் நமக்கு நினை வூட்டுகின்றன.

உண்மை, வாய்மை, மெய்மை என்பன மூன்றும் ஒரு பொருள் பன்மொழி களாகும். உள்ளத்திலிருந்து பெறப்படும் தூய்மைத் தன்மை, உண்மை என்றும் வாயிலிருந்து பெறப்படும் தூய்மைத் தன்மை வாய்மை என்றும் பொருள்படும். நமது மனம், மொழி, மெய்களால் உண்மை யைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்

என்பதையே இம் மூன்று சொற்களும் உணர்த்துகின்றன.

உலகில் உண்மை பேசி உயர்வடைந்தோர் பலருள்ளர். அவர்களுள் முதலில் நமக்குத் தோன்றுபவர் அரிச்சந்திரனேயாவார். உண்மையை நிலைநாட்ட அவர் அடைந்த இன்னல்கள் பல. மாமன்னனாக விளங்கிய அவர் வாய்மை காத்திட அனைத்தையும் இழந்தபோதும் கடைசி வரை வாய்மைதனைக் காத்து நின்றமையால் "உண்மைக்கோர் அரிச்சந்திரன்" என்று உலகோர் அவரைப் போற்றுகின்றனர்.

"பகுதியாழத்தனம் பாலனை இழந்தனம்.... இனி எமக்குள கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலோம்...."

என உறுதிப்பட உரைத்தமையாற்றான் அரிச்சந்திரன் நாடும் ஏடும் போற்றும் பேறு பெற்றான். அவன் சரித்திரத்தை நாடகமாகப் பார்த்தமையாற்றான் "இனி உண்மையைப் பேசுவேன்" என்று காந்தியடிகள் உறுதிமொழி மேற்கொண்டு வாழத்தலைப்பட்டார். உலகம் போற்றும் உத்தமரானார்.

மனித வாழ்வில் உண்மைக்கும் பொய்மைக்கும் இடையே சிலவேளைகளில் போராட்டம் ஏற்படுவதுண்டு. இறுதியில் வாய்மை தான் வெல்லும். இதனையே மகாகவி பாரதியாரும் பாஞ்சாலி சபதத்தில் அருச்சுனன் வாயிலாக "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்" என்கிறார். இங்கு வாய்மையே தருமம் என்று குறிப்பிடுகின்றார். வாய்மையின் சிறப்பு அளவிடற்கரியது. ஒருவன் தன் மனம் அறிந்து உண்மை பேசுவானாயின் அவன் தவமும் தானமும் ஒருங்கே செய்பவரைக் காட்டிலும் சிறந்தவனாகிறான். ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்ப பொய் கூறாது ஒழுகுவானாயின் உலக மக்கள் அனைவரது உள்ளத்திலும் இடம் பெறுவான் என்னும் வள்ளுவர் தம் கூற்றுக்குக் காந்தியடிகளே சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

தமிழிலுள்ள அறநூல்கள் அனைத்துமே வாய்மையைச் சிறப்பித்துப் பேசுகின்றன. நாலடியார், திருக்குறள், ஆசாரக் கோவை போன்ற அற நூல்களெல்லாம் உண்மை பேசுதலை வலியுறுத்திக் கூறுகின்றன. உண்மை பேசுவோருக்கு என்றும் நன்மை உண்டென்பதை இவை உணர்த்துகின்றன. அக இருள் போக்கும் வாய்மையாகிய விளக்கே சான்றோர்க்கு உரிய விளக்காகும். அவ்விளக்கு நல்வழி காட்ட வல்லது. அந்த விளக்கைக் கைக் கொள்வோர் வாழ்வில் உயர்வடைவர் என்பது திண்ணம்.

சுருங்கக் கூறின் உண்மைபேசுதல் ஓர் அரிய செயலாகும். அதற்கு உள்ள உறுதி வலிமை மிக்கது. எத்தகைய இன்னல் வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனநிலை வேண்டும். எதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் உண்மை பேசி உயர்வடைதல் என்பது எளிதாகும். நாம் உண்மையான அறங்களாகக் கண்டவற்றுள் எவ்வகையிலும் வாய்மை போலச் சிறந்த அறம் வேறில்லை எனலாம். இதனையே வள்ளுவர்

"யாம் மெய்யாகக் கண்டவற்றுள் இல்லை அனைத்தும் ஒன்றும் வாய்மையின் நல்ல பிற"

என்றுரைத்துள்ளார். உண்மை பேசுதலைத் தமிழ் மக்கள் பெரிய அறமாகக் கருதினர். அவர்கள் வழி வந்த நாமும் பொருளுக்காகவோ, பிறவற்றுக்காகவோ மதிமயங்காமல் என்றும் எவ்விடத்தும் எந்நிலையாகிலும் உண்மை பேசும் உத்தமர்களாக வாழ்வோம் என்று உறுதிகொள்ளுவோமாக!

# மத்திய கால அரங்கு அல்லது கிறிஸ்தவ நாடக மரபு

செல்வி ப.லுக்சிகா
13A கலைப்பிரிவு (2015)
யா/இராமநாதன் கல்லூரி

மத்திய கால அரங்கு நாடக வரலாறு என்பது கி.பி 15ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பிய தேசங்களில் காணப்பட்ட நாடகம் பற்றிய வரலாறு எனக் கொள்ளப்படும். இக்கால நாடகமரபை கிறிஸ்தவ நாடகமரபு என்று அழைப்பர். இதற்கான காரணம் யாதெனில் இக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு ஐரோப்பிய தேசங் களில் மேலோங்கிக் காணப்பட்டமை யினாலும் இக்கால நாடகங்கள் கிறிஸ்தவ மதத்துடன் தொடர்புபட்டமையினாலும் இக் கால நாடகங்களை கிறிஸ்தவ கால நாடகங்கள் என்பர்.

ஆரம்ப காலத்தில் கத்தோலிக்க மதமானது நாடகங்களுக்கு தடை விதித்தது. நாடகங்கள் மிதமிஞ்சிய கேளிக்கைகளைக் கொண்டிருந்தமை யினாலும், பாலியல் விரகதாபங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தமையினாலும், பேகன்மதத்துடன் சம்பந்தப்பட்டு இருந்தமை யினாலும் கிறிஸ்தவம் நாடகங்களிற்கு தடை விதித்து இருந்தது. இதனால் உரோமுடைய பிற்காலம் அதாவது மத்திய கால ஆரம்பகாலம் அரங்க வரலாற்றின் ஒரு இருண்ட பகுதியாகக் காணப்பட்டது. ஆரம் பத்தில் கத்தோலிக்க மதமானது நாடகங் களிற்கு தடைவிதித்தாலும் காலப்போக்கில் அவர்களிற்கு ஊடாகவே நாடகம் வளர்ச்சி அடைந்தது.

மத்திய கால அரங்கில் காணப் பட்ட நாடகங்களை சமயம் சார்ந்த நாடகங் கள் சமயம் சாராத நாடகங்கள் என்று இருவகைப்படுத்தலாம். சமயம் சார்ந்த நாடகம் எனும் போது கத்தோலிக்க மத விடயங்கள் தொடர்புடையதாக ஆலயங் களிலும், கிறிஸ்தவ மத விழாக்களிலும் நடிக்கப்பட்ட நாடகங்கள் எனப்படும்.

- பொது வணக்க முறை நாடகம்
- புனிதரின் நாடகம் அல்லது அற்புத நாடகம்
- திருமறை நாடகம் அல்லது மறை பொருள் நாடகம்
- ஒழுக்கப்பண்பு நாடகம

போன்றன காணப்படுகின்றன. பொது வணக்க முறை நாடகமானது ஆலயங்களிலே பூசைகளின் போது நிகழ்த்தப்பட்ட வழிபாடுகளை உள்ளடக் கிய நாடகம் இதுவாகும். பைபிளை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்கும்.

திருமறை நாடகங்கள் ஆனது குழுத்தலைவர் இறையருள் பெற்றோர் போன்றோர் உடைய வரலாற்றை எடுத்துக் கூறும் பிரதேச மொழி நாடகமாகும். புனிதரின் நாடகம் அல்லது அற்புத நாடக மானது இறைவனிடம் இருந்து வரங்களைப் பெற்று அற்புதங்களை நிகழ்த்திய புனிதர்கள் பற்றிய வரலாற்றைக் கொண்ட தாகக் காணப்படும்.

ஒழுக்கப் பண்பு நாடகங்களாவன சமய தத்துவங்களின் அடிப்படையில் நல்ல நடத்தை, தீய நடத்தை என்பவற்றை சுட்டிக் காட்டி போதனை செய்கின்ற போதனைப் பண்பு நாடகங்களாகும்.

சமய சார்பற்ற நாடகங்கள் ஒழுக்கப் பண்பு இடை நிகழ்வு நாடகம் ஆகும். உலக தத்துவத்தின் அடிப்படை

யில் நல்ல நடத்தை, தீய நடத்தை போன்ற வற்றைப் போதிக்கின்ற போதனைப் பண்பு நாடகமே இதுவாகும்.

- விகட நாடகம்
- வீர நாடகம் அல்லது சாகஷகற்பனை நாடகம்
- கிராமிய நாடகம்
- பாணர் இசை நிகழ்வு நாடகம் போன்றன காணப்படுகின்றன.

விகட நாடகம் மக்களை சிரிப்பில் ஆழ்த்துவதற்காக நிகழ்த்தப்பட்ட நாடகங் களே இவையாகும். வீர நாடகமானது மத்திய கால மக்களின் வீரச் செயல்களை சித்தரித்துக் காட்டிய நாடகங்களாகும். கிராமிய நாடகம் எனப்படுவது ஆண்டின் பருவ காலத்துடன் தொடர்புடையது. யேசுவின் பிறப்புடன் தொடர்புடையது. பயில் முறையாளர்கள் நத்தார் காலங்களில் வீட்டிற்கு வீடு சென்று நிகழ்த்துவர். பாணர் இசை நிகழ்வு நாடகம் என்பது ஆடல், பாடல், குத்துக்கரணம் அடித்தல் போன்ற வித்தைகளைக் குறிக்கும் நாடகமாகும்.

மத்திய கால அரங்கின் ஆற்றுகை முறையானது ஆரம்பத்தில் திருச்சபைக்கு உள்ளேயே வளர்ச்சி அடைந்தது. இதற்கு ஆலயங்களில் நடைபெற்ற சைகைகள், ஊகங்கள். பெருங்காட்சிப் பண்புகள் சான் றாக அமைந்தன. இவ்வாறு தேவாலயத்தில் நடைபெற்ற நாடகமானது பின்வரும் காரணங்களினால் தேவாலயத்தை விட்டுவெளி யேற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகியது.

- தேவாலய பூசையைக் குழப்பியமை
- பெருங்காட்சிப்படுத்தலுக்கு திருச்சபை யின் அரங்க வெளி போதாமை
- நடிப்பதற்கு ஆள் போதாமை

போன்றனவாகும்.

மத்திய கால அரங்கானது,

- தேவாலய உள்ளக அரங்கு
- தேவாலய முன் அரங்கு
- பட்டண சதுர்க்க அரங்கு
- சாரப்பரணரங்கு
- ஊர்தி அரங்கு அல்லது வண்டி அரங்கு

போன்றன காணப்படுகின்றன.

இந்த வகையில் மத்திய கால அரங்கு பற்றி நோக்கின் அக்கால அரங்கு கிறிஸ்தவ மதத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகக் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தகத்தைக் காப்பதெப்படி?

1. *புத்தகத்தை அதிகமாகப் பிரிக்காதீர்.*
2. *பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்.*
3. *மூலைகளை மடிக்காதீர்.*
4. *தூக்கம் வரும்போது எடுத்து வைக்க மறவாதீர்.*
5. *தலையணைக்கு அடியில் வைக்காதீர்.*
6. *வைக்கும்போது, கொடுக்கும்போது வீசியெறியாதீர்.*
7. *பூமியின் மீதோ, ஆளின் மீதோ அடிக்காதீர்.*
8. *குழந்தைகளிம் கொடுக்காதீர்.*
9. *குறிப்புக்களும் கோடுகளும் எழுதாதீர்.*
10. *எண்ணெய், தண்ணீர் பட்ட கைகளுடன் தொடாதீர்.*

# பாதீனியத் தாவரம்

செல்வி. லோகநாயகம் சலாஜினி
A/L (2016) கலைப்பிரிவு
யா/இராமநாதன் கல்லூரி

பாதீனியம் எனும் பெயருடைய இத்தாவரம் விவசாய நிலங்களில் வேகமாக பரவி வருகின்றது. மனிதர்கள் பயிர் செய்யும் பயிர்களுடன் மட்டுமல்லாது மனிதர்களால் உருவாக்கப்படாத இயற்கையாக வளரும் ஏனைய தாவரங்களுடன் போட்டியிட்டு வளர்ந்து வருகின்றது. இத் தாவரமானது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தாவரமாகும்.

பாதீனியமானது முதல் முதலாக 1999ம் ஆண்டு பரவலாக காணப்பட்டதனை அவதானிக்கப்பட்டது. இவ்வாறாக பரவலாக காணப்பட்ட பாதீனியத்தை ஆய்வு செய்த விவசாயத் திணைக்களம் எல்லோரும் ஆச்சரியப்படுகின்ற தகவல்களை வெளியிட்டது. பாதீனிய தாவரமானது பரந்து ஆக்கிரமித்து வளரக்கூடிய இயல்பினைக் கொண்டிருக்கின்றது. எல்லோருக்கும் ஆபத்தினை விளைவிக்கக் கூடியது. இவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்ற இத்தாவரத்தை கட்டுபடுத்த வேண்டியது மிக முக்கியமாகும்.

பாதீனிய தாவரமானது சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாகும். பாதீனியத்தின் தாவரவியற்பெயர் “பாதீனியம் ஹிஸ்டேறோடோரஸ்” ஆகும். இது வெள்ளைத் தும்புத்தடி என பல பெயர்களால் விஷேடிக்கப்படுகின்றது. பாதீகியமானது மேற்கிந்தியத் தீவுகளை பிறப்பிடமாக் கொண்டது. பின்னர் இலத்தீன், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் பரவலாகக் காணப் பட்டது. இத்தாவரமானது 1810ம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்ட கோதுமை மாவுடன் பரவியதாக கூறப்படுகின்றது. இவ்வாறு இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்ட பாதீனியத் தாவரத்தை “இந்தியப் புல்” என அழைத்தனர்.

இத்தாவரம் வீதிகள், வரம்புகள், வாய்க்கால்கள் எனச் செறிவாகக் காணப் படுகின்றது. குருநாகல், யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது. இச் செடியில் இருந்து சுரக்கப்படுகின்ற இரசாயனப் பதார்த்தம் “பாதீனியம்” எனப்படுகின்றது. இத்தாவரம் மழை காரணமாக கசிவதன் மூலம் ஏனைய தாவரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்து கின்றது. அது மட்டுமன்றி மனிதனுக்கு ஒவ்வாமையினை உண்டாக்கி தோல் நோய், சுவாசப் பாதிப்பு போன்றவற்றையும் ஏற்படுத்துகின்றது.

பாதீனியம் ஏனைய தாவரங்களின் வளர்ச்சி, பெருக்கம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி தன் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. விலங்குகள் புல்லுடன் இதனை உண்ணும் பொழுது அவற்றின் இறைச்சி, பால் என்பவற்றின் தன்மையில் வித்தியாசத்தினை உணரக்கூடியதாக உள்ளது. இத்தாவரத்தினை உட்கொண்டதால் பல விலங்குகள் இறந்ததாகவும் கூறப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் பாதீனியத் தாவரமானது ஆக்கிரமித்து கொள்கின்றது. இத் தாவரப் பரம்பலைக் கட்டுப்படுத்தாவிடின் இயற்கை சூழலை நாசம் செய்து தான் ஆக்கிரமித்துக்

கொள்ளும். மனித இனத்திற்கும், விலங்கிற்கும் பல நோய்களை தந்து பெருந் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே நாம் இத் தாவரத்தை மேலும் பரவ விடாது கட்டுப் படுத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இத்தாவரம் பூப்பதற்கு முன்னதாக கையால் பிடுங்கியோ அல்லது களை நாசினிகளை பயன்படுத்தி இத்தாவரத்தை கட்டுப்படுத்த முடியும்.

எனவே ஆபத்தான பாதீனியக் களையை அறிந்து கொள்பவர்கள் அவைகள் ஆக்கிரமிக்க முன்னரே அவற்றைக் கட்டுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்பாதீனிய தாவரத்தினை கட்டுப்படுத்தினாலும் ஐம்பது வருடகால உறங்கு நிலையிலிருந்து பின்னர் புத்துயிர் பெறக் கூடியது ஆகும். ஆணிவேர் கொண்ட தாவரம் என்பதால் இலகுவில் அழிவடையாது. சிலர் இதனை வேருடன் அழிக்காது வெட்டிவிடுவதனால் வீரியம் மிக்க வேர்களின் உதவியுடன் மீண்டும் வளர்ச்சியடைகின்றது. பாதீனியத் தாவரத்தின் விதைகள் எண்ணற்றவை. வீரியம் மிக்கவைகளாகும். ஒரு விதை இருந்தாலும் அது மீண்டும் வளர்ச்சியடையக் கூடியவை.

எமது அரசாங்கம் பாதீனியத்தை அழிக்கும் நோக்குடன் அதனை பணம் கொடுத்து கொள்வனவு செய்கின்றனர். இச் செயற்பாட்டின் மூலம் தாம் வாங்கி அதனை அழிவடையச் செய்கின்றனர். எனவே பாதீனியம் என்ற களையை அழித்து எமது இயற்கை சூழலை பாதிப்படையாது பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

## செய்யக்கூடாதவை

01. உன் கடமையைச் செய்யத் தவறாதே.
02. அவசரப்படாதே.
03. மற்றவர்களை இகழ்ந்து பேசாதே.
04. தேவையற்று சண்டை போடாதே.
05. மற்றவர்களை நம்பி இராதே.
06. காலத்தை வீணாக்காதே.
07. பொறுமை இழக்காதே.
08. வீணாக உட்காராதே.
09. மற்றவர்களின் வேலைக்கு இடையூறு பண்ணாதே.
10. உன்து சொந்த விடயங்களில் விழிப்பின்றி இராதே.

# இலங்கையின் கறுவா வாணிபம்

செல்வி. சிவஞானம் பிறேமிளா
13A கலைப்பிரிவு (2015),
யா/இராமநாதன் கல்லூரி

கறுவா ஈரலிப்பான நிலத்தில் வளரும் ஒரு வகைத் தாவரம் ஆகும். அதன் உட்பட்டையைத் தண்டிலிருந்து உரித்து வெயிலில் உலர்த்தினால் அது சுருண்டு விடும். நல்ல மணமும், இனிப்புடன் கூடிய உறைப்புச் சுவையும் கொண்டு உணவில் சேர்த்துக் கொள்ள ஏற்றதாகும். சிங்களவர் பத்து வகையான கறுவாவைக் குறிப்பிவர். இவை மணம் சுவை பற்றி வகைப்படும். இலங்கையின் மேற்குக் கரையில் கறுவா தானாக வளர்ந்தது. சிலாபத்துக்கு அண்மை யில் தெதுறு ஓயா ஆற்றின் தென்கரை யிலிருந்து மாத்தறை வரை அகன்றும் குறுகியும் உள்ள நிலப்பரப்பில் அது செழித்து வளர்ந்து காணப்படுகின்றது. நீர்கொழும்பு, கழுத்துறை, காலி மாவட்டங் களில் ஆங்காங்கு அதிகமாயும் குறை வாயும் பரந்து காணப்படுகின்றது. தெற்கே போகப் போகக் கறுவாவின் தரம் குறைந்து நீர்கொழும்பைச் சூழ்ந்துள்ள பகுதியில் வளரும் கறுவாவின் தரமே முதன்மை யானதாகக் காணப்படுகின்றது. இலங்கைக் கறுவா பல காலமாக உலகப் புகழ் பெற்றிருந்தது.

இலங்கையின் முக்கியமான ஏற்றுமதி வர்த்தகப் பொருளான கறுவாவைப் பற்றி உரோம, கிரேக்க நூல்களில் அதிக செய்திகள் கூறப் பட்டுள்ளன. கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரடோரஸ் அதனைக் குறிப்பிடுகின்றார். இதற்கு இரு காரணம் கூறலாம். ஒன்றில் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன் இலங்கையிலிருந்து கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். அன்றேல் அக் காலத்தில் மேனாடுகளுடன் வாணிபம் செய்த தென்னிந்திய வணிகர் அது இலங்கையில் விளைவது என்ற செய்தியை ஐரோப்பியர் எவரும் அறியாது வெற்றி கரமாக மறைத்து விட்டனர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் இப்பகுதியில் மக்கள் செறிவின்றிக் காணப்பட்டனர். அதனால் மனனர்கள் இதன் மூலம் கிடைக்கக் கூடிய வருவாய் பற்றிப் பாராமுகமாய் இருந்தார்கள். ஆனால் உள்நாட்டில் இது உடலுக்கு நறுமணமூட்டும் வாசனைத் திரவியமாகக் காணப்பட்டது. பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "சிகாவலந்த" என்ற நூலில் குளிக்கும் போது கறுவா உடலில் பூசப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற நாட்டு நூல்களில் பதின்மூன்றாம் நூற் றாண்டின் இறுதியில் மொன்றிகோவினோ வைச் சேர்ந்த ஜோன் என்பவர் எழுதிய யாத்திரை வரலாற்றில் இலங்கையிலிருந்து பெருந் தொகையான கறுவா தென்னிந்தியா வுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

கறுவா பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்டதென நிரூபிப்பதற்கு யாதொரு சான்றுமில்லை. எனினும் இபன்பதுதா தரும் செய்திகளில் இருந்து கறுவாத்தோட்டங்கள் இருந்தன என ஊகிக்க இடமுண்டு. பதுதா ஆரியச் சக்கரவர்த்தியின் தலைநகரான புத்தளத்திலிருந்தபோது கரையோரப்பகுதி எங்கும் கறுவாச் செடி வளர்ந்திருக்கக் கண்டானாம். பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரயாணம் செய்த வெனீஷீய யாத்திரிகன் நிக்கோலே. டி.கென்ரியின் நூலிலும் கறுவா வாணிபம் பற்றி ஒரு செய்தி வருகிறது. இலங்கையில் ஏராள

மாகக் கறுவா விளைகிறது. அதிலிருந்து வாசனை வீசும் தைலம் ஒன்று எடுக்கப் படுகின்றது. அதனைப் பல வகை மருந்து கள் செய்ய உபயோகிக்கலாம் என்று அச் செய்தி கூறுகின்றது.

மத்திய காலத்தில் கறுவா வணிகமும் இலங்கையரது தனியுரிமையா யிருந்தது. இபன்பதுதா இந்நாட்டு வணிகர் சுல்தானுக்கு விலை கூடிய ஆடைகளையும், பிறபொருட்களை பரிசாக அளித்ததாகக் கூறுவதிலிருந்து கறுவா வணிக உரிமை அரசனிடமே இருந்தது என்பதையும் அவனைத் திருப்தி செய்தே அதனைப் பெறலாம் என்பதையும் அறியமுடிகின்றது.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் கறுவா அரசனின் தனியுரிமை யாயிருந்தது என்பதற்கு நிச்சயம் சான்றுண்டு. பாபோசா கூறுகின்றான் இத் தீவிலேயே உண்மையான சிறந்த கறுவா விளைகின்றது. அது மலைச் சாரல்களில் வளரும் செடிகளிலிருந்து பெறப்படுகின்றது. வருடந்தோறும் சில மாதங்கள் அரசன் அவற்றை சிறு சிறு கிளைகளாக வெட்டு விக்கிறான். பட்டையை உடைத்துக் காய வைத்துப் பதமிடுகின்றான். கறுவா வாங்க வரும் வணிகரிடம் அரசன் தானே முன்னின்று தன் கையாலேயே கறுவாவைக் கொடுக்கின்றான்.

மன்னனைத் தவிர வேறொருவரும் கறுவா சேகரிக்க முடியாது. இதிலிருந்து இலங்கை அரசர்கள் கறுவா வணிகத்தின் பொருளாதார முக்கியத்துவத்தை நன் குணர்ந்தனர் என்பது விளங்குகின்றது. சிங்கள மன்னர்கள் தென்மேல் பகுதிக்குப் படிப்படியாகத் தலைநகரை மாற்றிக் கொண்டமைக்குக் கறுவா வர்த்தகமே முக்கியமான காரணம் என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. காஸ்யர் கொரியா என்ற போர்த்துக்கேயன் பதினாறாம் நூற்றாண்டில் கறுவா சேகரிக்கும் முறையைத் தான் கண்டவாறு வர்ணித்திருக்கிறான். பதினைந் தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் அதற்கு முன்னரும் நிலவி வந்த உண்மை நிலையை இது குறிக்கும் எனக் கொள்ளலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் கறுவா எனும் பெறுமதி மிக்க பொருளை நாடியே ஐரோப்பியர் கீழைத்தேயங்களுக்கு வந்தனர். உலகின் வரலாற்றையே மாற்றி யமைத்த பொருளாகக் கறுவா காணப் பட்டமையை மறுக்க முடியாது.

- ❊ நிலையானது - நம்பிக்கை
- ❊ சிறந்தது - நற்குணம்
- ❊ விரைவானது - எண்ணம்
- ❊ வலிமையானது - தேவை
- ❊ சுலபமானது - பிறருக்குப் புத்திமதி சொல்வது
- ❊ கடினமானது - உன்னை அறிதல்

# கருத்துச் சுதந்திரமும் ஊடகமும்

செல்வி. சிவலிங்கம் அபிராமி,
13^A கலைப்பிரிவு (2015),
யா/இராமநாதன் கல்லூரி

மனித வர்க்கத்திற்கு உரிய பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச்சுதந்திரம் ஆகிய சுதந்திரம் போலவே கருத்துச் சுதந்திரமும் அவசியமானதாகும். கருத்துச் சுதந்திரம் என்பது "மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சுதந்திரமாக மற்றோருக்குத் தெரிவித்தல்" ஆகும். மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஊடகங்கள் பெரிதும் பயன்படுகின்றன. வாய்மூலம் மொழியப்படும் கருத்துக்களை பல்வேறு இடங்களில் வாழும் மக்களுக்குத் தெரிவிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இத்தகைய ஊடகங்களே கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிப்பதற்குப் பொருத்தமான வழிமுறையாகக் காணப்படுகின்றன. ஜனநாயகம் எனப்படுவது சிறந்ததொரு அரசியல் முறைமையாகும். இதனுடைய ஓர் அடிப்படைப்பண்பு கருத்துச் சுதந்திரமாகும். அநேகமான ஜனநாயக நாடுகளில் கருத்துச்சுதந்திரமும், பத்திரிக்கைச் சுதந்திரமும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றன.

நாங்கள் எங்களுடைய கருத்துக்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்கின்றோம். கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொள்வதன் மூலமாகப் பிறருடன் தொடர்பாடலை மேற்கொள்கின்றோம். இது மக்களிடையே ஒரு இணைப்பை உருவாக்குகின்றது. ஒருவர் கூறுகின்ற கருத்துக்கள் உண்மை உடையனவாகவும், அர்த்தம் உடையனவாகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்கள் கூறும் கருத்துக்களை செவிமடுக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தாங்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை உண்டு என்பதை மக்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். கருத்துச் சுதந்திரமானது அரசியல், பொருளாதாரம் மற்றும் தேசியம் என்பவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். கருத்துச்சுதந்திரம் எல்லோருக்கும் பொதுவானதும், உலகப் பொதுமையானதும் ஆகும். இது மனிதனின் அன்றாட செயற்பாடுகளில் அடிப்படையாக உள்ளது.

ஊடகங்களினுடைய பங்களிப்பு இன்று ஒவ்வொரு துறையிலும் முக்கியமான ஒன்றாக இருந்து வருகின்றது. கருத்துச்சுதந்திரம் இதற்கு விதிவிலக்கல்ல. ஊடகங்கள் அச்சு ஊடகங்கள்இ இலத்திரனியல் ஊடகங்கள் என வகைப் படுத்தப்படுகின்றன. அச்சு ஊடகங்களாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிற்றிதழ்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இலத்திரனியல் ஊடகங்களாக வானொலி, தொலைக்காட்சி, கணினி (இணையம்) என்பன விளங்குகின்றன. செய்திகளை எளிமையாகவும், கருத்தாழம் மிக்கனவாகவும், முழுமையானவையாகவும் வெளியிட வேண்டிய தேவை அச்சு ஊடகங்களுக்கு உள்ளது. அச்சு ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களும் பக்கச் சார்பின்றி நடுநிலைமையாகத் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் வெளிப்படுத்தப்படும் கருத்துக் கள் உண்மையானதாகவும், ஆதாரங் களுடனும் காணப்பட வேண்டும். இதுவே ஊடகங்களின் இன்றியமையாத பண்பாக வும், பணியாகவும் இருத்தல் வேண்டும். உண்மைக்குப் புறம்பான கருத்துக் களையோ அல்லது பக்கச்சார்பான கருத்துக்களையோ தெரிவித்தல் ஊடகங் களின் சுதந்திரத்திற்குப் பங்கம் விளை விக்கும் செயலாக அமைந்து விடுகிறது. அத்துடன் பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதும் ஊடகத்தின் முக்கிய பணியாக உள்ளது.

மக்கள் மத்தியில் தெளிவை ஏற்படுத்துவதும், உண்மையை நிலை நிறுத்துவதும், விமர்சனங்களுக்குப் போதிய இடமளிப்பதும் ஊடகத்தின் மற்றையதொரு பணியாக அமைகின்றது. இங்கு பொது மக்களின் பரவலான வெவ்வேறுபட்ட அபிப்பிராயங்களும் சுதந்திரமாக ஊடகங் கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஊடகங்கள் தமது கருத்துக் களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன.

வன்முறைச்சம்பவங்கள், ஊழல் குற்றங்கள், அதிகார துஷ்பிரயோகங்கள், அரசியல் சார்ந்த பக்கச்சார்புகள், அரசின் நிதி மோசடிகள் என்பவற்றை இல்லாது ஒழிப்பதற்கு ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம் அவசியமாகின்றது. இது தவிர மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி பேணுவதற்கும், சமூகங்களிடையே நல்லிணக் கத்தை ஏற்படுத்தி ஒற்றுமையைப் பலப் படுத்தவும், முற்போக்கான நல்லதொரு மாற்றத்திற்கு வழிகோலவும் ஊடகக் கருத்துச் சுதந்திரம் அவசியமாகின்றது. ஊடகம் பேணப்படுதல் ஜனநாயகத்தின் உயிர்ப்புக்கு அவசியம் என்பது புலனா கின்றது. அச்சமூகத்தில் எதிர்வினையை ஆற்ற வேண்டும். சமூக முன்னேற்றம், பண்பாட்டு முன்னேற்றம் முதலானவற்றிற்கு ஊடகம் வலுவான பங்காற்றும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயக நாட்டில் வாழும் பிரஜை ஒருவருக்கு உரித்துடைய உரிமைகள் பல உள்ளன. அவற்றை அனுபவிப்பதுடன் மற்றையவர்களின் உரிமைகளையும் பாது காக்கும் நோக்குடன் செயற்பட வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படைச்சுதந்திரம் நாட்டு மக்கள் எந்த ஒரு பேதமுமின்றி கருத்துக்களை வெளிப்படுத்துவதாகும். ஜனநாயக நாடொன்றில் மக்கள் தமது கருத்துக்களை வெளியிடவும், மற்றவர் களின் கருத்துக்களையும் தகவல்களையும் அறிந்து கொள்ளவும் உள்ள உரிமை அங்கீகரிக்கப்படுகின்றது. அந்த உரிமை மக்களுக்கு கிடைக்காத போது அது தொடர்பில் நீதி மன்றங்களின் உதவியை நாட முடியும்.

நாட்டில் சர்வாதிகார ஆட்சியைத் தோன்ற விடாமல் தடுத்து ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டி மேம்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும் நாட்டில் நிலவும் கருத்துச்சுதந்திரமே ஆகும். இக்கருத்துச் சுதந்திரமானது அச்சு ஊடகங்கள், இலத் திரனியல் ஊடகங்கள் என இரண்டு ஊடகங்கள் வாயிலாகவும் வெளிப்படும். இதனால் நாட்டின் நல்லாட்சி கருதியும் பொது மக்களின் உரிமை கருதியும் ஊடகங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வும் உறுதியாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்பது புலனாகின்றது.

# இன்றைய சூழலில் தமிழ்மொழி

செல்வி.சம்பந்தர் டயானி
13B கலைப்பிரிவு (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றி வளர்ந்தது நம் தமிழ்மொழி". இன்றைய உலகில் 4000க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்ற போதிலும் 3000 ஆண்டுகளுக்கு மேல் பழமையும் பாரம்பரியம் கொண்டதும் தமிழ் மொழி ஆகும். கரீக், லத்தீன், சமஸ்கிருதம் ஆகிய பழமை வாய்ந்த மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். ஆங்கில மொழியை வணிக மொழி எனவும் பிரெஞ்சு மொழி தூதின் மொழி எனவும் இத்தாலிய மொழி காதல்மொழி எனவும் கூறியுள்ள பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் தமிழ் மொழியை பக்தியின் மொழி எனக் கூறியுள்ளார். சங்க காலப் பகுதியில் கன்னடமும் தமிழில் இருந்தே பிரிந்ததாகக் கூறப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்திலே தமிழில் செந் தமிழ் என்ற பாகுபாடு ஏற்பட்டது.

இவ்வகையில் நோக்கில் தமிழ் மொழியில் மேன்மை மிக்க இலக்கியங்கள் தொன்றுதொட்டு எழுந்தமை தமிழின் பெருமையையே காட்டுகின்றது. கம்பர் எந்த கலாசாலையிலும் கற்கவில்லை. அவரே ஒரு கலாசாலை. நாவலர் எந்தப் பல்கலைக் கழகத்திலும் கற்கவில்லை. அவரே ஒரு பல்கலைக்கழகம். அதே போல் சுவாமி விபுலானந்தர் ஓர் ஆசிரியர். யாழ் என்ற இசைக்கருவியை பற்றி அறியாத இவரால் யாழ்நூல் இயற்றப்பட்டது. இவ்வகையில் நோக்கில் தமிழின் வளர்ச்சிக்கு காலத் திற்கு காலம் பலர் முன்னின்று உழைத் துள்ளனர். ஆங்கிலேயர் காலத்திலே தமிழ் மொழியின் நிலை கேள்விக்குறியானது. இக் கால கட்டத்தில் அச்சுக்கூடங்களை நிறுவி யும், இலக்கண சுருக்கம், பாலர்பாடம், சைவ போதினி என பல நூல்களை எழுதி யும் தமிழ் மறைந்து போகாது அதனை காத்துக்கொண்டார். இதன் காரணமாகவே சி.வை.தாமோதரம்பிள்ளை

"நல்லைநகர் ஆறுமுகநாவலர்
பிறந்திலரேல் சொல்லு
தமிழ் எங்கே? சுருதி எங்கே?....."

என நாவலரைப் போற்றிப் பாடியுள்ளார். நாவலரின் காலத்தில் அச்சியந்திர வருகையினால் 19ம் நூற்றாண் டில் பதிப்புத் துறையானது வளர்ச்சி யடைந்தது. பழந்தமிழ் இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட உதவியது. ஊடகத்துறை யில் உதயதாரகை, இந்துசாதனம் என தமிழ்மொழிப் பத்திரிகைகளும் தோற்றம் பெற்றுக் கொண்டன.

தமிழில் தோன்றிய அகத்துறை இலக்கியம் போன்று உலகில் வேறு எந்த மொழியிலும் தோற்றம் பெறவில்லை என மேல்நாட்டு அறிஞர் "பெஸ்கிபேர்ப்" குறிப்பிடுகிறார். அத்தோடு திராவிட புத்தகத்தின் தலைசிறந்த காப்பியமான மணிமேகலை தமிழில் அமைந்திருப்பது, தமிழ் மொழிக்கே பெருமையாக விளங்கு கின்றது. மேலும் பக்தி நெறிக் காலம் ஆகிய பல்லவர் காலத்தில்,

"தமிழோடு இசைபாட மறந்தறியேன்"

என நாயன்மார் பாடியிருப்பதும் தமிழ்மொழி பல்லாயிரக் கணக்காண்டு புராதனமானது என்பதைக் காட்டுகிறது.

எமது தாய்மொழி தமிழ்மொழி ஆயினும் இம்மொழி சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கிறது. போர்க்காலச் சூழலும் இதற்கு ஓர் காரணம் என்றே கூறிக் கொள்ளலாம். ஏனெனில் நம் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் தாய் மொழிப் பற்றும் தமிழறிவும் போர்க் காலப் பகுதியில் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டபோதே மண்ணிற்குள் புதைக்கப்பட்டு விட்டது. அத்துடன் எஞ்சி உயிர் தப்பியவர்களும் வெளிநாடுகளிற்கு இடம்பெயர்ந்து கொண்டதைத் தொடர்ந்து

அங்கேயே அந்நியமொழி பேசி வாழக் கற்றுக்கொண்டனர். இத்தகைய நிலைமை யும் தமிழ்மொழியின் இன்றைய நிலைக்கு காரணமாயிற்று.

மேலும் செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கிய பழமையின் அடிப் படையிலும் தகுதியின் அடிப்படையிலும் வகைப்படுத்தப்படுகின்றது. ஒருமொழி செம் மொழியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு அதன் இலக்கியப் படைப்புக்கள் வளம் மிகுந்தனவாகவும் அதன் தோன்றல் வேறு மொழிகளைச் சாராதும் இருத்தல் வேண்டும். செம்மொழிக்குத் தேவையான சிறப்புகளை இலக்கியப் படைப்புக்கள், கலைப் படைப்புக்கள் என இரு கோணத் தில் நோக்கலாம். இவ்வகையில் இன்று உலகில் பல மொழிகள் பேசப்பட்டு வந்தாலும் செம்மொழி அந்தஸ்து சில மொழிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் தமிழ்மொழித் தகுதி களும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ் கணக்கு நூல்கள், சிலப் பதிகாரம், மணிமேகலை போன்றவை சான்றாக உள்ளன. இவ்வாறாக செம்மொழி அந்தஸ்துப் பெற்ற தமிழ்மொழிக்கு இந்திய மத்திய அரசால் டாக்டர் கலைஞர் அவர் களின் முயற்சியினால் தமிழ் மொழி "செம்மொழி" என அறிவிக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

மேலும் தமிழ்மொழி பெரும் வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டாலும் தமிழ் சொற்கள் சிறிது சிறிதாக அழிந்து செல்லும் நிலை இன்றைய சூழலில் காணப்படுவதை அவதானிக்கலாம். இவ்வகையில் நோக்கில் நம் மூதாதையர்களால் பல தத்துவக் கருத்துக்கள் நிறைந்த பழமொழிகள் ஆக்கப்பட்டன. இவற்றில்,

"மண் குதிரையை நம்பி ஆற்றைக் கடக்காதே"

என்பது ஒரு பழமொழி ஆகும். இதற்கு நம்மைப் போன்றவர்கள் கூறும் விளக்கம், .மண்ணால் செய்த குதிரையைக் கொண்டு ஆற்றைக் கடக்காதே என்பதாகும். ஆனால் இதன் பொருள் இதுவல்ல. அதாவது ஆற்றின் நடுவில் மண்குழி போல தெரியும். அது பார்வைக்கு நிலம் போல தெரியும். அதில் காலை வைத்தால் புதைத்து விட நேரிடும். அவ்விடம் நடக்கக் கூடிய இடமல்ல. அதுவே "மண் குதிர்" ஆகும். இதனையே நம் முன்னோர்,

"மண் குதிரையை நம்பி ஆற்றைக் கடக்காதே"

என்றனர். இந்த "குதிர்" என்ற சொல் அழிந்துவிட்டது. இப்படியாக மறைந்து போகும் சொற்கள் தமிழ் அகராதி யில் சேர்த்துப் பாதுகாக்கப்பட வேண்டும்.

மேலும் நாம் தமிழர் என்ற எண்ணமும் நம் தாய்மொழி தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுக்கொள்ளும் போது தான் எதிர்காலத்தில் தமிழின் வளர்ச்சியைத் தீர்மானிக்க முடியும். பேராசிரியர் தனிநாயகம் அடிகளை நோக்கும்போது தமிழில் பாண்டித்தியம் பெற்ற அடிகளார் தமிழின் பெருமையை உலகறியச் செய்ய பெரிதும் முயன்றார். இவர் தமிழ் இலக்கியத்தில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகவே தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு,

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

என்ற மகுட வாசகத்தைச் சூட்டினார். தமிழ்மொழிப் பற்று இன்றைய சூழலில் தமிழ் மக்கள் அனைவரின் மனதிலும் நிறைந்திருக்க வேண்டும். இதன் மூலமே தமிழ் வித்தானது எதிர் காலத்தில் துளிர்விட்டு படர்ந்து பெருவிருட்சமாக மாற்றம் காண முடியும்.

"கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா"

என ஔவையாரும் இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழையும் இறை வனிடம் வேண்டி நிற்கிறார். இவ்வகையில் பழந்தமிழ் பெருமை பேசும் தமிழ்மொழி அழிவடையாது பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைய சூழலில் தமிழ் மொழிக் கல்வி யானது ஆங்கில மொழியில் கல்வி பயில்பவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஆங்கிலமொழிச் செல்வாக்கு தமிழ் மொழியின் இன்றைய நிலைக்கு காரண மாகும். மனிதன் கடந்த காலத்தில் கிடைத்த அனுபவ அறிவால் நிகழ்காலத் தைக் குறித்தும் எண்ணி வாழ்ந்து இனி வருங்காலம் எப்படி அமைய வேண்டும் என்று சிந்தித்து திட்டமிடுவதையே எதிர்காலவியல் என்கின்றோம். உலக மயமாதல், இணையத்தின் வளர்ச்சி, பொருளாதாரத்தின் மேலாதிக்கம் போன்றன ஆங்கில மொழிச் செல்வாக்கிற்கு வழி வகுத்துள்ளது. காலத்தின் தேவைக்கு ஈடு கொடுத்தால்தான் மொழியானது வாழவும் வளரவும் முடியும். ஆங்கில மொழியில் கல்வி கற்பது தமக்குப் பெருமை என நினைத்துக்கொள்ளும் சமூகத்தில் தமது அந்தஸ்தை பலதரப்பட்ட மக்கள் மத்தியில் உயர்த்திக் காட்ட ஆங்கில மொழி பயன் படுத்தப்படுகிறது. இத்தகைய ஆங்கில மொழிச் செல்வாக்கும் தமிழ்மொழியின் இன்றைய நிலைக்கு ஒரு காரணமாகும். இதன் காரணமாக தமிழர்களின் பிள்ளை கள் ஆங்கில மொழிக் கல்வி பயில் கின்றார்கள். இதனால் தமிழ்மொழி தெரியாத ஒரு தலைமுறை உருவாகி வரு கின்றது. இந்நிலையே தமிழ்மொழியானது நிலைத்து நிற்க பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தமிழர்களில் தமிழ்மொழிப் பற்றும் உணர்வும் இல்லாதவர்கள் பிணத்திற்கு சமம் என்பதே உண்மை. எனவே தமிழ்மொழிக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும். இதனைத் தவிர்த்து இன்றைய சூழலில் பிறமொழி கலந்து பேசுவதையும் எழுதுவதையும் செய்து கொண்டு வரின் பின்னர் தமிழ் வார்த்தைகள் தமிழ் அகராதியில் மட்டுமே காண முடியும்.

எது எவ்வாறு இருப்பினும் தமிழ் மொழி வருங்காலத்தில் உலக மொழியாக உயர்நிலை பெற வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. மொழி அறிவும் துறை அறிவும் இணையும்போது புதிய சொல், பொருள், தொடர்வளம் பெருக வாய்ப்பு உண்டு. நாளைய சூழலில் பல தரமான வாய்ப்புக்களைப் பெற்று அறிவியல், மொழி யியல் துறையிலும் ஆய்வுகளை மேற் கொண்டு நாட்டின் முன்னேற்றத்திலும் பங்கு கொள்ளும் சமுதாயத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் வடிவம் கொடுத்து மக்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்க தமிழ்மொழி உதவுகிறது.

கணினி இன்று மக்களின் கட்டாயத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது. இதனால் தமிழ் மொழியினைக் கணினி மூலம் கற்கும் முறையினை ஏற்படுத்த வேண்டும். தமிழ் மொழிக் கல்வியின் ஊடாக தமிழ்மொழி மேலும் வளர்ச்சி பெறும் அத்துடன் கணினித் துறை பற்றிய விரிவான அறிவினைப் பெறும் வகையில் தமிழ்மொழி மூலமாக கணினிப் பாடத் திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலம் நம் தாய்மொழி தமிழ் மொழியானது மேலும் உச்ச வளர்ச்சி பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"தகுதி உள்ளவை வாழும்"

என்பது டார்வின் விதி. இதனால் தமிழ் மொழியின் தரமும் தகுதியும் என்றென்றும் நிலைத்திருக்கும். அறிவைப் பெறுவதற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வேலை வாய்ப்பிற்கும் சமூக மதிப்பிற்கும் தமிழ்மொழி தேவை என்பதால் இனிவரும் காலங்களில் தமிழ்மொழியானது பொதுத் தளத்தில் நின்று பேசப்பட்டால் மாத்திரமே தமிழ்மொழியின் எதிர்காலம் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கும். எதிர்காலத்தில் நம் தாய்மொழி தமிழில்,

"தேமதுரத் தமிழோசை
உலகெலாம் பரவிட"

இன்றைய சூழலில் பல நூல்கள் ஆய்வுக் கட்டுரைகள் போன்றன தமிழ் மொழியில் எழுதப்பட வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழி வளர்ச்சி பெறும். தமிழ் சமூகத்தை நவீன சிந்தனையுடனும் பரந்ததும் உலக ளாவியதும் மனித சமத்துவத்துடனான பார்வையுடன் நோக்கப்படுவதன் மூலமே தமிழ் சமுதாயத்தினதும் தமிழ்மொழி யினதும் நவீனத்துவம் நடைமுறைச் சாத்தியமாகும்.

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே...."

# இந்துக்களால் அழியும் இந்து மதம் சில காரசாரமான குறிப்புக்கள்....

**செல்வி. சண்முகம் விமலா**
**13[B] கலைப்பிரிவு (2015),**
**யா/இராமநாதன் கல்லூரி**

தர்மத்தை அத்திவாரமாகக் கொண்ட இந்துமதம் மிக நீண்ட வரலாறு உடையது. வரலாற்றுக் காலங்கள் ஒவ்வொன்றிலும் இது ஆழமான சுவடுகளைப் பதித்தது. இதன் வரலாற்றை ஆராய முற்படின் இயற்கையின் ஆரம்ப நாட்களுக்கு மனிதனை இட்டுச் செல்லும் தன்மை யுடையது. வேதங்களிற் தொடங்கி இதிகாச புராணங்களை ஊடறுத்து இன்றுவரையும் பாயும் இலக்கிய மரபைத் தன்னகத்தே கொண்டது. சிந்துவெளித் தொல்பொருட்கள் தனது எச்சம் என்று கற்றோர் கருதும் தன்மையுடையது.

தென்னிந்தியாவில் இந்துமதம் பற்றி நோக்கினால் தென்னிந்திய வரலாற்றையே தீரமானிக்கும் சக்தியாக விளங்கு வதை அறியலாம். சங்கமருவிய காலத் திலும், பல்லவர் காலத்திலும் சமணம், பௌத்தம் போன்ற பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்த மதங்களை மண் கௌவக் கூடிய அளவிற்கு வல்லமை உடையதாகவும், தர்ம நாட்டம் உடையதாகவும் விளங்கியது. நாயக்கர் காலத்தில் இஸ்லாமிப் படை யெடுப்பால் பேரழிவைச் சந்தித்தும் அக் காலத்தின் இறுதிப் பகுதிகளில் மீண்டும் வளர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. தொலைத் தொடர்புகள் உச்ச நிலை பெறாத அக்காலத்திலும் சமயப் பெரியார்களின் பிரச்சாரமும் ஆதீனங்களின் சேவைகளும் போற்றத்தக்கதே. பின்பு மேலைநாட்டாரின் செல்வாக்கால் சீர்குலைவு ஏற்பட்டது. ஐரோப்பியர்கள் மேற்கொண்ட மதமாற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக ஆறுமுக நாவலர் போன்ற பெரியார்கள் குரலெழுப்பினார்கள். அதன் பயனாக இந்துமதத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

அது அவ்வாறு இருக்க இன்றைய நிலையை நோக்கும் போது கவலைக் குரியதாகவுள்ளது. சமயம் மனிதனை வழிநடத்தும் ஒரு நெறி என்பதில் விலகல் ஏற்பட்டு சமயத்தை மனிதன் வழிநடத்தும் நிலையே இன்று நிலவுகிறது. கடவுள் மனிதனை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை நலிவடைந்து கடவுளை மனிதன் காப்பாற்றும் நிலை உருவாகியுள்ளது சமயத்தில் பிழைகள் நிறைந்திருக்கின்றன எனப் பலரும் கூறுகின்றார்கள். ஷேக்ஸ்பியர் "பிழை எங்கள் கிரகத்தில் இல்லை எங்களிடம் தான் இருக்கிறது ஏனெனில் நாங்கள் பலவீனர்கள்." என்கிறார்.

இக்கூற்று இன்றைய இந்துக் களிற்கும் நிறையவே பொருந்தும். "பிழை எங்கள் மதத்தில் இல்லை; எங்களிடம் தான் இருக்கிறது" இதை ஒவ்வொரு இந்துவும் உணரத்தலைப்பட வேண்டும். இந்துக் களின் தவறான நடத்தைகள் இந்து மதத்தின் தவறான நடத்தைகளாகப் பார்க்கப்படுகின்றன. இன்றைய இந்துச் சமூகத்தில் நிலவும் பல குழப்பங்களுக்கு இந்துக்களே பொறுப்பாளிகள் ஆவர்.

இந்துச் சமூகத்தில் இன்று நிலவும் சீர்குலைவுக்கும், பிற மதங்களின் தாக்கத்திற்கும் இந்துக்களே முதன்மைக் காரணிகளாய் அமைகின்றனர். இன்று இந்துச் சமூகத்தைப் பிடித்த பாரிய பிணி வறுமையே ஆகும். இந்துக்களையும், இந்து தர்மத்தையும் கட்டிக் காக்கவே இந்து

சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. ஆனால் இன்று இந்துக்களுக்கு ஏற்பட்டுள்ள வறுமையை ஒழிப்பதற்கு இந்து சமய நிறுவனங்கள் குரலெழுப்பி நிவர்த்தி செய்யும் வழிகளில் ஈடுபடுகின்றனவோ எனின் இல்லை என்றே கூற முடிகிறது. லௌகீக வாழ்வின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படும் பொழுதே மனிதனுக்குத் தனக்கு அப்பாற்பட்டதை உணரும் விருப்பம் பிறக்கும் என்பதை இந்துமத நிறுவனங்கள் உணரட்டும்.

இராம கிருஸ்ணமிஷன் தவிர்ந்த இந்துமத நிறுவனங்கள் சில பாடசாலை மாணவர்களுக்கு சைவப்புலவர்பரீட்சை, சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சை, பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி போன்றவற்றை நடத்துவதன் மூலம் இளைய தலைமுறை மத்தியில் இந்துமதப் பற்றை ஏற்படுத்தலாம் என்று பகற்கனவு காண்கின்றன. வைக்கப் படுகின்ற பரீட்சைகள் தான் இலவசமாக வைக்கப்படுகின்றனவோ எனில் அதுவும் இல்லை. இந்துமதத் தத்துவ நூல்களை இன்றுள்ள நிறுவனங்கள் இலவசமாக வழங்குகின்றனவா என்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்றே. ஆனால் ஆறுமுகநாவலர் போன்ற பெரியவர்கள் இலவச வகுப்புக் களை நடத்தி வழிகாட்டியுள்ளார்கள் என்பதை சிறிதளவேனும் உணராததும் வியப்புக்குரியதே.

ஈழத்தில் போர்ச்சூழலால் மக்கள் இன்னல்களை அனுபவித்த காலங்களில் இந்துமத நிறுவனங்கள் முன்வந்து உதவாதது சினத்திற்குரியது. ஆனால் பல கிறிஸ்தவ தேவாலயங்கள் பாரபட்சமற்று அனைத்து மக்களுக்கும் வழங்கிய உதவிகளை பாராட்டாமல் இருக்க முடியாது. அண்மையில் அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாது பெரு வரட்சி நிலவிய போது எத்தனை இந்துசமய நிறுவனங்கள் முண்டியடித்து உதவின என்பதை சிந்தித்துத் தான் ஆக வேண்டும். உலக சைவப்பேரவை சைவ மறுமலர்ச்சிக் குப் பத்துச் செயற்திட்டங்களைக் கூறு கின்றது அவை காலத்திற்கு ஏற்புடை யனவா? என்பதை நோக்கின் இல்லை என்ற விடையே மேலோங்கும்.

1. உலக சைவப் பேரவையை வலுப் படுத்தல்.

   இதை வலுப்படுத்துவதன் மூலம் சமயப்பற்றை ஏற்படுத்த முடியாது. இந்துச் சமூகத்தில் உள்ள குறை களைப் பேரவை நிவர்த்தி செய்வதன் மூலம் இந்துக்களாலேயே அது வலுப்படுத்தப்படும். இதை எவரும் மறுக்க முடியாது.

2. சைவ மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தல்

   ஒற்றுமையை வளர்ப்பதற்கு முன்னர் வேற்றுமையின் வேர்களைக் கண்டறிந்து அவற்றை தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும்.

3. தமிழிற்கு முதன்மை தந்து அதனை வளர்த்தல்.

   இந்துக்களிற் பெரும்பாலானோர் உணவு, உடை, உறையுளற்று அல்லற்படும் நிலையில் பேரவை தமிழில் அர்ச்சனை வேண்டும் என்பதை வலியுறுத்துவது இலங்கை யின் சமாதானத்திற்கு முன்பு இராமேஸ் வரத்திற்கும் தலை மன்னாருக்கும் இடையே பாலம் அமைக்கும் முயற்சி போலாகும்.

4. சைவம், தமிழ் தொடர்பான ஆய்வு களைப் போற்றுதல்.

   ஆய்வுகளைப் போற்றி அங்கீ கரிக்கும் அறிஞர் குழாமால் மட்டும் இந்து மதத்தை பேண முடியாது. சாதாரண மக்களிடையே சமய

அறிவைப் பரப்புதல் வேண்டும். அதற்கு முன்பு அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுதல் மிக அவசியம்.

5. உலக சைவப் பலகலைக்கழகம்

இம் முயற்சி வரவேற்கத்தக்க தாயினும் இது அமைக்கப்பட்ட பின் இதில் எத்தனை இந்துக்கள் கல்வி கற்பார்கள் என்பதும், இலவசமாகக் கல்வி புகட்டப்படுமா? என்பதும் சிந்திக்க வேண்டியவை. பெருந் தொகைப் பணத்தைச் செலுத்தி எத்தனை இந்துக்கள் இங்கு கற்பார்கள் என்பதும் கேள்விக்குரியதே.

6. தீவிர சாதி ஒழிப்பு

இந்த நோக்கமும் எவ்வளவு தூரம் நடைமுறைக்குச் சாத்தியமானது என்பதையும் வளப்பகிர்வு, உரிமைப் பகிர்வு மூலமே இது சாத்தியமாகும் என்பதையும் உணராதது வருந்தத் தக்கதே.

7. பெண்களுக்கு முதன்மையும், சமவுரிமையும்

இந்துமதம் எந்த இடத்திலும் பெண்ணை ஒதுக்கி வைக்கவில்லை. பெண்ணைத் தெய்வமாகக் காணுவதே இந்துமதத்தின் பண்பு. இதைப் பேரவை உணராது சமயவாதிகள் என்று தமக்குத் தாமே தம்பட்டம் சூட்டுகின்ற சிலரின் கருத்துக்களை சமயத்தில் உள்ள தவறாகக் கருதுவதும் தவறு. பெண்ணியம் பேசும் நிறுவனங்களாக சமய நிறுவனங்கள் இருப்பது விரும் பத்தக்கதல்ல.

8. மதமாற்றத்தைத் தடுத்தல்

திரு. கெண்டி பேரின்பநாயகம் ஒரு இடத்தில் பின்வருமாறு கூறுகிறார் "இந்த யாழ்ப்பாணத்திலே எவனொரு வனாவது தான் கைக் கொண்ட மதம் பிழையென்று மதம் மாறவில்லை கால் வயிற்றுக் கஞ்சிக்காக மதம் மாறினான். மத மாற்றத்தைத் தடுக்க மதத்தைப் பாதுகாக்க வேலி அடைப்பதற்கு முன் பசி விறாண்டும் வயிறுகளுக்கு உணவு கொடுப்பதே அவசியமானது.

9. உட்பகை போக்கல்

பரிமேலழகர் "புறப்பகைக்கு கடனாகக் கொடுத்து அது வெல்லும் துணையும் உள்ளாய் நிற்கும் பகை" என்று உட்பகை பற்றிக் கூறினார். ஆனால் சில சமய நிறுவனங்கள் தமக்குள் ஒன்றை ஒன்று பகைத்தும், தாமே ஒன்றை ஒன்று தாழ்த்தியும் வாதங்கள் புரிவது தான் வேடிக்கை யாக இருக்கிறது.

மேற்கூறிய நோக்கங்களும் வறுமை ஒழிப்பு, கொடைத் தர்மக் கருத்துக் களை கொண்டிருக்கவில்லை. இந்து சமய நிறுவனங்கள் தர்மம் சார்ந்த கருத்துக் களை முதன்மைப்படுத்தி அவற்றை நோக்கமாகக் கொண்டிருத்தல் நன்று. நிறுவனங்கள் சமயம் வளர்த்த காலம் மலையேறி சமயம் நிறுவனங்களை வளர்க்கும் காலம் வந்திருப்பதே இன்றைய உண்மை நிலை. இந்துக்களின் முதன்மை நிறுவனங்கள் கோயில்களே. ஆனால் இன்று நடைபெறும் செயற்பாடுகள் கவலைக்குரியனவேயாகும். யாழ்ப்பாணத் தில் இடம் பெயர்ந்து ஓடிய மக்கள் சில கோயில்களில் தஞ்சமடையச் சென்ற போது ஆலயக்கதவுகள் மூடப்பட்டனவாம். இன்று ஆலயங்கள் குறிப்பாக இந்து ஆலயங்கள் வியாபார நிலையங்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்து ஆலயங்களிலும் அர்ச்சனைச் சீட்டில் பத்துரூபா, இருபது ரூபா, ஐம்பது ரூபா என்று பாகுபாடு காணப்படுகிறதே, இவை எல்லாம் எந்த ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன?

கோயில்களை உயர்த்தி உயர்த்திக் கட்டுவதற்கு வீடு வீடாகச் சென்று பொருள், பணம் முதலியன சேகரிப்போர் கோயிற் கோபுரங்கள் உயர உயர சமயப்பற்றும் உயரும் என்று எண்ணுகிறார்கள் போலும்? ஏனைய மத ஆலயங்களை விட இந்து ஆலயங்களைச் சூழவே அதிகம் வாழ்கின்றனர். ஆலயங்களின் தாவாரங்களில் தமது வாழ்க்கையை ஓட்டும் அவர்களுக்கு இருப்பிட வசதிகளையும் அவர்கள் உழைப்பதற்கோ அல்லது கற்பதற்கோ ஏற்ற உதவிகளையும் செய்வதை விட்டுக் கட்டடத்தைக் கட்டுவதால் பரமனை அடைய முடியாது. யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான ஆலயங்கள் குண்டு வீசி அழிக்கப்பட்ட போது ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், கண்டனங்களையும் தெரிவித்து நட்டஈடு கோரிய தர்மகத்தா சபையினரும், வேறு பல நிறுவனங்களும் ஆலயத்தைச் சுற்றி வர வாழ்ந்த ஏழைகளின் இறப்பிற்குக் குரல் கொடுத்தார்களோ எனில் இல்லை. மகோற்சவ காலங்களில் போட்டிக்குத் திருவிழா செய்கிறார்கள்.

ஒரு திருவிழாக்காரர் இரண்டு இசைக்குழுக்கள் பிடித்தால் அடுத்த திருவிழாக்காரர் ஐந்து இசைக்குழுக்கள் பிடிப்பார்கள். சினிமாப் படங்களைத் திரையிடுவார்கள். போதாக்குறைக்குக் காதல் திருமணமா? நிச்சயிக்கும் திருமணமா? சிறந்தது என்றும் சினிமாத் திரையிசைப் பாடல்களைப் பற்றியும் பட்டிமன்றங்களை ஒழுங்கு செய்கிறார்கள். இவற்றையெல்லாம் அங்கீகரித்துவிட்டு சமயம் அழிகிறது என்று பேசும் தர்ம கர்த்தாக்களைப் பார்க்கும் போது வேடிக்கையாகத் தான் இருக்கிறது. இன்றும் பொதுவாக்கப்படாமல் தனியுரிமையாச் சொந்தங் கொண்டாடப்படும் கோயில்களும் உள்ளன. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மாலைகளும் போர்வைகளும் சாத்தும் வேகத்தைப் பார்த்தால் கொஞ்சக் காலத்தில் அவர்களை ஆசனத்தில் அமர்த்தி விட்டுச் சுவாமி போல வலம் கொண்டு வர முனைவார்களோ என்ற அச்சம் எழுகின்றது. இதை உணர்ந்து இந்துக்கள் செயற்படுதல் நன்று. ஆனால் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு கோயில்கள் அமைப்பதாலும், வருடந்தோறும் விழாக்கள் கொண்டாடுவதாலும் சமயத்தை வளர்க்க முடியாது என்பதை உணரா திருப்பது தவறே.

புராணபடன மரபு அழிந்து போகும் நிலையும், தேவார திருவாசகங்களை வாய்திறந்து பாடக் கூச்சப்படும் நிலையும், தீட்சை பெறாத நிலையும் இன்று காணப்படுகின்றன. இவ்வாறு சமயத்திற் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் பொழுது அவற்றை ஜீரணிக்க முடியாமல் சுட்டிக் காட்டுபவருக்கு "சமயத்துரோகி" என்ற பட்டத்தைக் கொடுத்துக் கௌரவிக்கும் காலமிது. எது எப்படியாயினும் "அரம் பொருத பொன் போலத்தேயும் உரம் பொழுது உட்பகை உற்ற குடி" என்பதனை உணர்ந்து செயற்படல் நன்று.

## உசாத்துணை நூல்கள்

- இந்து தர்மம்
- இந்துக்களால் அழியும் இந்துமதம்

# விஞ்ஞானம் மேலும் வளர்ந்து மனித உயிரைக் காக்குமா?

செல்வி. புவிநாயகம் மதியுகா
தரம் 13, உயிரியல் பிரிவு, (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

இன்றைய விஞ்ஞான உலகில் அபரிமிதமான கண்டுபிடிப்புக்களுக்குக் குறைவே இல்லை. ஆயினும் அக் கண்டுபிடிப்புக்களின் செயலாக்கத்தில் மனித உயிர்கள் தான் வகை தொகையின்றி ஆயிரமாயிரமாகக் காவு கொள்ளப்படு கின்றது. முதலில் மனிதனின் கால நேரத்தைச் சிக்கனப்படுத்தும் பிரயாணத் தில் ஆகாயவிமானம் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. இவ் விமானம் பறக்கும் போது இயந்திரக் கோளாறு ஏற்படும் பட்சத்தில் அதில் பயணம் செய்யும் அனைத்து மனித உயிர்களும் அழிந்து போகிறது. இதனைத் தடுப்பதற்கு விமானத்தில் தானியங்கி மிதவைக் கருவி (விமானத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய பரசூட்) ஒன்று பொருத்தும் பட்சத்தில் இதனைத் தடுக்க முடியும். ஒரு மனிதனின் பாரத்தைப் பரசூட் மூலம் மிதக்க வைக்க முடியுமாயின் அல்லது செவ்வாய்க் கிரகத்தில் நாஸா விஞ்ஞானிகளால் கியோரியோ சிற்றி ஆய்வுக்கலத்தை பரசூட் மூலம் மிதக்க வைத்துத் தரையிறக்க முடியுமாயின் ஏன் விமானத்தில் ஓர் மிதவை பரசூட் பொருத்த விஞ்ஞானத்தால் முடிய வில்லை.

விமானப் பயணத்தின் போது விமானிகள் தூங்குவது தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட தரவுகளின் படி அறுபது சதவீதமான விமானிகள் விமானம் ஓட்டிச் செல்கையில் தூங்கு கிறார்கள் எனவும் இதனால் விபத்துக்கள் மற்றும் அதிக நேரம் தேவையற்ற பறப்பில் ஈடுபடுவதாகவும் சர்வதேச விமானக் கட்டுப்பாட்டு நிலையம் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. அதனைத் தடுப்பதற்கு விமானியின் அறையில் ஓர் தானியங்கிக் கருவி ஒன்றைப் பொருத்து வதன் மூலம் அவரது விழிகள் தொடர்ச்சி யாக மூடப்படும் சந்தர்ப்பத்தில் அலாரம் ஒலி எழுப்பும் பட்சத்தில் பயணிகள் மற்றும் சிப்பந்திகள் உசாரடைந்து விமானியை தூக்கத்திலிருந்து விடுவிக்க முடியு மல்லவா?

கடல் மார்க்கமான பயணம் குறைவடைந்தாலும் மனிதர்கள் தாம் விரும்பிய போது கடற் பயணங்களை சுற்றுலா மற்றும் இதர தேவைகளுக்காகத் தற்போது மேற் கொண்டு வருகின்றனர். இதன் போது ஏற்படுகின்ற விபத்துக்களால் கடற்கலங்களில் பயணிப்போரில் 75% மான மக்கள் உயிர் நீக்க நேரிடுகிறது. சில சமயங்களில் அனைவருமே நீரில் மூழ்கி இறந்து விடுகின்றனர். இவர்களுக்கு நீரில் மிதக்கும் உடைகள் இருப்பினும் அதைப் பயன்படுத்தி இருப்பினும் அதன் மூலம் அவர்களால் நீரில் மூழ்காது தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் பயணிக்கும் கடல்நீரில் உள்ள கடும் குளிர், பனி போன்ற காலநிலைகள் பாதக மாக அமைகின்றது.

இதனைத் தடுப்பதற்குக் கடற் பயணத்தின் போது அவர்களுக்கு அணியப்படும் மிதவை உடை மேற் குறிப்பிட்ட காலநிலைகளுக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட வேண்டும். அத்துடன்

கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தும் கடல் நீரில் உள்ள $O_2$ (ஒட்சிசனை) பிரித்தெடுத்து சுவாசத்தினை மேற்கொண்டு வாழ்கின்றன. இதனைப் போன்று அவ்வுடையில் கடல் நீரிலுள்ள ஒட்சிசனைப் பிரித்தெடுத்து சுவாசத்தினை வழங்கும் கருவி ஒன்றினைப் பொருத்தும் பட்சத்தில் கடற்பயண அழிவுகள் ஏற்படும் போது அதனைத் தடுக்க முடியுமல்லவா.

இன்று ஏழை பணக்காரன் என்ற பேதமில்லாது அனைவரது பாவனை யிலுமுள்ள ஒரே ஒரு இலத்திரனியல் சாதனம் என்றால் அது கையடக்கத் தொலைபேசி ஆகும். இதனது இயக்கத் திற்குரிய மின்காந்த அலையினால் புற்று நோய் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. மேலும் தொடர்ச்சியாக அதிக நேரம் பயன் படுத்துபவர்களுக்கும் மற்றும் நித்திரைக் குச் செல்லும்போது தலைப் பகுதியில் தொலைபேசியினை வைத்திருப்பவர்களுக் கும் மூளைப் புற்றுநோய் ஏற்படுவதாக அண்மை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் மின்காந்த அலைகளினால் வானொலி கடந்த நீண்ட காலமாக மக்கள் பாவனையில் உள்ளது. இதனால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லா துள்ளது. எனவே மக்களுக்குப் பாதிப் பில்லாத மின்காந்த அலை முறையினைக் கையாளும் பட்சத்தில் வானொலிப் பெட்டி போல் கையடக்கத் தொலைபேசியால் எவ்வித பாதிப்பும் ஏற்படாதல்லவா? எனவே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு அப்பால் அதனால் ஏற்படும் பாதக விளைவுகளைத் தடுக்கும் முறைமைகளை நோக்கி விஞ்ஞானம் வளர்ந்து மனித குல வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

## செய்ய வேண்டியவை

01. இயன்றளவு தெளிவாக எழுது.
02. வலது கையைக் கொண்டு எப்பொழுதும் கை குலுக்கு.
03. உழைக்கப் பழகு.
04. ஊர்க்கர்களை தொலைவில் வை.
05. பெரியோருடன் மரியாதையுடன் பேசு.
06. கருத்து வேறுபாடுகளை மறந்துவிடு.
07. காலையில், மாலையில் தேகப் பயிற்சி செய்.
08. தீய பழக்கங்களைத் திருத்திக் கொள்.
09. சிறியவர்களை நேசி.
10. தகராறுகளைத் தீர்த்துக்கொள்.

# உலகப்போரின் கதாநாயகனும் வில்லனும்

செல்வி. செல்லையா தரணியா
12B கலைப்பிரிவு, (2016)
யா/இராமநாதன் கல்லூரி.

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனும் வில்லனும் ஒருவரே. அவர் தான் அடால்ப் ஹிட்லர். 2ம் உலகப்போரின் போது ஜேர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கினார். அவர் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது. 2ம் உலகப் போர் மூள்வதற்கும் அதன் மூலம் 5 கோடி பேருக்கு மேல் இறப்பதற்கு காரணமாக இருந்த ஹிட்லரின் வாழ்க்கை பல திருப்பங்களும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்தது.

வட ஆஸ்திரியாவில் உள்ள பிரானவ் என்ற ஊரில் பிறந்தார். தந்தையின் பெயர் "அலாய்ஸ் கிரப்பர் ஹிட்லர்". இவர் சுங்க இலாகா அதிகாரியாக வேலை பாரத்து வந்தார். இவருக்கு மூன்று மனைவிகள். மூன்றாவது மனைவியான க்ளாராவின் நான்காவது மகன் ஹிட்லர். பிறந்தது முதலே ஹிட்லர் நோஞ்சானாக இருந்தார். அடிக்கடி காய்ச்சல் வரும். ஒரு வருடத்துக்குப் பிறகு தான் உடம்பு தேறியது. அலோய்ஸ் கண்டிப்பான தந்தை. தந்தை சுங்க அதிகாரியாக பணியாற்றிய தால் அடிக்கடி வெளி ஊர் சென்று விடுவார். பள்ளியில் படிக்கும் போது ஹிட்லர் தான் வகுப்பில் முதல் மாணவர். ஹிட்லருக்கு அம்மாவிடம் செல்லம் அதிகம். அலோய்ஸ் ஹிட்லரையும் அரச பணியில் சேர்க்க விருப்பப்பட்டார். ஆனால் ஹிட்லரின் விருப்பமோ ஓவியராக வேண்டும் என்பது.

ஹிட்லருக்கு படிப்பில் ஆர்வம் குறைந்தது. மாணவப் பருவத்திலேயே நிறைய நாவல்கள் படித்தார். போர்கள் பற்றிய கதைகள் என்றால் நாட்டம் அதிகம். 1903ம் ஆண்டு ஹிட்லரின் தந்தை இறந்து போனார். தந்தையின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த ஹிட்லர் நாளுக்கு நாள் முரடனாக மாறினார். மாணவர்களுடன் சண்டை போடுவதுடன் ஆசிரியர்களுடனும் மோதுவார். தனது 17 வயதில் பள்ளி இறுதித் தேர்வில் தேறினார். இவரது வாழ்க்கை அரசாங்க உதவிப்பணத்தில் ஓடியது. 18 வயதானவுடன் அப்பாவிடம் பணம் பெற்றுக் கொண்டு ஓவியராகப் போகிறேன் என்று சொல்லி ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவுக்கு ரயிலேறி விட்டார். ஆனால் இவர் ஓவியப்பள்ளி தேர்வில் தோல்வியடைந்து விட்டார். அடுத்த முறை தேர்வில் கலந்து கொள்ள அனுமதி இல்லை. அந்த ஆண்டின் இறுதியில் ஹிட்லரின் தாயார் இறந்து போனார்.

ஹிட்லரின் பணம் கரைந்து போனதனால் பிழைக்க வழி தேடி ஜேர்மனிக்கு வந்தார். ஓவியராக வர முடியவில்லை. இராணுவத்திலாவது சேரலாம் என்று எண்ணி ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்தார். அப்போது இவருக்கு வயது இருபத்தைந்து. முதல் உலகப் போர் தொடங்கிய சமயம் அது. 1914 இல் தொடங்கி 1918 வரை நடந்த முதல் உலகப் போரின் போது ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்தார். இராணுவத்தில் சோல்ஜராக இருந்தார். அங்கே அவருக்கு "ரன்னர்" பதவி தரப்பட்டது. உலகப் போரின் போது எதிரிகளால் "மஸ்டர்ட் வாயு" வீசப்பட்டதனால் ஹிட்லரின் ஒரு கண் தற்காலிகமாக பாதிக்கப்பட்டது.

நுரையீரலும் பாதிக்கப்பட மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார்.

ஜேர்மனி முதலாம் உலகப் போரில் சரணடைந்தது. மருத்துவமனையில் இருந்த ஹிட்லர் கதறியழுதார். ஜேர்மனி யின் தோல்விக்கு கம்யூனிஸ்ட்களும் யூதர்களும் காரணம் என அவர்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்தினார். பின்னர் இவர் புதிதாக தொடங்கப்பட்ட "தேசிய சோசியலிஸ்ட் ஜேர்மன் தொழிலாளர் கட்சி" யில் உறுப்பினராக சேர்ந்தார். 1920 பெப்பரவரி 29 ம் தேதி அந்த கட்சியின் முதல் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் ஹிட்லர் தனது முதல் உரையை தொடங்கினார். இவர் சுவஸ்திகா சின்னத்தை கட்சியின் சின்னமாக பயன்படுத்தினார். 1923ல் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி செய்ததாக ஹிட்லரையும் அவரது சகாக்களையும் சிறையில் அடைத்தது ஜேர்மனி அரசு. ஹிட்லருக்கு முதல் 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஓர் ஆண்டாக குறைக்கப்பட்டது. இவர் சிறையில் இருந்தவாறே "எனது போராட்டம் (Main Kamp)" என்ற நூலை எழுதினார்.

1928 இல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வி அடைந்தது. இவர் ஜனாதிபதித் தேர்தலில் "ஹிண்டன் பேர்க்" எனும் மூத்த தலைவருக்கு எதிராக போட்டியிட்டு தோற்றார். ஹிண்டன் பேர்க் கட்சியினருக்கு ஆட்சியமைக்க ஹிட்லரின் நாஜி கட்சியின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே ஹிட்லருக்கு "சான்சலர்" பதவி கிடைத்தது. ஆனால் ஹிட்லரின் மீது இருந்த பயத்தின் காரணமாக அதிகாரங்கள் குறைக்கப்பட்டே கொடுக்கப்பட்டது. அதே சமயம் பாராளுமன்றக் கட்டிடம் கொளுத்தப் பட்டது. ஜனாதிபதி ஹிண்டன்பேர்க் மக்களின் போராட்டத்துக்கு அடிபணிந்தார். 1933 ஜனவரி 30ம் திகதி ஹிட்லரை அழைத்து பிரதமராக நியமித்தார். இவர் பதவியேற்ற ஒரு வருடத்தில் ஹிண்டர்பேர்க் மரணமடைந்தார். இதனால் ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றி எதிர்பாளர்களை ஒழித்துவிட்டு ஜேர்மனியின் சர்வாதிகாரி யானார் ஹிட்லர். இராணுவ இலாகாவை யும், இராணுவப் பதவியையும் தானே எடுத்துக் கொண்டார். அரசியல் கட்சிகளை தடை செய்தார். பாராளுமன்றத்தை கலைத்தார்.

எதிரிகளை சிறையில் தள்ளி னார். யூதர்களை கைது செய்து சிறையில் பட்டினி போட்டும் விஷப்புகையினாலும் கொன்றார். தினமும் ஆறாயிரம் முதல் பத்தாயிரம் பேர் விஷப்புகையினால் சாகடிக்கப்பட்டனர். ஜேர்மனியின் தரைப் படை, கடற்படை, விமானப்படை மூன்றும் உலகின் சிறந்த படைகளாக உரு வெடுத்தன. 1939ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி எதுவித போர்ப் பிரகடனமும் தெரிவிக்காமல் போலந்து நாட்டின் மீது படையெடுத்து கைப்பற்றிக் கொண்டான். இந்த சமயத்தில் ஹிட்லருடன் நட்புக் கொண்டார் இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி. ஜப்பான் உட்பட வேறு சில நாடுகளும் ஜேர்மனியுடன் கைகோர்த்து கொண்டன. ஹிட்லரை கொலை செய்ய அவருடைய தளபதிகளே சதித்திட்டம் தீட்டினர். இவர்களுக்கு தலைவன் "கர்னல்வான்ஸ்டப்பன் பர்க்" ஆவான். 1940 ஜுலை 20ம் திகதி நடந்த கொலை முயற்சியில் மயிரிழையில் உயிர் தப்பினார். கொலை முயற்சியாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஹிட்லர் பதவியேற்ற போது 1933 இல் ஜேர்மனியில் வேலை இல்லாதவர் களின் எண்ணிக்கை 60 லட்சம். ஆனால் 1936 இல் வேலையில்லாதவர் என்று ஒருவர் கூட இல்லை. படுவேகமாக கார்கள் போவதற்கும் மிக நீண்ட அதிவேக பாதை

உலகில் முதல் முறை கட்டப்பட்டது ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சிக் காலத் திலேயேதான். முதியவர்களுக்கு ஓய் வூதியம், இலவச வைத்தியம், காப்புறுதி திட்டங்கள், சாமான்யர்களுக்கான கார் தயாரிக்கப்பட்டது இவரது காலத்தில் தான்.

தொழிற்சாலைகளால் சூழல் மாசடையக் கூடாது என்பதனால் தொழிற் சாலைகளுக்கான Anti pollution சாதனங் களையும் ஃபில்டர்களையும் பொருந்திக் கொண்டன. இவர் மருத்துவ துறையிலும் ஜேர்மனியை வியக்கத்தகு முன்னேற்றம் அடைய வைத்தார். பெண்களுக்கு இராணுவத்தில் பல பணிகள் இடம் தந்து பெண்ணுரிமை காப்பதில் தலைசிறந்து விளங்கினார். மிருகவதை தடுப்புச்சட்டத்தை அமுல்படுத்தினார். குழந்தைகளிடம் அன்பு காட்டி அவர்களுக்கு பிடித்த மனிதராக திகழ்ந்தார். ஹிட்லரின் காலத்தில் ஜேர்மனிய இராணுவம் தொழில் நுட்பத்திலும், விஞ்ஞானத்திலும் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்தது.

ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொழுது ஜேர்மனியின் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் தான். அப்போது சிறந்த ஆயுதங்கள் கூட இல்லை. ஆனால் ஹிட்லர் ஆட்சியேற்ற 4 ஆண்டுகளில் ஐரோப்பாவில் மிகப்பெரிய பிரம்மாண்டமான இராணுவமாக மாறியது ஜேர்மனிய இராணுவம். நவீன போர் விமானங்கள், துப்பாக்கிகள், டாங்கிகள் போன்ற அசுர சக்தியாக ஜேர்மனிய இராணுவம் மாறிய வேகம் உலக வரலாற்றிலே பெரிய ஆச்சரியம் என்று உலகப்பெரும் இராணுவ ஆராய்ச்சியாளர்கள் இன்றும் வியந்து கூறுகின்றார்கள்.

ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் சுரங்கம் அமைத்து தங்கி யிருந்தார் ஹிட்லர். 1945 ஜனவரி 16ம் திகதி முதல் ஹிட்லர் அங்கு வசிக்கலானார். 1804 இல் மாவீரன் நெப்போலியன் பயன்படுத்திய நாற்காலி ஒன்று இவரிடம் இருந்தது. 1945 ஏப்ரல் பின் பகுதியில் பேர்லின் நகரம் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. ஹிட்லர் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலும் குண்டுகள் விழுந்தன. ஈவாபிரவுன் என்ற பெண் 1930ம் ஆண்டு முதல் ஹிட்லரின் மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தாள்.

முசோலினி சிறைவைக்கப்பட்ட நேரத்தில் ஹிட்லர் தன் ஆத்ம நண்பரான முசோலினியை மீட்க ரகசியப்படையை அனுப்பி முசோலினியையும் அவரது குடும்பத்தினரையும் மீட்டார். 1945 ஏப்ரல் 30ம் திகதி இரவு 9 மணி முசோலினியும் அவர் மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக்கொள்ளப்பட்டனர் என சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்த செய்தியை ஹிட்லர் கேட்டு மிகுந்த வேதனை யடைந்தார். அன்றிரவு 12 மணியளவில் பேர்லின் நகரம் முழுவதும் ரஷ்யப்படைகள் வசமாகிவிட்டது என ஹிட்லருக்கு தகவல் கிடைத்தது.

1945ம் ஆண்டு ஏப்ரல் 25ம் திகதி பெர்லின் நகரை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டுவிட்டன. எப்பொழுதும் எதிரி களிடம் கைதிகளாக பிடிபடலாம் என்ற நிலை உருவாகியது. இதனால் எதிரி களிடம் சிக்குவதை விட தற்கொலை செய்யலாம் என்ற முடிவை ஈவாபிரவுனிடம் தெரிவித்தார். ஏப்ரல் 27ம் திகதி ஹிட்லரின் பிறந்த நாளையொட்டி பாதாள அறையில் விருந்து நடந்தது. மறுநாள் ஏப்ரல் 28ம் திகதி ஹிட்லர், ஈவாபிரவுன் திருமணம் நடைபெற்றது. காலை 11 மணிக்கு ஹிட்லர் தனது உயிலை எழுதினார்.

அவ் உயிலில் தன் சொத்துக்கள் யாவும் நாட்டுக்குச் சேரவேண்டும் என குறிப்பிட்டார். பிறகு தன் அந்தரங்க

உதவியாளரை அழைத்து தானும், ஈவாவும் ஒன்றாக இறந்துவிடப் போகின்றோம். நாங்கள் இறந்த பின்னர் எங்கள் உடல்களை ஒரு போர்வையில் சுருட்டி பெற்றோலால் எரித்து சாம்பலாக்கி விடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள், என் பேனாக்கள், கண்ணாடி முதலிய பொருட்களை சேகரித்து ஒன்று விடாமல் எரித்து விடுங்கள் என்று கூறி தன் மனைவியுடன் தன் அறைக்குச் சென்றார். அறைக்கதவு சாத்தப்பட்டது. வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. நீண்ட நேரம் கழித்து காத்திருந்த மந்திரிகளும், தளபதிகளும் கதவை திறந்துகொண்டு உள்ளே சென்றனர்.

ஒரு சோபாவில் உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல், அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியில் இருந்து புகை வந்து கொண்டிருந்ததால் அவர் சற்று நேரத்திற்கு முன் தான் தன்னை சுட்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிந்தது. ஹிட்லரின் வலதுகரம் அவரது தாயாரின் படத்தை அணைத்தபடி இருந்தது. ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்த பிணமாக இருந்தாள் ஈவா.

ஹிட்லரின் உடலையும், ஈவாவின் உடலையும் ஒரு கம்பளப் போர்வையில் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அறையில் இருந்து தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கிக் கொண்டு போனார்கள். அங்கே பெற்றோலையும், எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்து சாம்பலாக்கினார்கள். சில மணி நேரம் கழித்து வந்த ரஷ்யப் படையினர் ஹிட்லரைக் காணாமல் திகைத்து போனார்கள். அவர் தற்கொலை செய்து கொண்டதும், உடல்கள் எரிக்கப்பட்டதும் பிறகு தான் தெரிந்தது. எனினும் ஹிட்லர் இறக்கவில்லை தலைமறைவாக இருக்கின்றார் என்று நம்பியவர்கள் ஏராளம்!

## அறக்கட்டளைகள்

1. எப்போதும் எந்த இடத்திலும் பிறர் மனம் நோகப் பேசக்கூடாது.
2. ஒருவரிடம் நேரில் பேசும்போது மரியாதையாகப் பேசிவிட்டு அவர் இல்லாதவிடத்து மரியாதையின்றிப் பேசுவது மனிதனுடைய உயர்வைக் கெடுத்துவிடும்.
3. பிறருடைய குற்றங்களைக் கண்டு விமர்சித்துக்கொண்டு இருப்பதைவிட, நாம் குற்றமில்லாமல் நடக்கப் பழகுவதே வாழ்வை உயர்த்தும்.
4. கடவுள் எங்கும் நிறைந்தவர் என நம்புகிறோம். ஆகவே இப்பூமியில் எங்கு வாழ்ந்தாலும் நல்லதையே நினைத்து, தீயவற்றை விலக்கி நற்பண்புகளுடன் வாழ வேண்டும்.
5. நமக்கு எல்லாம் தெரியும்; மற்றவர்களுக்கு என்ன தெரியும் என்று நினைத்துக்கொண்டு செருக்குற்றிருக்கக்கூடாது. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு. எல்லாம் தெரிந்தவர்களும் ஏதும் தெரியாதவர்களும் உலகில் இல்லை. ஆகவே அடக்கமாகவும் பணிவாகவும் இருத்தல் வேண்டும். பணிவு மனித வாழ்வை உயர்த்தும்.

# தெரிந்து கொள்வோம்

செல்வி.கணேசலிங்கம் கலையரசி
13B, கலைப்பிரிவு (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

**"உலகின் மிக அமைதியான அறை"**

"அமைதி" என்றால் நம் அனை வருக்கும் மிகவும் பிடித்த ஒன்று. சில வேளைகளில் எதுவித சத்தமோ, இரைச்சலோ இல்லாத அமைதியான அறையில் நிம்மதியாக இருக்க நாம் ஆசைப்படுகின்றோம். ஆனால் அந்த அமைதியே அதிகமானால்? என்ன நடக்கும்?

இதற்கமைவாக உலகின் மிக அமைதியான அறை என்று சாதனை படைத்திருக்கின்றது அமெரிக்காவின் மின்னிய பொலிஸ் நகரிலுள்ள ஓர்ஃபீல்ட் (Orfield) ஆய்வறை, சாதாரணமாக 30DB (Decibell) ஒலிச் செறிவுடைய அறையே அமைதியான அறை என்று சொல்லலாம். இந்த அறையின் ஒலிச்செறிவோ 9DB. இது 99.99% சதவீதம் Sound Proof அதாவது ஒலிக்கசிவற்றது.

இந்த அறை எவ்வளவு தூரம் அமைதியானது என்றால் இந்த அறைக்கு எவ்வித வெளி ஒலியுமே கேட்காது. அதனால் அதற்குள் இருக்கும் மனிதனின் இதயத்துடிப்பு, வயிறு, நுரையீரல், ஓசைகள் கூட மிகவும் பலமாக கேட்க தொடங்கி விடுமாம். அப்படியாயின் எவ்வாறு இந்த அறையை உருவாக்கி இருப்பார்கள்?

அறையின் இரட்டைச் சுவர்கள் இரும்புக் கொங்கிரீட் மற்றும் ஃபைபர் (Fibre) கண்ணாடி இழைகளால் ஆன மூன்று தடிப்பம் கொண்ட அறையினுள்ளே எதிரொலியே எட்டா வண்ணம் அதாவது உருவாகும் ஒலிகளை சுவர்கள் முற்று முழுதாக உறிஞ்சி விடும் வகையில் பலகைகளைக் கொண்டு ஒரு விசித்திர வலையமைப்பில் (Mesh) உருவாக்கி யுள்ளனர். பல ஆய்வு நோக்கங்களுக்காக பயன்படும் இந்த அறையில் இதுவரை 45 நிமிடங்களுக்கு மேல் யாரும் தொடர்ந்து இருந்ததில்லையாம். இருக்க முயற்சித் தால் ஒருவித மனக்குழப்பம் ஏற்பட்டுவிடும் என்கின்றார் விஞ்ஞானிகள்.

# தற்கால மாணவர் சமுதாயமும் இணையப் பாவனையும்

செல்வி. உதயகுமார் பதுஷா
12, உயிரியல் பிரிவு, (2016)
யா/ இராமநாதன் கல்லூரி.

இன்றைய நவீன யுகமானது நவீன தொழிநுட்ப மாற்றத்தின் வளர்ச்சியுடன் மிகத் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. இந்த அபிவிருத்தியில் இணையமும் ஒரு கூறாகும். அந்த வகையில் அறிவைப் பெற்றுக் கொள்ளும் வளங்களில் இணையமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. வீட்டிற்கு வெளியே சென்று தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் இணையத்தின் வருகையின் பின் வீடுகளில் இருந்து கொண்டே தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தொடங்கினர். இணையத்தின் வருகையால் இன்று முழு உலகமுமே மனிதனின் உள்ளங்கையில் அடங்கியுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் இணையம் மாணவர்களின் நெருங்கிய தோழனாகி விட்டது. காரணம் இணையப் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதே ஆகும். அதற்கமைய மாணவர்களின் இணையப் பாவனை குறைந்தளவில் இருக்க வேண்டும். இணையம் என்பது அறிவைப் பெறவும், அதனை வளர்த்துக் கொள்ளவும் ஏற்ற ஊடகமாகவும் காணப்படுகின்றது. கல்வியானது தேடலை மையமாகக் கொண்டு அமையப் பெறுவதால் அத் தேடலை மேற்கொள்ளவும், அதை இலகு படுத்திக் கொள்வதற்கும் சிறந்த ஒரு வழிவகையாகவே இணையம் காணப்படுகின்றது.

இணையமானது உலக அளவில் முழுத் தகவல்களையும் உள்ளடங்கலாகக் கொண்டுள்ளது. பொதுவாக எத்துறை சார்ந்ததாக இருந்தாலும் எமக்கு எழக்கூடிய கேள்விகளுக்கு முழுமையான பதில்களையும் விளக்கங்களையும் இணையம் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாறான வசதிகள் எமது கண் முன்னே இருக்கும் போது நாம் அதைப் பயன்படுத்தாமல், அறியாமல் இருப்போமானால் அது எமது பின்னடைவையே எடுத்துக் காட்டுவதாக அமையும்.

அறிவியல் விஞ்ஞானக் கருத்துக்களும், புதிய கண்டுபிடிப்புக்களும் வளர்ச்சியடைந்து வரும் இன்றைய காலத்தைப் பொறுத்தமட்டில் எமக்குத் தேவையானவற்றை தெளிவாகவும், விரிவாகவும் அறிந்துகொள்வதற்கு இணையம் பெருந்துணை புரிகின்றது. இத்தகைய சேவைகளைப் புரியும் இணையம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பின்னிப் பிணைந்துள்ளது.

இணையத்தில் இவை மட்டுமன்றி விளையாட்டுச் செய்திகள், பொது அறிவுத் தகவல்கள, உலகச் செய்திகள், நாட்டு நடப்புக்கள், விவாதங்கள், கட்டுரைகள், வினாத்தாள்கள், கவிதைகள், சித்திரங்கள் உட்பட பல்துறை சார்ந்த தகவல்களையும் பெறக்கூடியதாகவுள்ளது. எனினும் இன்றைய மாணவர்களோ பாடல் கேட்டல், திரைப்படம் பார்த்தல், விளையாட்டுக்கள் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்காகவே இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செயற்பாடுகள் கல்வியில் ஏற்படும் நாட்டத்தை திசை திருப்புகின்றது.

இந்த இணையப் பாவனையானது எமக்கு நன்மையளிக்கும் விடயங்களை அறிந்துகொள்வதற்கு மட்டுமே பயன் படுவதாக அமைய வேண்டும். ஆனாலும் இந்த புதிய தொழில்நுட்பமான இணையத் தின் வருகையால் மாணவர்கள் வீடுகளிற் குள் முடங்கிவிடவில்லை. கணினியின் இலகு பயன்பாட்டுடன் இணையப் பாவனை யும் இணைந்து விரைவாகத் தகவல்கள் வழங்குவதில் பங்களிப்புச் செய்கின்றது. சில நேரங்களில் பொழுதுபோக்கிற்கென இணையத்தைப் பயன்படுத்தினாலும் பெரும் பாலான நேரங்களில் கற்றலுக்காகவும், அறிவைத் தேடிக்கொள்வதற்காகவும் அதனைப் பயன்படுத்துவது மாணவர்களது அறிவை வளர்ப்பதோடு, கல்வி நடவடிக்கை களிற்கும் உந்து சக்தியாக இணையம் அமைகின்றது.

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு இணையம் பல வகையில் பங்குவகிக் கின்றது. ஆனால் மனிதனின் தற்போதைய வாழ்க்கையில் இணையம் புதியவையாகக் காணப்படுகின்றன. “இமயத்தின் பெருமையை சிறுகல் செப்புமா? அது போல் எல்லை யில்லாக் கல்வி வளர்ச்சியில் இணையத் தின் பெருமை சொல்லினிலே சிக்குமோ? என்று கூறுவதன் மூலம் மாணவர்களின் அறிவிற்கு விருந்தளிக்கின்றது. இணையம் இளம் முத்துக்களான மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்குகின்றது. அது மட்டுமன்றி உறங்கிக் கொண்டிருக்கும் மனித மூளையைத் தட்டியெழுப்பி உற்சாகப்படுத்துகின்றது.

இணையத்தின் பாவனையால் நன்மையும், தீமையும் ஏற்படுகின்றது. ஆனால் நாம் தீமையை அகற்றி நன்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். “மண்ணின் மைந்தர்கள் நாம் விண் ணுலகில் பயணம் செய்து தண்மதியிலே குதித்து விட்டோம்.” இவற்றிற்கெல்லாம் காரணம் விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சியே ஆகும். அவற்றில் இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்பு தட்டி எழுச்சியுடன் இயங்கி வருவதற்கு இணையம் காரணம் என்றால் மிகையாகாது. ஆகவே எமக்குக் கிடைத்திருக்கும் எந்தவொரு நவீன வசதி களையும், எமது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், இலக்கை நோக்கிப் பயணிக் கவும் பயன்படுத்துவதே உன்னதமான இணையப் பாவனையாகும்.

★ கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவழிக்கக் கூடாது. அதிக கடன் படுவது அதிக துன்பத்தைத் தரும். கூடுமானவரை சிக்கனமாகவும், எளிமையாகவும் வாழ்ந்து வருதல் வேண்டும். கடன்பட்டு ஆடம்பர வாழ்வு வாழ்வதைவிட கடனின்றி எளிமையான வாழ்வு வாழ்வது மிகவும் மேலானது.

★ யாரிடத்திலும் கடுஞ்சொல்லாக வெடுவெடு என்று பேசக்கூடாது. இனிமையாகவும், குளிர்ச்சியாகவும் பேச வேண்டும்.

★ தாய் மொழியும் தாய் நாட்டிலும், தன் சமயத்திலும் பற்றிருக்க வேண்டும். ஆனால் பிற மொழிகளிடத்திலும், பிற சமயங்களிலும் வெறுப்புக் காட்டக்கூடாது. இனவெறியும், சாதி வெறியும் மனித முன்னேற்றத்தைத் தடுத்துவிடும்.

# சமஸ்கிருத மொழி

செல்வி. ஜெகதீஸ்வரன் லக்ஷிகா
13$^{A}$, கலைப்பிரிவு, (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

உலகிலே தொன்மையும் இலக்கிய வளமும் உள்ள மொழிகளிலே சமஸ்கிருத மும் ஒன்றாகும். இது ஏறக்குறைய நாலாயிரமாண்டு இலக்கிய வளமுள்ள மொழி ஆகும். இவ் இலக்கியம் பல சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கு கின்றது. இது ஆரம்பத்திலே குறிப்பிட்ட பிரதேசத்தவர், சமூகத்தவரின் மொழியாக இருந்திருப்பினும் காலப்போக்கில் பாரத தேசத்தின் பொது மொழியாக, அறிவியல் மொழியாக, இந்துக்களின் பொது மொழியாக, தேவ பாஷையாக விளங்கி வந்துள்ளது.

இந்தியாவிற்கு வெளியே மத்திய ஆசியா, இலங்கை, இந்தோனேசியா, மலேசியத் தீபகற்பம், பர்மா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்போடியா, சீனா, யப்பான் வரை பரவியிருந்தது. மொழி நூலரின் கருத்துப்படி இம்மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இந்தியாவில் நிலவிவரும் இம்மொழியினை இந்தோ-ஆரிய மொழி யெனவும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்விரண்டிற்கும் புராதன ஐரோப்பிய மொழிகளான கிரேக்கம், லத்தீன், தியுத் தோனியம், பழைய ருசியம் முதலான வற்றிற்கு இடையில் மிக நெருங்கிய ஒற்றுமை அம்சங்கள் காணப்படுகின்றன.

சமஸ்கிருத மொழி

1) வைதீக மொழி
2) இதிகாச மொழி
3) பிற்கால மொழி

என மூன்று நிலைகளைக் கொண்டதாகும். முதலாவது சமயச் சார்பானது பின்னைய இரண்டிலும் சமயச் சாயல் இருப்பினும் அவை பெருமளவு உலகியல் சார்பானவையாகும். கடைசி யாகக் கூறப்பட்டுள்ள பிற்கால சமஸ்கிருத மொழிக்கே பாணினி இலக்கணம் வகுத்து அதனை செம்மையாக்கியுள்ளனர். உண்மை யில் இதுவே சமஸ்கிருதம் ஆகும். எனினும் இதற்கு முற்பட்ட மொழி நிலைகளையும் குறிப்பதற்கு இச் சொல் பயன்படுத்தப்படு கின்றது. இக் காலத்திலே வடமொழி எனில் தமிழகத்திற்கு வடக்கேயுள்ள தெலுங்கு, கன்னடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ் இலக்கிய மரபிலே வட மொழி எனும் சொல்லே வழக்கிலிருப்பினும் இக்கால நோக்கத்திற்கு ஏற்ற வகையில் சமஸ்கிருதம் என்ற சொல்லும் கையாளப் படுகின்றது. இதே வேளையில் வேத காலத் திலும், அதனை அடுத்தும் சமஸ்கிருதம் இலக்கிய மொழியாகவும், பேச்சு மொழி யாகவும், இலக்கிய காலத்தில் பொது மக்களின் மொழிகளாக இதனுடன் தொடர் புள்ள பிராகிருத மொழிகள் நிலவின. இவற்றில் ஒன்றான பாளி தேரவாத பௌத்தர்களின் புனித இலக்கிய மொழியாக விளங்கி வந்துள்ளது. வேறு பிராகிருத மொழிகள் சிலவற்றில் காலப் போக்கில் இலக்கியம் தோன்றிற்று. கி.பி 1000 ஆண்டளவிலே இவற்றிலிருந்து இன்று வட இந்தியாவிலே நிலவி வரும் கிந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி முதலான மொழி உருவாகின. எனவே சமஸ்கிருதத்

திற்கும், பிராகிருத மொழிகளுக்கும் அவற்றின் வழிவந்த மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் தெளிவாகும். தென் பாரதத்திலே நிலவிவரும் பிரதான திராவிட மொழிகளான தமிழ், கர்நாடகம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றிற்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளன.

இந்தியப் பொது மொழியாக குறிப்பாக இந்து சமய மொழியாக இம்மொழி மேலும் முக்கியத்துவம் பெற்றது. இன்றும் இந்துக்களின் புனித மொழியாக, புனிதநூல்களின் மொழியாக, கிரியைகள், கோவில்கள் மொழியாகவும் தொடர்ந்து நிலவிவருகின்றது. இந்துக்கள் மட்டும் அன்றி இதனைப் புறக்கணித்த பௌத்தர் கள், சமணர் கூட இதனைக் காலப்போக்கில் போற்றி வந்தனர். இவ்வாறு இந்திய சமயங்களின் பொது மொழியாக இதனைப் போற்றி வந்தமை இதன் ஒரு பிரதான அம்சமாகும். இதனை விட இந்திய சாஸ்திரிய மொழிகளில் பல அறிவியல் நூல்கள் எழுதப்பட்டுள்ள மொழி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றை விட இலக்கிய ரீதியில் இதன் சிறப்பு இலக்கிய வளமுள்ள பல மொழிகளுக்கு குறைந்ததன்று. உலகிலுள்ள மிகச்சிறந்த இலக்கிய நூல்கள் பல இம்மொழியிலும் உள்ளன என்பது ஈடில்லை.

இதற்கு இந்தியாவில் பல பிராந்தியங்களிலுமுள்ள புலவர் பெரு மக்களும் இலக்கியப் பங்களிப்புக்கள் செய்துள்ளனர். இதே போல பல இடங் களைச் சேர்ந்த சமய தத்துவ அறிஞர் களும் பிறரும் பெரும் பணியாற்றியுள்ளனர். எடுத்துக்காட்டாக கி.பி 5 ஆம் நூற்றாண் டளவிலே அத்துவைத தத்துவத்தையும் ஷண்மதங்களையும் நிலைநாட்டிய சக்கராச்சாரியாரைக் குறிப்பிடலாம். அவர் இன்றைய கேரள மாநிலத்தை சேர்ந்தவர். அவர் காலத்தில் அங்கு பெரும்பாலும் தமிழ் நிலவிற்று. எனவே சங்கரரின் தாய் மொழி தமிழாகிலும் அகில இந்திய ரீதியிலே தமது சமய தத்துவ பணிகளுக்கு பொது மொழியான சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தி வெற்றி கண்டார். இன்று ஆராய்ச்சியாளர் தமது முடிவுகளை உலக பொது மொழியான ஆங்கிலத்திலே வெளியிடுதல் குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை நூல்கள்


- ❖ வட மொழி நூல் வரலாறு அண்ணாமலை 1946 சுப்பிரமணிய சாஸ்திரி பி.எஸ்
- ❖ சமஸ்கிருத இலக்கிய சிந்தினை பேராசிரியர் வி. கந்தசாமி
- ❖ ***History of classical Sanskrit literature 1937 Kirishnamachari.M***


★ நாம் வீட்டை விட்டுப் புறப்படும்போது திரும்பவும் வீடு வந்து சேருவேன் என்ற நம்பிக்கையால்தான் செல்கிறோம். வைத்தியர் மருந்து தரும்போது விளக்கம் கேட்டு நிற்பதில்லையே. நம்பிக்கையில்தான் உட்கொள்கிறோம். ஆகாய விமானத்தில் பயணம் செய்யும்போது நம்பிக்கையில்தான் பயணிக்கிறோம். இவற்றை எல்லாம் நம்பும்போது அறிவு படைத்த ஆன்றோர் வாக்குகளையும் நம்பித்தான் ஆக வேண்டும்.

# பொலநறுவை காலக் கலை வளர்ச்சி

**செல்வி. சோதிநாதன் யுரேனிக்கா**
**13A கலைப்பிரிவு, (2015),**
**யா/இராமநாதன் கல்லூரி.**

அனுராதபுர இராச்சியத்திற்குப் பின்னர் தோற்றம் பெற்ற இராச்சியமாக பொலநறுவை இராச்சியம் காணப்படுகிறது. கி.பி 993 இல் இராஜராஜசோழன் அனுராதபுரத்தை தலைநகராக்கி "ஜனநாத மங்கலம்" எனப் பெயரிட்டான். கி.பி 993-1215 வரை கலிங்கமாகனின் படையெடுப்பு வரை இலங்கையின் தலைநகரமாக பொலநறுவை திகழ்ந்தது. இக்காலப்பகுதியில் சோழரின் பின் 1ஆம் கஜபாகு, விக்கிரமபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, 2 ஆம் விஜயபாகு, நிஸ்ஸங்கமல்லன், கல்யாணவதி, லீலாவதி, பராக்கிரம பாண்டியன் என்பவர்கள் ஆட்சி பீடம் ஏறி ஆட்சி செய்தனர். அனுராதபுர காலத்தைப் போன்று பொலநறுவைக் காலத்திலும் கலை வளர்ச்சி உன்னத நிலையை அடைந்தது. இக் காலத்தில் கட்டிடம், சிற்பம், ஓவியம், இலக்கியம் ஆகிய துறைகள் மக்களினதும் மன்னர்களினதும் ஆதரவுடன் வளர்ச்சியடைந்தமையை வரலாற்று சான்றுகள் மூலம் அறியலாம். அங்கு திராவிட, ஆரிய, பழைய சிங்கள மரபு அடிப்படையாக கொண்டு கலை அம்சங்கள் வளர்ச்சியடைந்த தன்மையினைக் காணலாம்.

**கட்டடக்கலை**

இங்கு வளர்ச்சியடைந்த கலைகளில் முதன்மையானது கட்டடக்கலை ஆகும். ஆரம்ப காலத்தில் சோழர்களது ஆட்சி இடம் பெற்றமையால் திராவிட மரபிலான கட்டடக் கலை புறக்கணிக்கப்பட்டு சோழ மரபிலான இந்து மத கட்டடக் கலை வளர்ச்சியடைந்தது. சோழரது கட்டடங்களை பொலநறுவை, வவுனியா, பதவியா முதலிய இடங்களில் இன்றும் காணக் கூடியதாகவுள்ளது. தூண்கள், மண்டபங்கள், கற்பக்கிரகம், கோபுரம் முதலிய அம்சங்களை உள்ளடக்கிய சோழரது கட்டடங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

பொலநறுவையில் இராஜராஜ எனும் பெயரில் 10 சிவன் கோயில்கள் நிறுவி இருந்தன. மன்னாரில் திருக் கேதீச்சரமும், திருகோணமலையில் திருக் கோணேஸ்வரமும் சோழ மரபுக்கமையப் புதுப்பித்துக் கட்டப்பட்டமை சோழ மரபில் கட்டடங்கள் எழுச்சி பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. சோழரை இலங்கையில் இருந்து விரட்டிய விஜயபாகு பெரிதும் புனரமைப்புப் பணிகளையே மேற்கொண்டான். தனது முடிசூட்டு விழாவுக்காக அநுராதபுரத்தில் நிறுவிய தந்ததாதுவை வைத்து வழிபடுவதற்காக அமைக்கப்பட்ட அட்டதாகே கட்டடம் என்பன குறிப்பிடத் தக்க வகையில் சிறப்பாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. பொலநறுவை கால கட்டடக் கலை அம்சங்களில் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்லன் ஆகியோரின் பணி சிறப்பானது.

பராக்கிரமபாகு பொலநறுவை இராசதானி காலத்தில் ஏராளமான கட்டடங்களை நிறுவி வரலாற்றில் உன்னத சேவையை வழங்கி இருந்தான். இவனால் அமைக்கப்பட்ட கட்டடங்களை 2 வகைப்படுத்தலாம்.

1) ஆலாகன வகை

2) உத்தரராமைய வகை

ஆலாகன வகை கட்டடங்களில் பொதுக் கட்டடங்கள், விகாரைகள் என்பன உள்ளடங்குகின்றன. இத்திட்டத்தில் லங்காதில, பத்த சீம பிரசாத ஆகியவற்றையும் கல்விக்கூடங்கள், வைத்தியசாலை முதலானவற்றையும் பராக்கிரமபாகு நிறுவினான். தனது மனைவி ரூபவதி நினைவாக அவளை சிறப்பிக்கும் வண்ணம் ரூபவதி சேத்தியத்தையும் மற்றுமோர் மனைவியான சுமித்திராதேவியின் பெயரால் சுமித்திரா தேவி சைத்தியத்தையும் இவன் கட்டினான். உத்தரராமய வகையில் தூபிகள், உருவ வீடுகள் முதலானவை முக்கியம் பெறுகின்றன. பராக்கிரமபாகு அரச கட்டடங்களைக் கட்டுவதில் ஆர்வம் காட்டினான். இவனால் கட்டப்பட்ட நான்கு மாளிகையைக் கொண்ட பராக்கிரமபாகு அரச மாளிகை சரியான திட்டமிடலுடன் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் இராஜ வேஜி புஜங்க மண்டபம் அரசசபைக் கட்டடங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இதனை விட அரசமாளிகை, சுற்றுமதில், நந்தவனம், அரசகுடும்பம் நீராட அமைக்கப்பட்ட தாமரைக் கேணி என்பன அரசமாளிகையை அண்மித்ததாக அமைக்கப்பட்டுள்ளது.

நிஸ்ஸங்கமல்லன் சிறப்பான கட்டடங்களை அமைத்தான். இவன் நிறுவிய கல்பொத்த சாசனம் 7 அடி நீளம் 5 அடி அகலம் 2 அடி உயரம் கொண்டது. இது ஓர் தூண் சாசனமாக அமைக்கப்பட்டுள்ளது. புராதன மண்டப அமைப்பைப் பின்பற்றி இவனால் உருவாக்கப்பட்ட நிஸ்ஸங்கலதா மண்டபம் இன்றும் பொலநறுவையில் காணப்படுகிறது. நிஸ்ஸங்கமல்லனின் மாளிகை 2 மாடியைக் கொண்டதாக நிறுவப்பட்டுள்ளது. ரன்கொத் விகாரை 180 அடி உயரமும் 550 அடி சுற்றளவும் கொண்டது. இக் கட்டடம் முன்னர் ரூவான்வெலிசாய என அழைக்கப்பட்டது. இதனை இவன் மாற்றியமைத்து ரன் கொத் விகாரை எனப் பெயர் சூட்டினான். நிஸ்ஸங்கமல்லனின் பின் வந்த மன்னர்கள் பலமற்றவர்களாக விளங்கியதால் பின்னைய காலங்களில் கட்டப்பட்ட கட்டடங்கள் எழுச்சியடையவில்லை. கலிங்கமாகனின் படையெடுப்பால் பெரும்பாலான கட்டடங்கள் அழிவுற்றன.

## சிற்பக் கலை

பொலநறுவைக் காலத்தில் வளர்ச்சியடைந்த கலை அம்சங்களில் ஒன்றாக சிற்பக் கலையைக் குறிப்பிடலாம். பொலநறுவை இராசதானியின் ஆரம்ப காலத்தில் சோழர்கள் ஆட்சி புரிந்ததால் சோழரது மரபில் சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் புடைப்புச் சிற்பம், முகப்புச் சிற்பம், வார்ப்புச் சிற்பம் ஆகிய 3 வகைச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்படத்தக்கதாகும். சோழரது காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்களை பொலநறுவை, அநுராதபுரம், திருகோணமலை, மாந்தை முதலான இடங்களில் தொல்லியல் ஆய்வாளர்களால் மீட்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் சிவன் உருவம், பார்வதி உருவம், இலக்குமி உருவம் சோழரது சிற்ப வேலைப்பாடுகளை எடுத்துக் காட்டுகிறது. சோழரது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த விஜயபாகு அதிகளவு புனர்நிர்மாணங்களையே முன்னெடுத்தான். இவன் ஏற்கனவே அனுராதபுரத்தில் இருந்த விகாரைகளையும், சிற்பங்களையும் மீள நிர்மாணித்தான். பராக்கிரமபாகு புதிய சிற்பங்களை உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்டினான்.

கல்விகாரையில் உள்ள சிற்பங்கள் மிகவும் அழகான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 40 அடி நீளமான புத்தர் படுத்துறங்கும் சிற்பம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இதை விட 15 அடி

உயரமான புத்தரது அமர்ந்த நிலை சிற்பம் மற்றுமோர் அமர்ந்த நிலை சிற்பம் இதனை விட 22 அடி உயரமான புத்தரது நின்ற நிலை சிற்பம் என்பன குறிப்பிடத்தக்க புத்தர் சிலையாகும். இதனை விட வட்டதாகே விகாரையில் உள்ள புத்தர் சிலையும் சிறப்புமிக்கதாகும். இவ்வாறு சிற்பக் கலைக்கு பொலநறுவைக் காலத் திலே அரசர்கள் வழங்கிய முக்கியத்துவத் தினை விளங்கிக் கொள்ள முடியும்.

பொலநறுவை சந்திரவட்டக்கல் மேலும் சிற்பக்கலையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. வட்டதாகே சந்திர வட்டக்கல் மிகவும் அழகான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. கொடிமலர், அன்னப் பட்சி வரிசை, குதிரை, யானை, சிங்கம் ஆகிய விலங்குகளின் வரிசை என்பன சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. குளக்கட்டுகளில் மற்றும் காவல் தெய்வ உருவங்கள் என்பனவும் இக்கால சிற்பங் களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

**ஓவியக் கலை**

பொலநறுவைக் காலப் பகுதியில் ஓவியக் கலை வளர்ச்சியடைந்ததை கட்டடங்களில் காணப்படுகின்ற ஓவியங்கள் உறுதி செய்கின்றன. மகியங்கனை தூபத்தில் வரையப்பட்டுள்ள ஓவியம் பொலநறுவை காலத்திற்கு முற்பட்ட ஓவியமாகும். எனினும் திமுலர் கலையின் ஓவியம் அதற்கு அண்மையில் உள்ள கட்டடங்களில் உள்ள ஓவியம் பௌத்த சமயத்தை சித்தரிப்பதுடன் பௌத்த ஜாதக கதையையும் எடுத்துக் காட்டுகின்றது. இங்கு வரையப்பட்டுள்ள ஓவியம் சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வர்ணம் கொண்டு வரையப்பட்டுள்ளது. இதனை விட வேறு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் அவை தெளிவாக தென்படவில்லை. எனினும் இவ் ஓவியங்களை சிகிரியா, அஜந்தா ஓவியங்களுடன் ஒப்பிட முடியாது. எனினும் ஓரளவு அழகும் கவர்ச்சியும் மிக்கனவாக காணப்படுவதால் இக்கால ஓவியங்கள் சிறப்புப் பெறுகின்றன.

---

★ **நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போக வேண்டும்? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? இவ்வுடம்பு எப்படி வந்தது? தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் யார்? என்ற கேள்விகள் உள்ளத்தில் எழும்படி உணர்க! வந்த கடமையை மறந்து மயங்கித் திரியாதே. நல்வழியில் திரும்பு.**

★ **மன அழுக்கு தியானத்தாலும், வாய் அழுக்கு வழிபடுதலாலும், மெய்யழுக்கு அர்ச்சனையாலும் நீங்கும்.**

---

# இலங்கையிலே பரதக்கலை

**செல்வி. பவானந்தன் பிரலக்ஷ்சிகா**
**$13^{A}$ கலைப்பிரிவு, (2015)**
**யா/இராமநாதன் கல்லூரி.**

இலங்கையிலே பழைய காலம் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் சிங்களம், தமிழ் பேசும் மக்களின் இடையே கட்டடக்கலை சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சியுற்றாலும் இசை நடனம் ஆகியன ஆதி காலத்திலே வளர்ச்சியடைந்தமைக்குத் தக்க சான்றுகள் இதுவரை கிடைத்தில. எனினும் பௌராணிக மரபின் படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக் கொடியோன் எனவும் அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான் எனவும் கூறப்படுகிறது. இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் என்ற பெயரே யாழ் பாடி (யாழ் வாசிப்பவன்) தொடர்பாலேற்பட்டதென்பர். மட்டக்களப்பிலுள்ள பாடுமீன்களின் இசை குறிப்பிடற்பாலது. இவை ஐதீகங்களாயினும், இலங்கையின் தமிழ் மக்களிடையே தொன்மையாகவே சாஸ்திரிய, நாட்டுப்புற இசை நிலவி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே நிலவிவரும் தென்மோடி, வடமோடி நாட்டுகூத்து மரபுகளும் குறிப்பிடத் தக்கவையே.

பழைய காலம் தொட்டு நுண் கலைகள் பல்வேறு வகையிலே வளர்ந்து வந்துள்ளன. தமிழகத்திலே சிறப்பாக வளர்ந்து வந்த இக்கலை இந்தியாவுக்கு வெளியேயுள்ள இலங்கை, இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளிலும் காலப்போக்கிலே பரவி வந்துள்ளது. இந்தியாவுக்கு மிக அண்மையிலே இருப்பினும் இலங்கையில் தான் தாக்கம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். பொதுவாக இலங்கையிலே வாழும் சிங்களவரும் தமிழரும் முறையே பௌத்தம், இந்து சமயம் ஆகியனவற்றைப் பின்பற்றுகின்றனர். இவர்களை விடக் குறிப்பிட்ட தொகை இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் உள்ளனர். இங்கு சிங்களவர்கள் மத்தியிலே பௌத்தம் நன்கு பின்பற்றப்பட்ட காரணத்தினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ சாஸ்திரிய இசை, நடன மரபுகள் புராதன காலத்திலே (கி.பி பதினோராம் நூற்றாண்டு வரை) நன்கு வளர்ச்சியடைந்தில.

சோழராட்சி தொடக்கம் (கி.பி பதினோராம் நூற்றாண்டு) சில நூற்றாண்டுகளுக்கு மேற்குறிப்பிட்ட கலைகள் சிங்கள அரசுகளிலே குறிப்பாக அரசவைகள், இந்துக்கோவில்கள் ஆகியவற்றிலே தொடர்ந்து இடம்பெற்றன. தமிழரைப் பொறுத்தமட்டிலே தமிழ் நாட்டிற் போன்று இங்கு வாழ்ந்த தமிழர் மத்தியில் இக்கலை நிலவிற்று எனலாம். மேலும் கி.பி பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட போத்துக்கீச, ஒல்லாந்தப் படையெடுப்புக்களாலும் அவர்களின் ஆட்சியின் போது பின்பற்றப்பட்ட சுதேசக் கலையழிப்புக் கொள்கையினாலும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் இருந்த கோவில்கள் முதலியன அழிக்கப்பட்டன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகள் இந்துக்களிடையே பெரும்பாலும் கோவிற் கலைகளாகவே நிலவி வந்துள்ளன. கோயில்கள் அழிக்கப்பட்ட போது அவை சார்பான கலைகளும் மங்கிமறைந்தன. இதனாலேதான் போலும்

கரையோரப் பகுதிகளில் இவை நிலவியதற்கான சான்றுகள் நன்கு கிடைத்தில. எனினும் இலக்கியத் தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன.

பொலநறுவை, தெவிநுவர போன்ற இடங்களில் இருந்து சைவ, வைஸ்ணவக் கோயில் தேவடியார்கள் இருந்து இசை, நடனப்பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. கந்தளாயிலிருந்து விஜயராஜ ஈஸ்வரம் என்னும் சிவாலயத்திலே ஏழு தேவடியார்கள் இசை, நடனப் பணிபுரிந்தனர் என அறியப்படுகிறது.

கி.பி 1344 இல் இலங்கைக்கு வந்த மொறொக்கோ நாட்டுப் பயணியான இபன்பதுதாவின் பிரயாணக் குறிப்புக்களின் மூலம் தெவிநுவரயில் இருந்த பெரிய விஸ்ணு ஆலயத்திலே இறைவன் திருமுன் குறிப்பிட்ட கிரியைகளின் போது ஆடுவதற்கும், பாடுவதற்குமாக 500 மாதர் இருந்தனர் என அறியப்படுகிறது.

ஒப்பீட்டு ரீதியிலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய புராதன சிவாலயங்களிலும் தேவடியார் இருந்தனர் எனலாம். அண்மைக்காலத்திலே கலாசார முக்கோணப்பிரதேச அகழ்வாய்வின் போது அநுராதபுரத்திலுள்ள அபயகிரி விகாரைப் பகுதியிலே நடன நிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலை ஒன்று கிடைத்துள்ளது. சிவன், சக்தி, லாஸ்சய தாண்டவம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய இச்சிலை நன்கு ஆராய்தற்குரியது.

சாதாரண அர்த்தநாரீஸ்வரர் சிலைகள் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன. இலங்கையில் எழுதப்பட்ட பாளி, சிங்கள, சமஸ்கிருத இலக்கிய நூல்களில் அங்குமிங்கும் இசை, நடனம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. பொலநறுவையிலிருந்து ஆட்சி செய்து வந்த முதலாம் பராக்கிரமபாகு (1153-1186 ) சரஸ்வதி மண்டபத்தினை நிறுவி இசை, நடனம் ஆகியவற்றையும் போற்றிப் பேணிவந்தான். இவனுடைய பட்டத்தரசியான லீலாவதி நடனத்திலே தேர்ச்சி பெற்றிருந்தாள்.

கி.பி 14-16 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியிலே சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தேசயப் பிரபந்தங்களிலே சமகாலத் தென் இலங்கையிலே நிலவி வந்த இசை, நடனம் பற்றிய குறிப்பிடத்தக்க தகவல்கள் காணப்படுகின்றன. அரசசபைகளிலே இந்துத் தெய்வங்களின் முன்னிடம் பெற்ற நடனம் பற்றிய வருணனைகள் இந்நூல்களில் உண்டு. தெவிகமவில் இருந்து ஆட்சி புரிந்து வந்த ஐந்தாம் பராக்கிரமபாகுவின் அரண்மனையில் இடம்பெற்ற நடனங்களைப் பற்றித் "திசரசந்தேசய" எனும் நூலில் விவரிக்கப்படுகின்றது. "நடன மாதரின் கண் புருவங்கள் வண்டுகளின் திரைபோல நெளிகின்றன" எனவும் "நடன மாதர்கள் கடைக்கண்களாலே பார்கின்றனர்." எனவும் அந்நூல் கூறுகின்றது. களனியில் இருந்த விபீஷணனின் தேவாலயத்திலே ஆடல் மகளீர் கைவழி நயனம் செல்ல ஆடுதல் பற்றிச் சேலலிஹினி சந்தேசய குறிப்பிடுகின்றது. ஹீராகுலர் தமது பரவிச் சந்தேசயவில் நாட்டியகரணம் பற்றியும் நடனமாதின் அங்க அசைவுகள் பற்றியும் குறிப் பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நூல்களிலே காணப்படும் நடனம் பற்றியும் குறிப்புக்கள் வருணிக்கப்பட்ட நடனக் காட்சிகள் முதலியனவற்றின் அடிப்படையிலே நோக்கும் போது பரத நாட்டிய சாஸ்திரிய மரபு இக்காலத்தில் இங்கு பின்பற்றப்பட்டு வந்தமை தெளிவு. இங்கு பெரும்பாலும் சமகாலத் தமிழகத்திலே நிலவிய பரதமே நிலவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ரேசகம், அபிநயம் முதலியன பரதநாட்டிய

மரபை ஒட்டியவை. பரத நாட்டியத்தைப் போன்று இதனையும் பெண் கலையஞரே பெரும்பாலும் ஆடி வந்தனர். மேலும் இக்கால கட்டத்திலே இங்கு கேரள மாநிலத்துக் கதகளியோ, கண்டி நடனமோ இடம் பெற்றமைக்குத் தக்க சான்றுகள் இல்லையெனவும், பரத நாட்டியமே நிலவி யிருக்கும் எனவும் பேராசிரியர் இ.ஆர். சரத்சந்திரா சுட்டிக்காட்டியுள்ளார். 16 ஆம் நூற்றாண்டிலேற்பட்ட போர்த்துக்கீச ஆட்சி யைத் தொடர்ந்து இந் நடனம் இங்கு மங்கியிருக்கலாம். மேலும் இந்நடனம் சிங்களப் பொதுமக்களை அதிகம் கவர வில்லை போலும்.

மேலும் கி.பி 11-15 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் பொலநறுவை, யாப்பகூவ, கம்பளை, டெடிகம, கோட்டை அரசுகளிலே நிலவிய சாஸ்திரிய நடனமும் பரதமாயிருக்கலாம் என காரணங்கள் உண்டு. இலங்கையிலே சோழரின் தலைநகராக விளங்கிய பொல நறுவையில் அமைக்கப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரத்திலே (சிவன் கோவில்) திருப்பணி புரிந்த தேவடியார் கோவிலிலே "நந்தா விளக்கு" எரித்தனர் எனக் கல்வெட்டுக் கூறுகின்றது. சோழர் காலத்திய வெண்கலத்தாலான நேர்த்தி யான நடராஜர் திருவுருவங்கள் பொல நறுவையில் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. முன்னேஸ்வரம் ஆலயத்திலுள்ள நடராஜர் திருவுருவம் பழைமையானது. ஆனால் அது சோழப் பெருமன்னர் காலத்தினதா என்பது திடமாகக் கூற முடியாது.

சோழரைத் தொடர்ந்து இலங்கை யில் ஆட்சி புரிந்த முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற சிங்கள மன்னர்களும் இக்கலையினை ஆதரித்தனர். தொடர்ந்து ஏற்பட்ட இரண்டாவது பாண்டியப் பேரரசு, விஜய நகரப் பேரரசுத் தொடர்புகள் இக் கலைத் தொடர்புகளை மேலும் வலுப் படுத்தியிருக்கலாம். மேலும் தமிழ் நாட்டிலே சிறிது காலம் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முஸ்லீம் ஆதிக்கத் தின் விளைவாகவும், கலைஞர் சிலர் வட இலங்கைக்கு மட்டுமன்றித் தென்னிலங் கைக்கும் சென்றிருப்பர். மேலும் இக்காலப் பகுதியிலே கி.பி 13-16 ஆம் நூற்றாண்டு முடியும் வரையுள்ள காலப்பகுதியிலே தென்னிலங்கையில் இருந்த அரச அவை களிலே தமிழ் செல்வாக்கு நிலவியமை குறிப்பிடத்தக்கது. கி.பி 16 ஆம் நூற்றாண்டு கோட்டை அரசில் ஆட்சி புரிந்த புவனேகபாகு தமிழிலே கைச் சாத்திட்டான் என அறியப்படுகிறது. மேற் குறிப்பிட்ட காலப்பகுதியிலே யாழ்ப் பாணத்தை மையமாகக் கொண்டு தமிழரசு ஒன்று நிலவியதும் ஈண்டு குறிப்பிடற்பாலது.

நடனம் பற்றி மேற்குறிப்பிட்ட சந்தேசய (தூது)க் காவியங்கள் கூறும் கருத்துக்களைச் சம காலத்திய சில சிற்பங்களும், ஓவியங்களும் உறுதிப் படுத்துகின்றன. யாப்பகூவாவிலும் கடல - தெனியாவிலும் உள்ள கல்லாலான போதிகைச் சிற்பங்களிலே உள்ள நடன உருவங்கள் குறிப்பிடத்தக்கன. யாப்பகூவா சுவர்களில் உள்ள நடன உருவங்கள் சைவ உலகின் கோவிலாக விளங்கும் சிதம்பரக் கோவிற் சுவர்களில் உள்ள வற்றுடன் ஒப்பிடத்தக்கவை எனப் பேராசிரியர் சரச்சந்திரா குறிப்பிட்டுள்ளார். இந் நடன உருவங்களிலே நடராஜர் திருவுருவமும், சதுர, கரிஹஸ்த, கண்ட சூசி, நிகுஞ்சித முதலிய கரணங்களைக் காட்டுவனவும் குறிப்பிடப்பாலன. மேலும் சமகாலத்திய வேறு சிற்பங்களிலும், ஓவியங்களிலும் உள்ள நடனமாதர் உருவங்கள் சாஸ்திரீய நடன நிலையில் உள்ளனர். டெடிகமவிலே கிடைத்துள்ள விளக்கிலும், சாஸ்திரீய நடன நிலையி லுள்ள பெண் உருவம் உண்டு. எம்பெக்க

தேவாலயத்திலுள்ள மரச்சிற்பங்களிலும் உள்ள நடன மாதர் பரதம் கூறும் பல்வேறு நிலையிலுள்ளனர். தமிழர் மத்தியிலே நடனம் சில காலமாக ஒழுக்கக் கேடுள்ளவர் கலையெனக் கருதப்பட்டு புறக்கணிக்கப்பட்டது. ஆனால் சம காலச் சிங்களவர் மத்தியிலே நடனக்கலையில் புதிய விழிப்பும், உத்வேகமும் ஏற் பட்டுள்ளன. கிராமிய நடனங்கள், கண்டிய நடனம் ஆகியவற்றை விட பரதநாட்டியத் தையும் சிலர் கற்றுவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் பரதக்கலையினை ஆதரித்து வளர்த்து வந்தனர். இக் காலத்தில் எழுதப்பட்ட வையாப் பாடல், கைலாயமாலை முதலிய நூல்களிலே நடனம் பற்றிய சில குறிப்புக்கள் உண்டு. எடுத்துக்காட்டாக "வையாப் பாடலிலே நச்சுவிழி நாட்டியம் செய்வோர், ஆடும் மாதர் வலம் வர, கறுவுமணக் கணிகையற்" என வருவதும் குறிப்பிற்பாலன. எனவே யாழ்ப்பாணத்தில் இருந்த சில பெரிய கோவில்களிலாவது தேவடியார் இருந்து சமயப் பணிகளும், கலைப்பணிகளும் செய்திருப்பர் எனலாம். கி.பி 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த கணகியை நட்டுவச் சுப்பையனார் அங்கதச் சுவை ததும்ப "கணகிபுராணம்" எனும் நூலை இயற்றினார். நடனக்கலையில் மட்டுமன்றிப் பரதசாஸ்திரத்திலும் தேர்ச்சியுள்ளனர். அறிஞர் சிலர் இங்கு வாழ்ந்தனர். கி.பி 17ல் தமிழ் நாட்டிலே வாழ்ந்த பிரபல நாட்டியக் கலைஞராகிய கங்கை முத்துப்பிள்ளை பரதசாஸ்திர நூல்களில் ஒன்றான "நடனாதி வாத்யரஞ்சனம்" எனும் நூல் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த அறிஞர் அம்பலவாணநாவலர் முன்னிலையில் பிரசுரிக்கப்பட்டதாக அறியப் படுகின்றது. இக்காலத்திலே நந்திகேஸ் வரரின் அபிநயதர்ப்பணம் இவர் துர்க்கிராலா எனும் அறிஞரோடு சேர்ந்து மொழிபெயர்ப்பு ஒன்றினைச் செய்தார். 1918ல் இவர் வெளியிட்ட "சிவநடனம்" எனும் கட்டுரைத் தொகுப்பு குறிப்பிடத்தக்கது.

1942ல் மதுரையிலே நடைபெற்ற இயற்றமிழ் மகாநாட்டுத் தலைமைப் பேருரையிலே "பரதம் எனும் பெயர்க் காரணம் ஆய்தற்குச் சிலப்பதிகார அரும்பதிவுரை ஆசிரியர் கூறியுள்ள முடிவுகள் நமக்குதவுகின்றது. ஒன்பான் சுவையும் எண்வகை மெய்பாடும் என்னும் இவற்றோடு இயைபுடைய இரதம்" எனும் மொழியினை அரும்பதவுரையாரிகியர் விளக்குகிறார். வடமொழி நூலார் கண்ட ரசம், பாவம் எனும் மொழிகளின் பொருளை இம் மொழி தருகின்றது. பண், இரதம், தாளம் என்னும் மூன்றும் அடங்கிய பிண்டம் பரதம் எனவாகும் எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் இலங்கையிலே தொலைக்காட்சி, வானொலிகளிலே நடன நிகழ்ச்சிகள், கருத்துரைகள் இடம்பெறு கின்றன. பாடசாலைகளிலே நடனப் போட்டிகள் இடம்பெறுகின்றன். அதுமட்டு மன்றி இந்து சமய கலாசார அமைச்சும் இசை நடன நிகழ்ச்சிகளையும், கருத் தரங்குகளையும் நடாத்தி வருகின்றது. இலங்கையைச் சேர்ந்த பரதக் கலைஞர் சிலர் வெளிநாடுகளிலே இக்கலையை கற்பித்து வருகின்றனர். சலங்கை ஒலி அரங்கேற்றங்களிலும், வெளிநாட்டுத் தலை நகரங்களிலும் அடிக்கடி கேட்கிறது. இலங்கையிலுள்ள சில சிங்கள கலைஞர் களும் இதனைக் கற்றும், கற்பித்தும் வருகின்றனர். சமகாலத்திலே இவர்கள் அரங்கேற்றங்களும் செய்து வருகின்றனர்.

# மறுமலர்ச்சிக் கால ஓவியர்கள்

செல்வி. சிவகுமாரன் பிரபானுஜா
12[B] கலைப்பிரிவு (2016),
யா/இராமநாதன் கல்லூரி

ஐரோப்பாவில் 15ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான மறுமலர்ச்சியில் ஓவியர்களின் பங்கு அளப்பரியது. அந்த வகையில் லியானாடோ டாவின்சி, மைக்கல் அஞ்சலோ, ரா.்.பேல் ரிரியன் போன்றோர்கள் மிகவும் சிறப்பான ஓவியர்கள் ஆவர். அந்த வகையில் மறுமலர்ச்சிக்கால விடிவெள்ளி யான லியானாடோ டாவின்சி ஓவியம், சிற்பம், கட்டிடம், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் சிறப்பான ஆற்றல் பெற்று விளங்கினார். இதனால் இவர் சகல கலாமேதையாகப் போற்றப்படுகிறார். இத்தாலியின் வின்சி எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்த ஸெஸர்பியரே என்பவருக் கும் அவரது பண்ணையில் வேலை பார்த்த கெரிடினர் என்பவளுக்கும் பிள்ளையாக 1452-04-15ம் திகதி பிறந்தார். இவர் பிறந்த காலம் ஐரோப்பிய வரலாற்றின் முக்கிய காலமாகும். அரசியலிலும் மதத்திலும் பெரு மாற்றம் ஏற்பட்டு மறுமலர்ச்சி அடைந்த காலமாகும்.

டாவின்சி தான் 19வது வயதில் "வேர்சியா" என்ற கலைப் பட்டறையில் சிஷ்யனாக சேர்ந்தான். 12 வருடம் கலை பயின்றான். வேர்சியோவின் மாணவனாக இருந்து கொண்டே மாகியைத் தொழுதல் என்னும் ஓவியம் வரைந்தார். தனது மாணவனுடைய உயிர்த்துடிப்பான ஓவியத் தைக் கண்ட வேர்சியோ தனது தூரிகையை தூர எறிந்து தான் இனி ஓவியம் வரையப் போவதில்லை என முடிவு கட்டினார். இருந்தும் இப்பட்டறையை அவரே வழி நடத்தினார். அந்த ஓவியம் வரைந்த பின் டாவின்சிக்கு பல ஒப்பந்தம் கிடைத்தன.

1482ல் டாவின்சி தன் 30ஆவது வயதில் "மிலன்பிரபு" விற்கு கீழ் உத்தி யோகத்திற்கு அமர்ந்தார். இங்கு சில ஓவியம் வரையப்பட்டன. இவர் வரைந்த ஓவியங்களாக மொனாலிசா மிகச் சிறப்பு வாய்ந்த ஓவியமாகும். மற்றும் இறுதி இராப் போசனம், லெடா போன்ற ஓவியங்களையும் வரைந்துள்ளார்.

அடுத்து மைக்கல் அஞ்சலோ பற்றிப் பார்ப்போமானால் மறுமலர்ச்சிக் காலத்தின் தலைசிறந்த கலைஞர்களுள் மைக்கல் அஞ்சலோவும் ஒருவராவார். இவர் சிற்பம், ஓவியம், கட்டிடம் போன்ற துறை களில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தார். கி.பி.1475 இல் இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவரது வாழ்நாட்களில் தனது கையில் கிடைக்கப் பெற்ற பளிங்கு கற்களை உளி, சுத்தியலின் உதவியுடன் உலகத்தவர் வியக்குமளவு அற்புதமான சிற்பங்களை வரைந்தார். நான் ஒரு ஓவியன். எனது தொழில் ஓவியமல்ல என கூறிய மைக்கல் அஞ்சலோ தான் உலக பிரசித்தி பெற்ற ஓவியங்களையும் வரைந் தார். தந்தை லொடோடிக்கோ புணர்ஒட்சி மைக்கல் அஞ்சலோவை இலக்கண பள்ளி யில் சேர்த்தார். அப்பள்ளியின் இலக்கணம் கற்க இவர் ஆர்வம் செலுத்தவில்லை. மாறாக ஓவியம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தைக்கு பிடிக்க வில்லை. கலையின் மீது இவரது தந்தைக்கு நல்லெண்ணம் இருந்ததும் இல்லை. மாறாக சமூகத்திற்கு கேடு விளைக்கும் ஒன்றாக அவர் கலையை நினைத்தார். ஆனால் இவர் இந்த எதிர்ப்பு

களுக்கு மீறி தன் 13வது வயதில் ஒரு ஓவியப் பயிற்சிப் பட்டறையில் சேர்ந்து கொண்டார். இங்கிருந்து வெளிப்பட்ட அவரது திறன் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது.

மைக்கல் அஞ்சலோ தனது 21வது வயதிலேயே தலைசிறந்த சிற்பங் களை ஆக்கத் தொடங்கினார். பளிங்குக் கற்கள் இவரது கை வண்ணத்தால் அற்புத மான சிற்பங்களாக மிளிரத் தொடங்கின. இவர் அமைத்த சிற்பங்கள் பியற்றா, டேவிற், மோஸஸ், இறக்கும் அடிமை, புரட்சி கார அடிமை போன்ற சிற்பங்கள் தலை சிறந்தவை. இவற்றிலே பியற்றா என்ற சிற்ப மானது உலக பிரசித்தி பெற்றதாகும்.

மைக்கல் அஞ்சலோ 1501 இல் வரைந்த டோனிமடோனா மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இதே போல 1508 இல் வத்திக்கான தேவாலயத்தின் உட்புறசுவர் களில் 4 ½ வருடங்களாக வரைந்த கத்தோலிக்க மதம் சார்ந்த ஓவியங்களும் பிரசித்தி வாய்ந்தவை ஆகும். இவ் ஓவியங் கள் பைபிளில் கூறப்படும் விடயங்களை மிகவும் சிறப்பான முறையில் நிறுவிக் கொண்டார். உரோம் புனிதபீட்டர் தேவா லயத்திலும் பல ஓவியங்களைத் தீட்டினார். இவ் ஓவியம் இவரால் திட்டமிட்டு அமைக் கப்பட்டதாக தெரியவருகின்றது.

இவ் ஆலயத்தில் 400' உயரம் கொண்ட தூண்களை காணலாம். ஐரோப் பாவில் அன்று கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் மிகவும் உயரமாகவும் 80,000 மக்கள் ஒரே தடவையில் வழிபாடு செய்ய வசதி படைத்ததாக உள்ளது. சலவைக் கல் கொண்டு பல சிற்பங்களை உருவாக்கிய இவர் 18' உயரமான தாவீது வின் சிலையை மிகப் பிரமாண்டமாக நிறு வினார். இவரது ஓவியங்களான இறுதித் தீர்ப்பு, மனிதன் நெறி தவறுதல், பெரும் வெள்ளப்பெருக்கு போன்றன சிறந்த ஓவியங்களாகும்.

அடுத்து ரிரியன் பற்றி பார்ப்போ மானால் இவர் மனித உருவங்களை ஓவியங்களாகத் தீட்டுவதில் புகழ் பெற்றிருந்தார். பாப்பாண்டவர், 3ஆம் போல், 5ம் சார்ள்ஸ் ஆகியோரின் உருவங்கள் ஓவியங்களாக இவரால் வரையப்பட்டன. வர்ண ஓவியங்களை வரைவதில் தன்னிகர் அற்றவர்.

லோறன்ஸ் சோகிபாடி, பொட்டி செல்லி, மசக்கியோ, பெர்ளின் ஜோஜி யோன்ரின்ரோறிட்டோ எனும் ஓவியங்களும் புகழ்பெற்ற ஓவியங்களாக அக்காலத்தில் மிளிர்ந்தன. பிரான்ஸ், ஒல்லாந்து, ஜேர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் இத்தாலி போன்று பல புகழ் பெற்ற ஓவியர்கள் வாழ்ந்துள்ளனர்.

அடுத்து ரா∴பேல் என்பவரும் முக்கியம் பெற்ற ஒருவராவார். ரா∴பேல் காலத்தில் ஓவியக்கலை உன்னதமான நிலையை அடைந்திருந்தது. சமய உணர் வினை தூண்டுகின்ற வகையில் இவரது ஓவியங்கள் காணப்பட்டன. இவரால் வரையப்பட்ட ஓவியங்களில் அன்னை மேரி, எதென்ஸ் பாடசாலை, மடோனா ஓவியம் போன்ற ஓவியங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

# கல்வி வாழ்வை உயர்த்தும்

செல்வி. யதீஸ்வரானந்தன் தரணிகா
13A கலைப்பிரிவு (2015),
யா/இராமநாதன் கல்லூரி

*"கண்ணுடையர் என்பவர், கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"*

என்ற திருவள்ளுவரின் வாக்கியத் திற்கிணங்க கண்ணுடைய மனிதனாகப் பிறந்தாலும் கல்வியறிவில்லாத கல்லாத வனின் கண்கள் இரு புண்களுக்கு ஒப் பானது எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

மனித உயிர்களின் சிறப்பியல்பு உணர்த்தலும் அறிதலும் ஆகும். பொறி களின் துணையால் உணர்ச்சி நிகழும். நல்ல கல்வியறிவின் கருவியாய் உறுதுணை யாவன புலன்கள் எனப்படும். பொறியால் உணர்வும், புலனால் அறிவும் முறையே வினைப்படும். இக்கல்வி அறிவும் உணர்வும் அகத்தில் வளர்வன. அவ் இரண்டல்லால் வாழ்வில் ஒன்றில்லை. மனிதன் பூரணமான மனிதனாக வாழ வேண்டுமாயின் அவன் கல்வியறிவினைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனின் அறிவையும் உணர் வையும் உயர்த்துவது கல்வியாகும். ஆகை யால் நல்ல அறிவு கல்வியால் வளரும். எனவே,

*"மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"*

என்பது பழைய தமிழ் மறை.

அது மட்டுமா,

*"ஏழேழு உலகங்களுக்கும் செல்லுமாம் கல்வி"*

நாம் இப்பிறப்பில் பெறுகின்ற கல்வியானது நம் ஏழு பிறப்புகளிலும் நம்மை நல்வழிப்படுத்தி நம் வாழ்வை இக் கல்வி உயர்த்திவிட வல்லது.

ஏழையாகப் பிறந்தாலும் கல்வி யைப் பெற்றுவிட்டால் மண்ணுலகில் மாந்தர் மட்டுமன்றி விண்ணுலகின் தேவர் கள் கூட அவரைப் போற்றி மதிப்பார்கள். எனவே கல்வியானது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. மனிதனின் அறியாமை என்னும் இருளைப் போக்கி நம்மையெல்லாம் நல்வழிப் படுத்தும் ஒரு கருவியாகும்.

உலகிலுள்ள செல்வங்களில் எல்லா வற்றையும் விட மிகச் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் ஆகும். தீயினால் அழியா தது, கள்வனால் கவரப்பட முடியாதது, கொடுக்கக் கொடுக்க குறைவுபடாது நிறைவுபட்டுக்கொண்டே செல்வது இக் கல்விச் செல்வமே ஆகும். மற்றைய செல்வம் தங்காத இயல்பினை உடையது. செல்வம் ஒரு நாளைக்கு நமது வீடு தேடி வரலாம். வருமானால் வந்த அடுத்த கணமே போய் வரப் போகின்றேன் என்று பிரியா விடை சொல்லத் தொடங்கிவிடும். அது செல்வத்தின் பிறவிக்குணம். எனவே மற்றைய செல்வங்கள் எல்லாம் செல்வோம் செல்வோம் எனக் கூறிக் கொண்டே இருக்கும். ஆனால் நிலையான அழி வில்லாத கல்விச் செல்வத்தினைப் பெறு வதன் மூலம் மனிதன் தன் வாழ்வை வளப்படுத்தி மேன்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

கல்வியறிவு உள்ளவனையே இந்த நாடும் ஊரும் ஏன் உலகமும் கூட அவனை வாயாரப் பாராட்டும். இதனையே திருவள்ளுவர்,

*"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு"*

என தனது உலகப் பொதுநூலாம் திருக்குறளிலே கூறியுள்ளார். அது மட்டுமா, கல்வி கற்றவன் ஏழையாக இருந்து வறுமையில் வாடினாலும் கூட அவன் கற்ற கல்வியானது அவனைச் செம்மையாக வறுமையிலும் வாழ வழிகாட்டும். எனவே நாம் கல்வியைக் கற்றுவிட்டால் மட்டும் போதாது. நாம் கற்றபடி ஒழுக வேண்டும். இதனால் தான் நம்முடைய ஒவ்வொருவரின் மனித வாழ்வானது உயர்ச்சியடையும், மேன்மையடையும். கல்வி கற்றோரின் மதிநுட்பமானது கரடுமுரடான பாதையிலும் வீறு நடை போட வைப்பது இக் கல்வியே ஆகும்.

அது மட்டுமா? நீல்ஸ் ஆம்ஸ்ரோங் சந்திர மண்டலத்தில் முதன்முதலில் காலடி வைப்பதற்கு வழிகோலியதும் இக்கல்வி அறிவே ஆகும். இன்று விஞ்ஞான ஆய்வு நுட்பமாக வளர்ச்சி அடைந்து விண்கலத்தில் பயணம் செய்து விந்தை மிகு ஆய்விற்கு இட்டுச் சென்றதும் இக் கல்வியே ஆகும். கல்வியால் வாழ்வில் உயர்ந்தோர் உலகில் பலர் அதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்களில் ஒருவர் தான் அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன்.

ஆபிரிகாம் லிங்கன் ஒரு மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். புத்தகம், கொப்பி வாங்குவதற்கு கூட வசதி இல்லை. அவர் மிகக் கொடிய வறுமையிலும் கல்வியைப் பெற வேண்டும் என மன உறுதியுடன் அயராது பாடுபட்டார். எனவே அவர் வறுமையில் கற்ற கல்வியின் பயன் அவரையே அந்நாட்டு ஜனாதிபதியாக உயர்த்தியது.

அது மட்டுமா முதன் முதலில் புவியீர்ப்பைக் கண்டுபிடித்த நியூட்டன் ஒரு அப்பிள் பழத்தோட்டக் காவலாளியாக இருந்தும் அவர் கற்ற கல்வியின் பயன் புவியீர்ப்பைக் கண்டுபிடித்தார். இவ்வாறே கல்வியால் வாழ்வில் உயர்ந்தோர் வரிசையினைக் கூறிக்கொண்டே போகலாம்.

எனவே இக் கல்வியானது மனிதனைப் பூரணமான மனிதனாக்குவதுடன் அவன் தன் வாழ்வை உயர் நிலைக்கும் இட்டுச் செல்ல வல்லது. எனவே நிலையில்லாத செல்வத்தைத் தேடி அலைவதை விடுத்து நம் வாழ்வில் சிறந்த ஒழுக்கம் பண்புகளை வளர்க்கும் கல்வியைப் பெற்று இந்தப் பார் போற்ற உயர்ந்த வாழ்வு வாழ்வோமாக!

*நாம் சிறந்த கல்வியைப் பெறுவோம்*
*பாரில் சிறப்புடன் உயர்ந்து வாழ்வோம்.*

★ **மரணம் எப்போது வரும், எந்த இடத்தில் வரும் என எவராலும் அறிந்துகொள்ள இயலாது. அது எந்த விநாடியிலும் வரும். ஆதலினால் நல்ல அறங்களைச் செய்து தவம், தியானம் புரிந்து செல்கதிக்கு நலம் தேட வேண்டும்.**

# பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் பசளைகள்

செல்வி. மகேந்திரராஜா கார்த்திகா
A/L (2016) 12[B],
யா/இராமநாதன் கல்லூரி

பயிர்களுக்கு பிரதானமாக பின்வரும் 3 போசணைப் பதார்த்தங்கள் அவசிய மாகும்.

1. நைதரசன்
2. பொசுபரசு
3. பொற்றாசியம்

இவற்றை விட வேறு பல போசணைப் பதார்த்தங்கள் சிறிய அளவில் தேவைப்படும். தொடர்ச்சியாகப் பயிர் களைச் செய்கை பண்ணல் மண்ணரிப்பு ஆகிய காரணிகளினால் மண்ணில் அடங்கி யுள்ள போசணைச் சத்துகள் இழக்கப் படுகின்றது. இதனால் மண்வளம் குன்று கின்றது. அதற்காக மண்ணிற்கு சேதனைப் பசளைகள், இரசாயனப் பசளைகளை இட வேண்டும்.

## சேதனப் பசளைகள்

இலைகள் போன்ற தாவரப் பாகங் கள் விலங்குகளின் மலம், சிறுநீர் என்பன இயற்கையான சேதனப் பசளை வகை களைச் சேர்ந்தவையாகும். சேதனப் பசளை களை இடுவதனால் மண்ணில் போசணைப் பதார்த்தங்கள் சேர்வதோடு, மண்ணின் காற்றோட்டம் கட்டமைப்பு என்பன விருத்தி யடையும். தாவரங்களின் வளர்ச்சிக்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் உதவும் பல் வேறு வகையான இரசாயனப் பொருட்கள் சேதனப் பொருட்களில் வாழும் நுண்ணங்கி யினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. சேதனப் பசளையுடன் இரசாயனப் பசளை இடும்போது இவை நீண்ட காலம் மண்ணில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் எனவே பயிர்கள் அதிகளவில் உறிஞ்சுவதற்கு வசதியாக இருக்கும். சேதனப் பசளை களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. இலைகுழைகள்
2. விலங்கெரு
3. கூட்டெரு

## இரசாயனப் பசளை

பயிர்களுக்கு தேவையான 3 பிரதான சத்துக்களான நைதரசன், ஐதரசன், பொசுபரசு, பொட்டாசியம் என்ப வற்றை மிக இலகுவாக இரசாயனப் பசளை மூலம் வழங்க முடியும். இரசாயனப் பசளைகளில் போசணைப் பதார்த்தம் அதிகம் செறிவாக காணப்படுவதனால் இவற்றை சிறிதளவு இட வேண்டும். சேதனப் பசளைகளில் எல்லா வகையான போசணைச் சத்துக்கள் அடங்கியுள்ளன. எனவே சிறந்த பயனைப் பெறுவதற்கு சேதனப் பசளைகளையும் இரசாயனப் பசளைகளையும் சேர்த்திடுவது மிகவும் நல்லது. இரசாயனப் பசளைகளாக

1. யூரியா
2. அமோனியம் சல்பேற்று
3. மும்மை சுப்பர் பொசுபேற்று
4. மியூறியேற்றுப் பொட்டாசு

இவ்வாறான பசளைகளை இடுவத னால் பயிர்கள் சிறந்த வளர்ச்சியடையும்.

# உலக வர்த்தக வலயங்கள்

**செல்வி. வரதராசா வர்த்திகா**
**A/L (2015)வர்த்தகப்பிரிவு,**
**யா/இராமநாதன் கல்லூரி**

"உலகத்தை ஒருங்கிணைத்த பாலங்களில் உன்னத இடத்தை தனக்கென தக்க வைத்த உலக வர்த்தகத்திற்கு தலை வணங்கி"

உலக வர்த்தக வலயங்களை வரிசைப்படுத்தி நோக்கினால்,

i. உலக வியாபார அமைப்பு - WTO
ii. உலக வங்கி - The world Bank
iii. சர்வதேச நாணய நிதியம்
iv. G8

போன்றவற்றை நாம் காணலாம்.

**i. உலக வியாபார அமைப்பு**

தன் தலையாக கடமையாக "சர்வ தேச வர்த்தகத் தடைகளைக் குறைப்பதன் மூலம் சுதந்திர வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதனை" நோக்கமாகக் கொண்ட அமைப்பே இவ் அமைப்பாகும்.

1947ல் உருவாக்கப்பட்ட GATT அமைப்பிற்கு பதிலாக 1995ம் ஆண்டு January, 1ம் திகதி உலக வியாபார நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் சுவிஸ்லாந்தில் ஜெனிவா நகரில் அமைந்துள்ளது.

1984 - 1994 வரை நடைபெற்ற உருகுவே சுற்றின் மூலமே WTO உருவாக் கப்பட்டு 151 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் இலக்கு "இயன்றளவு எளிமையாகவும் எதிர்வு கூற கூடிய முறையிலும் சுதந்திர வர்த்தகத்தை உறுதி செய்தல்".

இவ் அமைப்பின் பிரதான கருமங்கள் "அங்கத்துவ நாடுகளுக்கிடையில் ஏற்படும் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தலும் நிர்வகித்தலும் மற்றும் அவற்றுக்கிடை யிலான வர்த்தகப் பிணக்குகளை தீர்த் தலும்" ஆகும். இவ்வாறாக தனது நோக்கத்தை விட முயற்சியுடன் இவ் அமைப்பு நகர்த்திச் செல்கின்றது.

அந்த வகையிலே வர்த்தக வலயங்களில் அடுத்ததாக வருவது,

**ii. உலக வங்கி (The World Bank)**

"மாற்றம் ஒன்றை தவிர அனைத் தும் மாறும்" என்ற வாசகத்திற்கிணங்க அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வறுமையை ஒழிக்கும் நோக்காக கொண்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுடன் வழங் கும் சர்வதேச வங்கி உலக வங்கி எனப் படும்.

1945ம் ஆண்டு டிசம்பர் 27ம் திகதி உடன்படிக்கை மூலம் உருவாக்கப்பட்டது. 1945ம் ஆண்டு July மாதம் நடைபெற்ற Monetar and Financial conferene இன் மூலம் உலக வங்கி உருவாக்கப்படுவதற்கு பின்வரும் நிறுவனங்கள் இணைக்கப் பட்டது.

i. அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்குமான சர்வதேச வங்கி.
ii. சர்வதேச அபிவிருத்திச் சங்கம்

இவ் அமைப்பின் இலட்சிய நோக்கு "முதலீட்டின் மூலமாகவும் ஆற்றல் மூல மாகவும் வறிய மக்கள் அபிவிருத்தி கருமங் களில் பங்கு கொள்ளவும் பொருளாதார அபிவிருத்தி வேலை வாய்ப்பு முதலீட்டுக் கான சூழல் என்பவற்றின் மூலமாக மிலேனிய அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு வளர்ந்துவரும் நாடுகளுக்

கும் அதன் மக்களுக்கும் உதவுதல் பொருளாதார வளர்ச்சிக்கும் வணிகத்திற்கும் பொருத்தமான சூழலை உருவாக்குதல்.

**உலக வங்கி கடன் வழங்கும் முறைகள்**

வறிய நாடுகளின் கடன் சுமைகளை நீக்குதல்.

நீர் வழங்கலுக்கும் சுகநலம் பாதுகாப்பிற்கும் மலேரியா போன்ற பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தும் செயற் திட்டங்களுக்கும் HIV, AIDS போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்கள்

சிவில் சமுதாய அமைப்புகளுக்கு விசவாயுக்களை தவிர்ப்பதற்கான திட்டங்களுக்கு

எனப் பல்வேறு முறைகளில் கடன்களை வழங்கி வறுமையை ஒழிப்பதற்காக பல செயற்திட்டங்களை இன்றும் நடாத்திக் கொண்டிருக்கிறது.

**iii. சர்வதேச நாணய நிதியம் IMF**

நிதித் தொழில்நுட்ப உதவி வழங்குதலும் நாணய மாற்றுவீதம் சென்மதி நிலுவை போன்றவற்றில் உறுதி நிலையினை ஏற்படுத்துதலை கண்காணிப்புச் செய்யும் சர்வதேச நிறுவனம் ஆகும்.

இதன் நோக்கங்கள்,

உலக நாடுகளுக்கிடையில் நிதி ஒழுங்கமைப்பு மேம்படுத்தல்,

நிதி உறுதிப்பாட்டை உத்தரவாதம் செய்தல்,

சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளித்தல்.

போன்றவற்றைக் கூறலாம். 185 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இதன் தலைமை அலுவலகம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் வொஷிங்டன் நகரில் அமைந்துள்ளது.

**iv. G8**

1974ம் ஆண்டில் USA, மேற்கு ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சிரேஷ்ட நிதி அதிகாரிகளின் உத்தியோகபூர்வமற்ற கூட்டம் G8 அமைப்பின் ஆரம்பமாகும்.

1973ல் ஏற்பட்ட எரிபொருள் பிரச்சினையும் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியும் இக்குழு உருவாக காரணமாக அமைந்தது. இதன் அங்கத்துவ நாடுகள்

1. கனடா
2. ஜப்பான்
3. பிரான்ஸ்
4. ருஷ்யா
5. ஜேர்மனி
6. ஐக்கிய இராச்சியம்
7. இத்தாலி
8. ஐக்கிய அமெரிக்க குடியரசு

இந்த 8 நாடுகளும் உலகப் பொருளாதார ஆக்கத்தில் 65%ஐப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஆனாலும் உலக சனத்தொகையில் 14%ஐ மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

அத்தோடு முழு உலகப் படைபலத்தில் பெரும்பகுதி இந்த 8 நாடுகளிற்கும் உரியதே.

2005ம் ஆண்டில் G8 நாடுகளில் போர்ப்படைக்கான செலவு US$ 707 Billion ஆகும். இது உலகப் போர்ப்படைச் செலவுகளில் 75% ஆகும். ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா என்பவை உலக அணு ஆயுதங்களில் 98%த்தை உரிமையாக வைத்திருக்கின்றன.

இவ்வாறாக உலக வர்த்தக வலயங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு நோக்கங்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.

# குறுக்கெழுத்துப் புதிர்

**செல்வி. சுகுமாரன் நிலுஜா**
**A/L (2015) கணிதப்பிரிவு,**
**யா/இராமநாதன் கல்லூரி**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 | ■ | ■ | 8 |
| ■ | ■ | 9 | ■ | 10 | 11 | 12 | 13 | 14 | ■ | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | ■ | ■ | 21 | ■ | ■ | 22 |
| 23 | ■ | 24 | ■ | ■ | ■ | 25 | 26 | 27 | ■ | 28 |
| 29 | ■ | 30 | 31 | 32 | 33 | ■ | 34 | 35 | ■ | 36 |
| 37 | 38 | ■ | 39 | 40 | 41 | ■ | 42 | 43 | 44 | ■ |
| ■ | 45 | ■ | ■ | 46 | ■ | ■ | 47 | ■ | 48 | ■ |
| 49 | 50 | 51 | 52 | 53 | ■ | ■ | 54 | 55 | 56 | 57 |
| 58 | 59 | 60 | 61 | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |

**இடமிருந்து வலம் ⟶**

*3.* *$30^{\circ}$c இல் உள்ள திரவநிலை மூலகங்கள் எத்தனை (திரும்பியுள்ளது)*

*4.* *காபனின் புறத்திருப்பங்களில் உராய்வு நீக்கியாகப் பயன்படுத்தக்கூடியது.*

*10.* *ஆவர்த்தன அட்டவணையில் வாயு நிலை மூலகங்கள் எத்தனை?*

*16.* *உயர் பிணைப்புச் சக்தியுடையதும் வளி மண்டலத்தில் அதிகளவில் காணப்படக் கூடியதுமான வாயு.*

*25.* *கட்புலன் நிறமாலையுடன் சம்பந்தப் படுபவர் (குழம்பியுள்ளது)*

*33.* *ஒட்சியேற்றுமியல்பு, மின்னெதிர்த் தன்மை கூடிய மூலகம் (திரும்பியுள்ளது)*

*39.* *$e^{-}$ களின் ஓரிடப்பாடற்ற நிலை*

*49.* *புற உதாக்கதிர்களை பூமிக்கு வர விடாமல் தடுக்கும் படையை புற திருப்பமாகக்கொண்ட மூலகம்.*

*59.* *புவிப் பொருக்கில் அதிகளவில் காணப் படும் உலோகத்தின் ஓர் இயற்கை இருக்கை (குழம்பியுள்ளது)*

*55.* *இது ஓர் சடத்துவ வாயு ஆகும் (குழம்பியுள்ளது)*

**மேலிருந்து கீழ் ↓**

*3.* *ஆவர்த்தன அட்டவணையில் சரியான தானத்தைக் கொண்டிராத மூலகம்.*

*8.* *நீருக்கடியில் சேகரிக்கப்படும் மூலகம்.*

*16.* *இது ஒரு வன்னமிலம். சார் மூலக் கூற்றுத் திணிவு 63ஐ உடைய .... அமிலம் ஆகும்.*

*21.* *குறை கடத்தியாகப் பயன்படுவது (குழம்பியுள்ளது)*

*27.* *Silica இனை அதிகம் கொண்டுள்ள திரவியம்.*

*44.* *பெரும்பாலான மூலகங்களின் அணு எண்ணைக் கணித்தவர்.*

*46.* *நீரை சுத்திகரிக்கவும் வெளிற்றியாகவும் பயன்படும் மூலகம்*

*59.* *எண்ம அமைப்பினை அடைந்துள்ள சேர்வைகள் ............. சேர்வைகள் என அழைக்கப்படும். (திரும்பியுள்ளது)*

## விடைகள்

**இடமிருந்து வலம்**

3. ஐந்து
4. காரீயம்
10. பதினொன்று
16. நைதரசன்
25. பாமர்
33. புளோரின்
39. பரிவு
49. ஒட்சிசன்
59. அலுமினா
55. ஹீலியம்

**மேலிருந்து கீழ்**

3. ஐதரசன்
8. பொஸ்பரஸ்
16. நைத்ரிக்
21. ஜேர்மானியம்
27. மணல்
44. மோஸ்ஸி
46. குளோரின்
59. அட்டக

# பொது விடயம்

செல்வி. ரவீனா ரவிக்குமார்
A/L(2015) கலைப்பிரிவு
யா/இராமநாதன் கல்லூரி

01. தனது எடையைப் போல 50 மடங்கு சுமையை தூக்க கூடிய உயிரினம் எது?
எறும்பு

02. வாழ்நாளில் நீரை அருந்தாத பிராணி எது?
கங்காரு, எலி (அமெரிக்க பாலை நிலம்)

03. அணைகட்டும் விலங்கு எது?
பீவர்

04. கிரிக்கட் மட்டை எந்த மரத்திலிருந்து உருவாகின்றது?
வில்லோ

05. எந்த மரப்பாலில் சுவிங்கம் தயாரிக்கப்படுகின்றது?
சப்பதில்லா

06. கற்பூரம் தயாரிக்கப் பயன்படும் மரம் எது?
சூடப்புன்னை

07. சவ்வரசி எதிலிருந்து தயாரிக்கப்படுகின்றது?
மரவள்ளிக்கிழங்கு

08. "பபோரியா" என்ற நோய் உடலின் எந்த உறுப்பைத் தாக்குகின்றது?
பற்கள்

09. உலக நுகர்வோர் தினம் எப்போது?
மார்ச் 15

10. உலக கலாசார பண்பாட்டு தினம் எப்போது?
மே 21

11. இருபதாவது ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?
சீனக்களிமண் விழா

12. கண்ணீர் புகைக்குண்டுகள் தயாரிக்கப் பயன்படும் வாயு வகை எது?
பென்சாயில் குளோரைட்

13. விமானம் செய்யப் பயன்படும் உலோகம் எது?
டியுரோ அலுமினியம்

14. இலங்கையில் காணப்படும் கதிரியக்க கனிப்பொட்கள் எவை?
மொனசைற், தோரியனைற், செர்க்கின்

15. தனுஸ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் அமைந்துள்ள பழமை வாய்ந்ததாக கருதப்படும் வரலாற்றுச் சின்னம் எது?
இராமர் அணை

16. வித்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சித்திரங்கள் எவை?
அல்பனா, மோஜயிக்

17. மிக உயர்ந்த வெப்ப நிலையை அளக்க உதவிடும் மானி எது?
தீமானி

18. இடிதாங்கும் சக்தியுடைய தானியம் எது?
வரகு

19. ஆறு குணங்கள் எவை?
ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்

20. உலகில் உள்ள ஒரே ஒரு இந்து மத நாடு?
நேபாளம்

21. மரகதத்தீவு என அழைக்கப்படும் நாடு எது?
அயர்லாந்து

22. எண் மதிப்பும், திசையும் கொண்ட அளவைகளுக்கு என்ன பெயர்?
மெக்டார்

23. வெப்பசக்தி எதனால் அளக்கப்படுகின்றது?
கேலரி

24. ஒளி வினாடிக்கு எவ்வளவு தூரம் செல்லும்?
186,000 மைல் வேகத்துடன்

25. மடங்கு விகித விதியை முதன் முதலில் வெளியிட்டவர் யார்? எத்தனையாம் ஆண்டு?
டால்டன், 1803ம் ஆண்டு

26. எரிமலையில் இருந்து வெளிவரும் வாயு எது?
கந்தக டை ஆக்ஸைடு

27. பழங்கள் மற்றும் தேனில் உள்ள சர்க்கரையின் பெயர் என்ன?
ஃபரக்டோஸ்

28. ஜிப்சம் உப்பின் வேதிப்பெயர் என்ன?
மக்னீசியம் சல்பேட் ($MgSO_4$)

29. உயிரின் மூலக் கூறு அல்லது பௌதீக அடிப்படை என்று எதனைக் கூறுவார்கள்?
புரோட்டோபிளாசம்

30. சுத்தமான தண்ணீரில் வாழும் ஒரு நுண்ணுயிர் எது?
ஹைட்ரோ

31. உலகின் முதலாவது தமிழ்ப் புத்தகம் எது?
கிறிஸ்தவ வணக்கம்

32. சுத்த இரத்தம் எதன் மூலம் மூளைக்குச் செல்கின்றது?
கெரோட்டிட் டிரங்கு மூலம்

33. இருவகை கசை இழைகள் எவை?
லிப்னாஸ், டின்செல்

34. பென்சிலின் என்ற மருந்தை தயாரிக்கப் பயன்படும் பூஞ்சைகளின் பெயர் என்ன?
பெனிசிலியம் ரோட்டேடம்

35. பாலூட்டிக் காட்டி தயாரிக்கப் பயன்படுவது எது?
பெனிசிலியம் சிற்றினங்கள்

36. சோயா பீன்ஸ்களைப் பதப்படுத்த பயன்படுத்தப்படுவது எது?
ஆஸ் பெர்ஜில்லஸ் சிற்றினங்கள்

37. காற்றிலிருந்து பூஞ்சைகளைப் பிரித்தெடுக்கும் முறை எது?
செட்லிங் பிளேட்முறை

38. மூச்சுக் குழலில் தங்கி வாழ்வதால் சுவாச நோய்களை உண்டாக்கும் பக்ரீரியம் எது?
ட்ரெடோக்காக்கள் நிமோனியா

39. பாக்பீரியங்களை நிச்சயிக்கும் கையேடு என்ற பிரதியை தயாரித்தவர் யார்?
விட்செஸ்டர்

40. உறையின்றிக் காணப்படும் வைரசு எது?
T.M.V

41. புவியின் சுழற்சி அடிப்படையில் இயங்கும் கடிகாரம் எது?
ஊசல் கடிகாரம்

42. வேகமாக வளரும் மரம் எது?
யூக்கலிட்டஸ்

43. ஒலிகளைப் பற்றிய படிப்புக்கு என்ன பெயர்?
அகவுஸ்டிக்ஸ்

44. கன நீரைக் கண்டுபிடித்தவர் யார்?
யூரே

45. எயிட்ஸ் நோயை உறுதிப்படுத்தும் சோதனையின் பெயர் என்ன?
வெஸ்டர்ன் பிளாட் சோதனை

46. போட்டோ எடுக்கும்போது வெளித்தரல் நேரக்கணிப்பிற்கு பயன்படும் கருவி எது?
வேளித்தரல் மணி

47. இலங்கையில் கட்டிப்பால் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
பொலன்நறுவை

48. இலங்கையின் பிரதான வானிலை அவதான நிலையம் எங்கு அமைந்துள்ளது?
பௌத்தலோக மாவத்தை கொழும்பு

49. செய்தி பரிவர்த்தன நிலையம் எங்கு அமைந்துள்ளது?
பாதுக்கை

50. நித்திரையால் உறுதிபெறும் உறுப்பு எது?
மூளை

# பங்குடமை

செல்வி. விமலதாசன் டிலானி
(A/L) 2015, வர்த்தக பிரிவு,
யா/இராமநாதன் கல்லூரி.

உலகெங்கும் ஓர் விழிப்புக் கொண்டு
பலர் கூடித்தான்
பங்குடமையை உருவாக்கினர்
பரஸ்பர நம்பிக்கையுடன்
பங்காளர் பிளவுகளை எழுத்து மூலம்
ஒப்பந்தம் கொண்டு தீர்த்து வைப்போம்

நிலையான மூலதனம்
பங்குடமை வாழ்வுக்கு நிரந்தரம்
மிதக்கும் மூலதனம்
பங்குடமை வாழ்வுக்கு கட்சிதம்
நட்டம் வந்தால்
தோற்கும் நம் பங்குடமை

பரஸ்பர நம்பிக்கையில் எழுந்த
பங்குடமையை நேசிப்போம் பங்காளனாக
பங்காளர் நிறம் மாறினாலும்
பங்குடமை நிறம் மாறாது
சட்டங்கள் வழி கொடுக்கும்
பங்குடமை வாழ்வுக்கு!

# நினைவுகள்

செல்வி. மாயமுகு தனுஜா
A/L கலைப்பிரிவு, (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

சின்னச் சின்ன சிறுவர்களாய்
துள்ளித் துள்ளி பள்ளி வந்து
கல்வி பயின்றோம் அன்று நாம்
கலையின் வளர்ப்பிடமாய்
ஒழுக்கத்தின் இருப்பிடமாய்
அறிவின் சிறப்பிடமாய்
எம் பள்ளி முற்றத்திலே

இனப் பிரச்சினையாம் - எங்கள்
இன்பத்திற்கு வந்தது இன்னல்
பள்ளிக்கூட்டில் துள்ளித்திரிந்த
பறவைகள் நாம்
பறந்து போனோம் பல திசைகளில்
பதுங்கு குழிகளில் பல நாட்கள்
பதுங்கினோம் பயத்தால்
தினம் தினம் கதறி அழுது
கண்ணில் நீர் வற்றிய காலம் அது

தறப்பால் கொட்டிலிலே
அரைவயிறு பசி போக்க
அடிபட்டு அழித்துக் கொண்டோம்
நம்மை நாமே
பசிபோக்கப் பழஞ்சோறு
போதும் என்ற காலம் அது
பெற்றோரை இழந்த பிள்ளைகள்
பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள்
உறவுகளை இழந்த உயிர்கள் என
இழப்பின் உறைவிடமாய் அன்று எம் மண்

ஆயுதங்கள் சாய்ந்தது
இழப்புக்கள் ஓய்ந்தது
பாதுகாப்பாய் வந்தோம் முகாமில்
சிறு சிறு குறைகளுடன்
நிம்மதிப் பெருமூச்சுடன்
அமைதியான வாழ்வு - இன்று
மீண்டும் நம் மண்ணில்
அழியாத நினைவலைகளின் தடங்கள்
நெஞ்சில் நிழலாட
சொந்த மண்ணில்
சேர்ந்து வாழ்கின்றோம் - இன்று

காலம் மாறினாலும்
இழப்புக்களை மறக்க மறுக்க முடியாமல்
இன்று எம் கல்விக் கூடத்தில்
கலகலப்பாய் மீண்டும் நாம்
எம் நட்பு பறவைகளுடன்
காணவில்லை சில பறவைகளை இன்று
அவர்கள் நினைவுகள் தினம் தினம்
பொங்கிட மௌனமாய் அழுகின்றோம்
புதிய புதிய பலருடன்
புத்துணர்வுடன் கற்கின்றோம் இன்றும்

எமக்காய் தம்மை அரப்பணிக்கும்
ஆசானின் சேவை கண்டு
உவகை கொள்கிறோம் இன்று
மனதில் மங்கா நினைவலைகள்
இருந்த போதும் இன்று
சந்தோசமாய் வாழ்வின்
வண்ணமான பள்ளிக்காலத்தில்
சிட்டாய் பறக்கின்றோம்
சிகரமாய் மிளிரும் - எம் கல்லூரி
அன்னையுடன்.....................

# தரணி நிறைந்த தமிழன்னை

செல்வி.பொன்னம்பலம் டிலக்ஷனா
13A கலைப்பிரிவு, (2015)
யா/இராமநாதன் கல்லூரி.

தமிழே! என்னருமைத் தமிழே
எத்தனை சிறப்புக்கள் உனக்கு
அத்தனையும் ஒளி விளக்கு
கல் தோன்றி மண்தோன்றாக்
காலத்தே முன்தோன்றி நடைபயின்ற
உன் எழிலாலே உன் புகழை
எண் திசையெங்கும் நாட்டினாய்.

அன்றொரு நாள் நீதானே சங்கம் நிறைந்தவள்
நற்புலவர் கவி கேட்டு அங்கம் சிலிர்த்தவள்
பின் பொருள் ஐம்பெருங்காப்பியம் புனைந்தவள்
காப்பியமே அணிகலனாய் கொண்டு மிளிர்ந்தவள்.

அழகிய செவிகளில் குண்டலமும்
சங்குக் கழுத்தினில் சிந்தாமணியும்
நுண்ணிய இடைதனில் மணிமேகலையும்
எழிலுறும் கரங்களில் வளையாபதியும்
தண்டைக் கால்களில் பொற்சிலம்பும்
தவழத் தனிப்பெரும் ஆட்சி செய்தாய்
தரணியெங்கிலும் நீ நிறைந்தாய்.

எண்ணிலா மன்னவர் உன்தாள் பணிந்தார்
உன் புகழ் நலம் கேட்டு உளம் மகிழ்ந்தார்
பின்னரும் பல கவிஞர் உனைப் புகழ்ந்தார்
தண்டமிழ் தாயென போற்றி நின்றார்.

# அம்மா

செல்வி. சிவராசா நிலாஜினி
A/L [2016]
யா/இராமநாதன் கல்லூரி

"அம்மா"

எனும் மூன்றெழுத்து - அதை
உணர்ந்து கொண்டவன்
ஞானியடா!
ஆலயம் இன்றி கடவுள் இல்லை
அம்மா இன்றி ஆலயம் இல்லை.
உள்ளம் பெருங்கோயில் - அதை
உணர்ந்து கொண்டேன்
அன்னை மடியினில்
அம்மா என்றால்
துன்பம் விலகும் - ஆனால்
அவள் படுந்துன்பம்
யார் அறிவார்?
ஈரைந்து மாதங்கள்
கருவிலே தாங்கி - பூமியில்
உதிக்கச் செய்பவள் அம்மா
எம்மை வளர்க்கப்
பாடுபடுபவள் அம்மா
நீயின்றி நானில்லை
நானின்றி நீயில்லை
என்பார் சிலர் - ஆனால்
தாயின்றி எவரும் இல்லை
என்பதனை யார் அறிவார்?...
அதை அறிந்தவனே
உண்மையான மனிதன்!!!

# வேடிக்கை மனிதனுக்கு

செல்வி. சோ.யுரொனிகா
13A கலைப்பிரிவு (2016)
யா/இராமநாதன் கல்லூரி

அன்பு உள்ளவனுக்கு
ஆணவம் வருவதில்லை.
ஆசை கொண்டவனுக்கு
அமைதி நிலைப்பதில்லை.
தகுதியுள்ளவனுக்கு
தற்பெருமை இருப்பதில்லை.
தன்னை உணர்ந்தவனுக்கு
தடுமாற்றம் வருவதில்லை.
அறிவு உள்ளவனுக்கு
அனுதாபம் பிடிப்பதில்லை.
அனுபவம் உள்ளவனுக்கு
அச்சம் வருவதில்லை.
சிந்தனை உள்ளவனுக்கு
சீற்றங்கள் வருவதில்லை.
சிரிக்கத் தெரிந்தவனுக்கு
துன்பங்கள் வருவதில்லை.
வேடம் போடும் மனிதனுக்கு
வீரம் காட்ட முடிவதில்லை.
வேடிக்கை மனிதனுக்கு - எதிலும்
விவேகம் காட்ட முடிவதில்லை.

# நன்றி நவில்கின்றோம்...

யா/இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் இரண்டாவது மலராக "இராமநாதம்" உங்கள் கைகளில் தவழ்கிறது. இது பலரது கூட்டு முயற்சியின் ஒட்டுமொத்த வெளியீடாகும்.

- இம்மலரானது சிறப்பாக வெளிவருவதற்கு ஆசிச்செய்தி வழங்கிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கும், வாழ்த்துச்செய்தி வழங்கியவர்களுக்கும் முதற்கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.
- மேலும் சிறப்பான ஆக்கங்களைத் தந்துதவிய கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர் ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்.
- இம்மலர் வெளியீட்டிற்கு ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய எமது கல்லூரி அதிபர், திருமதி.க.கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும் அவருடன் இணைந்து செயற்பட்ட பிரதி அதிபர், பகுதித்தலைவர், உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- இந்நூல் வெளியீட்டின் முதல் பிரதியைப் பெற்றுச் சிறப்பித்த டாக்டர்.கு.சுரேஸ்குமார் (யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.
- எமது இராமநாதம் மலருக்கு விளம்பர அனுசரணை செய்த வணிகப் பெருந்தகைகளுக்கும், நிதி உதவி செய்த நிறுவனங்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் எமது கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியருமான திருமதி.திருவேங்கடவல்லி ஜெயசிங்க அவர்களின் உதவியும், திரு.S.நடராசா (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் உதவியும் மறக்க முடியாததாகும்.
- இந்நூலுருவாக்கத்திற்கு அட்டைப்படம் வரைந்து உதவிய எமது கல்லூரியின் சித்திர ஆசிரியர் செல்வி.சி.யோகேஸ்வரி அவர்களுக்கும் கணினிப் பதிவு செய்த உதவிய செல்வி.கௌசிகா அவர்களுக்கும், மலரினை இறுதி வடிவமைப்புச் செய்து தந்த சுடர்நிலவு கிறபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இந்நூல் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க்குழு,
உயர்தர மாணவர் மன்றம்,
யா/ இராமநாதன் கல்லூரி.

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

SABARINATHAN RICE & FLOVER MILLS


QUALITY NO. 1 RICE PRODUCTS

# S.R.M RICE

**Prop. Rajaratnam (Late)**

**Chunnakam South, Chunnakam**

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்





எஸ். ரமணன்
Cell : 0091 98402 50648
0091 95515 70593

# யாழ் ஸ்ரீ சத்தியா

◆ விருந்தினர் விடுதி ◆ டிராவல்ஸ்
◆ திருமண மண்டபம் ◆ மணபெண் அலங்காரம்
◆ ஹோட்டல் ஒழுங்கு ◆ போட்டோ / வீடியோ

வளசரவாக்கம், சென்னை–87. இந்தியா.
e-mail : tmahinda4@gmail.com
இலங்கை : 0094 718824994

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

தரமான சிறந்த பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறுவதற்கு நம்பிக்கையுடன்
நாடவேண்டிய ஸ்தாபனம்

# T.S.T

# தவம் ஸ்ரோர்ஸ்

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.


T.P: 0213212863

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்


# ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
# ALL CEYLON DISTRIBUTORS

No. 212, K.K.S. Road, Jaffna, T. P. 021 222 5542, 021 5671527
E-mail: acdil@ymail.com Fax: 021 2227983

*Importers of books, Magazines, Agriculture Equipments, all kinds of Stationery, All Kinds of Paper Items, Chemicals, Sports Goods, Office Equipment etc., and Government Suppliers.*



இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்



# கிருபா லேணர்ஸ்

**Kiruba Learners, Govt.Approved A Grade Driving Training School**

**அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை**

Regd.No. : DS/589






**சுன்னாகம்**
**021 224 2022**
**071 454 6956**

---

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்

## 24 மணி நேர சேவையில்...

# லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்

## மருதனார்மடம்

# LANKA FILLING STATION

## MARUTHANARMADAM

Dealer : S.Tharmavarathan

A/C : 104364

இராமநாதம் மலர் சிறப்புற எமது வாழ்த்துக்கள்




## இலங்கை வங்கியின் ரண்கெகுளு சிறுவர் கணக்கு

- மலர்களைப் போன்ற சின்னஞ் சிறார்களுக்கு, இலங்கை வங்கியிடமிருந்து கூடுதலான வட்டி.
- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2000 திறமைசாலிகளுக்கு
- சிறார்களின் காப்புறுதிகள்
  - குறித்துரைக்கப்பட்ட 10 பாரதூரமான நோய்களுக்கு
  - திடீர் விபத்துக்களுக்கு
- கணக்கு வைப்பாளர் / பாதுகாவலர் காப்புறுதிகள்
  - ரண்கெகுளு கணக்கிலுள்ள நிலுவையைப் போல் 10 மடங்கு அவசர விபத்துக் காப்பீடு

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation



இராமநாதேஸ்வரம்
(சமாதி கோயில்)